# *29.11.2023* புதன்கிழமை

# காலை 10.00 மணிக்கு

# நடைபெற்ற சாதாரண

# மன்றக்கூட்ட தீர்மானங்கள்

**க.து.ந.க.எண்.இ1/2799/2018**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.10.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:576/2023** **பொருள் எண்.01**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – கட்டடத்துறை - திரு.எஸ்.மணிவண்ணன், உதவி செயற் பொறியாளர், 30.06.2000 அன்று வயது முதிர்வு ஓய்வு - தனியர் 15.03.2023 அன்று காலமானார் - அரசாணையின்படி, அன்னாரது மகனும், வாரிசுதாரருமான திரு. ம.மாதவன் அவர்களுக்கு நிறுத்தம் செய்யப்பட்டுள்ள 25% பணிக்கொடை தொகை ரூபாய் 54,933/-ஐ விடுவிக்க மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 28.06.2000 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு.எஸ்.மணிவண்ணன், உதவி செயற்பொறியாளர், கட்டடத்துறை அவர்கள் 30.06.2000 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றுள்ளார்.

உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் 10.07.*2000* மற்றும் 19.09.2003 நாளிட்ட தணிக்கை சான்றின்படி, திரு.எஸ்.மணிவண்ணன், உதவி செயற் பொறியாளர், கட்டடத்துறை 30.06.2000 அன்று வயது முதிர்வு ஓய்வு அவர்களுக்கு இறப்பு மற்றும் ஓய்வுக்கால பணிக்கொடை மொத்த ரூபாய் 1,96,664/-ல் 25% நிறுத்தம் செய்யப்பட்டது போக மீதம் ரூபாய் 1,47,498/-ம், வயது முதிர்வு ஓய்வூதியம் ரூபாய் 4,350/-ம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் திருத்தப்பட்ட வித்தியாச தொகை ரூபாய் *2,19,731/-*ல் ஏற்கனவே வழங்கப்பட்டது போக வித்தியாச தொகை 17,300/- வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நிதி ஆலோசகர் அவர்களின் 05.06.2018 நாளிட்ட குறிப்பில், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி தணிக்கைதடை பத்திகள் கூட்டு பொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ள பத்திகள் *(1997 -* 1998 பத்தி எண்.109 மற்றும் 115) நீக்கம் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பத்திகள் நீக்கம் செய்யப்பட்டு *(FR Copy)* மேற்குறிப்பு இணைக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் கட்டடத்துறையில் பணிபுரிந்த காலத்தில் தனியரின் பெயரில் முன்பண நிலுவை தொகை ரூபாய் 20,06,042/- உள்ளது.

தனியர் பணிபுரிந்த துறைகள் மற்றும் மண்டலங்களில் இருந்து முன்பண நிலுவை, தணிக்கை தடைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை குறித்து விவரங்கள் பெறப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

| வகித்த பதவிகள் | துறை / மண்டலம் | முதல் | வரை |
|---|---|---|---|
| ஓவர்சியர் | மாவட்ட அலுவலகம் *(DO(N))* | *20.06.1964* | *23.06.1974* |
| மேற்பார்வையாளர் | மாவட்ட அலுவலகம் *(DO(S))* | *23.06.1974* | *23.06.1981* |
| இளநிலை பொறியாளர் | பணித்துறை | *31.08.1981* | *23.10.1985* |
| இளநிலை பொறியாளர் | புதிய மண்டலம் *- 4*<br>பழைய மண்டலம் *- 1* | *24.10.1985* | *07.05.1993* |
| இளநிலை பொறியாளர் | பேருந்து சாலைகள் துறை | *07.05.1993* | *25.11.1993* |
| உதவி செயற் பொறியாளர் | கட்டடத்துறை | *26.11.1993* | *30.06.2000* |

திரு.ம.மாதவன், த/பெ. எஸ்.மணிவண்ணன் அவர்களின் 22.06.2023 நாளிட்ட கடிதத்தில், தனது தந்தை திரு.எஸ்.மணிவண்ணன் அவர்கள் 15.03.2023 அன்று இயற்கை எய்தினார் எனவும், தனது தாயார் திருமதி.துர்கா அவர்கள் 5 ஆண்டுகளுக்கு முன்னதாக இயற்கை எய்தினார் எனவும், தனது தந்தையின் 25% பணிக்கொடை தொகையினை வழங்கிடுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசாணை எண்.*751*, நாள் *08.10.1991*ன்படி, *"If a government servant against whom disciplinary action is pending or is contemplated in respect of audit objections evolving financial losses or other irregularities dies before final orders are passed in the matter, the audit*

*objections pending against the deceased employee shall be deemed to have been settled on the date of his death and disciplinary proceedings pending or contemplated shall on the date of his death be deemed to have been dropped. In such cases, Death – cum – Retirement Gratuity and other retirement benefits due to the family of the deceased Government servant shall not be withheld"* என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின் 31.07.2023 நாளிட்ட ஒப்புதல் ஆணையில், திரு.எஸ்.மணிவண்ணன், உதவி செயற் பொறியாளர், கட்டடத்துறை, 30.06.2000 அன்று ஓய்வு, 15.03.2023 அன்று காலமானதால், மேற்கூறிய அரசாணையின்படி, அன்னாரது மகனும், வாரிசுதாரருமான திரு. ம.மாதவன் அவர்களுக்கு நிறுத்தம் செய்யப்பட்டுள்ள 25% பணிக்கொடை தொகை ரூபாய் 54,933/-ஐ விடுவிக்க ஒப்புதல் பெறப்பட்டது-

எனவே, திரு.எஸ்.மணிவண்ணன், உதவி செயற் பொறியாளர், கட்டடத்துறை, 30.06.2000 அன்று ஓய்வு, 15.03.2023 அன்று காலமானதால், மேற்கூறிய அரசாணையின்படி, அன்னாரது மகனும், வாரிசுதாரருமான திரு. ம.மாதவன் அவர்களுக்கு நிறுத்தம் செய்யப்பட்டுள்ள 25% பணிக்கொடை தொகை ரூபாய் 54,933/-ஐ விடுவிக்க, நிலைக்குழு (கணக்கு மற்றும் தணிக்கை)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு(கணக்கு மற்றும் தணிக்கை) கூட்டத்தில் தீர்மான எண்.07/2023, நாள்.21.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (கணக்கு மற்றும் தணிக்கை) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.5.ந.க.எண்.E2/11705/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:577/2023** **பொருள் எண்.02**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்–5, கோட்டம்–52, காயிலு கிடங்கு தெருவில் (ரோப் குடோன் தெரு) உள்ள சிதிலமடைந்த பொது கழிப்பிட கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம்-52, காயிலு கிடங்கு தெருவில் (ரோப் குடோன் தெரு) உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பொது கழிப்பிடம் மிகவும் சிதிலமடைந்து உள்ளதாலும் மற்றும் பொதுமக்களுக்கு பயன்படாத வகையில் இருப்பதாலும் அதனை இடித்து விட்டு இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து புதியதாக சமுதாய நலக்கூடம் கட்டப்படவுள்ளது. இக்கட்டிடம் 1990-1991 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இக்கழிப்பிடம் தரை தளம் கொண்டு 57.95 சதுர மீட்டரில் மேற்கூரை தளம் போட்டு கட்டப்பட்டது. இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ.7,381.22 /-ஆகும்.

இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பு | ரூ. 7381.22 |
| 2 | இடிக்கப்படவுள்ள கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 1990-1991ஆம் ஆண்டு |
| 3 | இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் பரப்பளவு | 57.95 சதுர மீட்டர் |
| 4 | கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா? | உள்ளது. |
| 5 | கட்டிடம் இடித்த பின்பு எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | சட்டமன்ற உறுப்பினர் நிதியில் சமுதாய நலக்கூடம் கட்டப்படவுள்ளது. |
| 6 | இடிப்பதற்கு அவசியம் என்ன? | மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது |

எனவே, மண்டலம்-5, கோட்டம்-52, காயிலு கிடங்கு தெருவில் (ரோப் குடோன் தெரு) உள்ள சிதிலமடைந்த பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.093/2023, நாள்.23.11.2023-ன்படி, வார்டு குழு தீர்மானம் பெறப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.12.ந.க.எண்.இ1/6840/2023/05**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 03.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:578/2023** **பொருள் எண்.03**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 12, வார்டு-163 பாலகிருஷ்ணாபுரம் பிரதான சாலையில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடக்கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -12, வார்டு -163 பாலகிருஷ்ணாபுரம் பிரதான சாலையில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடக் கட்டிடம் 1991 ஆம் ஆண்டு நகராட்சியால் கட்டப்பட்டதாக தெரியவருகிறது. தற்போது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள அக்கட்டிடத்தை இடித்து அகற்ற கோரி மாமன்ற உறுப்பினர் வார்டு 163 அவர்களால் 05.10.2023 நாளிட்ட கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 11.10.2023 அன்று நடைபெற்ற 12வது மண்டல வார்டு குழுவில் தீர்மானம் எண்: 578 ஆக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் இடித்து அகற்றப்பட வேண்டிய சமுதாய நலக்கூடக் கட்டிடத்தின் விவரங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வார்டு எண். | 163 |
| இடம் | பாலகிருஷ்ணாபுரம் பிரதான சாலை |
| கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 1991ஆம் ஆண்டு |
| கட்டிடத்தின் பரப்பளவு | 1259.37ச.மீ |
| கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு | 1800ச.மீ |
| தற்போதைய கட்டிடத்தின்புத்தக மதிப்பு | ரூ6,15,802/- |
| தற்போது கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது | சமுதாய நலக்கூடம், வார்டு அலுவலகம் கட்டப்படஉள்ளது. |
| கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பொதுமக்கள் பயன்பாட்டில் இல்லாத பழைய கட்டிடம் |
| வார்டு குழு தீர்மான எண். | தீர்மான எண் : 578 நாள். 11.10.2023 |

எனவே, மண்டலம் -12, வார்டு-163, பாலகிருஷ்ணாபுரம் பிரதான சாலையில் அமைந்துள்ள பழைய சமுதாய நலக்கூடக் கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.200/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.15.ந.க.எண்.பி1/4474/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 05.09.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:579/2023** **பொருள் எண்.04**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-15, வார்டு – 200, ஜவஹர் நகர் 3வது தெருவில் பொது கழிப்பிடம் அமைந்துள்ள இடத்தில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி நடைப்பெற்று வருவதால் பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநராட்சி, மண்டலம்-15, பகுதி-45, வார்டு-200, ஜவஹர் நகர் 3வது தெருவில் 34.30 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட பொது கழிப்பிடம் அமைந்துள்ள இடத்தில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி நடைப்பெற்று வருவதால் இக்கட்டிடம் இடிக்க வேண்டியது அவசியமாகிறது. ஆகையால் பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்றி, மாற்று இடத்தில் புதியதாக கழிப்பிட கட்டிடம் கட்டும் பணியினை மேற்கொள்ள நிலைக்குழுக்கள் மூலமாக மன்றத்தின் அனுமதி பெற 12.07.2023 அன்று நடைபெற்ற மண்டலம்-15ன் வார்டு குழு கூட்டத்தில் தீர்மானம் எண்.385ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | கட்டிடத்தின் விவரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 2010ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. |
| 2 | கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரை தளம் மட்டும் - 34.30 சதுர மீட்டர் |
| 3 | கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு? | 154.50 சதுர மீட்டர் |
| 4 | கட்டிடத்தின் புத்தக மதிப்பு ? | ஏதுமில்லை |
| 5 | கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | ஆம், பயன்பாட்டில் உள்ளது |
| 6 | கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது? | மழைநீர் வடிகால்வாய் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. |
| 7 | கட்டிடம் இடிப்பதற்கு அவசியம் என்ன? | அவ்விடத்தில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி நடைப்பெற்று வருவதால் இக்கட்டிடம் இடிக்க வேண்டியது அவசியமாகிறது. |
| 8 | கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தவர் யார்? | 200வது வார்டு மாமன்ற உறுப்பினர் |
| 9 | வார்டு குழு தீர்மான எண் (ம) நாள் | வார்டு குழு தீர்மான எண். 385, நாள்.12.07.2023 |

எனவே, மண்டலம்-15, வார்டு-200, ஜவஹர் நகர் 3வது தெருவில் உள்ள பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.098/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ந.து.ந.க.எண்.டி1/0073/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர் அவர்களின் 20.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:580/2023** **பொருள் எண்.05**

## தானப்பத்திரம்

மண்டலம்-05, கோட்டம்-62ல் Mr. K. Venkatesh and Mr. K. Thulasi Sha அவர்கள் New Door No.53, Old Door No.24, Agraharam Street (and Arunachalam Street on the rear side), Chintadripet, Chennai - 600002 comprised in R.S.No.257, Block No.6 of Chintadripet Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-05ல் PPA/WDCN05/07616/2023, நாள்:31.08.2023ன்படி விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 64.50 ச.மீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 12.40மீ அகல Arunachalam Street அமையபெற்றுள்ளது. Arunachalam Street சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 15.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 4.36 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mr. K. Venkatesh and Mr. K. Thulasi Sha அவர்கள் New Door No.53, Old Door No.24, Agraharam Street (and Arunachalam Street on the rear side), Chintadripet, Chennai - 600002 comprised in R.S.No.257, Block No.6 of Chintadripet Village, Division-62, Zone-05ல் அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 4.36ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “24.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.100/2023, நாள்.24.11.2023-ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ந.து.ந.க.எண்.டி1/0077/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர் அவர்களின் 20.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:581/2023** **பொருள் எண்.06**

## தானப்பத்திரம்

மண்டலம்-08, கோட்டம்-96ல் Mr. Hubaidul Jafar. S அவர்கள் Old Door No.52, New Door No.139, Konnur High Road, Ayanavaram, Chennai - 600023 comprised in T.S.No.124, Block No.26, Ayanavaram Village, Ayanavaram Talukல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-08ல் PPA/WDCN08/07881/2023, நாள்:07.09.2023ன்படி விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 217.00 ச.மீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 21.00 மீ அகல Konnur High Road அமையபெற்றுள்ளது. Konnur High Road சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 30.50 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 41.80 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mr. Hubaidul Jafar. S அவர்கள் Old Door No.52, New Door No.139, Konnur High Road, Ayanavaram, Chennai - 600023 comprised in T.S.No.124, Block No.26, Ayanavaram Village, Ayanavaram Taluk, Division - 96, Zone - 08ல் அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 41.80 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “24.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.101/2023, நாள்.24.11.2023-ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**ந.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN12/00869/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர் அவர்களின் 08.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:582/2023** **பொருள் எண்.07**

## தானப்பத்திரம்

மண்டலம்-12, வார்டு-157ல் M/s. Nova Life Space Private Limited Represented by its Authorized Signatory Mr. B. Balachandran அவர்கள் S.No.263/1B, 264/1B & 323/1A2 of Manapakkam Village, Alandur Talukல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN12/00869/2023, நாள்.17.10.2023ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

M/s. Nova Life Space Private Limited Represented by its Authorized Signatory Mr.B.Balachandran என்பவர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 3561.20 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் TANGEDCO விற்கு 17.68 சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்காக 18.89 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் M/s.Nova Life Space Private Limited Represented by its Authorized Signatory Mr.B.Balachandran அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவர்களாக கருதுவதாலும் பொது பயன்பாட்டிற்கான 18.89 சதுர மீட்டர் நிலத்தை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

அதன்படி M/s. Nova Life Space Private Limited Represented by its Authorized Signatory Mr. B. Balachandran அவர்களிடமிருந்து S.No.263/1B, 264/1B & 323/1A2 of Manapakkam Village, Alandur Taluk, Division - 157, Zone-12ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் பொது பயன்பாட்டிற்கான 18.89 சதுர மீட்டர் நிலத்தினை மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டு தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்ள கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர் அவர்களின் 07.11.2023 நாளிட்ட ஆணை பெறப்பட்டது.

எனவே, S.No.263/1B, 264/1B & 323/1A2 of Manapakkam Village, Alandur Taluk, Division - 157, Zone - 12ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் பொது பயன்பாட்டிற்கான 18.89 சதுர மீட்டர் நிலத்தை M/s. Nova Life Space Private Limited Represented by its Authorized Signatory Mr. B. Balachandran அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக்கொண்டதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “24.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.102/2023, நாள்.24.11.2023-ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இப்பொருள் குறித்து மேலும் கூர்ந்தாய்வு செய்யப்பட வேண்டி உள்ளதால் இதனை மன்றம் ஒத்தி வைக்கின்றது.”**

******

**ந.து.ந.க.எண்.டி1/SD/WDCN14/00698/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர் அவர்களின் 20.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:583/2023** **பொருள் எண்.08**

# தானப்பத்திரம்

மண்டலம்-14, கோட்டம்-188ல் Mrs. Nirmala Thirumugam அவர்கள் S.No.65/16, 65/17 & 65/18 and as per patta New S.No.65/16C1A1B of Madipakkam Village, Sholinganallur Taluk ல் அமைந்துள்ள இடத்திற்கு மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி SD/WDCN14/00698/2023 நாள்:28.08.2023ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் விண்ணபித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) Mrs. Nirmala Thirumugam என்பவர் மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 1070.00ச.மீ ஆகும். அவற்றில் சாலைக்காக 156.20ச.மீ நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விண்ணபதாரர் பட்டாவினை வட்டாட்சியர் சோழிங்கநல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள். விண்ணப்பதாரர் நிலத்தினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார்.

(ஆ) விண்ணப்பதாரர் Mrs.Nirmala Thirumugam அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு இருக்கும் நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(இ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department dated 16.07.2022ன்படி சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளரே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர் தாங்களே சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்.

(ஈ) அபிவிருத்தியாளர் தங்களின் கடிதத்தில் சாலை அமைக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளதாகவும் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி வருவதாகவும் ஆகவே, ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

எனவே,

(1) மனை உரிமையாளர் Mrs. Nirmala Thirumugam அவர்களிடம் இருந்து S.No.65/16, 65/17 & 65/18 and as per patta New S.No.65/16C1A1B of Madipakkam Village, Sholinganallur Taluk, Division-188, Zone-14ல் அமைந்துள்ள நிலத்தில் திட்ட வரைபடத்தின்படி, சாலைக்கென ஒதுக்கப்பட்ட 156.20 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்வதற்கும்,

(2) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர் / அபிவிருத்தியாளர் உள்கட்டமைப்புகளான சாலை, வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.103/2023, நாள்.24.11.2023-ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ந.து.ந.க.எண்.டி1/SD/WDCN15/00759/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர் அவர்களின் 26.10.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:584/2023** **பொருள் எண்.09**

# தானப்பத்திரம்

மண்டலம்-15, கோட்டம்-198ல் (1) Mrs. Garapati Kusuma Kumari represented by her Power of Attorney Mr. Garapati Rama Rao (2) Mr. E. Mohan அவர்கள் Lal Bahadur Sastri Road, Nehru Nagar, comprised in S.No.485/1G1D & 485/1H2 of Sholinganallur-1 Village, Sholinganallur Taluk, Chennaiல் அமைந்துள்ள இடத்திற்கு மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி SD/WDCN15/00759/2023, நாள்.12.09.2023ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் விண்ணப்பித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) (1) Mrs. Garapati Kusuma Kumari represented by her Power of Attorney Mr. Garapati Rama Rao (2) Mr. E. Mohan என்பவர்கள் மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 2300.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 396.30 சதுர மீட்டர் நிலமும் TANGEDCOவிற்கு 11.16 சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 11.16 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் பட்டாவினை வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள். விண்ணப்பதாரர்கள் நிலத்தினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவர்களாக அறியப்படுகிறார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர்கள் (1) Mrs. Garapati Kusuma Kumari represented by her Power of Attorney Mr. Garapati Rama Rao (2) Mr. E. Mohan அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு இருக்கும் நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(இ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department dated 16.07.2022-ன்படி சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளரே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர் தாங்களே சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்.

(ஈ) அபிவிருத்தியாளர் தங்களின் கடிதத்தில், சாலை அமைக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளதாகவும் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி வருவதாகவும் ஆகவே, ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின் படி, மனைஉட்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO- விற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். (1) Mrs. Garapati Kusuma Kumari represented by her Power of Attorney Mr. Garapati Rama Rao (2) Mr. E. Mohan அவர்கள் அதற்கேற்றவாறு 11.16 ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் 11.16 ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCOவிற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

எனவே,

(1) மனை உரிமையாளர்கள் (1) Mrs. Garapati Kusuma Kumari represented by her Power of Attorney Mr. Garapati Rama Rao (2) Mr. E. Mohan அவர்களிடம் இருந்து Lal Bahadur Sastri Road, Nehru Nagar, comprised in S.No.485/1G1D & 485/1H2 of Sholinganallur-1 Village, Sholinganallur Taluk, Chennai, Division - 198, Zone-15ல் அமைந்துள்ள நிலத்தில் திட்ட வரைபடத்தின்படி, சாலைக்கென ஒதுக்கப்பட்ட 396.30 ச.மீ. நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 11.16 ச.மீ நிலம் ஆகியவற்றை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்வதற்கும்,

(2) மனைஉட்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர்/ அபிவிருத்தியாளர் உள்கட்டமைப்புகளான சாலை, வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.104/2023, நாள்.24.11.2023-ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3/33893/2023</u>**

**<u>கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.11.2023 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:585/2023** **பொருள் எண்.10**

**<u>பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு.</u>**

அரசாணை (வா) எண்.4295, பொது (சிறப்பு –அ)த்துறை, நாள். 16.10.2023, அரசாணை (வா) எண். 815, நிதித் (அ.ந.-II) துறை, நாள்: 31.10.2023, அரசாணை (2டி) எண்.348, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள்: 25.10.2023 மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ1/001/2023, நாள்:06.10.2023 ஆகியவைகளின்படி, கீழ்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | அரசாணை எண் மற்றும் நாள் | அயற்பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., வட்டார துணை ஆணையர் (வடக்கு) பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வா) எண். 4295, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 16.10.2023 | 19.10.2023 மு.ப. |
| 2 | திரு. கே. ஜே. பிரவீன் குமார், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையர் (மத்தியம்), பெருநகர சென்னை மாநகராட்சி. | அரசாணை (வா) எண். 4295, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 16.10.2023 | 19.10.2023 பி.ப. |
| 3 | திரு. எம். கோவிந்தராஜு நிதி ஆலோசகர், பெருநகர சென்னை மாநகராட்சி. | அரசாணை (வா) எண். 815, நிதித் (அ.ந.-II) துறை, நாள்: 31.10.2023 | 01.11.2023 மு.ப. |
| 4 | திரு. அ. திருவாசகம், துணை ஆட்சியர் (நிருவாகம்), பொதுத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி. | அரசாணை (2டி) எண்.348, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள்: 25.10.2023 | 31.10.2023 மு.ப. |
| 5 | திரு. சா. மன்சூர் அலி தனி வட்டாட்சியர் (நிலம் (ம) உடைமை), மத்திய வட்டார அலுவலகம், பெருநகர சென்னை மாநகராட்சி. | சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ1/001/2023, நாள்:06.10.2023 | 16.10.2023 மு.ப. |

“இதனை நியமனக்குழு பதிவு செய்து
மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கின்றது.”

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**பொ.து.ந.க.எண்.ஈ2/32790-1/2021**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:586/2023** **பொருள் எண்.11**

**Establishment – Greater Chennai Corporation – General Department - Implementation of G.O.(D).No.17 – Time bound promotion with pay hike to the Zonal Health Officers working in the Health Department of Greater Chennai Corporation.**

The Government (Health & Family Welfare Department) has mentioned in G.O.(D).No.354, Health & Family Welfare Department, dated: 23.10.2009, all the doctors working in hospitals/dispensaries and public health centres in the state who do not come under Director Medical of Education side are considered has one unit for the purpose of this order. In the same reference it is mentioned that due to the lack of adequate promotional opportunities in all wings of the Government in Health Department the long services of the Medical Officers are awarded 'time bound promotion with pay hike' based on their year of services as follows:-

**Table-1**

| S. No. | Level | Pay Scale | Year of Services |
|---|---|---|---|
| 1 | Civil Assistant Surgeon (Entry level) | PB3-15600-39100 + GP 5400 | - |
| 2 | Senior Assistant Surgeon | PB3-15600-39100 + GP 5700 | 8 years |
| 3 | Civil Surgeon | PB3-15600-39100 + GP 6600 | 15 years |
| 4 | Senior Civil Surgeon | PB3-15600-39100 + GP 7600 | Years not specified |
| 5 | Chief Civil Surgeon | PB4-15600-39100 + GP 8700 | 20 years |

In continuation to the above Government orders were issued vide G.O.(D).No.583, Municipal Administration and Water Supply Department, dated: 26.11.2010, extending above time bound promotion with pay hike to the Medical Officers (Allopathy) working in Municipalities and Corporations (including Chennai) on par with the Medical Officers (Allopathy) working under Tamil Nadu Government Medical Service as follows:-

**Table-2**

| S. No. | Level | Pay Scale | Year of Services |
|---|---|---|---|
| 1 | Medical Officer Grade-II (Entry level) | PB3-15600-39100 + GP 5400 | - |
| 2 | Medical Officer Grade-I | PB3-15600-39100 + GP 5700 | 8 years |
| 3 | Senior Medical Officer Grade-II | PB3-15600-39100 + GP 6600 | 15 years |
| 4 | Senior Medical Officer Grade-I | PB3-15600-39100 + GP 7600 | Years not specified |
| 5 | Chief Medical Officer | PB4-15600-39100 + GP 8700 | 20 years |

The Government (Health & Family Welfare Department) had issued orders vide G.O.(D).No.12, Health & Family Welfare Department, dated: 20.01.2010 granting 'time bound promotion with pay hike' to the Health Officers, who are working in the Public Health & Preventive Medicine Department based on their years of service as follows:-

**Table-3**

| S. No. | Level | Pay Scale | Year of Services |
|---|---|---|---|
| 1 | Health Officer | PB3-15600-39100 + GP 5700 | - |
| 2 | Senior Health Officer | PB3-15600-39100 + GP 6600 | 6 years as in the Health Officer level. |
| 3 | Deputy Director, Grade-II | PB3-15600-9100 + GP 7600 | 5 years as in the Senior Health Officer level. |
| 4 | Deputy Director, Grade-I | PB4-15600-39100 + GP 8700 | 2 years as in the Deputy Director Grade-II level. |

The Government have issued the following orders in G.O.(D).No.17, Municipal Administration and Water Supply (MC-3) Department, dated: 10.01.2018, after accepting the proposal of the Commissioner, Greater Chennai Corporation.

*"6. (a) To extend G.O.(Ms).No.12, Health & Family Welfare (L2) Department, dated: 20.01.2010 to the Zonal Health Officers in Greater Chennai Corporation, who have been promoted from the post of Medical Officers and award time bound pay hike based on their years of service with retrospective effect (20.01.2010) as ordered in the G.O.(D).No.583, Municipal Administration and Water Supply (MC-3) Department, dated: 26.11.2010.*

*(b) To extend G.O.(Ms).No.12, Health & Family Welfare (L2) Department, dated: 20.01.2010 to the Zonal Health Officers, who were appointed in Greater Chennai Corporation as Zonal Health Officers through direct recruitment and later promoted as Additional City Health Officers/ City Health Officers and award time bound pay hike with retrospective effect (20.01.2010) as mentioned below:*

***Table-4***

| *S. No.* | *Level* | *Pay Scale* | *Year of Services* |
|---|---|---|---|
| *1* | *Zonal Health Officer (Health Officer)* | *PB3-15600-39100 + GP 5700* | *-* |
| *2* | *Zonal Health Officer (Sr. Health Officer)* | *PB3-15600-39100 + GP 6600* | *6 years* |
| *3* | *Zonal Health Officer (Deputy Director, Grade-II)* | *PB3-15600-39100 + GP 7600* | *11 years (5 years as Senior Health Officer)* |
| *4* | *Zonal Health Officer (Deputy Director, Grade-I)* | *PB4-15600-39100 + GP 8700* | *13 years (2 years as Deputy Director Grade-II)* |

*(c) To permit to take into account the services rendered by the Zonal Health Officer in the post of Medical Officer to protect the benefit which they would have accrued, had they continued in the post of Medical Officer as the Zonal Health Officer who had been appointed from the post of Medical Officer by transfer of service, for the purpose of computing the years of service.*

*(d) The financial implication on the implementation of this pay anomaly should be met from the funds of Greater Chennai Corporation.*

*7. This order issues with the concurrence of Finance Department vide its U.O.No.67439/Fin(Pay Cell)/PC3/2017, dated: 09.01.2018."*

Based on the G.O.(D).No.17, Municipal Administration and Water Supply (MC-3) Department, dated: 10.01.2018, resolution has been passed by the Council of Greater Chennai Corporation Vide Special Officer Council Resolution No.189/2018, dated:21.02.2018, to refix the scale of pay with retrospective effect from 20.01.2010 to the below mentioned 3 Additional City Health Officers and 6 Zonal Health Officers (totally 9 Nos.).

**Table-5**

| S.No. | Name of the Officials | Designation |
|---|---|---|
| 1 | Dr.N.D.Senthilnathan | Addl. CHO |
| 2 | Dr.M.Jagadeesan | Addl. CHO |
| 3 | Dr.G.Rajkumar | Addl. CHO |
| 4 | Dr.S.Mahalakshmi | ZHO |
| 5 | Dr.M.Lakshmi Devi | ZHO |
| 6 | Dr.A.Suganya Devi | ZHO |
| 7 | Dr.S.Mallika | ZHO |
| 8 | Dr.S.Raja | ZHO |
| 9 | Dr.Priyadarshini | ZHO |

Government Letter No.6955/MC-3/2020-3, Municipal Administration and Water Supply (MC-3) Department, dated: 29.07.2020, it is informed that the orders issued in G.O.(D) No.583, Municipal Administration & Water Supply Department, Dated: 26.11.2010 extending the Time Bound Promotion with pay hike given to Medical Officers working in Municipalities/Corporations is also applicable to the Medical Officers working in Greater Chennai Corporation.

The City Health Officer of Greater Chennai Corporation has sent a letter dated:29.09.2021(P.H.D.C.No.C5/8829/2021) requesting to award 'time bound promotion with pay hike' as per the Government Orders (G.O.(D).No.17, MA&WS (MC-3) Department, dated:10.01.2018) to 1)Dr.G.Sheela, ZHO-7 2)Dr.B.Ashalatha, ZHO-9 3)Dr.D.Priyadarshini, ZHO-8, who were promoted as Zonal Health Officer vide proceedings of the Commissioner, Greater Chennai corporation, dated: 03.01.2020, for the service period rendered in the posts of Zonal Health Officer in Greater Chennai Corporation.

**Table-6**

| S.No. | Name of the Officials | Designation | Service Particulars |
|---|---|---|---|
| 1 | Dr. G.Sheela | Zonal Health Officer | Medical Officer (06.10.2007) Zonal Health Officer (03.01.2020) |
| 2 | Dr. B.Ashalatha | Zonal Health Officer | Medical Officer (14.11.2007) Zonal Health Officer (03.01.2020) |

| | | | |
|---|---|---|---|
| 3 | Dr.D.Priyadharshini | Zonal Health Officer | Medical Officer (18.07.2008)<br>Zonal Health Officer (03.01.2020) |

In this regard, a letter has been sent and the Financial Implication details received from Financial Advisor on awarding vide letter dated: 12.03.2022 'Time bound promotion with pay hike' to the above 3 Zonal Health Officers till 28.02.2022 are as follows:

**Table-7**

**Financial Implication:**

| S.No. | Name of the Zonal Health Officers/ Zone | Expenditure till 28.02.2022 |
|---|---|---|
| 1. | Dr. G.Sheela, Zone -7 | Rs.9,31,787/- |
| 2. | Dr. B.Ashalatha, Zone -5 | Rs.7,21,082/- |
| 3. | Dr.D.Priyadharshini, Zone-8 | Rs.3,88,977/- |
| | **TOTAL** | **Rs.20,41,846/-** |

As per the concurrence of Financial Adviser and orders of the Principal Secretary/ Commissioner, Greater Chennai Corporation dated: 01.04.2022 letter has been sent to Government for obtaining clarification on computing the years of service for implementing the 'time bound promotion with pay hike' as per para 6(b) & 6(c) in G.O.(D).No.17, Municipal Administration and Water Supply (MC-3) Department, dated: 10.01.2018 to the Zonal Health Officers working in Public Health Department, Greater Chennai Corporation.

In continuation that, the representations have been received from the 1).Dr.G.Sheela, ZHO-7, dated: 31.05.2023 & 10.10.2023, 2).Dr.B.Ashalatha, ZHO-9, dated: 31.05.2023 & 26.10.2023, 3).Dr.D.Priyadarshini, ZHO-8, dated: 31.05.2023 & 26.10.2023 requested that to consider their request for time-bound promotion and pay fixation at earliest.

The G.O.(D).No.17, Municipal Administration and Water Supply (MC-3) Department, dated: 10.01.2018, regarding 'Time bound promotion with pay hike' may be extended to the above Zonal Health Officers (mentioned in Table-6) in Greater Chennai Corporation, and are similarly placed persons as that of the officials mentioned in Table-5.

Hence,

1. To implement the G.O.(D).No.17, Municipal Administration and Water Supply (MC-3) Department, dated: 10.01.2018 and to fix the scale of pay with retrospective effect, as per table-4, to the three Zonal Health Officers mentioned in table-6.

2. Due to implementation of above G.O.(D).No.17, Municipal Administration and Water Supply (MC-3) Department, dated: 10.01.2018, the additional commitment of expenditure for the period upto 28.02.2022 to the Officials mentioned in Table 6 and 7, will be met from the funds of Greater Chennai Corporation as approved by Financial Advisor.

3. Further, the expenditure has to be calculated for the period from 01.03.2022 and it will also be met from the funds of Greater Chennai Corporation.

4. To withdrawal the proposal already been sent to Government for obtaining clarification on computing the years of service for implementing the 'time bound promotion with pay hike' as per para 6(b) & 6(c) in G.O.(D).No.17, Municipal Administration and Water Supply (MC-3) Department, dated: 10.01.2018 and to extend the G.O. to to the Zonal Health Officers working in Public Health Department.

Sl.No.1 to 4 above, approvel of the Council is requested, through Appointment committee.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**
**********

**பொ.து.ந.க.எண்.இ6/024979/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:587/2023** **பொருள் எண்.12**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.ச.கரிமுல்லா பேய்க், இளநிலை உதவியாளர், மன்றத்துறை அவர்கள் துறைத் தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து தளர்வாணை வழங்க அனுமதி.**

அரசாணை (நிலை) எண்.1120, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்(பணி எம்.)துறை, நாள்.30.10.1984 மற்றும் அரசு கடித எண்.9140/பணி எம்.89-11, நாள்.20.11.1989ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, வகுப்பு 3 மற்றும் 4ஆம் நிலை பணியாளர்களுக்கான சார்நிலை பணி துணை விதிகள் 2009, மன்றத் தீர்மான எண்.13/2015, நாள்: 29/01/2015 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, *(TNULB Rules 2023)*, விதி எண்.211லும் உள்ள பணி நியமன முறையில் உதவியாளர் பதவிக்கு குறைந்தபட்ச பொதுக்கல்வித்தகுதி மற்றும் துறைத் தேர்வுகளான சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் -1 மற்றும் தமிழ்நாடு அலுவலக நடைமுறை கையேடு தேர்வில் தேர்ச்சிபெற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.ச.கரிமுல்லாபேய்க், இளநிலை உதவியாளர், மன்றத்துறை அவர்களின் 23.06.2023 நாளிட்ட கடிதத்தில், தனக்கு 58 வயது பூர்த்தியடைந்த நிலையில் தன்னால் தொடர்ந்து தேர்வு எழுத முடியவில்லை என்றும், மேலும், தொடர்ந்து ஐந்து முறைக்கு மேல் தேர்வு எழுதியும் (டிசம்பர் 2010, மே 2012, மே 2016, டிசம்பர் 2017, டிசம்பர் 2021) கணக்கு தேர்வு பாகம்-1 தேர்வினை தேர்ச்சி பெற இயலாத காரணத்தினால் தனக்கு சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்-1ல் *(The Account Test for Subbordinate Officers - Part-I)* தேர்ச்சி பெறுவதிலிருந்து அரசு விதிகளின்படி தளர்வாணை வழங்கி உதவியாளராக பதவி உயர்வு வழங்க ஆவண செய்யுமாறு கோரியுள்ளார்.

அரசாணை (நிலை) எண்.41, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள். 09.05.2023ன்படி, சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அவர் பொருட்டு விதிகளைத் தளர்த்த கீழ்க்கண்ட நிபந்தனைகளை அவர் பூர்த்தி செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

1) சம்பந்தப்பட்ட அரசு அலுவலர் 55 வயதிற்குக் குறையாதவராக இருக்க வேண்டும்.
2) தொடர்புடைய அரசு அலுவலர் தேர்வுகளில் தேர்ச்சி பெற குறைந்தது ஐந்து தடவைகளாவது முயற்சி செய்திருக்க வேண்டும் இதற்கு அத்தாட்சியாக, தொடர்புடைய துறை / சிறப்பு தேர்வினை ஐந்து தடவைகள் தேர்வு மையத்திற்கு வந்து தேர்வுகள் எழுதியதற்கான விண்ணப்பத்தாரரின் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுடன் *(Hall tickets)* தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிடும் மேற்படி தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் தேறாதவர்கள் ஆகிய விவரப்பட்டியல் *(Detailed Results)* அடங்கிய அரசுப் பணியாளர் தேர்வாணையச் செய்தி வெளியீட்டை *(Tamil Nadu Public Service Commission Bulletin)* வைத்து அனுப்ப வேண்டும்.
3) சம்மந்தப்பட்ட அரசு அலுவலர் இந்த சலுகையை அடையத்தக்க அளவிற்கு அவருடைய பணிக்குறிப்புகள் மனநிறைவு அளிப்பதாக இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசு ஆணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள். *06.10.*2009ல், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் (வகுப்பு 1 முதல் 4 வரை) துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து தளர்வாணைகளை நியமனக்குழு கூட்டத்தில் சமர்ப்பித்து, அதன் மூலம் மன்றத்தின் அனுமதி பெற்று கோப்புகளின் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு.ச.கரிமுல்லா பேய்க், இளநிலை உதவியாளர், மன்றத்துறை என்பவர் துறைத் தேர்வுகளில் 5 முறை கலந்து கொண்டு தேர்வு எழுதியும் தேர்ச்சி பெற இயலாத விவரங்கள் கீழ்வருமாறு அளிக்கப்படுகிறது.**

| வ. எண் | ஆண்டு / மாதம் | பதிவு எண் | தேர்வின் முடிவு |
|---|---|---|---|
| 1 | டிசம்பர் 2010 | 001684 | Failed |
| 2 | மே 2012 | 001505 | Failed |
| 3 | மே 2016 | 001617 | Failed |
| 4 | டிசம்பர் 2017 | 221700816 | Failed |
| 5 | டிசம்பர் 2021 | 211201556 | Failed |

துணைச் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களிடமிருந்து வரப்பெற்ற 07/11/2023 நாளிட்ட கடிதத்தில், திரு.ச.கரிமுல்லா பேய்க் என்பவர் *The Account test for Subordinate Officers Part*-1 எனும் துறைத்தேர்வினை 5 முறைக்கு மேல் எழுதியும், தேர்ச்சி பெறாத விவரம் மேற்கண்டவாறு உறுதிபடுத்தியுள்ளார்.

ஆகவே, அரசாணையில் உள்ளவாறு திரு.ச.கரிமுல்லா பேய்க், இளநிலை உதவியாளர், மன்றத்துறை அவர்கள் பின்வரும் தகுதிகளை பெற்றுள்ளார்.

| வ. எண் | பொருள் | விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1) | தனியர் பிறந்த தேதி | 09.07.1965 | தனியர் 58 வயது பூர்த்தி செய்துள்ளார் |
| 2) | உதவியாளர் பதவி உயர்விற்கு தனியர் முடித்திருக்க வேண்டிய துறை தேர்வுகள் | தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வு | தனியர் இத்தேர்வில் 07.09.2009ல் தேர்ச்சி பெற்றுள்ளார் |
| | | சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்-1 *(The Account Test for Subbordinate Officers – Part-I)* | துணைச் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களிடமிருந்து வரப்பெற்ற 07/11/2023 நாளிட்ட கடிதத்தின்படி, தனியர் *The Account test for Subordinate Officers Part*-1 எனும் துறைத்தேர்வினை 5 முறைக்கு மேல் எழுதியும், தேர்ச்சி பெறாத விவரம் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. |
| 3) | தனியர் 5 முறை தேர்வு எழுதி தோல்வியுற்றதற்கான நுழைவு சீட்டுடன், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிடும் மேற்படி தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் தேறாதவர்கள் ஆகிய விவரப்பட்டியல் *(Detailed Results)* | நடப்பு கோப்பு பக்க எண்கள். 19 முதல் 101 வரை<br>டிசம்பர் 2010<br>மே 2012<br>மே 2016<br>டிசம்பர் 2017<br>டிசம்பர் 2021 | |

| | | |
|---|---|---|
| *4)* | மன்றத்துறையில் இருந்து அளிக்கப்பட்ட தனியரின் பணி குறிப்பு விவரம் | பெருநகர சென்னை மாநகராட்சி, மன்றத்துறையில் இளநிலை உதவியாளராக பணியாற்றும் திரு.ச.கரிமுல்லா பேய்க் என்பவர் 16.07.2014 முதல் இந்நாள் வரை இத்துறையில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கை மற்றும் பணிக்கு குந்தகமின்றி பணிபுரிந்து வருகிறார் என தெரிவித்து மன்றச்செயலாளர் 16/10/2023 நாளிட்ட சான்றளித்துள்ளார். |

எனவே, மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், திரு.ச.கரிமுல்லா பேய்க், இளநிலை உதவியாளர், மன்றத்துறை என்பவர் துறைத் தேர்வான சார் நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்-1ல் *(The Account Test for Subordinate Officers-Part-I (T.C.124))* தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்து தளர்வாணை வழங்க நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**பொ.து.ந.க.எண்.ஈ2/21437/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:588/2023** **பொருள் எண்.13**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - முதுநிலை பூச்சியியலர் (Senior Entomologist) பதவி உயர்வு வழங்க அரசாணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி.**

**தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 :**

அரசாணை (நிலை) எண்.45, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.12.04.2023ன்படி, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 மற்றும் Tamil Nadu Governement Gazette Extraordinary No.124, வெளியிடப்பட்டு 13.04.2023 நாள் முதல் அமலில் உள்ளது. இவ்வமைப்பு விதிகள் 2023-ல், விதி எண். 193 மற்றும் 193(4)ன்படி அனைத்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒரே பணியமைப்பு விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பதவி உயர்வுக்கும், மையநாள் (விதி எண். 193 (1) ன்படி) ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதம் 15 ஆம் தேதி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடிதம் எண்.8243/மா.ந.-7/2023-1, நாள்.20.07.2023 கடிதத்தில், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ல் திருத்தங்கள் கோரி பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டது தொடர்பாக, பெருநகர சென்னை மாநகராட்சியின் குறிப்புரை கோரப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள், 2023-ல், விதி எண். 398ன்படி கால அவகாசம் அளித்து தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023ல் குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஒரு பகுதியினையும்/ விதியினையும் செயல்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டுமாயின்:

அரசானது எந்த ஒரு உள்ளாட்சி அமைப்பு மற்றும் நிர்வாக இயக்குநரிடமிருந்து கருத்துரு பெறப்படும் பட்சத்தில் விதியினை செயல்படுத்த 6 மாதத்திற்கு மிகாமல் கால அவகாசம் வழங்கலாம் என பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

*"**398. Time limit for implementation of this rules**.- Not with standing the date of coming into force of these rules, the Government may fix time limits for the purpose of implementation of any of the provisions of these rules for which preliminary arrangements have to be made to implement the same:*

*Provided that the Government may, on requisition made by any municipality or Director extend the time limits fixed under this rule for a period of not exceeding six month"*

*Provided further that, for any sufficient case, on requisition made from and of such municipality or Director, the Government may extend such period for a further period of six months."*

இதன் அடிப்படையில், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, நடைமுறைபடுத்த, விதி எண்.398-ல், வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 6 மாத காலம் அவகாசம் அளித்து உத்தரவு பிறப்பிக்கும்படி பொதுத்துறையின் மூலமாக அரசுக்கு 22.07.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

**ஏற்கனவே நடைமுறையில் உள்ள கல்வித்தகுதிகளின்படி பதவி உயர்வு அளிப்பதற்கான அரசாணை:-**

அரசாணை எண்.516, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (M.7) துறை, நாள் 02.09.2023ல் பத்தி எண்.8ல் பின்வருமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

*"8 the Additional Chief Secretary/Commissioner, Greater Chennai Corporation, Director of Municipal Administration and Director of Town Panchayats to fill up the promotion vacancies which exist in the Urban Local Bodies prior to the coming into force*

*of the Tamil Nadu Ubran Local Bodies Rules, 2023 on 13.04.2023 by the appropriate authority competent under the said Rules, 2023 by taking educational qualifications prescribed in the Service Rules that existed prior to the commencement of the Tamil Nadu Urban Local Bodies Rules, 2023 and order accordingly".*

மேற்படி அரசாணையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் காலிப்பணியிடங்களை பதவி உயர்வு மூலமாக நிரப்பும் பொருட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அமலுக்கு வருவதற்கு முன்னதாக ஏற்கனவே நடைமுறையில் உள்ள விதிகள்படி பதவி உயர்வுகளுக்கு கல்வித்தகுதிகளை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, 13.04.2023ல் தெரிவித்துள்ளவாறு உரிய பணி நியமன அலுவலர் மூலமாகவே நிரப்பப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத்துறையின் 05.10.2023 நாளிட்ட கடிதத்தில், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள்-*2023*, விதி எண்.*398*ன்படி (அனைத்து பணியாளர்களுக்கும் அவரவர் கல்வி தகுதிக்கேற்ப ஏற்கனவே நடைமுறையில் பின்பற்றப்பட்டு வந்த பணிவிதிகள் மற்றும் துணைவிதிகளின்படி பதவி உயர்வுகள் பரிசீலிக்க) கால அவகாசத் தேவையினை கருத்தில் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது பணிபுரிந்து வரும் அனைத்து தகுதியுள்ள பணியாளர்களுக்கும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள Service Rule 1969 மற்றும் துணை விதிகள் *2009, 2017* மற்றும் *2019*ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் *2023*ல் விதி எண்.*398*ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி மேலும் *6* மாதகாலம் அவகாசம் அளித்து உத்தரவு பிறப்பிக்கும்படி அரசினை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கால அவகாசத்திற்கு அரசாணையினை எதிர் நோக்கி இப்பட்டியலாண்டில் ஏற்படும் காலிப்பணியிடங்களை பதவி உயர்வு மூலம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்.

**<u>காலிப்பணியிடம் நிரப்புவதின் அவசியம்:</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம், பூச்சி தடுப்பு துறை மூலம் கொசுக்களினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா, யானைக்கால், மூளைக்காய்ச்சல் மற்றும் விலங்குகளிடம் உள்ள ஒட்டுண்ணிகள் (Zoonotic Disease) மூலம் பரவக் கூடிய லெப்டோஸ்பைரோஸிஸ், (Scrubtyphus) ஆகிய நோய்களை பரவாமல் கட்டுப்படுத்தும் பணிகள் மற்றும் மண்டலங்களுக்குட்பட்ட நீர்நிலைகளில் வளரும் கொசுப்புழுக்களை கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளை பூச்சியியல் வல்லுநர்களை (Entomologists) கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருவதால், மக்களின் நலன் கருதி இப்பதவியில் ஏற்படும் காலிப்பணியிடத்தினை நிரப்புவது அவசியமாகிறது.

**<u>முதுநிலை பூச்சியியலர் *(Senior Entomologist)* பதவிக்கான விதிகள்:</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியில் முதுநிலை பூச்சியியலர் பதவி "வகுப்பு-II"ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் *2023*ன்படி, இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் ஆகியன அரசின் வசம் உள்ளது. இப்பதவிக்கான மைய நாள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 15 ஆம் தேதி ஆகும். இப்பதவிக்கான ஊட்டப்பதவி இளநிலை பூச்சியியலர் பதவியாகும்.

முதுநிலை பூச்சியியலர் பதவிக்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணிவிதிகளின்படி, நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு அட்டவணை-Iல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை-I**

| Crucial Date: Oct 1st of Every Year | | Panel Year 01.10.2022 to 30.09.2023 |
|---|---|---|
| Senior Entomologist Class – II (Scale of Pay Rs.15,600 – 39,100 + Grade pay Rs.5,400) (New Scale of Pay Rs.56,100 – 2,05,700) Level - 22 | By Promotion | Bachelor's Degree in Zoology in a University or Institution recognized by the University Grants Commission or equivalent qualifications in Medical Entomology. |

2023-2024 ஆம் ஆண்டிற்கான முதுநிலை பூச்சியியலர் (Senior Entomologist) பதவிக்கு 15.03.2023 மைய நாளாக கொண்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் *2023*ன்படி முதுநிலை பூச்சியியலர் பதவிக்கு வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு:

**அட்டவணை - II**

| Crucial Date: March 15th of Every Year | | | Panel Year 15.03.2023 to 14.03.2024 |
|---|---|---|---|
| **Sl. No.** | **Name of the post** | **Method of Appointment** | **Qualifications** |
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** |
| 1 | Senior Entomologist | 1) By recruitment by transfer from among the holders of the post of Entomologist in the Tamil Nadu Municipal Council Service; or | Must have rendered service as Entomologist for a period of not less than five years. |
| | | 2) By deputation from among the holders of the post of Senior Entomologist in the Tamil Nadu Public Health Service. | Must have rendered service in an equivalent cadre for a period of not less than two years in a Department or Institution under the control of the Government. |

அரசாணை எண்.516, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் *(M7)* துறை. நாள்.0209.2023ன்படியும், தற்போது அமலில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ன்படியும், முதுநிலை பூச்சியியலர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தை நிரப்புவதற்கான தகுதியாக அட்டவணை I-ல் உள்ள தகுதியை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, அட்டவணை I-ன்படி கண்டுள்ள தகுதிகளை இந்த பதவி உயர்விற்கு கருத்தில் கொண்டு, 01.10.2022-யை மைய நாளாகக் கொண்டு, 2022-2023 ஆம் ஆண்டுக்கான தெரிவுப்பட்டியலுக்கு காலிப்பணியிடம் ஏதும் இல்லாத காரணத்தினால் “இன்மைப்பட்டியல்” வெளியிடப்பட வேண்டும்.

மேலும், 15.03.2023-யை மைய நாளாகக் கொண்டு, 2023 – 2024 ஆம் பட்டியலாண்டிற்கு (15.03.2023 முதல் 14.03.2024 வரை) தெரிவுப்பட்டியல் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மைய நாள்:** 15.03.2023 *(தற்போது தெரிவுப்பட்டியல் தயார் செய்யப்பட வேண்டியது)*

**பட்டியல் ஆண்டு**: (15.03.2023 முதல் 14.03.2024 வரை)

**காலிப்பணியிட மதிப்பீடு:**

2023-2024 ஆம் ஆண்டிற்கான முதுநிலை பூச்சியியலர் பதவிக்கான காலிப்பணியிட மதிப்பீட்டின் விவரங்கள் அட்டவணை – IIIல் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அட்டவணை III**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | முதுநிலை பூச்சியியலர் | | |
| 2. | மைய நாள் | 15.03.2023 (15.03.2023 முதல் 14.03.2024 வரை) | | |
| 3. | காலிப்பணியிட விவரம் | *i.* அனுமதிக்கப்பட்ட பணியிடம் | - | 05 |
| | | *ii.* மொத்தம் | - | 05 |
| | | *iii.* (அ) தற்காலிக பணியிடம் | - | 00 |
| | | *iv.* (ஆ) நிரந்தரப் பணியிடம் | - | 05 |
| | | *v.* தற்போது பணிபுரிவர்கள் | - | 04 |
| | | *vi.* மைய நாளுக்கு முன்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் | - | 00 |
| | | *vii.* 15.03.2023 முதல் 14.03.2024 வரை (2023-2024) பணியிலிருந்து ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடம்<br>❖ G.தேன்மொழி, முதுநிலை பூச்சியியலர் அவர்கள் 31.05.2023 அன்று வயது முதிர்வு காரணமாக ஓய்வு | - | 01 |
| | | *viii.* எதிர்பாராமல் ஏற்படும் காலிப்பணியிடம் (அரசாணை எண். 368. பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை நாள்-18.10.1993) | - | 01 |
| | | ***ix.* மொத்தம்** | | **02** |
| 4. | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா? இல்லையெனில் காரணம் | 2022-2023 ஆம் ஆண்டுக்கான தெரிவுப்பட்டியலுக்கு காலிப்பணியிடம் ஏதும் இல்லாத காரணத்தினால் “இன்மைப் பட்டியல்” ஆக வெளியிடப்பட வேண்டும். | | |

**முந்தைய தெரிவுப்பட்டியலின் விவரம்:**

பெருநகர சென்னை மாநகராட்சி, முதன்மை செயலர்/ ஆணையர் அவர்களின் 12.11.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, 2021-2022 ஆம் ஆண்டிற்கான முதுநிலை பூச்சியியலர் பதவியில் ஏற்பட்ட காலிப்பணியிடத்தில் 1 இளநிலை பூச்சியியலருக்கு முதுநிலை பூச்சியியலராக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

2022-2023 ஆம் ஆண்டுக்கான தெரிவுப்பட்டியலுக்கு காலிப்பணியிடம் ஏதும் இல்லாத காரணத்தினால் “இன்மைப் பட்டியல்” ஆக வெளியிடப்பட வேண்டும்.

**தேர்ந்தோர் பெயர் பட்டியல் (2023-2024)**

2023-2024 ஆம் ஆண்டிற்கான முதுநிலை பூச்சியியலர் பதவி உயர்வுக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்க தகுதிவாய்ந்த நபர்களின் பணிவிவரங்கள் கோரி, பொது சுகாதாரத்துறைக்கு பொதுத்துறையின் 10.10.2023 நாளிட்ட சுற்றறிக்கை அனுப்பப்பட்டதில், மாநகர நல அலுவலர் அவர்களின் 25.10.2023 நாளிட்ட கடிதத்தில் முதுநிலை பூச்சியியலர் பதவிக்கு கீழ்நிலை பதவியான இளநிலை பூச்சியியலர் பதவியில் பணிபுரிந்து வரும் கீழ்கண்ட 7 அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவித்து, பணிப்பதிவேடு, பதிவுருத்தாள் மற்றும் பரிந்துரைப்பட்டி ஆகிய விவரங்கள் பெறப்பட்டுள்ளன.

| வ.எண். | இளநிலை பூச்சியியலர்களின் பெயர் | பணிபுரியும் இடம் |
|---|---|---|
| 1 | திரு.*P*.வெங்கட சிவராம குமார் | மண்டலம் - *14* |
| 2 | திரு.*R*.ஜோஸ்வா | மண்டலம் - *2* |
| 3 | திருமதி.*B*.சூர்யா | மண்டலம் - *4* |
| 4 | திருமதி.*C.K*. சொரூபராணி | மண்டலம் - *1* |
| 5 | திருமதி.*K*.மாலதி | மண்டலம் - *3* |
| 6 | திரு.ஜெகதீசன் | மண்டலம் - *11* |
| 7 | திருமதி.*S.A*. ஜூலி வைலட் | மண்டலம் - *10* |

பெருநகர சென்னை மாநகராட்சியில் *15.03.2023*-யை மைய நாளாகக் கொண்டு அரசாணை எண்.516, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் *(M7)* துறை. நாள்.02.09.2023ன்படி, ஏற்கனவே நடைமுறையில் உள்ள பணி விதிகளின்படி, *2023-2024* ஆம் ஆண்டிற்கான முதுநிலை பூச்சியியலர் பதவிக்கு தகுதியுள்ள இளநிலை பூச்சியியலர்களின் தெரிவுப்பட்டியல் அட்டவணை-IVல் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சமர்ப்பிப்பது யாதெனில், அரசாணை எண்.*368*, பணியாளர்கள் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத்துறை நாள்:*18-10-1993*ல் கீழ்க்கண்டுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

When the estimate of vacancies arrived at is between 1 and 10, provision for unexpected contingency at 50- percent subject to a minimum of 1 should be made. Hence for a single vancy estimated one more number should be added to the estimate in order to meet unexpected contingencies, and a panel consisting of two names should be drawn.

அதன்படி, முதுநிலை பூச்சியியலர் பதவிக்கு *2023-2024* ஆம் பட்டியலாண்டிற்கு தற்போதுள்ள ஒரு காலிப்பணியிடத்திற்கு மேற்படி அரசாணையின்படி, ஒரு காலிப்பணியிடம், ஆக இரண்டு நபர்களைக் கொண்டு தேர்ந்தோர் பெயர் பட்டியல் கீழ்க்கண்டுள்ளவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை - IV**

| வ. எண் | பெயர் (திருவாளர்கள்) | இளநிலை பூச்சியியலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | குறிப்புரை |
|---|---|---|---|
| 1. | திரு.*P*.வெங்கட சிவராம குமார், மண்டலம்-*14* | 08.11.2012 | தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும், மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் தனியரின் பெயரை விதிகளின்படி இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 2. | திரு.R.ஜோஸ்வா மண்டலம்-2 | 08.11.2012 | தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும், மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் தனியரின் பெயரை விதிகளின்படி இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |

**பணிவிதிகளின்படி பதவி உயர்வு வழங்கும் அதிகாரம்:-**

அரசாணை எண்.91, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்.28.05.1998ன்படியும், அரசாணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்.06.10.2009 மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் 24.11.2012 நாளிட்ட செயல்முறை ஆணையின்படியும், முதுநிலை பூச்சியியலர் (Senior Entomologist) பதவி உயர்வு வழங்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு உள்ளது.

அரசாணை (நிலை) எண்,45, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.12.04.2023 (ம) தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, விதி 205ன்படி முதுநிலை பூச்சியியலர் (Senior Entomologist) பதவி உயர்வு வழங்கும் அதிகாரம் அரசிடம் உள்ளது.

எனவே,

அ) 01.10.2022-யை மைய நாளாகக் கொண்டு, 2022-2023 ஆம் ஆண்டுக்கான தெரிவுப்பட்டியலுக்கு காலிப்பணியிடம் ஏதும் இல்லாத காரணத்தினால் "இன்மைப் பட்டியல்" ஆக வெளியிடவும்,

ஆ) 15.03.2023- இறுதி நாளாகக் கொண்டு, 2023-2024 ஆம் ஆண்டிற்கான முதுநிலை பூச்சியியலர் பதவி உயர்வுக்கு அரசாணை எண்.516, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா7) துறை, நாள்.02.09.2023ன் அடிப்படையில் அட்டவணை-Iல் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஏற்கனவே நடைமுறையில் இருந்த பணிவிதிகளின்படி கல்வித்தகுதி மற்றும் பணிக்காலத்தகுதி ஆகியவற்றில் முழுத்தகுதிப் பெற்ற, மேற்படி அட்டவணை IVல் கண்டுள்ள இளநிலை பூச்சியியலர்களை கொண்ட தெரிவுப்பட்டியல் வெளியிட அரசின் ஒப்புதல் வேண்டியும்,

இ) தற்போதைய நிலவரத்தின்படி முதுநிலை பூச்சியியலர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தில், 7வது ஊதியக்குழு பரிந்துரையின்படி, ரூ.56,100 – 2,05,700 (level 22) என்ற ஊதிய விகிதத்தில் மூப்பு நிலையின்படி முதுநிலை பூச்சியியலராக பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு அரசாணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**I.T.C.C.No.C2/2047/2022**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:589/2023** **பொருள் எண்.14**

**+Greater Chennai Corporation – IT Cell – Appointing three resources for Revenue Department under ERP 2.0 project as per Tamil Nadu Tender Transparency Act – For Approval**

Based on the approval of Competent authority tender for Identifying& appointing Project Management Consultant (PMC) for implementation of ERP 2.0 in line with the latest trends in digital technology standards was floated and work order for the above work for a period of 25 months was awarded to M/s.Deloitte Touche Tohmatsu India LLP (for an order value of Rs. 2,13,04,900/-)

Now, orders of Additional Chief Secretary / Commissioner for appointing additional three resources for Revenue Department for a period of 6 months to carry out the tasks assigned by Additional Commissioner (R&F) with regard to OSR, ERP integration, generating data insights, training of ULB staff, ULB revenue augmentation, data analysis, preparation of reports for Revenue & Finance in professional standards and presentation of proposals and reports has been obtained by Revenue department and the same has been forwarded to IT Cell for further process. Further more, in the note copy it is recorded that the "The additional manpower resource cost estimates per man month are kept either at par or significantly lower than the current resources deployed by M/s. Deloitte under the ERP 2.0 project and it is lower than the 25% extension (approximately 13%, excluding taxes), allowed under the Tamil Nadu Tender Transparency Act".The cost details of the proposed additional three manpower resources as per Additional Chief Secretary / Commissioner Orders is detailed below:

| S.No | Resources | Qualification | Man Month Cost (Rs.) | Man Months Required | Total cost (6 Months) (Rs.) |
|---|---|---|---|---|---|
| 1. | Economist/Team Leader | PG in Economics with experience in Government consulting, especially in city level revenue and finance projects | 2,00,000 | 3 | 6,00,000.00 |
| 2. | Charted Accountant | C.A Certification with experience in government consulting and skills in financial modelling, budget, model creation, revenue projections etc. | 1,75,000 | 6 | 10,50,000.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | Presentation of proposal & reports | Any UG degree, with masters in Economics/public policy/ MBA/ social sciences with skills in report writing, presentation creation, data analysis | 1,35,000 | 6 | 8,10,000.00 |
| Total (Excluding GST @ 18%) | | | | | 24,60,000.00 |

Hence,

1. To avail 25% extension from ERP 2.0 Project Management Consultant (PMC) project for appointing additional three resources for Revenue Department for a period of six months with a work value of Rs. 24,60,000/- (exclusive of GST) in addition to the existing work order rate of Rs.2,13,04,900/- (competent authority approved rate), as per Additional Chief Secretary / Commissioner approval in-line with Tamil Nadu Tender Transparency Act.

2. To issue work order to M/s Deloitte Touche Tohmatsu India LLP, for the additional work value of Rs. 24,60,000/- (exclusive of GST) for appointing additional three resources for Revenue Department (for a period of six months) as per Additional Chief Secretary / Commissioner approved qualification / Skill set (as tabulated above)

3. To meet the additional expenditure of Rs. 24,60,000/- (exclusive of GST) under the budget provision code No.220-53-01-02 e-governance design & consultancy charges of IT Cell for the year 2023-2024.

4. To execute the supplementary agreement for the above work and payment of Security deposit (2%).

Sl.No. 1 to 4 above, approval of Standing Committee(Works) is requested and subsequently to be placed in the council for record.

“23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.201/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**நி.மஉ.து.ந.க.எண்.எல்இ6/2507/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:590/2023** **பொருள் எண்.15**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் - 13, வார்டு - 169ல் (பழைய வார்டு - 171) சின்னமலை வேளச்சேரி சாலை மற்றும் சின்னமலை எல்.டி.ஜி.சாலை - பல்நோக்கு கட்டிடத்தில் பொது மக்கள் நலன் கருதி நியாய விலைக்கடை வைப்பதற்கு அனுமதி - 13வது மண்டல வார்டு குழுவின் பரிந்துரை பெறப்பட்டது - திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்க நிறுவனத்தின்கீழ் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடைகளுக்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி.**

வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் 19.10.2023 நாளிட்ட கடிதத்தில், டி.யு.சி.எஸ், சைதாப்பேட்டை/ 11 (02LC055SC) நியாயவிலைக் கடை தற்போது வெங்கடாபுரம், சைதாப்பேட்டை, சென்னை 15ல் செயல்பட்டு வருகிறது என்றும் இதில் சுமார் 1600க்கு மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருவதாகவும். இதனால் கூட்ட நெரிசல் ஏற்படுவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவதாகவும், இதனை கருத்தில் கொண்டு புதியதாக நியாயவிலைக் கடை அமைக்கும் பொருட்டு சின்னமலை வேளச்சேரி சாலையில் சைதை மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையக்கட்டிடத்தை உபயோகபடுத்திக் கொள்ளுமாறு மாமன்ற உறுப்பினர் கடிதம் அளித்துள்ளதாகவும் அதன் பொருட்டு அந்த பல்நோக்கு மையக்கட்டிடத்தை நியாயவிலைக் கடை அமைத்திட வாடகை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு ஆணை வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் கடிதத்தில் டி.யு.சி.எஸ்., சின்னமலை / 02 (02LC107SC) எண். 122, LDG சாலை, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை-15 என்கிற முகவரியில் தனிநபர் கட்டிடத்தில் மாத வாடகையில் செயல்பட்டு வந்த கட்டிடம் தற்போது பழுதடைந்துள்ள காரணத்தால் அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் LDG சாலையில் புதியதாக கட்டி முடிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ள கட்டிடத்தை உபயோகபடுத்திக் கொள்ளுமாறு மாமன்ற உறுப்பினர் கடிதம் அளித்துள்ளதாகவும், அதன் பொருட்டு அந்த பல்நோக்கு மையக் கட்டிடத்தை நியாய விலைக் கடையை இடமாற்றம் செய்து கொள்ள வாடகை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு ஆணை வழங்குமாறு, 16.05.2023 நாளிட்ட கடிதத்தில், இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர், திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் லிமிடெட் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

மண்டலம்-13, வார்டுக் குழு தீர்மான எண். 260, நாள்.10.08.2023ன்படி, பரிந்துரை பெறப்பட்டது.

மன்றத் தீர்மான எண்.689/2013, நாள்.31.10.2013-ல் மக்கள் நலன் கருதி வியாபார நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலை கடைக்கு மாத வாடகை சதுர அடிக்கு ரூ.5/- என்று நிர்ணயம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளபடி, இப்பொருளில் கண்டுள்ள கடைக்கு நிர்ணயம் செய்யவும், இனிவரும் காலங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலைகடைகளுக்கும் மற்றும் கூட்டுறவு நியாய விலை கடைகளுக்கும் மாத வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி கோரும் கோப்புகளில் சதுர அடிக்கு ரூ.5/- என்றே நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடனும் பெரும்பான்மை மன்ற உறுப்பினர்களின் கருத்தின் அடிப்படையிலும் அதற்கு மன்றம் அனுமதி அளித்துள்ளது.

மேற்கண்ட பொருளின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, வார்டு - 169 (பழைய வார்டு -171) சின்னமலை, வேளச்சேரி சாலை மற்றும் சின்னமலை எல்.டி.ஜி., சாலையில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் கட்டி முடிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடத்திற்கு கீழ்கண்டவாறு வாடகை நிர்ணயிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,

| **TUCS - ALLOTMENT FOR RATION SHOP** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ASSESSEE NAME | TRIPLICANE URBAN CO – OPERATIVE SOCIETY LTD., (TUCS) | | | | | |
| PROPERTY ADDRESS | 1. VELACHERY MAIN ROAD,<br>2. CHINNAMALAI LDG ROAD | | | | | |
| PROPERTY TYPE | COMMERCIAL (MULTI PURPOSE HALL MODIFIED AS RATION SHOP) | | | | | |
| RENT ADVANCE (SECURITY DEPOSIT ) | 12 MONTHS | | | | | |
| **TOTAL AREA CHINNAMALAI VELACHERY MAIN ROAD 454 Sq., Ft.,** | | | | | | |
| SHOP NO | Sq., Ft., | RENT RATE PER Sq., Ft., RS. | MONTHLY RENT | GST 18 % | TOTAL MONTHLY RENT (Rent + Gst) RS. | SECURITY DEPOSIT (12 MONTHS RENT) RS. |
| 01 | 454 | 5/- | 454 x 5 = 2270 | 408.6 (Round) 409 | 2679 | 27240 |
| **TOTAL AREA LDG ROAD CHINNAMALAI 477 Sq., Ft.** | | | | | | |
| SHOP NO | Sq., Ft., | RENT RATE PER Sq., Ft., RS. | MONTHLY RENT | GST 18 % | TOTAL MONTHLY RENT (Rent + Gst) RS. | SECURITY DEPOSIT (12 MONTHS RENT) RS. |
| 01 | 477 | 5/- | 477 x 5 = 2385 | 429 | 2814 | 28620 |

மேற்கண்ட அட்டவணையின்படி மண்டலம்-13, வார்டு-169 (பழைய வார்டு-171) சின்னமலை, வேளச்சேரி சாலையில் உள்ள பல்நோக்கு கட்டிடத்திற்கு மாத வாடகை ரூ.2,270/- இதற்கு சேவை வரி ரூ.409/- ஆக மொத்தம் மாத வாடகை ரூ. 2,679/-ம் முன்பண தொகையாக 12 மாத வாடகை கட்டணமாக ரூ.27,240/-ம் மற்றும் சின்னமலை எல்.டி.ஜி., சாலையில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் கட்டி முடிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடத்திற்கு வாடகை ரூ.2,385/- சேவை வரி ரூ.429/- ஆக மொத்தம் மாத வாடகை ரூ.2,814/-ம் முன்பண தொகையாக 12 மாத வாடகை கட்டணமாக ரூ.28,620/-ம் நிர்ணயிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் – 13, வார்டு – 169 (பழைய வார்டு -171) சின்னமலை வேளச்சேரி சாலை மற்றும் சின்னமலை எல்.டி.ஜி., சாலையில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் கட்டி முடிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தினை _திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்க நிறுவனத்தின்கீழ் செயல்பட்டு வரும் 2 நியாயவிலைக் கடைகளுக்கு மாத வாடகை அடிப்படையில்_ கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒதுக்கீடு செய்ய, பரிந்துரைக்கப்படுகிறது.

1. மண்டலம் – 13, வார்டு – 169 (பழைய வார்டு -171) சின்னமலை வேளச்சேரி சாலை மற்றும் சின்னமலை எல்.டி.ஜி., சாலையில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட 454 மற்றும் 477 சதுர அடி பரப்பளவுள்ள பல்நோக்கு கட்டிடத்திற்கு ஒரு சதுர அடி ரூ. 5/- வீதம், மாத வாடகை ரூ. 2270 மற்றும் 2385/- மற்றும் 12 மாத வாடகை முன்பணம் செலுத்த வேண்டும் என்றும்,
2. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் 15 சதவீதம் உயர்த்தப்படும் என்றும்,
3. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில்,

மேற்படி கட்டிடங்களை திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்க நிறுவனத்தின்கீழ் இயங்கும் நியாயவிலைக் கடைகளுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள, மாத வாடகையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.237/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/2949/2022**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:591/2023** **பொருள் எண்.16**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-9, வார்டு-*122*, பருவா நகர் திட்டப்பகுதி - சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம், மயிலாப்பூர் கிராமம் புல எண்.3760/6-ல், 16.24 சென்ட் (657.44 சதுர மீட்டர்) விஸ்தீரணம் கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தனி நிலத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி.**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய நிர்வாகப் பொறியாளர் (கூ/பொ), கோட்டம்-5 அவர்களின் 09.06.*2023* நாளிட்ட கடிதத்தில், மயிலாப்பூர் கிராமம், ரெவின்யூ சர்வே எண்.3760/1*pt* (ம) *3760/2pt*-க்கு கிழக்குப்பக்கம் உள்ள ரெவின்யூ சர்வே எண்.3760/6-ல் அடங்கியுள்ள 16.24 சென்ட் பரப்பளவு கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சி தனி நிலத்தில் வாரியத்தின் மூலம் திட்டப்பணிகள் மேற்கொள்ள முன்நுழைவு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்படி முன்நுழைவு அனுமதி வழங்க கோரும் 16.24 சென்ட் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | கவிஞர் பாரதிதாசன் சாலை, |
| தெற்கு | : | *F* - பிளாக் பருவா நகர் திட்டப்பகுதி |
| கிழக்கு | : | மாநகராட்சி கல்யாண மண்டபம் மற்றும் அலுவலகம் *(R.S.No.3760/6)* |
| மேற்கு | : | பிளாக் *B,C,D & E* பருவா நகர் திட்டப்பகுதி. |

மேற்படி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் முன்நுழைவு அனுமதி கோரிய புலமானது வருவாய் துறை மின்னணு நிலப்பதிவேட்டில் சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம் (ம) கிராமம், பிளாக் எண்.74, புல எண்.3760/6, பரப்பளவு 38 ஏர்ஸ் 18.5 சதுர மீட்டர் எனவும், உரிமையாளர் மாநகராட்சி தனியார் என பதிவாகியுள்ளது.

மயிலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் 27.06.2023 நாளிட்ட கடிதத்தில், மயிலை தொகுதி 122-வது வார்டுக்குட்பட்ட பருவா நகர் திட்டப்பகுதியில் நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமான குடியிருப்பு அமைந்துள்ளதாகவும், இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து வாழக்கூடிய சூழ்நிலை இல்லாததால் மக்களிடம் பேசி இங்கேயே கட்டிதருகிறோம் என்ற உத்தரவாதத்தை அறிவித்து அவர்களை அங்கிருந்து காலி செய்துவிட்டதாகவும், கட்டிடம் பணிதுவங்கும் இந்த இடத்தை ஒட்டியுள்ள மாநகராட்சி இடம் 16 சென்ட் சேர்த்தால் மட்டுமே அங்கிருக்கிற பணியை தொடர முடியும் என்றும், கட்டிட ஒப்புதல் கிடைத்தால் தான் அங்கிருக்கிற மக்களுக்கு வீடுகள் கட்டிதரமுடியும் என்றும், ஆகவே, தாங்கள் அன்புகூர்ந்து கட்டணம் இல்லாமல் எற்கனவே சில இடங்கள் 10,000/- ரூபாய்க்கு மாற்றி கொடுத்தது போல இந்த திட்டத்திற்கும் இடத்தை மாற்றி தருமாறும் மேலும், இந்த 16 சென்ட் நிலத்தில் *OSR* இடமாக மீண்டும் மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய, மேலாண்மை இயக்குநர் அவர்களின் 23.08.2023 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம், மயிலாப்பூர் கிராமம், *R.S.No.3760/1pt, 3760/2pt, 3760/6pt, 3760/9pt, 3760/10* (ம) *3839/8pt* , ஆகிய புல எண்களில் “பருவா நகர்” திட்டப்பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு *(G+3), 1991* - 92 ஆம் ஆண்டு 6 கட்டிட தொகுப்புகளில் 340 குடியிருப்புகளுடன் 180 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளதாகவும், இக்குடியிருப்புகள் மிகவும் சிதிலமடைந்து வாழ தகுதியற்ற நிலையில் இருந்ததால், வாரிய

தொழில் நுட்ப வல்லுநர் குழு மறுகட்டுமானம் செய்ய பரிந்துரைத்து தற்போது 360 புதிய குடியிருப்புகள் 40.29 சதுர மீட்டர் (433.50 சதுர அடி) பரப்பளவில் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் கட்டப்பட உள்ளதால், இத்திட்டப்பகுதிக்கு அருகிலேயே (பக்கவாட்டில்) உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிலுள்ள *R.S.No.3760/6*-ல் உள்ள 16.24 செண்ட் விஸ்தீரணம் நிலம் வாரியத்திற்கு தேவைப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்காணும் திட்டப்பகுதியில் ஒரே தொகுப்பில் தூண் தளத்துடன் 9 அடுக்குமாடி குடியிருப்புகள் *(Stilt + floor)* கட்டப்பட உள்ளதாகவும், அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு முதல் கட்டமாக வாரிய கூட்டத்தில் 229 குடியிருப்புகள் கட்டுவதற்கு நிதி பெறப்பட்டுள்ளது என்றும், *(G.O.(4D)No.30, Dated 17.05.2023)* (மீதமுள்ள 131 குடியிருப்புகளுக்கு 67-வது *CSMC* – நாள்.04.07.2023–ல் *PMAY(U)).* அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும், அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு திட்ட ஒப்புதல் பெற பெருநகர சென்னை வளர்ச்சிக் குழுமத்திற்கு பிரேரணை தயார் செய்து அனுப்பப்பட்டுள்ளதாகவும், கட்டப்படவுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில், 340 குடியிருப்புகள் “பருவா நகர்” திட்டப்பகுதியில் இருந்த பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது என்றும், மீதமுள்ள 20 குடியிருப்புகள் மிகவும் நலிந்த பிரிவினருக்கு தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுபவர்களுக்கு வழங்கப்பட உள்ளது என்றும், மேலும், அனைவருக்கும் 400 சதுர அடி பரப்பளவில் இங்கே கட்டி தருகிறோம் என்ற உத்தரவாதத்தை அறிவித்து, அவர்களை அங்கிருந்து காலி செய்து இருப்பதால், கட்டிட பணி துவங்கும் இந்த இடத்தை ஒட்டியுள்ள மாநகராட்சி இடம் 16.24 செண்ட் சேர்த்தால் மட்டுமே மேற்கொண்டு பணியை தொடரமுடியும் என்பதால் சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம் (ம) கிராமம், பிளாக் எண்.74, புல எண்.3760/6 (மொத்த பரப்பு – 38.18.50 சதுர மீட்டர் ) –ல் 657.44 ச.மீ பரப்பளவுடைய பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மாநகராட்சி (தனி) வகைப்பாடு கொண்ட நிலத்தினை வாரிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் திட்ட பணிகளை செயல்படுத்த வாரியத்திற்கு மனை ஒன்றுக்கு ரூபாய் 10,000/- வீதம் பெற்று கொண்டு நில உரிமை மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கண்ட தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கோரிக்கையின் அடிப்படையில் மண்டலம்-9, வார்டு-122, பருவா நகர் திட்டப்பகுதி, மயிலாப்பூர் வட்டம் (ம) கிராமம், பிளாக் எண்.74, புல எண்.3760/6*pt*-ல் 657.44 ச.மீ பரப்பளவு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான(தனி) வகைப்பாடு கொண்ட நிலத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கோரப்பட்டதின் அடிப்படையில் அந்நிலத்தில் அடங்கியுள்ள அங்கன்வாடி மைய கட்டிடம், பொது கழிப்பிடம் (ம) பயோ கேஸ் பிளான்ட் ஆகியவற்றை அகற்றி வாரியத்திற்கு அவ்விடத்தினை ஒதுக்கீடு செய்ய இயலுமா? என்ற விவரத்தை ஆய்வு செய்து பரிந்துரையுடன் வரைபடம் இணைத்து அறிக்கையாக உடன் இத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு, 30.*08.2023* மற்றும் 03.10.2023 நாளிட்ட இவ்வலுவலக கடிதங்கள் மூலம் மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர், மண்டலம்-9 அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர், மண்டலம் – 9 அவர்களின் 06.10.*2023* நாளிட்ட கடிதத்தில், மண்டலம் -9, பகுதி -26, வார்டு – *122*-ல் அமைந்துள்ள பருவா நகர் திட்டப்பகுதி சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம் (ம) கிராமம், புல எண்.3760-ல் உள்ள 16.24 செண்ட் விஸ்தீரணம் கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இந்நிலத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்திற்கு பயோ கியாஸ் பிளான்ட் மூலம் சமையல் எரிவாயு 8 முதல் 10 வரையிலான சிலிண்டர்கான எரிவாயு வழங்கப்பட்டு வருகிறது என்றும், மேலும் பொது கழிப்பிடமானது எதிர் புறத்தில் அமைந்துள்ள குடிசைப்பகுதி மக்கள் தற்போதுவரை பயன்படுத்தி வருகிறார்கள் என்றும், அங்கன்வாடி மையத்தில் அப்பகுதி குடிசைப்பகுதிவாழ் மக்களின் குழந்தைகள் பயன்படுத்தி வருகின்றனர் என்றும், அர்பேசர் கம்பெனியின் தொழிலாளர்கள் வருகைப்பதிவு செய்யப்படும் இடமாகவும் துப்பரவு பணியாளர்கள் பெண்கள் உடைமாற்றும்

அறையாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும், சமுதாயநலக்கூடத்திற்கு வரும் வாகனங்கள் திருப்புவதற்கு ஏதுவாக இந்நிலமானது பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும், எனவே வருங்காலத்திலும் மிகவும் பயன் உடையதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் மற்றும் மயிலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை மறு ஆய்வு செய்யும் பொருட்டு மாவட்ட வருவாய் அலுவலர் (நி.ம.உ.து) அவர்களால் பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் அவர்களிடம் கலந்தாலோசிக்கப்பட்டது. அதில் மேற்கண்ட நிலத்தில் உள்ள கட்டிடங்களை அகற்றி வாரியத்திற்கு ஒப்படைக்கும் பட்சத்தில் அதே பரப்பளவு கொண்ட கட்டிடங்களை வாரியத்தால் கட்டி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இந்நிலத்தினை வாரியத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் திருத்திய அறிக்கையினை உடன் இத்துறைக்கு அனுப்பிவைக்குமாறு, 17.10.2023 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர், மண்டலம்-9 அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர், மண்டலம்-9 அவர்களின் 27.10.2023 நாளிட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களால் அறிவுறுத்தியவாறு இந்நிலத்தில் அடங்கியுள்ள கட்டிடங்களை அகற்றி வாரியத்திற்கு ஒப்படைக்கும் பட்சத்தில் அதே பரப்பளவு கொண்ட கட்டிடங்களை வாரியத்தால் கட்டி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவேண்டும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி வாரியத்திற்கு இந்நிலத்தை நிலமாற்றம் செய்ய பரிந்துரை செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் *The Tamil Nadu, urban lacal Bodies Rules, 2023 G.O.MS.No.45, Municipal Adiministration and Water Supply (Election) Department*, நாள்.12.04.2023ல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்தி எண்.315 (2) *b*-யில் குடிசைகள் மூலம் நீண்ட காலமாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாடு வாரியத்திற்கு சலுகை விலையில் மனை ஒன்றுக்கு (2400 ச.அடி) ரூ.1,00,000/- (ஒரு இலட்சம் மட்டும்) என்ற அடிப்படையில் பெற்றுக்கொண்டு நில மாற்றம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-9, வார்டு – 122, சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம் (ம) கிராமம், பிளாக் எண்.74, புல எண்.3760/6, மொத்தம் விஸ்தீரணம் 38 ஏர்ஸ் 18.5 சதுர மீட்டரில் சுமார் 657.44 சதுர மீட்டர் (7,076 சதுர அடி) பரப்பளவு கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தனி நிலத்திற்கு மனை ஒன்றுக்கு ரூ.100000/- என கணக்கிடுகையில் 7,076 சதுர அடி பரப்பளவு நிலத்திற்கு ரூ.2,94,833/-ஐ நிலக்கிரயத் தொகையாக பெற்றுக்கொண்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கும், அவசர அவசியம் கருதி இந்நிலத்தில் வாரியத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளவும், நிபந்தனைகளுக்குட்பட்டு முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:-</u>

1. மேற்படி திட்டப்பகுதியில் அடங்கியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொதுகழிப்பிடம், அங்கன்வாடி மைய கட்டிடம் மற்றும் பயோ கேஸ் பிளான்ட் ஆகிய கட்டிடங்களை அகற்றி வாரியத்திற்கு ஒப்படைக்கும் பட்சத்தில் அதே பரப்பளவு கொண்ட கட்டிடத்தினை வாரியத்தால் கட்டி மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவேண்டும்.

2. மேற்படி நிலத்திற்கான நிலக்கிரயத் தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தும் பட்சத்தில் வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.238/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.துநக.எண்.எல்இ9/2222/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:592/2023** **பொருள் எண்.17**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-9, வார்டு - 123 வன்னியபுரம் திட்டப்பகுதி சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம் (ம) கிராமம், பிளாக் எண்.74, புல எண். 3793/5pt மற்றும் 3792/1pt -ல் 287 ச.மீ விஸ்தீரணம் கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான (தனி) நிலத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பொருட்டு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி.**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய நிர்வாகப் பொறியாளர்/கூ.பொ, கோட்டம்-5, அவர்களின் 14.09.2023 நாளிட்ட கடிதத்தில், மண்டலம் - 9, வார்டு 123-ல் அமைந்துள்ள வன்னியபுரம் அடுக்குமாடி குடியிருப்பு (G+3), (1978-82) ஆம் ஆண்டு 5 கட்டிட தொகுப்புகளில் 192 குடியிருப்புகளுடன் 296 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டது என்றும் இத்திட்டப்பகுதி சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம், மயிலாப்பூர் கிராமம், பிளாக் எண்.74, புல எண்.3790/3, 3791, 3792/1part, 3795/3part ஆகிய புலங்களில் அமைந்துள்ளது என்றும், இக்குடியிருப்புகள் மிகவும் சிதிலமடைந்து வாழ தகுதியற்ற நிலையில் இருந்ததால், வாரிய தொழில் நுட்ப வல்லுநர் குழு மறுகட்டுமானம் செய்ய பரிந்துரைத்தது என்றும், தற்போது 216 புதிய குடியிருப்புகள் 38.95 sqm (419 சதுர அடி.) பரப்பளவில் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் மலிவு விலை வீட்டுவசதி திட்டத்தின் படி கட்டப்பட உள்ளதால், இத்திட்டப்பகுதிக்கு அருகிலேயே பக்கவாட்டில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிலுள்ள R.S.No.3795/3 part மற்றும் 3792/1 partஆகிய புல எண்களில் உள்ள (3795/3part ல் 111 சதுர மீட்டர், 3792/1 part-ல் 176 சதுர மீட்டர்) விஸ்தீரணத்தில் 287 சதுரமீட்டர் நிலம் வாரியத்திற்கு தேவைப்படுவதாகவும், வாரியம் கோரும் புல எண். 3792/1partல் மாநகர ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தின் பின்புற இடைவெளியும் (rear set back), மாநகராட்சியின் இலவச பொதுகழிப்பிடமும், புல எண்.3795/3partல் ஆக்கிரமிப்பு குடியிருப்புகள் 19 எண்ணிக்கையும் உள்ளது.

மேலும், வன்னியபுரம் திட்டப்பகுதிக்கு R.S No. 3795/3 part மற்றும் 3792/1 part ஆகிய புல எண்களிலுள்ள மாநகராட்சி நிலங்கள் ஏற்கனவே 17.03.1976 அன்று சென்னை மாநகராட்சியிடமிருந்து வாரியத்தால் கீழ்காணும் பரப்பளவில் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண். | புல எண். | விஸ்தீரணம் (ஹெ.ஏர்ஸ்.ச.மீ) |
|---|---|---|
| 1. | 3793/5part | 0-15-86.17 |
| 2. | 3790/3 | 0-4-48.85 |
| 3. | 3792/1part | 0-13-48.90 |
| | மொத்தம் | 0-33-83.92 sqm (15 மனை 1768 சதுர அடி) |

வன்னியபுரம் திட்டப்பகுதியில் கட்டப்பட உள்ள 216 அடுக்குமாடி குடியிருப்புகளில், இத்திட்டப்பகுதியில் ஏற்கனவே ஒதுக்கீடுதாரராக இருந்த 192 பேருக்கும், 19 மாநகராட்சி நிலத்திலிருக்கும் ஆக்கிரமிப்புதாரர்களுக்கும், வாரிய சிதிலமடைந்த கட்டிட தொகுப்புகளுக்கு இடையில் இருந்த 2 ஆக்கிரமனதாரருக்கும் இத்திட்டப்பகுதியில் இருந்த அங்கன்வாடிக்கும், 2 குடியிருப்புகள் மிகவும் நலிந்த பிரிவினருக்கு தகுதியின் அடிப்படையில் வாரியத்தால் தேர்வு செய்யப்படுபவர்களுக்கு வழங்கப்பட உள்ளது என்றும், மேலும் அனைவரும் 400சதுரஅடி பரப்பளவில் இங்கே வீடு கட்டி தருகிறோம் என்ற உத்தரவாத்தை அறிவித்து அவர்களை காலி செய்து இருப்பதால், கட்டிட பணி துவங்க வாரிய இடத்தை ஒட்டியுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடம் 287சதுர மீட்டர் நிலம் சேர்த்தால் மட்டுமே மேற்கொண்டு பணியை

தொடரமுடியும் என்பதால், சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம் (ம) கிராமம், பிளாக் 74, புல எண்.*3795/3 part* மற்றும் *3792/1 part*-ல் அடங்கிய 287 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட மாநகராட்சி தனி நிலத்தினை, வாரியத்தின் பெயரில் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி இந்நிலத்தில் பணிகள் மேற்கொள்ள முன் நுழைவு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கண்ட தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய நிர்வாகப் பொறியாளர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் மண்டலம் – *9*, வார்டு *123*, வன்னியபுரம் திட்டப்பகுதி, சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம் (ம) கிராமம், பிளாக் 74, புல எண் 3795/3 *part* மற்றும் *3792/1 part* ல் அடங்கிய 287 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தனி நிலத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்பு கட்ட கோரப்பட்டதின் அடிப்படையில் இப்புலத்தினை ஆய்வு செய்து வரைப்படத்துடன் விரிவான அறிக்கையை உடன் இத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு, 15.09.2023 மற்றும் 03.10.2023 நாளிட்ட இவ்வலுவலக கடிதங்கள் மூலம் மாவட்ட வருவாய் அலுவலர்/ மண்டல அலுவலர், மண்டலம் – 9 அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர்/ மண்டல அலுவலர், மண்டலம் – 9 அவர்களின் 07.11.2023 நாளிட்ட கடிதத்தில், மண்டலம் -9, பகுதி – 26, கோட்டம் – *123*-ல் அமைந்துள்ள சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம் (ம) கிராமம், பிளாக் எண்.74, புல எண்.3793/5*part*-ல் உள்ள 91 ஆக்கிரமிப்பாளர்களுக்கு பயோமெட்ரிக் எடுத்துள்ளதாகவும், அதில் 34.69மீ *X* 3.20மீ குடியிருப்புகள் அமைந்துள்ள இடத்தில் நிலத்தினை வாரியத்தின் பெயரில் முன்நுழைவு அனுமதி வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி நிலத்தில் மீதமுள்ள 72 குடியிருப்புவாசிகள் ஆட்சேபணை தெரிவித்தால் வாரியமே முழு பொறுப்பு ஏற்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், புல எண்.3792/1 *part*-ல் அமைந்துள்ள 38 மீ நீளமுள்ள 3.20 மீ அகலமுள்ள நிலத்தில் மாநகராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பிணி பெண்களுக்கான கழிப்பிடம் உள்ளது என்றும் அந்நிலத்தின் வழியாக குடிநீர் மற்றும் கழிவு நீர் இணைப்பு குழாய்கள் செல்கிறது என்றும் ஆதலால் வாரியத்தின் மூலம் கழிவு நீர் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், புல எண்.3792/1*part*-ல் 17 மீ *X 3.20* மீட்டரில் திருவள்ளூவர் தெரு குடியிருப்புவாசிகள் பயன்படுத்தக் கூடிய பொதுக்கழிப்பிடம் உள்ளதாகவும், ஆதலால் அதனை இடிக்கும் பட்சத்தில் அவ்விடத்தில் வாரியத்தின் மூலம் பொதுக்கழிப்பிட கட்டுமானம் கட்டிதர பொறுப்பேற்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் பரிந்துரை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் மேற்கண்ட நிலமானது குடிசைகள் மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தனி நிலம் என தெரியவருகிறது.

இந்நேர்வில் *The Tamil Nadu, urban lacal Bodies Rules, 2023 G.O.MS.No.45, Municipal Adiministration and Water Supply (Election) Department*, நாள்.12.04.2023 ல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்தி எண்.315 (2) *b*-யில் குடிசைகள் மூலம் நீண்ட காலமாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாடு வாரியத்திற்கு சலுகை விலையில் மனை ஒன்றுக்கு (2400 ச.அடி) ரூ.1,00,000/- (ஒரு இலட்சம் மட்டும்) என்ற அடிப்படையில் பெற்றுக்கொண்டு நில மாற்றம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் -9, வார்டு – 123, சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம் (ம) கிராமம், பிளாக் எண்.74, புல எண்.3792/1*part*-ல், 176சதுர மீட்டர் நிலம் (ம) புல எண்.3793/5*part*-ல் 111 சதுர மீட்டர் நிலம் ஆகமொத்தம் 287 சதுர மீட்டர் (3089 சதுர அடி) பரப்பளவு கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தனி நிலத்திற்கு மனை ஒன்றுக்கு ரூ.1,00,*000/-* என

கணக்கிடுகையில் 3089 சதுர அடி பரப்பளவு நிலத்திற்கு ரூ.1,28,708/-ஐ நிலக்கிரயத் தொகையாக பெற்றுக்கொண்டு அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பொருட்டு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கும், அவசர அவசியம் கருதி இந்நிலத்தில் வாரியத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளவும், நிபந்தனைகளுக்குட்பட்டு முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்:-</u>**

1. மேற்படி திட்டப்பகுதியில் அடங்கியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொது கழிப்பிடத்தை அகற்றி வாரியத்திற்கு ஒப்படைக்கும் பட்சத்தில் அதே பரப்பளவு கொண்ட கட்டிடத்தினை வாரியத்தால் கட்டி மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
2. மேற்படி நிலத்திற்கான நிலக்கிரயத்தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தும் பட்சத்தில் வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.239/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ம.க.கு.ந.க.எண். அ7/916/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:593/2023** **பொருள் எண்.18**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கு 01.07.2023 முதல் மற்றுமொரு தனிப்பட்ட உயர்வு (Ad-hoc Increase) வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்புஅனுமதி.**

அரசாணை (நிலை) எண்.311 நிதி(படிகள்)த் துறை, நாள்.27.10.2023ல் தொகுப்பூதியம் *(Consolidated Pay)* / நிலையான ஊதியம் *(Fixed Pay)* / மதிப்பூதியம் *(Honorarium)* பெறும் பணியாளர்களுக்கு 01.07.2023 முதல் மற்றுமொரு தனிப்பட்ட உயர்வு *(Ad-hoc Increase)* அனுமதித்து கீழ்க்கண்டவாறு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

*2.* அரசாணையின் விவரம் பின்வருமாறு:-

**FINANCE [Allowances] DEPARTMENT**

**G.O.Ms.No.311, Dated:27th October 2023.**

(*Sobakiruthu, Aippasi*-10,*Thiruvalluvar Aandu 2054)*

**ABSTRACT**

**AD-HOC INCREASE** - Employees drawing Consolidated Pay / Fixed Pay / Honorarium - Another Ad-hoc Increase from **01-07-2023** - Orders - Issued.

---

**Read the fo11owing:-**

1. G.O.Ms.No.144, Finance (Allowances) Department, dated: 17-05-2023.
2. G.O.Ms.No.310, Finance (Allowances) Department, dated: 27-10-2023.

-o0o-

**ORDER:**

In the Government Order first read above, orders were issued sanctioning another Ad-hoc Increase in respect of employees those drawing revised Consolidated Pay / Fixed Pay / Honorarium as shown below:-

| With effect form | Ad-hoc Increase | |
|---|---|---|
| | Employees drawing upto Rs.2500/p.m. | Employees drawing above Rs. 2500/p.m. |
| (1) | (2) | (3) |
| 01-04-2023 | Rs. 50 | Rs. 100 |

2. In the Government Order second read above, orders were issued enhancing the Dearness Allowance payable to Government employees who are drawing pay in Levels of Pay in the respective Pay Matrix with effect from 01-07-2023.

3. Government has therefore, decided to grant another Ad-hoc Increase to those drawing revised Consolidated Pay / Fixed Pay / Honorarium with effect from 01-07-2023. Accordingly, Government direct that employees drawing Consolidated Pay / Fixed Pay / Honorarium be allowed another Ad-hoc Increase with effect from 01-07-2023 as detailed below:-

| With effect form | Ad-hoc Increase | |
|---|---|---|
| | **Employees drawing upto Rs. 2500/p.m.** | **Employees drawing above Rs. 2500/p.m.** |
| **(1)** | **(2)** | **(3)** |
| 01-07-2023 | Rs. 50 | Rs. 100 |

4. The arrears of Ad-hoc Increase for the months of July, August, September and October 2023 shall be drawn and disbursed by existing cashless mode of Electronic Clearance System (ECS).

5. This order shall also apply to the employees of Local Bodies, and Sweepers working in Rural Development and Panchayat Raj Department.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**T.UDHAYACHANDRAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

3. எனவே, மேற்கண்ட அரசாணையின் அவசர அவசியம் கருதி, மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் அவர்களின் அனுமதி 07.11.2023 அன்று பெறப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்த வட்டார துணை ஆணையர் (வடக்கு / மத்தியம் / தெற்கு) / அனைத்து துறை தலைவர்கள் , மற்றும் மண்டல அலுவலர்கள் (1 முதல் 15 வரை), 07.11..2023 அன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

4. தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக, அரசாணை (நிலை) எண்:311 நிதி (படிகள்)த்துறை, நாள்:27.10.2023.ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.242/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**
**********

**ம.க.கு.ந.க.எண். அ7/1871 / 2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:594/2023** **பொருள் எண்.19**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - படிகள் - அகவிலைப்படி 01.07.2023 முதல் 46 சதவிகிதம் உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது – அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

அரசாணை (நிலை) எண்.310, நிதி (படிகள்)த் துறை, நாள்.27.10.2023ன்படி மாநில அரசு பணியாளர்களுக்கு 42 சதவீதத்திலிருந்து 46 சதவீதமாக 01.07.2023 முதல் அகவிலைப்படி 4 சதவீதம் கூடுதலாக உயர்வளித்து கீழே குறிப்பிட்டுள்ளபடி, திருத்தி அமைக்கப்பட்ட வீதத்தில் அனுமதித்து அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது:-

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| (1) | (2) |
| 01-07-2023 | அடிப்படை ஊதியத்தில் 46 சதவீதம் |

2) ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2023 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்பட வேண்டும் எனவும், திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்படவேண்டும் எனவும், அதுவே, 50 காசுக்கு குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) மேலும், அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர பணியாளர்களுக்கும், சில்லறை செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழுநேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும். இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி பகுதி நேர பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

4) இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு/அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிகள், சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள்/உடற்பயிற்சி இயக்குநர்கள்/ நூலகர்கள் ஆகியோருக்கும், ஊதிய அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சிறப்பு காலமுறை ஊதிய நிலைகளில் ஊதியம் பெறும் வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவுத்திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் பணிபுரியும் ஊராட்சி செயலாளர்கள்/ எழுத்தர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கும் பொருந்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

*5)* இந்த அகவிலைப்படி உயர்வினால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாதம் ஒன்றுக்கு ஆகும் கூடுதல் செலவு (தோராயமாக) ரூ. 3.00 கோடி (ரூபாய் மூன்று கோடி மட்டும்) எனவும், நடப்பு *2023 - 2024*ஆம் நிதியாண்டில் ரூ. 27.00 கோடி (ரூபாய் இருபத்து ஏழு கோடி மட்டும்) எனவும் கூடுதல் செலவு ஏற்படும் என கருதப்பட்டது.

*6)* திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படியை வழங்கும் நிகழ்வில் ஏற்படும் செலவினத்தை கீழ்கண்ட வரவு-செலவுத் திட்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| *210-10-01-01* | சம்பளம் | அலுவலர் |
| *210-10-01-02* | சம்பளம் | பணியாளர் |
| *210-10-02-01* | சம்பளம் | ஓட்டுநர் |
| *210-10-02-02* | சம்பளம் | சுத்தப்படுத்துபவர் |
| *210-10-02-03* | சம்பளம் | பொறியியல் பணி |
| *210-10-02-04* | சம்பளம் | தூய்மைப் பணி |
| *210-10-02-05* | சம்பளம் | சுகாதாரப் பணி |
| *210-10-02-06* | சம்பளம் | மழலையர் பள்ளி பணியாளர்கள் |

8) எனவே, இவ்வரசாணையின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, கூடுதல் தலைமை செயலாளர் / ஆணையர் அவர்களின் அனுமதி 01.11..2023 அன்று பெறப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்த வட்டார துணை ஆணையர் (வடக்கு / மத்தியம் / தெற்கு) / அனைத்து துறை தலைவர்கள் மற்றும் மண்டல அலுவலர்களுக்கு (1 முதல் 15 வரை) *01.11.*2023 அன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

*9)* தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக அரசாணை (நிலை) எண்:*310* நிதி (படிகள்)த்துறை, நாள்:*27.10.2023*ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.243/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.அ1/4800/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:595/2023** **பொருள் எண்.20**

**பெருநகர சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனுக்காக கற்றல், கற்பித்தல் போன்ற பள்ளி சார் பணிகளினை மேம்படுத்துதல் – பள்ளி மேலாண்மைக்குழுவின் அனுமதியுடன் அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியர்கள் மூலம் அலுவலக உதவியாளர்களை பணியமர்த்துவதற்கும், அவர்களுக்கான ஊதியம் வழங்க - தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்குவதற்கும் பணியின் அவசரம் கருதி கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று செயல்படுத்தப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2013-2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின் படி 2014-2015ஆம் கல்வியாண்டில் 31.07.2014 அன்று நடைபெற்ற மன்றக் கூட்டத்தின் தீர்மான எண். 423/2014ல் மாணவர்களின் நலனுக்காக கற்றல், கற்பித்தல், அலுவலகம், நிர்வாகம் போன்ற பள்ளிசார் பணிகளில் ஏற்படும் தேவைகள், குறைவுகள், தொய்வுகள் ஆகியவற்றை சந்தித்திட மேலும் மேம்படுத்திட அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியரே மேற்கொள்ளவும் அவர்களுக்கு தேவைப்படும் நிதியை நேரடியாக அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி பள்ளிகளில் நடைபெறும் கற்றல் பணி, கற்பித்தல் பணி, அலுவலகப்பணி மற்றும் நிர்வாகப்பணிகளில் ஏற்படும் பள்ளிசார் தேவைகளை சந்தித்திட மேலும் மேம்படுத்திட மாணவர்களின் நலனுக்காக பள்ளியின் தலைமையாசிரியரே நேரடியாக மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பள்ளியின் தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்க அனுமதி வழங்கப்பட்டு, இதுநாள் வரை நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

*2023*-2024ஆம் கல்வியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் பெருநகர சென்னை மாநகராட்சியின் *CORE* பகுதியின் கீழ் 119 தொடக்கப்பள்ளிகளும், 92 நடுநிலைப்பள்ளிகளும், 38 உயர்நிலைப்பள்ளிகளும், 32 மேல்நிலைப்பள்ளிகளும் ஆக மொத்தம் 281 பள்ளிகளும், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதியிலிருந்து இணைக்கப்பட்டுள்ள 139 பள்ளிகளில் அடங்கியுள்ள 90 தொடக்கப்பள்ளிகள், 38 நடுநிலைப்பள்ளிகள், 8 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 3 மேல்நிலைப்பள்ளிகளும் ஆக மொத்தம் 420 பள்ளிகள் இயங்கி வருகின்றன. மேற்குறிப்பிட்ட சென்னைப் பள்ளிகளில் பள்ளிசார் பணிகள் மற்றும் அலுவலக பணிகளினை மேற்கொள்வதற்காக கடந்த கல்வியாண்டு வரை 66 தற்காலிக இளநிலை உதவியாளர்கள் பணியமர்த்தப்பட்டனர். கடந்த ஆண்டுகளில், இளநிலை உதவியாளர்கள் பதவியில் பணியமர்த்தப்பட்டு வந்த பணியாளர்கள் பள்ளிகளில் அலுவலக உதவியாளர் பணிக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்ததைத் தொடர்ந்து நடப்பு கல்வியாண்டு முதல் இளநிலை உதவியாளர்களுக்கு பதிலாக அலுவலக உதவியாளர்களை பணியமர்த்துமாறு துணை ஆணையர்(கல்வி) அவர்களால் உத்தரவிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, கடந்த கல்வியாண்டு வரை பணியமர்த்தப்பட்டு வந்த 66 இளநிலை உதவியாளர்களுக்கு பதிலாக 66 அலுவலக உதவியாளர்களையும், விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளிலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 8 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 3 மேல்நிலைப்பள்ளிகளுக்கு 11 அலுவலக உதவியாளர்களை *2023*-2024ஆம் கல்வியாண்டில் செப்டம்பர் 2023 முதல் மார்ச் 2024 வரை (7 மாதங்களுக்கு) பணியமர்த்துவது அவசியமாகிறது.

தற்காலிக அலுவலக உதவியாளர்கள் பணியிடங்களை செப்டம்பர் 2023 முதல் மார்ச் 31, 2024 வரை மேற்கொள்ளவும், அலுவலகம் சார்ந்த பணிகள் தடையின்றி நடைபெறவும், இப்பணியிடங்களை தற்காலிகமாக நிரப்புவதன் மூலம் பள்ளிசார் பணிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தற்காலிகமாக பணியமர்த்தப்படும் அலுவலக உதவியாளர்களுக்கு செப்டம்பர் 2023 முதல் மார்ச் 2024 வரை (7 மாதங்களுக்கான) வழங்கப்பட வேண்டிய ஊதியம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

| வ. எண் | பதவியின் பெயர் | பணியாளர்களின் எண்ணிக்கை | ஒரு மாதத்திற்கான ஊதியம் | மொத்த மாதங்கள் | மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | அலுவலக உதவியாளர் | Core city - 66 | 9000 | 7 | (66 x 9000 x 7)= **41,58,000** |
| | | Extended Area - 11 | 9000 | 7 | (11 x 9000 x 7)= **6,93,000** |
| **மொத்தம்** | | **77** | | | **48,51,000** |

**(ரூபாய் நாற்பத்து எட்டு இலட்சத்து ஐம்பத்து ஓராயிரம் மட்டும்)**

2023-2024ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் அலுவலகம் சார்ந்த பணிகளினை மேற்கொள்வதற்கு பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் செப்டம்பர் 2023 முதல் மார்ச் 2024 வரை (ஏழு மாதங்களுக்கு) 77 அலுவலக உதவியாளர்கள் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

எனவே,

1. சென்னைப் பள்ளிகளில் அலுவலக பணிகளை மேற்கொள்வதற்கு தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டு வந்த 66 இளநிலை உதவியாளர்களுக்கு பதிலாக 2023-2024ஆம் கல்வியாண்டு முதல் 66 அலுவலக உதவியாளர்கள் மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளிலிருந்து இணைக்கப்பட்ட 11 உயர் / மேல்நிலைப் பள்ளிகளுக்கு 11 அலுவலக உதவியாளர்கள் என மொத்தம் 77 அலுவலக உதவியாளர்களை பணியமர்த்தப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,
2. 77 தற்காலிக அலுவலக உதவியாளர்கள் பணியிடங்களை செப்டம்பர் 2023 முதல் மார்ச் 2024 வரை (7 மாதங்களுக்கு) அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியர்கள் மூலம் தற்காலிகமாக பணியமர்த்தியமைக்கும், அவர்களுக்கு தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் வாயிலாக மேற்கொள்வதற்கு அனுமதியும்,
3. தற்காலிக அலுவலக உதவியாளர்களுக்கு ரூ.9000/- ஊதியம் நிர்ணயம் செய்திடவும், பின்னாளில் அலுவலக உதவியாளர்களுக்கு ஊதியம் உயர்த்தப்படும் போது உயர்த்தப்பட்ட ஊதியத்திற்கான வித்தியாசத் தொகையினை பெற்று வழங்கிடவும், செப்டம்பர் 2023 மாதம் முதல் மார்ச் 2024 வரை (7 மாதங்களுக்கு) செலவினம் மேற்கொள்ள அனுமதியும்,
4. மேற்குறிப்பிட்ட செலவினங்களுக்குரிய தொகையான ரூ.48,51,000/- (ரூபாய் நாற்பத்து எட்டு இலட்சத்து ஐம்பத்து ஓராயிரம் மட்டும்) உயர்நிலை / மேல்நிலைப்பள்ளி கணக்கு குறியீடு எண். 80-82-01, 230-11-02-02 கல்வி செலவினங்கள் என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் பணியின் அவசரம் கருதி கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின் ஒப்புதலுடன் செயல்படுத்தப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"20.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தின் தீர்மான எண். 64/2023, நாள்.20.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.241/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**E.L.D.C.No.S.M.II/P10/6391/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:596/2023** **பொருள் எண்.21**

**Greater Chennai Corporation – Electrical Department – Operation and Maintenance contract for maintaining Street Lamp post and High mast – Operation and Maintenance contract in Zones 1, 2, 3, 4, 6, 7, 11, 12, 14 & 15 for one year period expires in the month of January 2024–To call tenders for Operation and Maintenance contract in Zones 1, 2, 3, 4, 6, 7, 11, 12, 14 & 15 for one year- Administrative sanction requested – For Approval**

The Electrical department is maintaining 3,01,234 nos. of street lights. Operation and Maintenance contract work order dated 11.01.2023 to 18.01.2023 has been issued to Zones I,II,III,IV,VI,VII,XI,XII,XIV&XV for maintenance of 1,77,832 nos. of street lights. Remaining 1,23,402 nos. of street lights are maintained by the department at Zones V,VIII,IX,X & XIII (Non O&M Zones).

Operation and Maintenance of 1,77,632 nos. of street lamp post and 200 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year is done through contract in Zone I,II,III,IV,VI,VII,XI,XII, XIV&XV.The existing contract is for a period of one year (365 days) expires in the month of January 2024.The details of the contract is as follows:

**TABLE 1:**

| Sl No. | Name of work | Work commence ment Date | Contract completion Date | Name of the Contractor | Work Order value without GST In Rs. |
|---|---|---|---|---|---|
| 1 | EL.D.C.NO.C / SM II /P10/ 5186/2022 Operation and Maintenance of 12453 nos. of street lamp post and 23 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 1 | 12.01.2023 | 11.01.2024 | M/s R.V Engineering Construction | 1,66,55,946.12 |
| 2 | El.D.C.NO C / SM II / P10 /5187/2022 Operation and Maintenance of 11060 nos. of street lamp post and 10 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 2 | 11.01.2023 | 10.01.2024 | M/s Kumaran Industries | 1,55,22,475.92 |
| 3 | EL.D.C.NO.C / SM II /P10/5188/ 2022 Operation and Maintenance of 17621 nos. of street lamp post and 17 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 3 | 11.01.2023 | 10.01.2024 | M/s Murugan Electrical Traders | 2,23,29,600.84 |
| 4 | EL.D.C.NO.C / SM II /P10/5189/ 2022 Operation and Maintenance of 17789 nos. of street lamp post and 28 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 4 | 18.01.2023 | 17.01.2024 | M/s R.K.M Electricals | 2,42,85,801.36 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | EL.D.C.NO.C / SM II /P10/5190/ 2022 Operation and Maintenance of 17189 nos. of street lamp post and 32 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 6 | 11.01.2023 | 10.01.2024 | M/s Murugan Electrical Traders | 2,49,61,555.80 |
| 6 | EL.D.C.NO.C / SM II /P10/5191/ 2022 Operation and Maintenance of 25745 nos. of street lamp post and 49 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone7 | 12.01.2023 | 11.01.2024 | M/s V.K Contractors | 2,97,09,536.52 |
| 7 | EL.D.C.NO.C / SM II /P10/5192/2022 Operation and Maintenance of 19584 nos. of street lamp post and 9 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 11 | 13.01.2023 | 12.01.2024 | M/s Kumaran Industries | 2,39,06,747.40 |
| 8 | EL.D.C.NO.C / SM II /P10/5193/2022 Operation and Maintenance of 15218 nos. of street lamp post and 10 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 12 | 18.01.2023 | 17.01.2024 | M/s Hi-Tech Tronics | 2,00,24,920.68 |
| 9 | EL.D.C.NO.C / SM II /P10/5194/ 2022 Operation and Maintenance of 21973 nos. of street lamp post and 16 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 14 | 11.01.2023 | 10.01.2024 | M/s RKM Electricals | 2,61,25,551.60 |
| 10 | EL.D.C.NO.C / SM II /P10/5195/ 2022 Operation and Maintenance of 19000 nos. of street lamp post and 6 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 15 | 11.01.2023 | 10.01.2024 | M/s Orient Poles | 2,33,55,519.36 |

In order to maintain the street light Lamp posts in Zones I,II,III,IV,VI, VII, XI, XII, XIV&XV,the proposal for the year 2023-24has been worked out as follows:

1. Contract will be for Operation and Maintenance of Street Light Lamp posts by providing man power and ladder vehicles required for the work.

2. Materials for maintenance of street lights **will be supplied by department.**

| ZONE | No. Of Sections | Total no. Of street lamp posts | No. Of Highmast | MAN POWER ( PWD rates 2023-24) | | LADDER VEHICLE ( Mechanical dept. Rate) | | | Operation and Maintenance cost per year |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Electrician with ITI @Rs. 1123.32 incl. Of ESI,PF,GST per day | Electrical Helper@ Rs. 875.81 incl. Of ESI,PF,GST per day | Hiring charges for LADDER VEHICLE @ Rs. 2236.10 incl. Of GST per day | Hiring charges for HYDRAULIC VEHICLE upto 7mtr height @ Rs. 2992.48 incl. Of GST per day | Hiring charges for HYDRAULIC VEHICLE upto 12mtr height @ Rs. 6046.32 incl. Of GST per day | |
| Zone 1 | 4 | 12515 | 23 | 8 | 35 | 3 | - | 1 | 1,91,24,000.00 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Zone 2 | 4 | 11341 | 15 | 8 | 31 | 2 | 1 | 1 | 1,81,21,400.00 |
| Zone 3 | 4 | 18346 | 36 | 8 | 55 | 3 | 1 | 1 | 2,66,09,700.00 |
| Zone 4 | 6 | 18265 | 30 | 13 | 52 | 4 | 1 | 1 | 2,85,16,900.00 |
| Zone 6 | 6 | 17963 | 35 | 13 | 51 | 3 | 1 | 2 | 2,95,88,000.00 |
| Zone 7 | 5 | 26235 | 48 | 10 | 79 | 4 | - | 1 | 3,48,25,700.00 |
| Zone 11 | 5 | 19987 | 16 | 10 | 58 | 4 | - | 1 | 2,81,12,600.00 |
| Zone 12 | 5 | 15219 | 21 | 10 | 42 | 4 | - | 1 | 2,29,97,900.00 |
| Zone 14 | 5 | 22298 | 18 | 10 | 66 | 4 | - | 1 | 3,06,70,000.00 |
| Zone 15 | 5 | 19134 | 9 | 10 | 55 | 4 | - | 1 | 2,71,53,600.00 |

The O&M contractor shall rectify the defect / fault within 24 hours of complaint received. If he fails to comply, the penalty is imposed as follows:

i) Beyond 24hrs - 5% of total cost per pole /year{(Tender value)/(Total no. of street lamp post + No. of Highmast)}

ii) Beyond 36 hrs Upto 48hrs - 10% of total cost per pole /year{(Tender value)/(Total no. of street lamp post + No. of Highmast)}

iii) Beyond 48hrs - 15% of total cost per pole /year{(Tender value)/(Total no. of street lamp post + No. of Highmast)} per day thereafter will be recovered until rectified.

iv) If on any day, less no. of persons are noticed, in that case the penalty at Rs.1600/- per person / day for Electrician and Rs. 1300/- for Electrical Helper will be recovered. And if the agency fails to provide no. of mention ladder mounted vehicle / vehicles in healthy condition, then the Rs.4000/- per day per Aluminium ladder vehicle, Rs.5000/- per day for 7 mtr hydraulic ladder and Rs. 7000/-per day for 12 mtr Hydraulic ladder vehicle will be deducted from the monthly bill of the agency.

v) Maintaining all the luminaries, Junction boxes, poles, Feeder pillar, cable termination with glands and lugs, etc. as specified in the tender documents. Any incomplete work will be considered as non-working of light and penalty cause as per non working street light shall be applicable.

vi) Switching ON and OFF of street light poles as per schedule given by Greater Chennai Corporation and the contractor has to submit the report of the same in every fifteen days time. If not followed the same, the penalty of Rs.500/- per day will be charged.

The existing O & M cost for the maintenance of the street lamp post and high mast in the above 10 Zones for one year period expires on January 2024. After making the changes , since the no. of street lamp posts has increased from previous O&M lamp post of 1,77,832 nos. to proposed O&M lamp post of 1,81,554 nos. the PWD SOR rates 2023-24 for manpower, Electrician Grade I &Electrical helper has increased up to 5.49% hence the cost of proposed O & M for 10 Zones for one year period

Hence,

1. To accord administrative sanction for the ten separate Operation and Maintenance estimates for Street Lamp post and High mast including manpower and ladder Vehicles for a period of **one year** as shown below:

| Sl. No | Zone | Description of work | Tender Value in Rs. |
|---|---|---|---|
| 1 | I | E.L.DC.NO/SMII/P10/6391/2023 Operation and Maintenance of 12515 nos. of street lamp post and 23 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 1. | 1,91,24,000.00 |
| 2 | II | E.L.DC.NO/SMII/P10/6392/2023 Operation and Maintenance of 11341 nos. of street lamp post and 15 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 2 | 1,81,21,400.00 |
| 3 | III | E.L.DC.NO/SMII/P10/6393/2023 Operation and Maintenance of 18346 nos. of street lamp post and 36 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 3 | 2,66,09,700.00 |
| 4 | IV | E.L.DC.NO/SMII/P10/6394/2023 Operation and Maintenance of 18265 nos. of street lamp post and 30 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 4 | 2,85,16,900.00 |
| 5 | VI | E.L.DC.NO/SMII/P10/6395/2023 Operation and Maintenance of 17963 nos. of street lamp post and 35 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 6 | 2,95,88,000.00 |
| 6 | VII | E.L.DC.NO/SMII/P10/6396/2023 Operation and Maintenance of 26235 nos. of street lamp post and 48 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 7 | 3,48,25,700.00 |
| 7 | XI | E.L.DC.NO/SMII/P10/6397/2023 Operation and Maintenance of 19987 nos. of street lamp post and 16 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 11 | 2,81,12,600.00 |
| 8 | XII | E.L.DC.NO/SMII/P10/6398/2023 Operation and Maintenance of 15219 nos. of street lamp post and 21 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 12 | 2,29,97,900.00 |
| 9 | XIV | E.L.DC.NO/SMII/P10/6399/2023 Operation and Maintenance of 22298 nos. of street lamp post and 18 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 14 | 3,06,70,000.00 |
| 10 | XV | E.L.DC.NO/SMII/P10/6400/2023 Operation and Maintenance of 19134 nos. of street lamp post and 9 nos. of high mast including manpower, Aluminium and Hydraulic ladder Vehicle for a period of one year in Zone 15 | 2,71,53,600.00 |

2. To call 10 separate Open E-Tenders for the above work .
3. To meet out the above expenditure from the Revenue budget head 230-201-305 of Electrical Department from the respective financial years.

Sl.No. 1 to 3 above, Council approval is requested, through Standing Committee(Works) and Standing Committee(Taxation and Finance).

“23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.203/2023, நாள். 23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.245/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ1ந.க.எண் பி1/ 4675 /2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.10.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:597/2023** **பொருள் எண்.22**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 1, பகுதி 1,2 (ம) 3, வார்டு எண் 1 முதல் 14 வரை உள்ள கோட்டங்கள் மற்றும் மண்டல அலுவலகம் - பணிபுரியும் 15 எண்ணிக்கையிலான புள்ளிவிவர குறிப்பாளர்கள் - தேசியநகர்புறவாழ்வாதார இயக்கத்தின்(NULM) கீழ் 01.05.2023 முதல் 31.10.2023 வரை நிர்வாக அனுமதி பெறப்பட்டது- 31.10.2023 அன்று பணிக்காலம் முடிவடைகிறது - 01.11.2023 முதல் 30.04.2024 வரை தற்காலிக பணியாளர்கள் பணி அமர்த்தி தொடர்ந்து பணிகள்மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்ய அனுமதி**

மண்டலம்-1ல் வார்டு எண்-1 முதல் 14 வரையிலான கோட்டங்கள், பகுதி அலுவலகங்கள் 1,2,3 மற்றும் மண்டல அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் (உதவியாளர்கள்) பணியமர்த்தப்படாததால் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் *(NULM)* கீழ் தற்காலிக பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது 23.02.2021ல் *ENVRO Solution* தனியார் வசம் துப்புரவு பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் *(NULM)* கீழ் பணிபுரிந்து வந்த அனைத்து பணியாளர்களும் நிறுத்தி வைக்கப்பட்டதால் மீண்டும் இப்பணியாளர்களை பணியமர்த்தி அலுவலக பணிகள் தடையின்றி நடைபெற வேண்டியது அவசியமாகிறது.

மண்டலம்-1 கோட்டம் 1 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் ஒப்ப பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்தல், கணினியில் பதிவேற்றம் செய்தல், நகரமைப்பு பிரிவில் கட்டிடம் தொடர்பான பதிவுகள் *(Building plan permission)* மழை மற்றும் புயல் போன்ற பேரிடர் காலங்களில் தினசரி அறிக்கைகள் அனுப்புதல், ஆய்வு கூட்டங்களுக்கு அறிக்கை தயாரித்தல் மற்றும் கொரோனா தொற்று நோய் *(Covid*-19) தொடர்பான தடுப்பு பணிகள் கணினியில் பதிவேற்றம் செய்தல் புள்ளிவிவர குறிப்புகள் அனுப்புதல் போன்ற பணிகள் தொய்வு இல்லாமல் இப்பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மண்டல அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 06.04.2023 நாளிட்ட ஆணை பெறப்பட்டு, மன்ற தீர்மான எண். 249/2023 , நாள்:28.04.2023ன்படி மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு மண்டலம் 1, பகுதி 1,2 (ம) 3, வார்டு எண் 1 முதல் 14 வரை உள்ள கோட்டங்கள், மண்டல அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகத்தில் பணிபுரிய 15 எண்ணிக்கையிலான தற்காலிக புள்ளிவிவர குறிப்பாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின்(*NULM*) கீழ் 01.05.2023 முதல் 31.10.2023 வரை 6 மாத காலத்திற்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.486/- வீதம் (ரூ.486 X 15 X 181=ரூ.13,19,490/- ரூ.13,19,490/-(ரூபாய் பதிமூன்று இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நானூற்று தொண்ணூறு மட்டும்) நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் தொடர்ந்து தொய்வில்லாமல் நடைபெற்றுவருகிறது.

மேற்படிமண்டலம் 1, பகுதி 1, 2 (ம) 3, வார்டு எண் 1 முதல் 14 வரை பணிபுரியும் தற்காலிக புள்ளிவிவர குறிப்பாளர்களின் பணிக்காலம் 31.10.2023 அன்று பணி முடிவடையும் நிலையில் 01.11.2023 முதல் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியமாகிறது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 13.06.2023 நாளிட்ட செயல்முறை ஆணையில் புள்ளிவிவர குறிப்பாளர்களுக்கு *(Data Entry Operator) 2022*-23 ஆம் ஆண்டு 01.04.2023 முதல் 31.03.2024 வரை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.677/- ஆக விலைவிவர பட்டியலின்படி வ.எண்.85ல் *(COMPUTER OPERATOR / DATA ENTRY OPERATOR)* ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது..

மண்டல குழு 1ன் 22.09.2023 நாளிட்ட அனுமதி பெறப்பட்டு மண்டலம் 1, பகுதி 1,2 (ம) 3, வார்டு எண் 1 முதல் 14 வரை பணிபுரியும்15 தற்காலிக புள்ளிவிவர குறிப்பாளர்களின் பணிக்காலம் 31.10.2023 அன்று பணி முடிவடையும் நிலையில் உள்ளதால் 01.11.2023 முதல் 30.04.2024 வரை தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள பொருள் எண் 29 தீர்மான எண் 709ல் மண்டல குழுவின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1 2022 ஆம் ஆண்டு பகுதி அலுவலகங்கள் 1, 2 (ம) 3க்கு, மற்றும் மண்டல அலுவலகத்தில் பணிபுரிய 15 எண்ணிக்கையிலான தற்காலிக புள்ளி விவர குறிப்பாளர்கள் *(Data Entry Operators)* தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் *(NULM)* கீழ் 01.11.2023 முதல் 30.04.2024 வரை 6 மாத காலத்திற்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.677/- வீதம் (ரூ.677 *X 15 X* 182=ரூ.18,48,210/-) ரூ.18,48,210/- (ரூபாய் பதினெட்டு இலட்சத்து நாற்பத்தி எட்டாயிரத்து இருநூற்று பத்து மட்டும்) பணி அமர்த்தி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,

2) மண்டலம்1க்கு *2023*-24 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் பிரிவு எண்20-*21-06*, கணக்கு குறியீட்டு எண்220-*110*-314ல்/- பட்டிகள் தீர்வு செய்திட ரூ.18,48,210/- ஐ நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு வேண்டியும்,

3) மண்டலம் 1ல் மேற்குறிப்பிட்ட பணிக்கு 01.05.2023 முதல் 31.10.2023 வரை நிர்வாக அனுமதி பெறப்பட்டு 31.10.2023 பணிக்காலம் முடிவடைகிறது. 01.11.2023 முதல் *30*.04.2024 வரை 6 மாத காலத்திற்கு தற்காலிக புள்ளி விவர குறிப்பாளர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்ய அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.199/2023, நாள். 23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.246/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.5.சு.து.ந.க.எண்.எச்2/3674/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:598/2023** **பொருள் எண்.23**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5 - சுகாதாரத்துறை - கோட்டம்–49 முதல் 63 வரையுள்ள கோட்டங்களில் 01.10.2022 முதல் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம் (NULM) மூலம் 141 உறுப்பினர்களைக் கொண்ட 11 சுய உதவி குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் வழியாக சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது - இப்பணிக்காலம் 30.09.2023 அன்றுடன் முடிவடைகிறது - மேற்கண்ட தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம் (NULM) மூலம் 141 உறுப்பினர்களைக் கொண்ட 11 சுய உதவி குழுக்களின் பணிக்காலத்தை 01.10.2023 முதல் 29.09.2024 வரை ஓராண்டு காலத்திற்கு மேற்கொண்டமைக்கு பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்-5, கோட்டம்-49 முதல் 63 வரை உள்ள கோட்டங்களில் வீட்டிலுள்ள நீர்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத்தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம், கொசு மருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த புகைமருந்து தெளிக்கும் பணி மற்றும் சுகாதார பணிகளை மேற்கொள்ளவும் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் *(NULM)* சுய உதவிக் குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் வழியாக சுகாதார பணிக்காக 125 நபர்கள் மற்றும் ரிப்பன் மாளிகை பணிக்காக 16 நபர்கள் மொத்தம் 141 பணியாளர்களை *(01.10.2022* முதல் 30.09.2023 வரை) ஓர் ஆண்டு காலத்திற்கு தற்காலிக தினக்கூலி பணியாளர்களை பணியமர்த்த முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின், *17.09.2022* நாளிட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதற்கென மன்ற தீர்மான எண்.432/2022, நாள்.*29.09.2022*ல் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் கொரோனா நோய், மலேரியா காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்புப்பணிகளில் பணியாளர் பற்றாக்குறையினால் பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. மேலும், சுகாதார பணிகளை மேற்கொண்டு வரும் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் *(NULM)* சுய உதவிக் குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் வழியாக சுகாதார பணிக்காக 125 நபர்கள் மற்றும் தலைமைச் செயலகம் (ம) ரிப்பன் மாளிகை பணிக்காக 16 நபர்கள் மொத்தம் 141 பணியாளர்களை (01.10.2023 முதல் 29.09.2024 வரை) ஓர் ஆண்டு காலத்திற்கு தற்காலிக தினக்கூலி பணியாளர்களை பணியமர்த்த ஆணை வேண்டப்படுகிறது.

மேலும், மண்டலம்-5க்குட்பட்ட எல்லையில் இயங்கி வரும் தலைமை செயலகம், கலைவாணர் அரங்கம், ரிப்பன் மாளிகை, உயர்நீதி மன்றம், காவல் ஆணையர் அலுவலகம், இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை, எழும்பூர் அரசு கண் மருத்துவமனை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம் மகப்பேறு மருத்துவமனை, ஓமந்தூரார் பல்நோக்கு அரசு பொது மருத்துவமனை, அரசு பல் மருத்துவமனை, டாக்டர்.எம்.ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் ரயில் நிலையம், எக்மோர் ரயில் நிலையம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் போன்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை அரசு அலுவலகங்கள் இயங்கி வருவதால், பொது சுகாதாரப்பணிகளில் தனிக்கவனம் செலுத்தும் வகையில், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன் கருதியும் இப்பணிகளை தொடர வேண்டியுள்ளது.

மன்ற தீர்மான எண்.516/2023, நாள்.29.09.2023-ன்படி *2023*-2024 ஆம் ஆண்டுக்கான அரசாணை *(2D)* எண்.36 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு துறை, நாள் 16.06.2023ன்படி குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அகவிலைபடியுடன் ஒரு நாளைக்கு ஒரு பணியாளருக்கு ரூ.687/- நியமனம் செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியாளர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஊதியம் | 01.10.2023 முதல் 29.09.2024 வரை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 141 | ரூ.687/- | 365 நாட்களுக்கு | ரூ. 3,53,56,455/- |

அதனடிப்படையில் (01.10.2023 முதல் 29.09.2024 வரை) ஓராண்டு காலத்திற்கு 141 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.687/- வீதம் 687 X 365 X 141 = ரூ. 3,53,56,455/- (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து நானூற்று ஐம்பத்து ஐந்து மட்டும்) தேவைப்படுவதால் இத்தொகையை கணக்கு குறியீடு எண். 30-32-02 மற்றும் கணக்கு தலைப்பு எண். 210-100-602 தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்து தொடர்ந்து பணியினை மேற்கொள்ள ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

1) மண்டலம்-5ல் தற்காலிக பணியில் உள்ள சுகாதாரப் பணியாளர்கள் 125 + 16 பணியாளர்கள் சேர்த்து 141 நபர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வழியாக சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளவும், மன்ற தீர்மான எண்.516/2023, நாள்.29.09.2023-ன்படி குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அகவிலைபடியுடன் ஒரு நாளைக்கு ஒரு பணியாளருக்கு ரூ.687/- ஊதியத்தின் அடிப்படையில் ஒரு வருடகாலத்திற்கு 01.10.2023 முதல் 29.09.2024 வரை தற்காலிக தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தி பணிகளை மேற்கொண்டமைக்கு பின்னேற்பு அனுமதியும்.

2) தற்காலிகமாக பணியமர்த்தப்படும் 141 பணியாளர்களுக்கு, நடப்பு நிதியாண்டில் 2023-2024ல் ஓராண்டு காலத்திற்கு 01.10.2023 முதல் 29.09.2024 வரை ஆகும் ஊதிய செலவினத் தொகையான நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.687/- வீதம் X 365 நாள் X 141 பணியாளர்களுக்கு = ரூ. 3,53,56,455/- (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து நானூற்று ஐம்பத்து ஐந்து மட்டும்) கணக்கு குறியீடு எண்.30-32-02 மற்றும் கணக்கு தலைப்பு எண். 210-100-602ல் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய, நிதி நிர்வாகப் பிரிவுக்கு அனுமதியும்.

3) தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் (ம) தொழிலாளர் நலன் மற்றும் திறன் பேம்பாடு (J1) துறை, அரசாணை2(D) எண்:36, நாள்:6.06.2023, பெருநகர சென்னை மாநகராட்சியில் அமல்படுத்தவும் மற்றும் அரசிதழில் குறிப்பிட்டுள்ளவாறு தினக்கூலி பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் Explanations || (1) ii-ன்படி முந்தைய ஆண்டின் சராசரி (Consumer Price Index) அடிப்படையில் அகவிலைப்படி உயர்த்தி ஏப்ரல் முதல் நாளிலிருந்து ஊதியம் வழங்க அனுமதியும்,

4) மேற்கண்ட 141 சுகாதாரப் பணியாளர்களை பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வழியாக சுகாதாரப் பணிகளை ஒரு வருடகாலத்திற்கு 01.10.2023 முதல் 29.09.2024 வரை தற்காலிக தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தி பணிகளை மேற்கொண்டமைக்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.097/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.251/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.7.ந.க.எண்.எஸ்3/ 1332 /2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.10.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:599/2023** **பொருள் எண்.24**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-18, விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர் புறவாழ்வாதார இயக்கத்தின்(NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15.10.2023 உடன் முடிவடைவது - 413 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை கொண்டு 16.10.2023 முதல் 15.04.2024 வரை 183 நாட்களுக்கு பணியினை மேற்கொள்வதற்கு ஆகும்தோராய செலவினம் ரூ.5,19,22,773/-க்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-18, வார்டு-79 முதல் 83 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.08 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 14 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1638 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி-18ன் கீழ் உள்ள 79 முதல் 83 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2018 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1,56,255 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட் தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-18, 79 முதல் 83 வரையிலான 5 வார்டுகளில் தோராயமாக 105 மெ.டன் குப்பைகள் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால், தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது. மேலும், வார்டு மறு சீரமைப்பிற்கு பிறகு தற்பொழுது 413 எண்ணிக்கையில் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

எனவே, தற்போது பகுதி-18ல் (வார்டு-79 முதல் 81 வரை) தற்போது உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது,

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்துறை மூலம் நியமிக்கப்பட்ட ***Chennai Enviro Solution Private Limited*** அவர்களுக்கு ஒப்பம் கோரப்பட்டு, வார்டு-82, 83 மற்றும் 85ல் பணி ஆணை வழங்கப்பட்டது. இதில் மேற்கண்ட நிறுவனம் மூலம் பகுதி-18, வார்டு-82 & 83ல் மட்டும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மீதமுள்ள 3 வார்டுகளில் துப்புரவு பணிகளை தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பகுதி - 18ல் உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | - | 136 |
| 2) | பகுதி-18ல் NULM திட்டத்தின்கீழ் பணிபுரியும் தற்காலிக துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | - | 413 |
| | மொத்தம் | - | 549 |

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்ற தீர்மான எண். 331/2023, நாள்.30.05.2023-ன்படி, தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் வார்டு-79, 80, 81ல் 413 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 16.04.2023 முதல் 15.10.2023 வரை 183 நாட்களுக்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப்பணியானது 15.10.2023ல் நிறைவடைய உள்ளதால், மண்டலம்-7, பகுதி-18ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 549 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுதுள்ள 136 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 413 எண்ணிக்கை கொண்ட தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மண்டலம்-7, பகுதி-18க்கு தேவை என கணக்கிட்டு அவசியம் கருதி 16.10.2023 முதல் 15.04.2024 வரையில் ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பகுதி எண் | **NULM** தற்காலிக துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 18 | 413 | ரூ.687 x 413 x 183 (நாட்கள்) = ரூ.5,19,22,773 / - |
| மொத்தம் | | | ரூ. 5,19,22,773 / - |

இதனை தொடர்ந்து எதிர் வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாதவகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின், 09.08.2023 நாளிட்ட சுற்றறிக்கையின் படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) தினக்கூலி தற்காலிக துப்புரவு பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு தினக்கூலி ரூ.687/- வீதம் 413 பணியாளர்களுக்கு ஆறு மாத காலத்திற்கு (183 நாட்கள்) ஆகும் தோராய செலவு ரூ.5,19,22,773 / - (ரூபாய் ஐந்து கோடியே பத்தொன்பது இலட்சத்து இருபத்தியிரண்டாயிரத்து எழுநூற்று எழுபத்து மூன்று மட்டும்) என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-18ல் 16.10.2023 முதல் 15.04.2024 வரை 6 மாதங்கள் Chennai Enviro Solution Private Limited என்கிற நிறுவனம் மூலம் மீதமுள்ள 3 வார்டுகளை எடுத்து (Take Over) துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை எது முன்னர் வருகிறதோ (Whichever is Earlier) என்ற அடிப்படையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் அதே 413 எண்ணிக்கையிலான தற்காலிக பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,

2) மேற்கண்ட 413 தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.687 / - வீதம், ஆறு மாத காலத்திற்கு (183 நாட்களுக்கு) ஆகும் தோராய செலவு ரூ.5,19,22,773 / -(ரூபாய் ஐந்து கோடியே பத்தொன்பது இலட்சத்து இருபத்தியிரண்டாயிரத்து எழுநூற்று எழுபத்து மூன்று மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும். தற்போது 16.10.2023 முதல் 31.03.2024 வரைக்கு மட்டும் ஏற்படும் செலவினத் தொகை ரூ. 4,76,66,808/- மட்டும் கணக்கு குறியீட்டு எண் 40 - 41 – 03, கணக்கு தலைப்பு எண் 210 -10 – 06 – 01 கீழ் ஒதுக்கீடு செய்து கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.094/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.248/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.7.ந.க.எண்.எஸ்2/1329/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.10.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:600/2023** **பொருள் எண்.25**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-19, விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15.10.2023 உடன் முடிவடைவது- 485 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 16.10.2023 முதல் 15.04.2024 வரை (183 நாட்களுக்கு ) பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 6,09,74,685/-க்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-19, வார்டு-84 முதல் 88 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 13.79 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 5 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 917 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி-19ன்கீழ் உள்ள 84 முதல் 88 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2018 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,90,760 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட் தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-19ல் 84 முதல் 88 வரையிலான 5 வார்டுகளில் தோராயமாக 94.190 மெ.டன் குப்பைகள் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது. மேலும், வார்டு மறு சீரமைப்பிற்கு பிறகு தற்பொழுது 485 எண்ணிக்கையில் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

எனவே, தற்போது பகுதி-19ல் (வார்டு-84 முதல் 88 வரை) தற்போது உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைதுறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution Private Limited அவர்களுக்கு ஒப்பம் கோரப்பட்டு வார்டு-82, 83 & 85ல் பணிஆணை வழங்கப்பட்டது. இதில் மேற்கண்ட நிறுவனம் மூலம் பகுதி-19, வார்டு-85ல் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள 4 வார்டுகளில் துப்புரவு பணிகளை தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பகுதி – 19, ல் உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | - | **78** |
| 2) | பகுதி – 19, ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் தற்காலிக பணியாளர்களின் எண்ணிக்கை | - | **485** |
| | மொத்தம் | - | **563** |

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்ற தீர்மான எண்: 332/2023, நாள்.30.05.2023-ன்படி, தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் வார்டு 84, 86 ,87 மற்றும் 88ல் 485 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 16.04.2023 முதல் 15.10.2023 வரை 183 நாட்களுக்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 15.10.2023ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி-19ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 563 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுதுள்ள 78 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 485 எண்ணிக்கை கொண்ட தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மண்டலம்-7, பகுதி-19க்கு தேவை என கணக்கிட்டு 16.10.2023 முதல் 15.04.2024 வரையில் ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பகுதி எண் | NULM தற்காலிக துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 19 | 485 | ரூ.687x485x183(நாட்கள்) = ரூ.6,09,74,685/- |
| மொத்தம் | | | ரூ.6,09,74,685/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர் கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர் அவர்களின், 09.08.2023 நாளிட்ட சுற்றறிக்கையின்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) தினக்கூலி தற்காலிக துப்புரவு பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு தினக்கூலி ரூ.687/- வீதம் 485 பணியாளர்களுக்கு ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவு ரூ.6,09,74,685/- (ரூபாய் ஆறு கோடியே ஒன்பது இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து ஆறுநூற்று எண்பத்தைந்து மட்டும்) என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-19ல் 16.10.2023 முதல் 15.04.2024 வரை 6 மாதங்கள் அல்லது Chennai Enviro Solution Private Limited என்கிற நிறுவனம் மூலம் மீதமுள்ள 4 வார்டுகளை எடுத்து (Take Over) துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை எது முன்னர் வருகிறதோ (Whichever is Earlier) என்ற அடிப்படையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் 485 எண்ணிக்கையிலான தற்காலிக பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,

2) மேற்கண்ட 485 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.687/- வீதம், ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவு ரூ.6,09,74,685/-க்கு (ரூபாய் ஆறு கோடியே ஒன்பது இலட்சத்து எழுபத்தி நான்காயிரத்து ஆறுநூற்று எண்பத்தைந்து மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும். தற்போது 16.10.2023 முதல் 31.03.2024 வரைக்கு மட்டும் ஏற்படும் செலவினத் தொகை ரூ.5,59,76,760/- மட்டும் கணக்கு குறியீட்டு எண். 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண். 210 – 100 – 601 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.095/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.249/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**
**********

**ம.அ.7.நக.எண்.எஸ்1/1116/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.10.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:601/2023** **பொருள் எண்.26**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-20, விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15.10.2023 உடன் முடிவடைவது – 559 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை கொண்டு 16.10.2023 முதல் 15.04.2024 வரை (183 நாட்கள்) பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 7,02,78,039/- க்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-20, வார்டு-89 முதல் 93 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.03 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 26 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 260 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,59,438. இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட் தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7, அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 335 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால், தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது. மேலும், வார்டு மறு சீரமைப்பிற்கு பிறகு தற்பொழுது 559 எண்ணிக்கையில் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

எனவே, தற்போது பகுதி-20ல் (வார்டு-89 முதல் 93 வரை) நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும், இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் NULM பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution private Limited அவர்களுக்கு வார்டு 82, 83 மற்றும் 85ல் பணியாணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பகுதி-20ல் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் எவரும் இல்லாத பட்சத்தில் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் 559 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கட் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக NULM பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்றத் தீர்மான எண். 333/2023, நாள்.30.05.2023ன்படி, தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் 559 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 16.04.2023 முதல் 15.10.2023 வரை ஆறு மாத காலத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 15.10.2023-ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி-20ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து 16.10.2023 முதல் 15.04.2024 வரை 183 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், பகுதி-20ல் (வார்டு-89 முதல் 93 வரை) துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட NULM பணியாளர்களை 16.10.2023 முதல் 15.04.2024 வரை (183 நாட்களுக்கு) பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 559 துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-20க்கு, தேவை என கணக்கிட்டு 16.10.2023 முதல் 15.04.2024 வரை (183 நாட்களுக்கு) ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 20 | 559 | ரூ.687 x 559 x 183 (நாட்கள்) = ரூ. 7,02,78,039/- |
| **மொத்தம்** | | | **ரூ.** 7,02,78,039/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின், 09.08.2023 நாளிட்ட திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட் விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.687/- வீதம் 559 பணியாளர்களுக்கு 16.10.2023 முதல் 15.04.2024 வரை (183 நாட்களுக்கு) ஆகும் செலவு ரூ.7,02,78,039/- (ரூபாய் ஏழு கோடியே இரண்டு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து முப்பத்தொன்பது மட்டும்) என ஆறு மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. 16.10.2023 முதல் 15.04.2024 வரை (183 நாட்களுக்கு) அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம்–7ல் குப்பைகளை அகற்ற Chennai Enviro Solution private Limited மூலம் 5 வார்டுகளை எடுத்து (Takeover) துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை, எது முன்னர் வருகிறதோ (Whichever be earlier) என்ற அடிப்படையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க (NULM) 559 எண்ணிக்கையிலான தற்காலிக பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,
2. மேற்கண்ட 559 தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.687/- வீதம், 16.10.2023 முதல் 15.04.2024 வரை 183 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.7,02,78,039/- (ரூபாய் ஏழு கோடியே இரண்டு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து முப்பத்தொன்பது மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும், தற்போது 16.10.2023 முதல் 31.03.2024 வரைக்கு மட்டும் ஏற்படும் செலவினத் தொகை ரூ.6,45,17,544/- மட்டும் கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண் - 210 –100 -601 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.096/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.250/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ம.அ.9.ந.க.எண்.எச்.3/02159 /2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:602/2023** **பொருள் எண்.27**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9 - பகுதி-24 முதல் 27 வரையுள்ள கோட்டம்-109 முதல் 126 வரை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM)கீழ் பணியமர்த்தப்பட்ட சுகாதார பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2023ல் முடிவடைகிறது - 01.10.2023 முதல் 30.09.2024 வரை ஒரு வருட காலத்திற்கு 114 சுகாதாரப் பணியாளர்களை தற்காலிகமாக பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி.**

பொது சுகாதாரம், பூச்சி தடுப்புத்துறையின் *02.09.2023* நாளிட்ட சுற்றறிக்கையின்படி, கொசு தடுப்பு மற்றும் ஒழிப்பு பணியை மேற்கொள்ளும் ஒப்பந்த தொழிலாளர்களை அந்தந்த மண்டலத்திலேயே தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (*NULM*) குழுக்கள் அமைத்து அதன் மூலம் 365 நாட்களுக்கு தற்காலிக சுகாதார தொழிலாளர்களை கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்த அந்தந்த மண்டல அலுவலர்கள் ஆணையரிடம் நிர்வாக அனுமதி பெற்று பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-*9*, பகுதி-*24*, *25*, 26 (ம) 27, கோட்டம்-*109* முதல் *126* வரை உள்ள 18 கோட்டங்களில் சுமார் 10 இலட்சம் மக்கள் தொகையும், 226557 வீடுகளும், 63 அரசு கட்டிடங்களும், *231* பள்ளிகளும், 92 குடிசை பகுதிகளும் உள்ளடங்கியுள்ள இப்பகுதிகளில் மலேரியா, டெங்கு மற்றும் இதர தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பு நடவடிக்கை பணிகளான, மழைநீர் வடிகால்வாயில் கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணி, கால்வாயில் கொசு கொல்லி மருந்து தெளிக்கும்பணி, வீடுகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் கொசுப்புழு கொல்லி மருந்து போடுதல், கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணிகள், எலிக்கொல்லி மருந்துவைக்கும் பணிகள் மேற்கொள்ள ஒரு பணியாளருக்கு ஒரு நாளைக்கு ரூ.522/- வீதம் 114 தொழிலாளர்களை தற்காலிகமாக தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (*NULM*) திட்டத்தின் மூலம் 01.10.2022 முதல் 30.09.2023 வரை ஓராண்டிற்கு தற்காலிகமாக பணியமர்த்த மன்றத் தீர்மான எண்.*434/2022*, நாள்.*29.09.022*ன்படி மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது.

மேற்படி வழங்கப்பட்ட ஆணை 30.09.2023 அன்றுடன் முடிவடைவதால், இப்பணிக்கு 109 முதல் 126 வரையிலான கோட்டங்களில் உள்ள 500 வீடுகளுக்கு 1 செக்டார் பணியாளர் என கணக்கிட்டு 1 செக்டாருக்கு 1 பணியாளர் என *160* செக்டார்களுக்கு *160* பணியாளர்கள் வீடுகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் கொசு கொல்லி மருந்து இடும் பணிகளுக்காகவும், கொசு கொல்லி புகை பரப்பும் பணிகள் மேற்கொள்ள கோட்டம் வாரியாக தலா 1 பணியாளர் என *18* கோட்டங்களுக்கு *18* பணியாளர்களும், கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணிகளுக்காக 23 பணியாளர்களும், மழைநீர் வடிகால்வாயில் கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணிகளுக்காக 31 பணியாளர்களும், கால்வாயில் கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணிகளுக்காக 22 பணியாளர்களும், இதர பணிகளுக்காக *10* பணியாளர்களும் என கணக்கிட்டு மொத்தம் தேவைப்படும் சுகாதாரப் பணியாளர்களின் தேவை குறித்த அட்டவணைகீழ்கண்டவாறு,

| S.NO | DN | NO OF WORKERS | FOGGING WORKERS | NO OF SPRAY WORKERS | NO.OF SWD WORKERS | NO OF CANAL WORKERS | TOTAL WORKERS |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 109 | 9 | 1 | 1 | 2 | 2 | 15 |
| 2 | 110 | 8 | 1 | 1 | 3 | 0 | 13 |
| 3 | 111 | 8 | 1 | 1 | 7 | 2 | 19 |
| 4 | 112 | 7 | 1 | 1 | 1 | 0 | 10 |
| 5 | 113 | 11 | 1 | 1 | 1 | 0 | 14 |
| 6 | 114 | 7 | 1 | 1 | 2 | 1 | 12 |
| 7 | 115 | 7 | 1 | 1 | 2 | 0 | 11 |
| 8 | 116 | 9 | 1 | 2 | 3 | 0 | 15 |
| 9 | 117 | 8 | 1 | 1 | 2 | 8 | 20 |
| 10 | 118 | 9 | 1 | 1 | 1 | 0 | 12 |
| 11 | 119 | 8 | 1 | 1 | 1 | 0 | 11 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | 120 | 8 | 1 | 1 | 2 | 2 | 14 |
| 13 | 121 | 7 | 1 | 1 | 1 | 2 | 12 |
| 14 | 122 | 10 | 1 | 1 | 2 | 0 | 14 |
| 15 | 123 | 14 | 1 | 2 | 1 | 1 | 19 |
| 16 | 124 | 11 | 1 | 2 | 1 | 4 | 19 |
| 17 | 125 | 12 | 1 | 2 | 2 | 0 | 17 |
| 18 | 126 | 7 | 1 | 2 | 2 | 0 | 12 |
| TOTAL WORKERS | | 160 | 18 | 23 | 36 | 22 | 259 |
| 19 | WATER WAYS , VM FOGG AND DATA ENTRY OPERATORS | | | | | | 05 |
| GRAND TOTAL | | | | | | | 264 |

மன்றத் தீர்மான எண்.516/2023, நாள்.29.09.2023ன்படி, மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு மண்டலம்-9க்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரத்துறையில் பணிபுரிய 264 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்களில் 150 நிரந்தர பணியாளர்கள் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். எனவே, மண்டலம்-9 பொது சுகாதாரத்துறையில் பணிபுரிய தேவைப்படும் 264 சுகாதாரப் பணியாளர்களில் 150 நிரந்தர பணியாளர்கள் போக மீதம் 114 சுகாதாரப் பணியாளர்கள் பொதுமக்களின் நலன் கருதி 01.10.2023 முதல் 30.09.2024 வரை ஒரு வருட காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்த ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மன்றதீர்மான எண்.516/2023, நாள்.29.09.2023ன்படி குறைந்தபட்ச ஊதியம் நபர் ஒன்றுக்கு தினசரி ஊதியம் ரூ.687/-வீதம், 366 நாட்களுக்கு (366 x 114 x 687) ரூ.2.86.64.388/- மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியும்,
2. 114 தற்காலிக சுகாதார பணியாளர்களை 01.10.2023 முதல் 30.09.2024 வரை 1 வருட காலத்திற்கு குழுக்கள் மூலம் பணியமர்த்தி பணி மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதியும் மற்றும் ஒப்பந்த புள்ளி நடைமுறையில் இருந்து விலக்கு அளிக்கவும்,
3. இப்பணிக்கு தேவையான நிதி ரூ.2,86,64,388/- (114 workers x per day Rs.687 x 366 days) 303202/210100602 என்ற கணக்கு தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.104/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.258/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.10.சு.து.ந.க.எண்.எச்2/13029/2023-24**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.10.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:603/2023** **பொருள் எண்.28**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10 - சுகாதாரத்துறை - தற்காலிக தொழிலாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் (NULM) மூலம் கொசு ஒழிப்பு பணியாளராக 147 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர் - 01.10.2023 முதல் 30.09.2024 வரை ஓராண்டு காலத்திற்கு *NULM* மூலம் பணியில் அமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, பூச்சித்தடுப்பு துறையில், மண்டலம்-10, பகுதிகளில் வீட்டிலுள்ள நீர்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத்தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுமருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த புகைமருந்து அடிக்கும் பணி மேற்கொள்ளவும், 147 பணியாளர்கள் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் மூலமாக 01.10.2022 முதல் 30.09.2023 வரை பணியமர்த்த மன்றத் தீர்மான எண். 498/2022, நாள்.29.09.2022-ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

இக்குழுவில் பணிபுரியும் உறுப்பினர்களுக்கு பணி காலம் முடிவடையவுள்ள நிலையில் 01.10.2023 முதல் 30.09.2024 வரை ஓராண்டு காலத்திற்கு நிர்வாக நலன் கருதி பணியமர்த்த 2023-24 நிதி ஆண்டில் நிர்ணயித்த குறைந்தபட்ச தினக்கூலியாக நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ரூ.522/- (ரூபாய் ஐநூற்று இருபத்து இரண்டு மட்டும்) என நிர்ணயம் செய்து கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களிடம் 05.09.2023 அன்று ஆணை பெறப்பட்டது.

மன்ற தீர்மான எண்.516/2023, நாள்.29.09.2023-ன்படி 2023-24ஆம் நிதி ஆண்டில் நிர்ணயித்த குறைந்தபட்ச தினக்கூலியாக நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ரூ. 687/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான செலவீனத் தொகையாக ஒரு ஆண்டிற்கு ரூ. 687 X366 நாட்கள் X 147 நபர்கள் ரூ. 3,69,61,974/- (ரூபாய் மூன்று கோடியே அறுபத்து ஒன்பது இலட்சத்து அறுபத்து ஓராயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து நான்கு மட்டும்) செலவீனத் தொகை கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம்-10, பொது சுகாதாரத்துறையில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் கொசு ஒழிப்பு பணியாளராக 147 பணியாளர்கள் கொண்ட குழு மூலம் மேலும், ஓராண்டு காலத்திற்கு (01.10.2023 முதல் 30.09.2024 வரை) பணியை மேற்கொள்வதற்கு, பணியாளர்களை பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதியும்,

2. மன்ற தீர்மானம் எண். 516/2023 நாள். 29.09.2023ன்படி 2023-24 ஆம் நிதி ஆண்டில் நிர்ணயித்த குறைந்தபட்ச தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 687/- (ரூபாய் ஆறுநூற்று எண்பத்து ஏழு மட்டும்) என நிர்ணயம் செய்யவும், இதற்கான செலவீனத் தொகையாக ஓர் ஆண்டிற்கு 147 நபர்கள் X 687X366 நாட்கள் (12 மாதம்) = ரூ. 3,69,61,974/- செலவீனத் தொகை கணக்கிடப்பட்டுள்ளது. பின்னர் 2024-2025 ஆம் நிதி ஆண்டில் இத்தொகை உயர்த்தப்படும் பட்சத்தில் உயர்த்தப்படவுள்ள அத்தொகையை தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு கணக்கிட்டு வழங்குவதற்கும்,

3. சம்மந்தப்பட்ட கோட்ட சுகாதார ஆய்வாளர்/துப்புரவு அலுவலர் ஆகியோரின் மேற்பார்வையில் பணிகள் மேற்கொள்ளவும் இந்த உறுப்பினர்கள் பணி செய்த நாட்களுக்கு சம்பந்தப்பட்ட சுகாதார ஆய்வாளர் / துப்புரவு அலுவலர் அவர்களிடமிருந்து வருகைப்பதிவேடு பெற்று அதன் அடிப்படையில் அவர்களுக்கு பணிபுரிந்த நாட்களுக்கான தொகையை கணக்கிட்டு வழங்குவதற்கும்,

4. பணியாளர்களுக்கான ஊதியத்தை மண்டலம்-10 பொது சுகாதாரத்துறையின் மூலம் பிரிவு குறியீட்டு எண். 30-32-02 கணக்கு தலைப்பு எண். 210-10-06-02 *(Payment to Casual Health Works)* என்ற கணக்கு தலைப்பில் பட்டி தேர்ச்சி செய்ய அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.092/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.247/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

******

**ம.அ.15.து.பி.ந.க.எண்.அ3/ 6019 /2023**

**கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்களின் 23.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:604/2023** **பொருள் எண்.29**

**பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-15, வார்டு - 192 முதல் 200 வரையுள்ள அரசு மற்றும் சென்னை பள்ளிகளில் உள்ள வகுப்பறைகள், கழிப்பறைகள் மற்றும் சுற்றுபுறத்தை தூய்மைபடுத்தும் பணி வரும் 30.11.2023 அன்றுடன் முடிவடைவதால், பள்ளி மாணவர்/ மாணவியர்களின் நலன் கருதி 60 எண்ணிக்கையிலான பணியாளர்களை 01.12.2023 முதல் 12 மாத காலத்திற்கு ரூ.1,50,45,300/- மதிப்பில் தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் தொடர்ந்து பணியமர்த்த அனுமதி.**

அரசாணை (எம்எஸ்) எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.23.11.2016ல் அந்தந்த உள்ளாட்சி எல்லைக்குள் அமைந்துள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்ய பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் அந்தந்த பள்ளியின் தலைமையாசிரியர்கள் PTA நிதியிலிருந்து வாங்கி வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அலுவலர் அவர்களின் 30.05.2017 நாளிட்ட குறிப்பில், அந்தந்த மண்டலங்களின் கட்டுப்பாட்டில் கீழ் இயங்கும் சென்னை மாநகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளின் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகளை பராமரித்து தூய்மைபடுத்தும் பணியினை துப்புரவு பணியாளர்கள் மூலம் மேற்கொள்ள துணை ஆணையர் (கல்வி) அவர்களால் அறிவுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு, பள்ளி இயங்கும் நாட்கள் மட்டுமின்றி தேர்தல் பணி, சிறப்பு வகுப்புகள் மற்றும் வேறு முகாம்கள் நடைபெறும் நாட்களில் தூய்மை பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் 26.07.2019 நாளிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு தெற்கு வட்டார மண்டலங்களான 11 முதல் 15 வரையிலுள்ள சென்னை மாநகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளுக்கு தனியார் நிறுவனத்தின் மூலம் துப்புரவு பணி மேற்கொள்வதை தவிர்த்து வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி வழிமுறைகளை பின்பற்றி தேவையான பணியாளர்களை கணக்கிட்டு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டுக்குழு (NULM) திட்டத்தின் மூலம் பணியாளர்களை பணியமர்த்தி பணியினை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் தீர்மான எண்.705/2022, நாள்.28.12.2022ன்படி மண்டலம்-15 பகுதி-44 மற்றும் 45, கோட்டம்-192 முதல் 200 வரை உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுபுறம், வகுப்பு அறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணியாளர்களை தற்காலிகமாக தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டுக்குழு (NULM) திட்டத்தின் மூலம் 11 மாத காலத்திற்கு ஆணை பெற்று மேற்கொள்ளப்பட்டு வரும் பணி வரும் 30.11.2023 அன்றுடன் முடிவடைகிறது.

அதனை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-15, வார்டு - 192 முதல் 200 வரையுள்ள தமிழ்நாடு அரசு மற்றும் சென்னை பள்ளிகளில் உள்ள வகுப்பறைகள், கழிப்பறைகள் மற்றும் சுற்றுபுறத்தை தூய்மைபடுத்தும் பணி வரும் 30.11.2023 அன்றுடன் முடிவடைவதால், பள்ளி மாணவர்/மாணவியர்களின் நலன் கருதி 60 எண்ணிக்கையிலான பணியாளர்களை 01.12.2023 முதல் 12 மாத காலத்திற்கு **ரூ.1,50,45,300/-** மதிப்பில் தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் மாமன்றத்தின் அனுமதி பெற்று தொடர்ந்து பணியமர்த்த மண்டலம்-15 வார்டு குழுவில் தீர்மான எண். 586, நாள்.10.10.2023ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.P.roc.C2/16317/2021, நாள்.13.06.2023ன்படி துப்புரவு பணிமேற்கொள்ளும் பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.522/- வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் அவர்களின் 09.08.2023 நாளிட்ட சுற்றறிக்கையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1 முதல் 15 வரை உள்ள NULM தூய்மை பணியாளர்கள் (4469 நபர்கள்) மண்டலம்-2,3,11,12,14,15 மற்றும், NMR பணியாளர்களுக்கு (471 நபர்கள்) அரசாணை எண். G.O.No-36(2D) Labour Welfare and Skill Development நாள். 16.06.2023ன்படி தமிழ்நாடு அரசிதழ் வெளியிட்ட 05.07.2023 நாள் முதல் நாளொன்றுக்கு தினக்கூலி ரூ.522/-லிருந்து ரூ.687/- ஆக உயர்த்தி வழங்கப்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-15, சோழிங்கநல்லூரில் உள்ள பள்ளிகளில் தேவைப்படும் பணியாளர்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:-

| **பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-15ல் உள்ள அரசு பள்ளிகளின் விவரம்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ.எண் | வார்டு எண் | பள்ளியின் பெயர் | ஸ்வீப்பர் | ஸ்கேவஞ்சர்ஸ் | ஸ்வீப்பர் (ம) ஸ்கேவஞ்சர்ஸ் | மொத்தம் |
| **பகுதி - 44** | | | | | | |
| 1 | 192 | கபாலீஸ்வரர் நகர் 1 வது பிரதான சாலை நீலாங்கரை, நடுநிலைப் பள்ளி | 0 | 0 | 1 | 1 |
| 2 | 194 | பாரதி தெரு, ஆரம்பப்பள்ளி, வெட்டுவாங்கேனி. | 0 | 0 | 1 | 1 |
| 3 | 197 | குடுமியாண்டிதோப்பு பனையூர், ஆரம்பப்பள்ளி, | 0 | 0 | 1 | 1 |
| 4 | 197 | பனையூர் குப்பம், பனையூர், ஆரம்பப்பள்ளி. | 0 | 0 | 1 | 1 |
| 5 | 197 | செங்கேணியம்மன் கோயில் தெரு, உத்தண்டி, ஆரம்பப்பள்ளி | 0 | 0 | 1 | 1 |
| 6 | 197 | குடுமியாண்டிதோப்பு பனையூர், உயர்நிலைப்பள்ளி | 1 | 1 | 0 | 2 |
| 7 | 197 | மகாவீர் தெரு, உத்தண்டி, உயர்நிலைப்பள்ளி | 1 | 1 | 1 | 3 |
| 8 | 199 | ராஜீவ்காந்தி சாலை (OMR), மேல்நிலைப்பள்ளி | 6 | 5 | 0 | 11 |
| **மொத்தம்** | | | **8** | **7** | **6** | **21** |

| வ. எண் | வார்டு எண் | பள்ளியின் பெயர் | ஸ்வீப்பர் | ஸ்கேவஞ்சர்ஸ் | ஸ்வீப்பர் (ம) ஸ்கேவஞ்சர்ஸ் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **பகுதி - 45** | | | | | | |
| 1 | 193 | ராஜீவ்காந்தி சாலை (OMR), மேல்நிலைப்பள்ளி | 5 | 3 | 0 | 8 |
| 2 | 193 | ராஜீவ்காந்தி சாலை அரசு ஆரம்பப்பள்ளி | 2 | 2 | 0 | 4 |
| 3 | 195 | எழில்நகர், நடுநிலைப்பள்ளி | 0 | 0 | 1 | 1 |
| 4 | 196 | விவேகானந்தர் தெரு மூட்டைக்காரன் சாவடி நடுநிலைப்பள்ளி | 1 | 1 | 1 | 3 |
| 5 | 196 | கண்ணகி நகர், 2-வது பிரதான சாலை, ஆரம்பப்பள்ளி | 0 | 0 | 1 | 1 |
| 6 | 196 | கண்ணகி நகர், 22வது குறுக்குதெரு, ஆரம்பப்பள்ளி | 0 | 0 | 1 | 1 |
| 7 | 196 | கண்ணகி நகர், 33வது குறுக்குதெரு, ஆரம்பப்பள்ளி | 2 | 2 | 0 | 4 |
| 8 | 196 | கண்ணகி நகர், 10வது பிரதான சாலை, மேல்நிலைப்பள்ளி | 3 | 2 | 0 | 5 |
| 9 | 198 | கஜராஜன் சாலை, காரப்பாக்கம், ஆரம்பப்பள்ளி | 0 | 0 | 1 | 1 |
| 10 | 198 | கே.கே.சாலை, சோழிங்கநல்லூர், நடுநிலைப்பள்ளி | 1 | 1 | 0 | 2 |
| 11 | 198 | கங்கையம்மன் கோயில் தெரு, (விரிவு) உயர்நிலைப்பள்ளி | 1 | 1 | 0 | 2 |
| 12 | 200 | எம்.ஜி.ஆர். தெரு, செம்மஞ்சேரி, ஆரம்பப்பள்ளி | 0 | 0 | 1 | 1 |
| 13 | 200 | தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு 5-வது நிழற்சாலை, நடுநிலைப்பள்ளி | 2 | 1 | 0 | 3 |
| 14 | 200 | தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு, 4-வது நிழற்சாலை, மேல்நிலைப்பள்ளி | 2 | 1 | 0 | 3 |
| **மொத்தம்** | | | **19** | **14** | **6** | **39** |
| **பெருமொத்தம்** | | | **27** | **21** | **12** | **60** |

எனவே,

1. மண்டலம்-15, வார்டு - 192 முதல் 200 வரையுள்ள அரசு மற்றும் சென்னை பள்ளிகளில் உள்ள வகுப்பறைகள், கழிப்பறைகள் மற்றும் சுற்றுபுறத்தை தூய்மைபடுத்தும் பணி வரும் 30.11.2023 அன்றுடன் முடிவடைவதால், பள்ளி மாணவர்/மாணவியர்களின் நலன் கருதி 60 எண்ணிக்கையிலான பணியாளர்களை 01.12.2023 முதல் 12 மாத காலத்திற்கு ரூ.1,50,45,300/- மதிப்பில் தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் தொடர்ந்து பணியமர்த்த நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. மேற்படி 60 பணியாளர்களுக்கு அரசாணை எண். G.O.No-36(2D) Labour Welfare and Skill Development நாள்.16.06.2023ன்படி துப்புரவு பணி மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.687/'- வீதம் 12 மாத காலத்திற்கு **ரூ.1,50,45,300/-** (60நபர்கள்x687x365= ரூ.1,50,45,300/-), வழங்க அனுமதி வேண்டியும்,

3. மேற்படி பணியினை தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலமாக பணி மேற்கொள்வதால் ஒப்பந்த புள்ளி நடைமுறையிலிருந்து விலக்கு அளிக்கவும்,

4. இப்பணிக்கு தேவையான நிதி **ரூ.1,50,45,300/-** ஐ வருவாய் நிதி தனியார்மயம் பள்ளி பராமரிப்பு என்ற கணக்கு தலைப்பு எண்.202107/ 230-150-500 கீழ் நிதி ஒதுக்கீடு செய்யவும், வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய தேவைப்படும் பொருட்கள் (துடைப்பம், பிளிச்சிங் பவுடர், பிரஷ், பெனாயில்) அந்தந்த பள்ளியின் PTA நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவும், பின்னர் அச்செலவினங்கள் மாநகராட்சி மூலம் திரும்ப வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.253/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**<u>வ.து.ந.க.எண்.ஜி1/8933/2016</u>**

**<u>கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.11.2023 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:605/2023** **பொருள் எண்.30**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - அரசு நிலங்கள் /புறம்போக்கு நிலங்கள் - நிலத்திற்கு உரிமையில்லாமல் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் - சொத்துவரி விதிப்பு - மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் வழங்கியுள்ள உத்தரவுகள் மற்றும் அறிவுரைகள் - நீர்நிலைகள் மற்றும் ஆட்சேபணைக்குரிய புறம்போக்கு நிலங்கள் தவிர்த்து - ஆட்சேபணையற்ற நிலங்களில் (அரசு நிலம்/கிராம நத்தம்/ அனாதீன நிலம் போன்ற) அமைந்துள்ள சொத்துக்கள் (குடியிருப்புகள்/குடியிருப்பு அல்லாதவை) மீது சொத்துவரி விதிக்க மன்றத்தின் அனுமதி</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் மீது சொத்துவரி மதிப்பீடு மேற்கொள்ளுதல்/சொத்துவரி விலக்களித்தல் உட்பட பல்வேறு வழிமுறைகள் முந்தைய சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்-*1919*, சட்ட பிரிவு -*98* முதல் சட்ட பிரிவு *109* – வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சட்ட பிரிவு-*138*, அட்டவணை- *IV*, வரிவிதிப்பு விதிகளில், சொத்துவரி விதிப்புகள்/ முறையீடுகள் தொடர்பாக வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட நிலங்கள்/கட்டிடங்கள் மீது வரி மதிப்பீடு மேற்கொண்டு வரி விதிப்பு செய்யப்பட்டு வந்தது.

தற்போது, அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அரசால், அரசாணை எண்.44, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்:12.04.2023ன்படி, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1998, வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டம் 13.04.2023 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பெற்றுள்ளது.

மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1998ன் தொடர்ச்சியாக, அரசாணை எண்.45, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்:12.04.2023ன்படி, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து வகையான சொத்துக்களுக்கும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம்,1998 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள சட்ட பிரிவுகள், விதிகளை பின்பற்றி சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளில், புறம்போக்கு நிலங்கள்/அரசு நிலங்கள்/கோயில் நிலங்கள்/மற்ற தனியார் நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டிடங்களில் வசிப்பவர்களிடமிருந்து, இத்தகைய கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பது குறித்து, கட்டட உரிமையாளர்கள்/கட்டிடங்களில் வசிப்பவர்களிடமிருந்து, உறுதி மொழி பத்திரம் (SWORN AFFIDAVIT – Attested by Notary Public) பெற்று, சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்வதற்கு, மன்ற தீர்மான எண்.*309/2003*ல் தீர்மானிக்கப்பட்டு, மேற்படி நிலங்களில் (புறம்போக்கு நிலங்கள்/அரசு நிலங்கள் /கோயில் நிலங்கள் /மற்ற தனியார் நிலங்கள்) ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் வரிவிதிப்புகள் மேற்கொள்ளப்பட்டது.

அரசாணை எண்.*256*, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்*26.12.2009*ல், *42* உள்ளாட்சி அமைப்புகள் (*9* நகராட்சிகள், *8* பேரூராட்சிகள், *25* கிராம பஞ்சாயத்துக்கள்) சென்னை மாநகராட்சியுடன் இணைக்க முடிவு செய்து ஆணையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அரசாணை எண்.*97*. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: *19.07.2011*ன்படி, சென்னை மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு *200* வார்டுகளாக

அமைக்கப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சியானது, 10 மண்டலங்களிலிருந்து 15 மண்டலங்களாக விரிவுபடுத்தப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் *07.12.2016* தேதியிட்ட கடிதத்தில், மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை எண்.*12125/2013* வழக்கில், மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால், ஆக்ரமணங்களை அகற்றுவது குறித்து பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி, இனிவரும் காலங்களில் அரசு புறம்போக்கு நிலங்களில் ஆக்ரமணதாரர்களால் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு வரி வசூல் செய்வதை தவிர்க்குமாறும், புதிய வரி ஏதும் மதிப்பீடு செய்து வசூலிக்காமல் இருக்கவும், மாநகராட்சி சார்நிலை அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, *07.03.2017* நாளிட்ட சுற்றறிக்கை மூலம், அரசு புறம்போக்கு நிலங்களில் ஆக்ரமணங்கள் செய்து கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு, வீட்டுவரி வசூல் செய்வது இனிவரும் காலங்களில் தவிர்க்குமாறும், மேலும், அரசு புறம்போக்கு நிலங்களில் ஆக்ரமணங்கள் செய்து கட்டப்பட்டுள்ள கட்டடங்களுக்கு சொத்துவரி மதிப்பீடு செய்வதை முறைப்படுத்தும் முகமாக, சம்மந்தப்பட்ட வட்டாட்சியரிடமிருந்து, தடையின்மை சான்று பெற்று இது போன்ற இனங்களில் வரிவிதிப்பு மேற்கொள்ளவும், அனைத்து மண்டல அலுவலர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேற்படி பொருள் தொடர்பாக, உரிய அறிவுரைகளை சம்மந்தப்பட்ட வட்டாட்சியர்களுக்கு வழங்கக் கோரி, சென்னை திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

அரசு கடித எண்.*9179*/MA5(1)-2018-6. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்01.02.2019ன், அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆட்சேபணைக்குரிய புறம்போக்கு நிலங்கள் மற்றும் நீர் நிலைகளை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள், காலி மனைகள் ஆகியவற்றிற்கு, வரி விதிப்புகள் மேற்கொள்ளக்கூடாது என அனைத்து மண்டலங்களுக்கும் இவ்வலுவலக 25.02.2019 நாளிட்ட சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தப்பட்டது.

நீர் நிலைப் பகுதிகள் ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கு பட்டா, மின் இணைப்பு, திட்ட அனுமதி, குடிநீர் இணைப்பு, வரி விதிப்பு, வாக்காளர் அடையாள அட்டை வழங்கக் கூடாது எனவும், அரசின் நலத்திட்ட உதவிகள் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் எனவும், தொடரப்பட்ட தொகுப்பு வழக்குகள், W.P.(MD)No. 22163 of 2018. W.P. No. 19949 of 2017 and W.P. No. 768 of 2019 ஆகியவற்றின் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் *27.01.2022* நாளிட்ட தீர்ப்பில், பத்தி-*9*-ல், (iv) Any public authority, official or other staff concerned, who is found to have granted or aided or abetted in granting approval for lay-out or building construction or assessment of property tax or electricity or water connection for a property located on water body, or commits dereliction of duty by not protecting a water body from encroachment, shall be liable for disciplinary action under the relevant rules governing their employment, and prosecution for offences relating to encroachment under Criminal Law என குறிப்பிட்டுள்ளது. அதன்படி, நீர்நிலை பரப்புகள் மீது அமைந்துள்ள சொத்துக்களுக்கு, கட்டிட அனுமதி, சொத்துவரி மதிப்பீடு அல்லது மின் இணைப்பு அல்லது குடிநீர் இணைப்பு முதலியவற்றிற்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டால், சம்மந்தப்பட்ட அதிகாரிகள், அலுவலர்கள், பணியாளர்கள் மீது விதிகளின்படி, ஒழுங்கு நடவடிக்கையும், சட்டப்படி குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரிவிப்பது யாதெனில், " கிராம நத்தம்" மற்றும் "நத்தம் புறம்போக்கு" முதலிய நிலங்களில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு வரிமதிப்பீடு மேற்கொள்ள வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்களாலும், மேற்படி வகையான நிலங்களில் குடியிருக்கும் குடியிருப்புதாரர்களாலும் கோரிக்கைகள் வரப்பெற்றதை தொடர்ந்து, இவ்வலுவலக 01.03.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள "கிராம நத்தம்" மற்றும் "அனாதீன நிலங்களில்"

உள்ள கட்டிடங்களுக்கு, வரி மதிப்பீடு மேற்கொள்ள, மேற்குறிப்பிட்ட நிலங்களில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு, பொதுவான ஆவணங்களை அரசால் வகைப்படுத்தி வழங்கும் பட்சத்தில், அதனடிப்படையில், சொத்துவரி மதிப்பீடு மேற்கொள்வது ஏற்புடையதாக இருக்கும் என்பதால், மேற்படி நிலங்களில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு சொத்துவரி மேற்கொள்ள, உரிய கருத்துரு மற்றும் வழிகாட்டுதல் வழங்குமாறு, நில நிர்வாக ஆணையர், நில நிர்வாக ஆணையரகம், அவர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைக்கு நினைவூட்டுகளும் அனுப்பப்பட்டு வருகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியால் மாதம் தோறும் நடத்தப்பெறும் சாதாரண மன்றக் கூட்டங்களின்போது, கிராம நத்தம், நத்தம் புறம்போக்கு, பத்திரபதிவு செய்யப்படாத நிலங்கள், முதலிய நிலங்களில் உள்ள கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பு செய்யப்பட வேண்டுமென தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றது. 2023 ஆம் ஆண்டு கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற சாதாரண மன்ற கூட்டத்தின் போதும் பல்வேறு மாமன்ற உறுப்பினர்களால் மேற்படி வகையான நிலங்களில் உள்ள கட்டிடங்களுக்கு சொத்துவரி மதிப்பீடு செய்ய வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.

தற்போது அரசால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், *1998*-ல், பிரிவு 80 (1)ன்படி, சொத்துவரி விதிக்க மன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

- ✓ சட்ட பிரிவு 82 (1)ன்படி, விலக்களிக்கப்பட்ட இனங்களை தவிர்த்து, <u>மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து நிலங்கள், கட்டிடங்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள் மற்றும் நிலத்தின் மீது, நிலத்துடன் கட்டப்பட்டுள்ள கட்டுமானங்கள் ஆகியவற்றின் மீது சொத்துவரி விதிக்க வழிவகை வழங்கப்பட்டுள்ளது.</u>
- ✓ மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான விதிகள், 2023, விதி 255-ல், **<u>அனைத்து நிலங்கள், கட்டிடங்கள் மற்றும் நிலத்தின் மீது கட்டப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட சேமிப்பு கட்டுமானங்கள் மற்றும் தொலைத் தொடர்பு கோபுரங்கள்</u>** <u>முதலியவற்றின் மீது</u> சொத்துவரி விதிக்க வழிவகைகள் வழங்கப்பட்டுள்ளது.
- ✓ <u>விதி 255 *(a)*-ன்படி, அனைத்து கட்டிடங்கள், நிலங்கள், சேமிப்பு கிடங்குகள் மீது வரி,</u> **<u>முதன்மையாக அதன் சொத்து உரிமையாளர் பெயரில் விதிக்கப்படும்.</u>**
- ✓ <u>விதி 256-ல் (1)ன்படி, சொத்துவரி மதிப்பீடு செய்யக் கோரி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்துடன் (படிவம்-*I*) பதிவு செய்யப்பட்ட சொத்து ஆவணம்/உரிமை ஆவணம் சொத்து உரிமையாளர்/ உபயோகிப்பாளரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.</u>

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், *1998*-ல் வழங்கப்பட்டுள்ள சட்ட பிரிவுகளின்படி, அனைத்து வகையான நிலங்கள், கட்டிடங்கள், தொலைத் தொடர்பு கோபுரங்கள், நிலத்தின் மீது, நிலத்துடன் கட்டப்பட்டுள்ள கட்டுமானங்கள் ஆகியவற்றின் மீது சொத்துவரி விதிக்க மன்றம் அதிகாரம் பெற்றுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்களால், கிராம நத்தம், நத்தம் புறம்போக்கு, பட்டா இல்லாத நிலம் முதலிய நிலங்களில் குடியிருக்கும் கட்டிடங்களுக்கு, சொத்துவரி விதிக்க கோரிக்கை அளிக்கப்பட்டு வரும் நிலையிலும், சாதாரண மன்றக் கூட்டங்களின்போது, பல்வேறு மன்ற உறுப்பினர்களால் மேற்படி வகையான நிலங்களில் குடியிருக்கும் குடியிருப்புதாரர்களுக்கு சொத்துவரி விதிக்க கோரிக்கைகள் முன்வைப்பதன் அடிப்படையிலும், கிராம நத்தம்/நத்தம் புறம்போக்கு/அரசு நிலம்/பட்டா இல்லாத நிலம், முதலிய நிலங்களில் வசிக்கும் குடியிருப்புதாரர்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்க வேண்டிய நிலையில், இப்பொருள் குறித்து, தொடர்புடைய நிலத்தின் உரிமையாளர், வகைப்பாடு, தன்மை, சொத்துவரி விதிக்க ஆட்சேபணை/தடை இன்மை போன்றவை முக்கிய விவரங்களாக கருதப்படுகிறது.

எனவே, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998-ன்படி, அனைத்து வகையான நிலங்கள், கட்டிடங்கள், தொலைத் தொடர்பு கோபுரங்கள், நிலத்தின் மீது, நிலத்துடன் கட்டப்பட்டுள்ள கட்டுமானங்கள் ஆகியவற்றின் மீது சொத்துவரி மதிப்பீடு செய்து வரி விதிக்க

மன்றம் அதிகாரம் பெற்றுள்ள நிலையில், கிராம நத்தம்/நத்தம் புறம்போக்கு/அரசு நிலம்/ அனாதீன நிலம்/பட்டா இல்லாத நிலம், முதலிய நிலங்களில் வசிக்கும் குடியிருப்புதாரர்களின்/ உபயோகிப்பாளர்களின் கட்டிடங்களுக்கு, சொத்துவரி மதிப்பீடு செய்து வரி விதிப்பது தொடர்பாக, கீழ்கண்ட இனம் (1), இனம் (2) மற்றும் இனம் (3) ஆகியவற்றின் மீது, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1) கிராம நத்தம்/நத்தம் புறம்போக்கு/அரசு நிலம்/அனாதீன நிலம்/பட்டா இல்லாத நிலம், முதலிய நிலங்களில் வசிக்கும் குடியிருப்புதாரர்களின் கட்டிடங்களுக்கு, சொத்துவரி விதிக்க, சம்மந்தப்பட்ட குடியிருப்புதாரர்களால், தொடர்புடைய வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து, தடையின்மை சான்று *(No Objection Certificate)* பெற்று அளிக்கும் பட்சத்தில், இத்தகைய கட்டிடங்களுக்கு மட்டும் சொத்துவரி மதிப்பீடு செய்து வரி விதிக்கவும், நிலத்தின் உரிமையாளர் அரசு எனில் குடியிருப்புதாரர் அல்லது உபயோகிப்பாளர் என்பதன் அடிப்படையில், தனியர் பெயரில் சொத்துவரி விதிக்கவும், சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது மற்றும் செலுத்தப்பட்டுள்ளது என்பதன் அடிப்படையில், நிலம் தொடர்பாக எவ்வித உரிமையும், குடியிருப்புதாரர்/உபயோகிப்பாளர் பெற இயலாது என்பதனை வரி மதிப்பீடுகள் மற்றும் சொத்துவரி ரசீதுகளில் குறிப்பிடவும்,
2) கிராம நத்தம்/நத்தம் புறம்போக்கு/அரசு நிலம்/ அனாதீன நிலம்/பட்டா இல்லாத நிலம், முதலிய நிலங்களில் வசிக்கும் குடியிருப்புதாரர்களின்/உபயோகிப்பாளர்களின் கட்டிடங்களுக்கு, சொத்துவரி விதிக்க, தடையின்மை சான்று *(No Objection Certificate)* வேண்டி விண்ணப்பிக்கும் பட்சத்தில், சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தால் தடையின்மை சான்று அளிப்பது தொடர்பாக, உரிய அறிவுரைகளை சம்மந்தப்பட்ட வட்டாட்சியர்களுக்கு வழங்குமாறு, சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்களைக் கேட்டுக் கொள்ளவும்,
3) பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள “கிராம நத்தம்” மற்றும் “அனாதீன நிலங்களில்” அமைந்துள்ள கட்டிடங்களுக்கு, சொத்துவரி மதிப்பீடு மேற்கொள்ள, நில நிர்வாக ஆணையர், நில நிர்வாக ஆணையரகம், அவர்களிடம் கருத்துரு கோரப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பாக நில நிர்வாக ஆணையரகத்திலிருந்து பெறப்படும் கருத்துரு மற்றும் வழிகாட்டுதலுக்குட்பட்டு, இனம்-1ல் கண்டுள்ளபடி, கிராம நத்தம்/நத்தம் புறம்போக்கு/அரசு நிலம்/அனாதீன நிலம்/பட்டா இல்லாத நிலம், முதலிய நிலங்களில் வசிக்கும் குடியிருப்புதாரர்களின்/ உபயோகிப்பாளர்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்ளவும்,

“27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.252/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இப்பொருள் குறித்து மேலும் கூர்ந்தாய்வு செய்யப்பட வேண்டி உள்ளதால் இதனை மன்றம் ஒத்தி வைக்கின்றது.”**

******

**சு.து.நக.எண்.NUHM/பி2/6870/2022**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:606/2023** **பொருள் எண்.31**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை- தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின் கீழ் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையங்களில் 107 மருத்துவ அலுவலர்கள் 10.07.2022 முதல் 09.06.2023 வரை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டனர் - இந்த பணியானது மேலும் 12.06.2023 முதல் 11.05.2024 வரை 11 மாத காலத்திற்கு புதுப்பிக்கப்பட்டது - இதில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட மருத்துவ அலுவலர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் மாத ஊதியம் ரூ.60,000/- த்தினை தொடர்ந்து வழங்கவும் (தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் மாத ஊதியமாக ரூ.40,000/- ம் மாநகராட்சி நிதியில் ரூ.20,000/-ம்) இதற்கென கூடுதலாக தேவைப்படும் தொகையினை மாநகராட்சி நிதியில் இருந்து வழங்குவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் 2022-24 ஆம் நிதியாண்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 107 மருத்துவ அலுவலர்கள் ஒப்பளிக்கப்பட்டு, அவர்கள் 10.07.2022 முதல் 09.06.2023 வரை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணிக்காலம் முடிவடைந்த நிலையில், முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின், 26.08.2022 நாளிட்ட ஆணையின்படி, ஒப்பந்த காலம் மேலும் 12.06.2023 முதல் 11.05.2024 வரை 11 மாத காலத்திற்கு புதுப்பிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும், மருத்துவ அலுவலர்களுக்கு மாத ஊதியம் ரூ.60,000/- (தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் ரூ.40,000/-ம் பெருநகர சென்னை மாநகராட்சி நிதியில் ரூ.20,000/-ம் மொத்தம் ரூ.60,000/-) 10.07.2022 முதல் 09.06.2023 வரை வழங்க மன்றத் தீர்மான எண்.438/2022, நாள்.29.09.2022ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டும் 12.06.2023 முதல் 11.05.2024 வரையில் மருத்துவ அலுவலர்களுக்கு மாத ஊதியம் ரூ.60,000 வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கென கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின், 26.08.2022 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது.

| Sanctioned Post in ROP 2022- 23 for UPHC & UCHC (A) | NUHM Contribution (B) | GCC Contribution (C) | Medical Officer Salary/Month (B+C =D) | Total Salary for 11 Months (A*D*11 months) =(E) | GCC Contribution for 11 Months (A*C*11 months) = (F) |
|---|---|---|---|---|---|
| 107 | Rs.40,000 | Rs.20,000 | Rs.60,000 | Rs.7,06,20,000 | Rs.2,35,40,000 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில், தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் 107 மருத்துவ அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாத ஊதியம் ரூ.60,000/- (தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் ரூ.40,000/-ம், பெருநகர சென்னை மாநகராட்சி நிதியில் ரூ.20,000/-ம் மொத்தம் ரூ.60,000/-)) 12.06.2023 முதல் 11.05.2024 வரை 11 மாத காலத்திற்கு வழங்க அனுமதியும்,

2. தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக தேவைப்படும் தொகை ரூ. 2,35,40,000/- (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தி ஐந்து இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) மாநகராட்சி நிதி பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-15-09-00 என்ற தலைப்பின் கீழ் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து செலவினம் மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.105/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.259/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**இ.பொ.து.ந.எண்.எம்1/0389A /2022**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:607/2023** **பொருள் எண்.32**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட இடிபாடுகள் மற்றும் மரக்கழிவுகளை அகற்றும் பணி - 42 எண்ணிக்கையிலான (Skid Steer Loader – Bobcat make) சக்கரத்தடை உபகரணங்களுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி - திருவாளர்கள். Marwell Enconn Tech Pvt Ltd. (Authorised Dealer For Ms. Doosan Babcat India Prvt. Ltd.,) ஓராண்டு காலத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது - இப்பணிக்கான ஒப்பந்த காலம் 30.09.2023 அன்றுடன் முடிவடைய உள்ளது - இவ்வுபகரணங்களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை 01.10.2023 முதல் 29.12.2023 வரை 3 மாத காலத்திற்கு (90 நாட்கள்) காலநீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.1,58,79,024/-க்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி 3 மாதங்கள் (90 நாட்கள்) காலநீட்டிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மண்டலம்-1, 2, 3, 7, 11, 12, 14 மற்றும் 15 ஆகியவற்றில் உள்ள கட்டுமான மற்றும் இடிபாடு கழிவுகளை அகற்றவும், மண்டலம் - *4,5,6,7,8* ஆகியவற்றில் உள்ள மரக்கழிவுகளை அகற்றவும் மற்றும் அனைத்து மண்டலங்களிலும் சிறப்பு உபகரணங்கள் மூலம் சிறிய மற்றும் பெரிய கால்வாய்களிலிருந்து தாவரக் கழிவுகள் மற்றும் சேறு சகதிகள் போன்றவை அகற்றப்பட்டு கரை ஓரங்களில் குவித்து வைக்கப்பட்டதை அகற்றவும் 59 எண்ணிக்கையிலான சக்கரத்தடை *(Skid Steer loaders - Bobcat & Gamzen make)* உபகரணங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது.

இயந்திர பொறியியல் துறையின் மூலம் பராமரிக்கப்படும் 59 எண்ணிக்கையிலான சக்கர தடை (*Skid Steer loaders)* உபகரணங்களில், 42 எண்ணிக்கையிலான உபகரணங்கள் *Bobcat* வகையினையும் மற்றும் 17 எண்ணிக்கையிலான உபகரணங்கள் *Gamzen* வகையினையும் சார்ந்தது ஆகும். *Bobcat* வகையைச் சார்ந்த 42 எண்ணிக்கையிலான சக்கரத்தடை உபகரணங்கள் 2008 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கொள்முதல் செய்யப்பட்டவை ஆகும். இவ்வகை உபகரணங்கள் ஹைட்ராலிக் முறையில் சிறப்பு தொழில்நுட்பத்துடன் இயங்கக் கூடிய உபகரணம் என்பதாலும் மற்றும் இவ்வுபகரணத்திற்குத் தேவையான உதிரி பாகங்கள் உபகரண உற்பத்தியாளர் மூலமே பெற இயலும் என்பதாலும் மற்றும் இவ்வுபகரணங்களை இயக்க சிறப்பு தொழில்நுட்ப பணியாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் இல்லாத நிலையிலும் இவ்வுபகரணத்திற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை உபகரண தயாரிப்பாளரின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் மூலம் மின்னணு ஒப்பம் கோரி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

அதன்படி *Bobcat* வகையை சார்ந்த 42 எண்ணிக்கையிலான சக்கர தடை உபகரணங்களின் *(Make: M/s. Doosan Bobcat India Pvt Ltd, Model: Bobcat)* இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலம் 30.09.2023 உடன் முடிவடைய உள்ளதால், வருகின்ற பருவமழை காலங்களில் இவ்வகை உபகரணங்களின் அவசியத்தினை கருத்தில் கொண்டும் மற்றும் தூய்மை பணியில் ஏற்படும் சுணக்கத்தினை தவிர்க்கும் பொருட்டும் மீண்டும் ஓராண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மேற்கொள்ள தோராய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்வதற்கு ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டு தற்போது இப்பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர்கள். *Marwell Enconn Tech Pvt Ltd. (Authorised Dealer For M/s. Doosan Babcat India Prvt. Ltd.,)* நிறுவனத்தாருக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு

பணிக்கான ஒப்பத் தொகையில் மேலும் 3 மாத காலத்திற்கு (90 நாட்கள்) காலநீட்டிப்பு செய்து வழங்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திருவாளர்கள். *Marwell Enconn Tech Pvt Ltd. (Authorised Dealer For Ms. Doosan Babcat India Prvt. Ltd.,)* நிறுவனத்தின் 26.09.2023 நாளிட்ட கடிதத்தில், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பணியினை தற்போதுள்ள விலை விவரத்தின் அடிப்படையில் ஒப்ப விதிகளுக்குட்பட்டு மேலும் 3 மாதங்களுக்கு (90 நாட்கள்) பணி செய்ய சம்மதித்துள்ளார்கள் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

42 எண்ணிக்கையிலான சக்கர தடை *(Skid Steer Loader – Bobcat make)* வாகனங்களின் விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை - I** *(Make: M/s. Doosan Bobcat India Pvt Ltd, Model: Bobcat)*

| வ. எண் | வாகன எண் | வ. எண் | வாகன எண் | வ. எண் | வாகன எண் |
|---|---|---|---|---|---|
| 1 | TN 22 CF 6982 | 15 | TN 22 CF 7079 | 29 | TN 22 CF 7066 |
| 2 | TN 22 CF 6943 | 16 | TN 04 AV 4465 | 30 | TN 22 CF 6976 |
| 3 | TN 22 CF 7014 | 17 | TN 22 CF 7090 | 31 | TN 22 CF 7092 |
| 4 | TN 22 CF 7018 | 18 | TN 22 CF 7097 | 32 | TN 22 CF 7087 |
| 5 | TN 22 CF 7031 | 19 | TN 22 CF 7126 | 33 | TN 22 CF 6949 |
| 6 | TN 22 CF 7032 | 20 | TN 04 AV 4457 | 34 | TN 22 CF 6941 |
| 7 | TN 22 CF 7040 | 21 | TN 04 AV 4447 | 35 | TN 22 CF 7132 |
| 8 | TN 22 CF 7041 | 22 | TN 22 CF 7053 | 36 | TN 22 CF 7049 |
| 9 | TN 04 AD 3647 | 23 | TN 04 AC 9218 | 37 | TN 22CF 7058 |
| 10 | TN 04 AD 0221 | 24 | TN 04 AD 0187 | 38 | TN 22CF 7009 |
| 11 | TN 22 CF 7004 | 25 | TN 04 AD 1580 | 39 | TN 04 AY 4496 |
| 12 | TN 22 CF 7030 | 26 | TN 04 AV 4460 | 40 | TN 22 CF 7095 |
| 13 | TN 04 AV 4423 | 27 | TN 04 AD 3677 | 41 | TN 22 CF 6970 |
| 14 | TN 04 AV 4403 | 28 | TN 04 AD 1586 | 42 | TN 04 AV 4448 |

சக்கரதடை உபகரணங்களுக்கான *(Skid Steer Loader – Bobcat make)* இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலத்தில், ஒப்பந்ததாரர் உபகரணங்களை இயக்கி குறிப்பிட்ட நேரத்தில் பணிக்கு செல்லும் பொருட்டு இயக்குநர்களையும் (ஓட்டுநர்), அன்றாடம் முன்தடுப்பு மற்றும் வழக்கமான பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள திறமை வாய்ந்த பழுதாளர்களையும் நியமிக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த பராமரிப்பு காலத்தில் தேவைப்படும் உதிரி பாகங்கள், டயர்கள், பேட்டரி மற்றும் உயவு எண்ணெய் போன்றவற்றை வழங்க வேண்டும். திட்டமிடப்பட்ட பராமரிப்பு அட்டவணையின் படி, பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். விதிமுறைக்கு உட்பட்டு, எரிபொருள் (டீசல்) மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் வழங்கப்படும்.

அதன் அடிப்படையில், கடந்த ஆண்டு மின்னணு ஒப்பம் கோரப்பட்டு பெறப்பட்ட குறைந்த விலைப்புள்ளியின் அடிப்படையில், அதாவது ஒரு எண்ணிக்கையிலான சக்கரத்தடை வாகனத்திற்கு ஒரு நாளிற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான மொத்த மதிப்பீடு ரூ.4,200.80 *(GST* உட்பட) என 42 எண்ணிக்கையில் சக்கரத்தடை உபகரணங்களை 3 மாத காலத்திற்கு (90 நாட்கள்) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ. *1,58,79,024/-* என்ற தோராய மதிப்பீட்டில் 01.10.2023 முதல் 29.12.2023 வரை 3 மாதங்களுக்கு (90 நாட்கள்) கால நீட்டிப்பு செய்து வழங்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| பணியின் விவரம் | செலவுத் தொகை ஒரு உபகரணத்திற்கு ரூ. | 42 உபகரணங்களுக்கான மொத்த தொகை ரூ. 3 மாத காலத்திற்கு (90 நாட்கள்) |
|---|---|---|
| 42 எண்ணிக்கையில் சக்கரத்தடை *(Skid Steer Loader – Bobcat make)* உபகரணங்களை இயக்குதல் பணிக்காக நாளொன்றிற்கு, (8 மணி நேரம்) ஒரு உபகரணத்திற்கு ஒரு ஷிப்டிற்கு | *1,227.20 (Including GST)* | *46,38,816/-* |

| | | |
|---|---|---|
| 42 எண்ணிக்கையில் (*Skid Steer Loader - Bobcat make*) சக்கரத்தடை உபகரணங்களை பராமரிப்பு கட்டணம் நாளொன்றிற்கு, ஒரு உபகரணத்திற்கு. | 2,973.60 (Including GST) | 1,12,40,208/- |
| **மொத்தம் ரூ.** | **4,200.80** (Including GST) | **1,58,79,024/-** |

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், காலநீட்டிப்பு செய்யப்படும் காலத்திற்கு இயக்குதல் பணிக்கான செலவுத் தொகை ரூ.46,38,816/- மற்றும் பராமரிப்பு பணிக்கான செலவுத் தொகை ரூ.1,12,40,208/- ஆக மொத்தம் ரூ.1,58,79,024/- (GST 18% உட்பட) (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தெட்டு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து இருபத்து நான்கு மட்டும்) ஆனது இப்பணிக்கான மொத்த ஒப்பத் தொகையான ரூ.6,43,98,264/-ல் 25% க்கும் குறைவாக உள்ளதால் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகளின்படி (*Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act*-2000) கால நீட்டிப்பு செய்து வழங்கலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், இப்பணிக்கான ஒப்பந்த காலம் 30.09.2023 அன்றுடன் முடிவடைய உள்ள நிலையில், வருகின்ற பருவமழை காலங்களில் *Bobcat* வகை உபகரணங்களின் பயன்பாடு அவசியமென்பதாலும், பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும், ஒப்ப விதிகளின் படியும் ஒப்பத் தொகையில் 25%க்கு மிகாமல் 01.10.2023 முதல் 29.12.2023 வரை 3 மாதங்களுக்கு (90 நாட்கள்) பணி மேற்கொள்ள மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர் நோக்கி பணி மேற்கொள்ள கூடுதல் தலைமைச் செயலர்/ ஆணையர் அவர்களின், 25.09.2023 நாளிட்ட ஆணை பெறப்பட்டு 42 எண்ணிக்கையிலான சக்கரதடை வாகனங்களுக்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலத்தினை மேலும் 90 நாட்களுக்கு காலநீடிப்பு செய்து நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்படல் வேண்டும்

இவ்வுபகரணங்களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பிரிவு குறியீட்டு எண். 40 - 41 - 10 மற்றும் கணக்கு குறியீட்டு எண். 230 - 80 - 03 - 00 என்ற தலைப்பின் கீழ் 2023 - 2024ம் நிதி ஆண்டிற்கு கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. 42 எண்ணிக்கையிலான சக்கர தடை உபகரணங்களின் (*Skid Steer Loader - Bobcat make*) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலம் 30.09.2023 உடன் முடிவடைய உள்ளதால், வருகின்ற பருவமழை காலங்களில் *Bobcat* வகை உபகரணங்களின் பயன்பாடு அவசியமென்பதாலும், பணியின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டும் மற்றும் தூய்மை பணியில் ஏற்படும் சுணக்கத்தினை தவிர்க்கும் பொருட்டும் மீண்டும் ஓராண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மேற்கொள்ள தோராய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்வதற்கு ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டு தற்போது இப்பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர்கள். *Marwell Enconn Tech Pvt Ltd. (Authorised Dealer For Ms. Doosan Babcat India Prvt. Ltd.,)* நிறுவனத்தாருக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்ப தொகையில் 01.10.2023 முதல் 29.12.2023 வரை 3 மாத காலத்திற்கு (90 நாட்களுக்கு) ஒப்ப விதிகளின் படி ஒப்பத் தொகையில் 25%க்கு மிகாமல் ஏற்கனவே வழங்கப்பட்ட பணி ஆணைத் தொகைக்கு, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகளின்படி (*Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-2000*)

மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர் நோக்கி காலநீட்டிப்பு செய்து பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

2. இனம்-1 ஏற்பின், காலநீட்டிப்பு செய்யப்படும் 42 சக்கரதடை உபகரணங்களுக்கு *(Skid Steer Loader – Bobcat make)* இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். *Marwell Enconn Tech Pvt Ltd. (Authorised Dealer For Ms. Doosan Babcat India Prvt. Ltd.,)* நிறுவனத்தாருக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பின்வரும் தொகை விவரங்களை கால நீட்டிப்பு செய்யப்படும் காலங்களுக்கு நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதிவேண்டியும்,

| பணியின் விவரம் | செலவுத் தொகை ஒரு உபகரணத்திற்கு ரூ. | *42* உபகரணங்களுக்கான மொத்த தொகை ரூ. 3 மாத காலத்திற்கு (90 நாட்கள்) |
|---|---|---|
| 42 எண்ணிக்கையில் சக்கரத்தடை *(Skid Steer Loader – Bobcat make)* உபகரணங்களை இயக்குதல் பணிக்காக நாளொன்றிற்கு, (8 மணி நேரம்) ஒரு உபகரணத்திற்கு. ஒரு ஷிப்டிற்கு | *1,227.20 (Including .GST)* | *46,38,816/-* |
| 42 எண்ணிக்கையில் சக்கரத்தடை *(Skid Steer Loader – Bobcat make)* உபகரணங்களை பராமரிப்பு கட்டணம் நாளொன்றிற்கு, ஒரு உபகரணத்திற்கு. | *2.973.60 (Including .GST)* | *1,12,40,208/-* |
| **மொத்தம் ரூ.** | ***4,200.80*** *(Including .GST)* | ***1,58,79,024/-*** |

3. 42 சக்கரதடை உபகரணங்களுக்கு *(Skid Steer Loader – Bobcat make)* இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக ஒப்பந்ததாரர் திருவாளர்கள். *Marwell Enconn Tech Pvt Ltd. (Authorised Dealer For Ms. Doosan Babcat India Prvt. Ltd.,)* நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்ட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக அனுமதிக்கப்பட்டுள்ள விலை விவரங்களின் அடிப்படையில் 01.10.2023 முதல் 29.12.2023 வரை 3 மாத காலத்திற்கு (90 நாட்கள்) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கணக்கிடப்பட்டுள்ள தொகை ரூ.1,58,79,024/- *(GST 18%* உட்பட) (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தெட்டு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து இருபத்து நான்கு மட்டும்) செலவினத்தில் மேற்கொள்ளவும்,

4. இனம்1, 2 மற்றும் 3 ஏற்பின் திருவாளர்கள். *Marwell Enconn Tech Pvt Ltd. (Authorised Dealer For Ms. Doosan Babcat India Prvt. Ltd.,)* நிறுவனத்தாருக்கு காலநீடிப்புக்கான பணி ஆணை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

5. 3 மாத காலத்திற்கான (90 நாட்கள்) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவினத்தை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண்.40 - 41 - 10 மற்றும் கணக்கு குறியீட்டு எண் 230 - 80 - 03 - 00 என்ற தலைப்பின் 2023 - 24 ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.099/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.254/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**இ.பொ.து.ந.எண்.எம்1/0390/2022**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:608/2023** **பொருள் எண்.33**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட இடிபாடுகள் மற்றும் மரக்கழிவுகளை அகற்றும் பணி - 17 எண்ணிக்கையிலான (Skid Steer Loader – Gamzen make) சக்கரத்தடை உபகரணங்களுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி - திருவாளர்கள். Gamzen Plast Pvt. Ltd., (Original Equipment Manufacturer) நிறுவனத்தாருக்கு ஓராண்டு காலத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது - இப்பணிக்கான ஒப்பந்த காலம் 30.09.2023 அன்றுடன் முடிவடைய உள்ளது - இவ்வுபகரணங்களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை 01.10.2023 முதல் 29.12.2023 வரை மேலும் 3 மாத காலத்திற்கு (90 நாட்கள்) காலநீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.64,27,224/- க்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி பணியின் அவசரம் மறறும் அவசியம் கருதி 3 மாதங்கள் (90 நாட்கள்) காலநீட்டிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மண்டலம் - 1,2,3,7,11,12,14 மற்றும் 15 ஆகியவற்றில் உள்ள கட்டுமான மற்றும் இடிபாடு கழிவுகளை அகற்றவும், மண்டலம் - 4,5,6,7,8 ஆகியவற்றில் உள்ள மரக்கழிவுகளை அகற்றவும் மற்றும் அனைத்து மண்டலங்களிலும் சிறப்பு உபகரணங்கள் மூலம் சிறிய மற்றும் பெரிய கால்வாய்களிலிருந்து தாவரக் கழிவுகள் மற்றும் சேறு சகதிகள் போன்றவை அகற்றப்பட்டு கரை ஓரங்களில் குவித்து வைக்கப்பட்டதை அகற்றவும் 59 எண்ணிக்கையிலான சக்கரத்தடை *(Skid Steer loaders – Bobcat & Gamzen make)* உபகரணங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது.

இயந்திர பொறியியல் துறையின் மூலம் பராமரிக்கப்படும் 59 எண்ணிக்கையிலான சக்கர தடை வாகனங்களில், 42 எண்ணிக்கையிலான உபகரணங்கள் *Bobcat* வகையினையும் மற்றும் 17 எண்ணிக்கையிலான உபகரணங்கள் *Gamzen* வகையினையும் சார்ந்தது ஆகும். *Bobcat* வகையைச் சார்ந்த 42 எண்ணிக்கையிலான சக்கரத்தடை உபகரணங்கள் 2008 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கொள்முதல் செய்யப்பட்டவை ஆகும். இவ்வகை உபகரணங்கள் ஹைட்ராலிக் முறையில் சிறப்பு தொழில்நுட்பத்துடன் இயங்கக் கூடிய உபகரணம் என்பதாலும் மற்றும் இவ்வுபகரணத்திற்குத் தேவையான உதிரி பாகங்கள் உபகரண உற்பத்தியாளர் மூலமே பெற இயலும் என்பதாலும் மற்றும் இவ்வுபகரணங்களை இயக்க சிறப்பு தொழில்நுட்ப பணியாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் இல்லாத நிலையிலும் இவ்வுபகரணத்திற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை உபகரண தயாரிப்பாளரின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் மூலம் மின்னணு ஒப்பம் கோரி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

அதன்படி *Gamzen* வகையை சார்ந்த 17 எண்ணிக்கையிலான சக்கர தடை உபகரணங்களின் *(Make: M/s. Gamzen Plast Pvt Ltd, Model: Gamzen)* இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலம் 30.09.2023 உடன் முடிவடைய உள்ளதால், இவ்வகை உபகரணங்களின் அவசியத்தினை கருத்தில் கொண்டும் மற்றும் தூய்மை பணியில் ஏற்படும் சுணக்கத்தினை தவிர்க்கும் பொருட்டும் மீண்டும் ஓராண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மேற்கொள்ள தோராய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்வதற்கு ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டு தற்போது இப்பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர்கள். *Gamzen Plast Pvt. Ltd., (Original Equipment Manufacturer)* நிறுவனத்தாருக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்பத் தொகையில் மேலும் 3 மாத காலத்திற்கு (90 நாட்கள்) காலநீட்டிப்பு செய்து வழங்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திருவாளர்கள். *Gamzen Plast Pvt Ltd, (Original Equipment Manufacturer for Gamzen Plast Pvt Ltd)* நிறுவனத்தின் 26.09.2023 நாளிட்ட கடிதத்தில், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பணியினை தற்போதுள்ள விலை விவரத்தின் அடிப்படையில் ஒப்ப விதிகளுக்குட்பட்டு மேலும் 3 மாதங்களுக்கு (90 நாட்கள்) பணி செய்ய சம்மதித்துள்ளார்கள் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

17 எண்ணிக்கையிலான சக்கர தடை *(Skid Steer Loader – Gamzen make)* வாகனங்களின் விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை - I** *(Make: M/s. Gamzen Plast Pvt Ltd, Model: Gamzen)*

| வ. எண் | வாகன எண் | வ. எண் | வாகன எண் | வ. எண் | வாகன எண் |
|---|---|---|---|---|---|
| 1 | TN 04 AE 1541 | 7 | TN 04 AF 5461 | 13 | TN 04 AF 9605 |
| 2 | TN 04 AE 1535 | 8 | TN 04 AF 0918 | 14 | TN 04 AF 0921 |
| 3 | TN 04 AF 0891 | 9 | TN 04 AF 0952 | 15 | TN 04 AF 5505 |
| 4 | TN 04 AF 9630 | 10 | TN 04 AF 9663 | 16 | TN 04 AF 0960 |
| 5 | TN 04 AE 1587 | 11 | TN 04 AF 9631 | 17 | TN 04 AF 0958 |
| 6 | TN 04 AF 5457 | 12 | TN 04 AF 5487 | | |

சக்கரதடை உபகரணங்களுக்கான *(Skid Steer Loader – Gamzen make)* இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலத்தில், ஒப்பந்ததாரர் உபகரணங்களை இயக்கி குறிப்பிட்ட நேரத்தில் பணிக்கு செல்லும் பொருட்டு இயக்குநர்களையும் (ஓட்டுநர்), அன்றாடம் முன்தடுப்பு மற்றும் வழக்கமான பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள திறமை வாய்ந்த பழுதாளர்களையும் நியமிக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த பராமரிப்பு காலத்தில் தேவைப்படும் உதிரி பாகங்கள், டயர்கள், பேட்டரி மற்றும் உயவு எண்ணெய் போன்றவற்றை வழங்க வேண்டும். திட்டமிடப்பட்ட பராமரிப்பு அட்டவணையின் படி, பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். விதிமுறைக்கு உட்பட்டு, எரிபொருள் (டீசல்) மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் வழங்கப்படும்.

அதன் அடிப்படையில், கடந்த ஆண்டு மின்னணு ஒப்பம் கோரப்பட்டு பெறப்பட்ட குறைந்த விலைப்புள்ளியின் அடிப்படையில், அதாவது ஒரு எண்ணிக்கையிலான சக்கரத்தடை வாகனத்திற்கு ஒரு நாளிற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான மொத்த மதிப்பீடு ரூ.4,2*00.80 (GST* உட்பட) என *17* எண்ணிக்கையில் சக்கரத்தடை உபகரணங்களை 3 மாத காலத்திற்கு (90 நாட்கள்) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.*64,27,224/-* என்ற தோராய மதிப்பீட்டில் மேலும் 3 மாதங்களுக்கு (90 நாட்கள்) கால நீட்டிப்பு செய்து வழங்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| பணியின் விவரம் | செலவுத் தொகை ஒரு உபகரணத்திற்கு ரூ. | 17 உபகரணங்களுக்கான மொத்த தொகை ரூ. 3 மாத காலத்திற்கு (90 நாட்கள்) |
|---|---|---|
| 17 எண்ணிக்கையில் சக்கரத்தடை *(Skid Steer Loader – Gamzen make)* உபகரணங்களை இயக்குதல் பணிக்காக நாளொன்றிற்கு, (8 மணி நேரம்) ஒரு உபகரணத்திற்கு ஒரு ஷிப்டிற்கு | 1,227.20 (Including GST) | 18,77,616/- |
| 17 எண்ணிக்கையில் *(Skid Steer Loader – Gamzen make)* சக்கரத்தடை உபகரணங்களை பராமரிப்பு கட்டணம் நாளொன்றிற்கு, ஒரு உபகரணத்திற்கு | 2.973.60 (Including GST) | 45,49,608/- |
| **மொத்தம் ரூ.** | **4,200.80** (Including GST) | **64,27,224/-** |

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், காலநீட்டிப்பு செய்யப்படும் காலத்திற்கு இயக்குதல் பணிக்கான செலவுத் தொகை ரூ.18,77,616/- மற்றும் பராமரிப்பு பணிக்கான செலவுத் தொகை ரூ.45,49,608/- ஆக மொத்தம் ரூ.64,27,224/- (GST 18% உட்பட) (ரூபாய் அறுபத்து நான்கு இலட்சத்து இருபத்தேழாயிரத்து இருநூற்று இருபத்து நான்கு மட்டும்) ஆனது இப்பணிக்கான மொத்த ஒப்பத் தொகையான ரூ.2,60,65,964/-ல் 25% க்கும் குறைவாக உள்ளதால் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகளின்படி (Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-2000) கால நீட்டிப்பு செய்து வழங்கலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், இப்பணிக்கான ஒப்பந்த காலம் 30.09.2023 அன்றுடன் முடிவடைய இருந்த நிலையில், வருகின்ற பருவமழை காலங்களில் Bobcat வகை உபகரணங்களின் பயன்பாடு அவசியமென்பதாலும், பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும், ஒப்ப விதிகளின் படியும் ஒப்பத் தொகையில் 25%க்கு மிகாமல் 01.10.2023 முதல் 29.12.2023 வரை 3 மாதங்களுக்கு (90 நாட்கள்) பணி மேற்கொள்ள மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர் நோக்கி கூடுதல் தலைமை செயலர்/ஆணையர்அவர்களின், 25.09.2023 நாளிட்ட ஆணை பெறப்பட்டு பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்படல் வேண்டும்..

இவ்வுபகரணங்களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பிரிவு குறியீட்டு எண் 40 – 41 – 10 மற்றும் கணக்கு குறியீட்டு எண் 230 – 80 – 03 – 00 என்ற தலைப்பின் கீழ் 2023 – 2024ஆம் நிதி ஆண்டிற்கு கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. 17 எண்ணிக்கையிலான சக்கர தடை உபகரணங்களின் (Skid Steer Loader – Gamzen make) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலம் 30.09.2023 உடன் முடிவடைய உள்ளதால், வருகின்ற பருவமழை காலங்களில் Bobcat வகை உபகரணங்களின் பயன்பாடு அவசியம் என்பதாலும், பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும் மற்றும் தூய்மை பணியில் ஏற்படும் சுணக்கத்தினை தவிர்க்கும் பொருட்டும் மீண்டும் ஓராண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மேற்கொள்ள தோராய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்வதற்கு ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டு தற்போது இப்பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர்கள். Gamzen Plast Pvt. Ltd., (Original Equipment Manufacturer) நிறுவனத்தாருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்ப நிபந்தனைகளின்படி தற்போது வழங்கப்பட்டு வரும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்ப தொகையில் 01.10.2023 முதல் 29.12.2023 வரை 3 மாத காலத்திற்கு (90 நாட்களுக்கு) ஒப்ப விதிகளின் படி ஒப்பத் தொகையில் 25%க்கு மிகாமல் ஏற்கனவே வழங்கப்பட்ட பணி ஆணைத் தொகைக்கு, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகளின்படி (Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-2000) மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர் நோக்கி காலநீட்டிப்பு செய்து பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
2. இனம் – 1 ஏற்பின், காலநீட்டிப்பு செய்யப்படும் 17 சக்கரதடை உபகரணங்களுக்கு (Skid Steer Loader – Gamzen make) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். Gamzen Plast Pvt. Ltd., (Original Equipment Manufacturer) நிறுவனத்தாருக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பின்வரும் தொகை விவரங்களை காலநீட்டிப்பு செய்யப்படும் காலங்களுக்கு நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

| பணியின் விவரம் | செலவுத் தொகை ரூ. ஒரு உபகரணத்திற்கு ரூ. | 17 உபகரணங்களுக்கான மொத்த தொகை ரூ. 3 மாத காலத்திற்கு (90 நாட்கள்) |
|---|---|---|
| 17 எண்ணிக்கையில் சக்கரத்தடை *(Skid Steer Loader - Gamzen make)* உபகரணங்களை இயக்குதல் பணிக்காக நாளொன்றிற்கு, (8 மணி நேரம்) ஒரு உபகரணத்திற்கு ஒரு ஷிப்டிற்கு | 1,227.20 (Including GST) | 18,77,616/- |
| 17 எண்ணிக்கையில் *(Skid Steer Loader - Gamzen make)* சக்கரத்தடை உபகரணங்களை பராமரிப்பு கட்டணம் நாளொன்றிற்கு, ஒரு உபகரணத்திற்கு. | 2.973.60 (Including GST) | 45,49,608/- |
| **மொத்தம் ரூ.** | **4,200.80** (Including GST) | **64,27,224/-** |

3. 17 சக்கரதடை உபகரணங்களுக்கு *(Skid Steer Loader - Gamzen make)* இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக ஒப்பந்ததாரர் திருவாளர்கள். *Gamzen Plast Pvt. Ltd., (Original Equipment Manufacturer)* நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்ட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக அனுமதிக்கப்பட்டுள்ள விலை விவரங்களின் அடிப்படையில் 3 மாத காலத்திற்கு (90 நாட்கள்) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கணக்கிடப்பட்டுள்ள தொகை ரூ.64,27,224/- (GST 18% உட்பட) (ரூபாய் அறுபத்து நான்கு இலட்சத்து இருபத்தேழாயிரத்து இருநூற்று இருபத்து நான்கு மட்டும்) செலவினத்தில் மேற்கொள்ளவும்,
4. இனம்1, 2 மற்றும் 3 ஏற்பின் திருவாளர்கள். *Gamzen Plast Pvt. Ltd., (Original Equipment Manufacturer)* நிறுவனத்தாருக்கு காலநீடிப்புக்கான பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
5. 3 மாத காலத்திற்கான (90 நாட்கள்) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவினத்தை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண். 40 - 41 - 10 மற்றும் கணக்கு குறியீட்டு எண். 230 - 80 - 03 - 00 என்ற தலைப்பின் 2023 - 2024 ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.100/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.255/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**இ.பொ.து.ந.எண்.எம்1/1510 /2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:609/2023** **பொருள் எண்.34**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட இடிபாடுகள் மற்றும் மரக்கழிவுகளை அகற்றுவதற்கான பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 42 எண்ணிக்கையிலான Bobcat வகை சக்கரத்தடை உபகரணங்களுக்கு (Skid Steer loaders-Bobcat make) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி ஓராண்டு காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வந்தது - இப்பணிக்கான ஒப்பந்த காலம் 30.09.2023 அன்றுடன் முடிவடைந்தது - 01.10.2023 முதல் 29.12.2023 வரை 90 நாட்களுக்கு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு காலநீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ளப்பட்டது - பின்னேற்பு அனுமதி வேண்டி குறிப்பு மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது - இவ்வுபகரணங்களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை ஓராண்டு காலத்திற்கு ரூ.6,57,86,242/- தோராய மதிப்பீட்டில் மின்னணு ஒப்பம் கோரி மேற்கொள்ள நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மண்டலம்-1, 2, 3, 7, 11, 12, 14 மற்றும் 15 ஆகியவற்றில் உள்ள கட்டுமான மற்றும் கட்டிட இடிபாடு கழிவுகளை அகற்றவும், மண்டலம்-4, 5, 6, 7, 8 ஆகியவற்றில் உள்ள மரக்கழிவுகளை அகற்றவும் மற்றும் அனைத்து மண்டலங்களிலும் சிறப்பு உபகரணங்கள் மூலம் சிறிய மற்றும் பெரிய கால்வாய்களிலிருந்து தாவரக்கழிவுகள் மற்றும் சேறு சகதிகள் போன்றவை அகற்றப்பட்டு கரை ஓரங்களில் குவித்து வைக்கப்பட்டதை அகற்றவும் 59 எண்ணிக்கையிலான சக்கரத்தடை *(Skid Steer loaders-Bobcat & Gamzen make)* உபகரணங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது.

மேலும், மண்டலம்-4, 5, 6, 7, 8, 9, 10 மற்றும் 13 ஆகியவற்றில் கட்டிட இடிபாட்டு கழிவுகளை அகற்றும் பணி தனியார் ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.*Premier precision Pvt ltd.* மூலம் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

இயந்திர பொறியியல் துறையின் மூலம் பராமரிக்கப்படும் 59 எண்ணிக்கையிலான சக்கர தடை வாகனங்களில் 42 எண்ணிக்கையிலான உபகரணங்கள் *Bobcat* வகையினையும் மற்றும் 17 எண்ணிக்கையிலான உபகரணங்கள் *Gamzen* வகையினையும் சார்ந்தது ஆகும். *Bobcat* வகையைச் சார்ந்த 42 எண்ணிக்கையிலான சக்கரத்தடை உபகரணங்கள் *(Skid Steer loaders)* 2008 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கொள்முதல் செய்யப்பட்டவை ஆகும். இவ்வகை உபகரணங்கள் ஹைட்ராலிக் முறையில் சிறப்பு தொழில்நுட்பத்துடன் இயங்கக் கூடிய உபகரணம் என்பதாலும் மற்றும் இவ்வுபகரணத்திற்குத் தேவையான உதிரி பாகங்கள் உபகரண உற்பத்தியாளர் மூலமே பெற இயலும் என்பதாலும் மற்றும் இவ்வுபகரணங்களை இயக்க சிறப்பு தொழில்நுட்ப பணியாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் இல்லாத நிலையிலும் இவ்வுபகரணத்திற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக தோராய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று தகுதியான உபகரண தயாரிப்பாளரின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்/நிறுவனம் மூலம் அல்லது தகுதி வாய்ந்த தனியார் நிறுவனம் மூலம் மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

அதன்படி, *Bobcat* வகையை சார்ந்த 42 எண்ணிக்கையிலான சக்கர தடை *(Skid Steer loaders)* உபகரணங்களின் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலம் 30.09.2023 அன்றுடன் முடிவடைந்த நிலையில், மேலும் 3 மாதங்களுக்கு (90 நாட்கள்) மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு காலநீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின், 25.09.2023 நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. இக்கால நீட்டிப்பிற்கான காலம் 29.12.2023 உடன் முடிவடைய உள்ளதால், இவ்வகை

உபகரணங்களின் அவசியத்தினை கருத்தில் கொண்டும் மற்றும் தூய்மை பணியில் ஏற்படும் சுணக்கத்தினை தவிர்க்கும் பொருட்டும் மீண்டும் ஓராண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மேற்கொள்ள மின்னணு ஒப்பம் கோருவது அத்தியாவசியமாகிறது.

42 எண்ணிக்கையிலான சக்கர தடை வாகனங்களின் *(Skid Steer loaders)* விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை - *I (Doosan* தயாரிப்பு *Bobcat* வகை )**

| வ. எண் | வாகன எண் | வ. எண் | வாகன எண் | வ. எண் | வாகன எண் |
|---|---|---|---|---|---|
| 1 | TN 22 CF 6982 | 16 | TN 04 AV 4465 | 31 | TN 22 CF 7092 |
| 2 | TN 22 CF 6943 | 17 | TN 22 CF 7090 | 32 | TN 22 CF 7087 |
| 3 | TN 22 CF 7014 | 18 | TN 22 CF 7097 | 33 | TN 22 CF 6949 |
| 4 | TN 22 CF 7018 | 19 | TN 22 CF 7126 | 34 | TN 22 CF 6941 |
| 5 | TN 22 CF 7031 | 20 | TN 04 AV 4457 | 35 | TN 22 CF 7132 |
| 6 | TN 22 CF 7032 | 21 | TN 04 AV 4447 | 36 | TN 22 CF 7049 |
| 7 | TN 22 CF 7040 | 22 | TN 22 CF 7053 | 37 | TN 22CF 7058 |
| 8 | TN 22 CF 7041 | 23 | TN 04 AC 9218 | 38 | TN 22CF 7009 |
| 9 | TN 04 AD 3647 | 24 | TN 04 AD 0187 | 39 | TN 04 AY 4496 |
| 10 | TN 04 AD 0221 | 25 | TN 04 AD 1580 | 40 | TN 22 CF 7095 |
| 11 | TN 22 CF 7004 | 26 | TN 04 AV 4460 | 41 | TN 22 CF 6970 |
| 12 | TN 22 CF 7030 | 27 | TN 04 AD 3677 | 42 | TN 04 AV 4448 |
| 13 | TN 04 AV 4423 | 28 | TN 04 AD 1586 | | |
| 14 | TN 04 AV 4403 | 29 | TN 22 CF 7066 | | |
| 15 | TN 22 CF 7079 | 30 | TN 22 CF 6976 | | |

சக்கரதடை உகரணங்களுக்கான *(Skid Steer loaders)* இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலத்தில், ஒப்பந்ததாரர் உபகரணங்களை இயக்கி குறிப்பிட்ட நேரத்தில் பணிக்கு செல்லும் பொருட்டு இயக்குநர்களையும் (ஓட்டுநர்), அன்றாடம் முன்தடுப்பு மற்றும் வழக்கமான பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள திறமை வாய்ந்த பழுதாளர்களையும் நியமிக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த பராமரிப்பு காலத்தில் தேவைப்படும் உதிரி பாகங்கள், டயர்கள், பேட்டரி மற்றும் உயவு எண்ணெய் போன்றவற்றை வழங்க வேண்டும். திட்டமிடப்பட்ட பராமரிப்பு அட்டவணையின் படி, பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். விதிமுறைக்கு உட்பட்டு, எரிபொருள் (டீசல்) மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் வழங்கப்படும்.

அதன் அடிப்படையில், கடந்த ஆண்டு (2022-2023) இப்பணிக்காக மின்னணு ஒப்பம் கோர தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையில், அதாவது ஒரு எண்ணிக்கையிலான சக்கரத்தடை வாகனத்திற்கு *(Skid Steer loaders)* ஒரு நாளிற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான மொத்த மதிப்பீடு ரூ.*4291.34 (GST* உட்பட) என *42* எண்ணிக்கையில் சக்கரத்தடை வாகனங்களை ஓராண்டு காலத்திற்கு (365 நாட்கள்) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.*6,57,86,242/-* என்ற தோராய மதிப்பீட்டுத் தொகையில் நிர்வாக அனுமதி பெற்று ஓராண்டு காலத்திற்கு பணி மேற்கொள்ள மின்னணு ஒப்பம் கோரப்பட்டது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| பணியின் விவரம் | செலவுத் தொகை நாளொன்றிற்கு ஒரு உபகரணத்திற்கு ரூ. | 42 உபகரணங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு (365 நாட்கள்) ரூ. |
|---|---|---|
| 42 எண்ணிக்கையில் சக்கரத்தடை *(Skid Steer Loader – Bobcat make)* உபகரணங்களை இயக்குதல் பணிக்காக நாளொன்றிற்கு, (8 மணி நேரம்) ஒரு உபகரணத்திற்கு ஒரு ஷிப்டிற்கு | 1292.88 (Including GST) | 1,98,19,850/- |
| 42 எண்ணிக்கையில் *(Skid Steer Loader – Bobcat make)* சக்கரத்தடை உபகரணங்களை பராமரிப்பு கட்டணம் நாளொன்றிற்கு, ஒரு உபகரணத்திற்கு. | 2998.46 (Including GST) | 4,59,66,392/- |
| **மொத்தம் ரூ.** | **4,291.34** (Including GST) | **6,57,86,242/-** |

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், ஓராண்டு காலத்திற்கு இயக்குதல் பணிக்கான செலவுத் தொகை ரூ.1,98,19,850/- மற்றும் பராமரிப்பு பணிக்கான செலவுத் தொகை ரூ.4,59,66,392/- ஆக மொத்தம் ரூ.6,57,86,242/- (GST 18% உட்பட) (ரூபாய் ஆறு கோடியே ஐம்பத்தேழு இலட்சத்து எண்பத்தாராயிரத்து இருநூற்று நாற்பத்து இரண்டு மட்டும்) ஆகும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வுபகரணங்களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பிரிவு குறியீட்டு எண் 40 – 41 – 10 மற்றும் கணக்கு குறியீட்டு எண் 230 – 80 – 03 – 00 என்ற தலைப்பின் கீழ் 2023 – 2024 ஆம் நிதி ஆண்டிற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. 42 எண்ணிக்கையில் சக்கரத்தடை வாகனங்களை (Bobcat வகை) ஓராண்டு காலத்திற்கு (365 நாட்கள்) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள தோராயமாக ரூ6,57,86,242/- (ரூபாய் ஆறு கோடியே ஐம்பத்தேழு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து இருநூற்று நாற்பத்து இரண்டு மட்டும்) (GST சேர்த்து) தோராய மதிப்பீட்டில் மின்னணு ஒப்பம் கோரி தகுதியான உபகரண தயாரிப்பாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் / நிறுவனம் மூலம் அல்லது தகுதி வாய்ந்த தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,

| பணியின் விவரம் | செலவுத் தொகை நாளொன்றிற்கு ஒரு உபகரணத்திற்கு ரூ. | 42 உபகரணங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு (365 நாட்கள்) ரூ. |
|---|---|---|
| 42 எண்ணிக்கையில் சக்கரத்தடை (Skid Steer Loader – Bobcat make) உபகரணங்களை இயக்குதல் பணிக்காக நாளொன்றிற்கு, (8 மணி நேரம்) ஒரு உபகரணத்திற்கு ஒரு ஷிப்டிற்கு | 1292.88 (Including .GST) | 1,98,19,850/- |
| 42 எண்ணிக்கையில் (Skid Steer Loader - Bobcat make) சக்கரத்தடை உபகரணங்களை பராமரிப்பு கட்டணம் நாளொன்றிற்கு, ஒரு உபகரணத்திற்கு. | 2998.46 (Including .GST) | 4,59,66,392/- |
| **மொத்தம் ரூ.** | **4,291.34** (Including .GST) | **6,57,86,242/-** |

2. ஒரு வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவினத்தை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண். 40 – 41 – 10 மற்றும் கணக்கு குறியீட்டு எண். 230 – 80 – 03 – 00 என்ற தலைப்பின் 2023 – 2024 ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.101/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.256/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**இ.பொ.து.ந.எண்.எம்1/1511 /2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:610/2023** **பொருள் எண்.35**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட இடிபாடுகள் மற்றும் மரக்கழிவுகளை அகற்றுவதற்கான பணியில் 17 எண்ணிக்கையிலான (Skid Steer Loader – Gamzen make) சக்கரத்தடை உபகரணங்களுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி ஓராண்டு காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வந்தது - ஒப்பந்த காலம் 30.09.2023 அன்றுடன் முடிவடைந்தது - 01.10.2023 முதல் 29.12.2023 வரை 90 நாட்களுக்கு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு காலநீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ளப்பட்டது - இவ்வுபகரணங்களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை ஓராண்டு காலத்திற்கு ரூ.2,66,27,764/- தோராய மதிப்பீட்டில் மின்னணு ஒப்பம் கோரி மேற்கொள்ள நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மண்டலம்-1,2,3,7,11,12,14 மற்றும் 15 ஆகியவற்றில் உள்ள கட்டுமான மற்றும் கட்டிட இடிபாடு கழிவுகளை அகற்றவும், மண்டலம்-*4, 5, 6, 7,* 8 ஆகியவற்றில் உள்ள மரக்கழிவுகளை அகற்றவும் மற்றும் அனைத்து மண்டலங்களிலும் சிறப்பு உபகரணங்கள் மூலம் சிறிய மற்றும் பெரிய கால்வாய்களிலிருந்து தாவரக் கழிவுகள் மற்றும் சேறு சகதிகள் போன்றவை அகற்றப்பட்டு கரை ஓரங்களில் குவித்து வைக்கப்பட்டதை அகற்றவும் 59 எண்ணிக்கையிலான சக்கரத்தடை *(Skid Steer loaders – Bobcat & Gamzen make)* உபகரணங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது.

மேலும், மண்டலம்-4,5,6,7,8,9,10 மற்றும் 13 ஆகியவற்றில் கட்டிட இடிபாட்டு கழிவுகளை அகற்றும் பணி தனியார் ஒப்பந்ததாரரான திருவாளர்கள். *Premier precision Pvt ltd.* மூலம் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

இயந்திர பொறியியல் துறையின் மூலம் பராமரிக்கப்படும் 59 எண்ணிக்கையிலான சக்கர தடை வாகனங்களில் *(Skid Steer Loader)* 42 எண்ணிக்கையிலான உபகரணங்கள் *Bobcat* வகையினையும் மற்றும் 17 எண்ணிக்கையிலான உபகரணங்கள் *Gamzen* வகையினையும் சார்ந்தது ஆகும். *Bobcat* வகையைச் சார்ந்த 42 எண்ணிக்கையிலான சக்கரத்தடை உபகரணங்கள் 2008 மற்றும் 2011 ஆண்டுகளில் கொள்முதல் செய்யப்பட்டவை ஆகும். இவ்வகை உபகரணங்கள் ஹைட்ராலிக் முறையில் சிறப்பு தொழில்நுட்பத்துடன் இயங்கக் கூடிய உபகரணம் என்பதாலும் மற்றும் இவ்வுபகரணத்திற்குத் தேவையான உதிரி பாகங்கள் உபகரண உற்பத்தியாளர் மூலமே பெற இயலும் என்பதாலும் மற்றும் இவ்வுபகரணங்களை இயக்க சிறப்பு தொழில்நுட்ப பணியாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் இல்லாத நிலையிலும் இவ்வுபகரணத்திற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக தோராய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று தகுதியான உபகரண தயாரிப்பாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் / நிறுவனம் மூலம் அல்லது தகுதி வாய்ந்த தனியார் நிறுவனம் மூலம் மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது .

அதன்படி *Gamzen* வகையை சார்ந்த 17 எண்ணிக்கையிலான சக்கர தடை *(Skid Steer Loader)* உபகரணங்களின் *(Make:M/s.Gamzen Plast Pvt Ltd, Model: Gamzen)* இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலம் 30.09.2023 அன்றுடன் முடிவடைந்த நிலையில், மேலும் 3 மாதங்களுக்கு (90 நாட்கள்) மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு காலநீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின், *25.09.2023* நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. இக்கால நீட்டிப்பிற்கான காலம் 29.12.2023 உடன் முடிவடைய உள்ளதால், இவ்வகை உபகரணங்களின் அவசியத்தினை கருத்தில் கொண்டும் மற்றும் தூய்மை பணியில் ஏற்படும் சுணக்கத்தினை தவிர்க்கும் பொருட்டும் மீண்டும் ஓராண்டு

காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள மின்னணு ஒப்பம் கோருவது அத்தியாவசியமாகிறது.

17 எண்ணிக்கையிலான சக்கர தடை *(Skid Steer Loader – Gamzen make)* வாகனங்களின் விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை - I** *(Make: M/s. Gamzen Plast Pvt Ltd, Model: Gamzen)*

| வ. எண் | வாகன எண் | வ. எண் | வாகன எண் | வ. எண் | வாகன எண் |
|---|---|---|---|---|---|
| 1 | TN 04 AE 1541 | 7 | TN 04 AF 5461 | 13 | TN 04 AF 9605 |
| 2 | TN 04 AE 1535 | 8 | TN 04 AF 0918 | 14 | TN 04 AF 0921 |
| 3 | TN 04 AF 0891 | 9 | TN 04 AF 0952 | 15 | TN 04 AF 5505 |
| 4 | TN 04 AF 9630 | 10 | TN 04 AF 9663 | 16 | TN 04 AF 0960 |
| 5 | TN 04 AE 1587 | 11 | TN 04 AF 9631 | 17 | TN 04 AF 0958 |
| 6 | TN 04 AF 5457 | 12 | TN 04 AF 5487 | | |

சக்கரதடை உபகரணங்களுக்கான *(Skid Steer Loader – Gamzen make)* இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலத்தில், ஒப்பந்ததாரர் உபகரணங்களை இயக்கி குறிப்பிட்ட நேரத்தில் பணிக்கு செல்லும் பொருட்டு இயக்குநர்களையும் (ஓட்டுநர்), அன்றாடம் முன்தடுப்பு மற்றும் வழக்கமான பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள திறமை வாய்ந்த பழுதாளர்களையும் நியமிக்க வேண்டும். ஒருங்கிணைந்த பராமரிப்பு காலத்தில் தேவைப்படும் உதிரி பாகங்கள், டயர்கள், பேட்டரி மற்றும் உயவு எண்ணெய் போன்றவற்றை வழங்க வேண்டும். திட்டமிடப்பட்ட பராமரிப்பு அட்டவணையின் படி, பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். விதிமுறைக்கு உட்பட்டு, எரிபொருள் (டீசல்) மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் வழங்கப்படும்.

அதன் அடிப்படையில், கடந்த ஆண்டு (2022-2023) இப்பணிக்காக மின்னணு ஒப்பம் கோர தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையில், அதாவது ஒரு எண்ணிக்கையிலான சக்கரத்தடை வாகனத்திற்கு ஒரு நாளிற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான மொத்த மதிப்பீடு ரூ.4,291.34 *(GST* உட்பட) என 17 எண்ணிக்கையில் சக்கரத்தடை உபகரணங்களை ஓராண்டு காலத்திற்கு (365 நாட்கள்) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.2,66,27,764/- என்ற தோராய மதிப்பீட்டுத் தொகையில் ஓராண்டு காலத்திற்கு பணி மேற்கொள்ள மின்னணு ஒப்பம் கோரப்பட்டது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| பணியின் விவரம் | செலவுத் தொகை நாளொன்றிற்கு ஒரு உபகரணத்திற்கு ரூ. | 17 உபகரணங்களுக்கான மொத்த தொகை ரூ. ஓராண்டு காலத்திற்கு (365 நாட்கள்) |
|---|---|---|
| 17 எண்ணிக்கையில் சக்கரத்தடை *(Skid Steer Loader – Gamzen make)* உபகரணங்களை இயக்குதல் பணிக்காக நாளொன்றிற்கு, (8 மணி நேரம்) ஒரு உபகரணத்திற்கு | 1,292.88 (Including GST) | 80,22,320/- |
| 17 எண்ணிக்கையில் *(Skid Steer Loader – Gamzen make)* சக்கரத்தடை உபகரணங்களை பராமரிப்பு கட்டணம் நாளொன்றிற்கு, ஒரு உபகரணத்திற்கு | 2.998.46 (Including GST) | 1,86,05,444/- |
| **மொத்தம் ரூ.** | **4,291.34** (Including GST) | **2,66,27,764/-** |

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், ஓராண்டு காலத்திற்கு இயக்குதல் பணிக்கான செலவுத் தொகை ரூ.80,22,320/- மற்றும் பராமரிப்பு பணிக்கான செலவுத் தொகை ரூ.1,86,05,444/- ஆக மொத்தம் ரூ.2,66,27,764/- *(GST 18%* உட்பட) (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்தாறு

இலட்சத்து இருபத்தேழாயிரத்து எழுநூற்று அறுபத்து நான்கு மட்டும்) ஆகும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வுபகரணங்களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பிரிவு குறியீட்டு எண். 40 – 41 – 10 மற்றும் கணக்கு குறியீட்டு எண். 230 – 80 – 03 – 00 என்ற தலைப்பின் கீழ் 2023 – 2024 ஆம் நிதி ஆண்டிற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. 17 எண்ணிக்கையிலான சக்கர தடை உபகரணங்களை *(Skid Steer Loader - Gamzen make)* ஓராண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள தோராயமாக ரூ.2,66,27,764/- (GST 18% உட்பட) (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்தாறு இலட்சத்து இருபத்தேழாயிரத்து எழுநூற்று அறுபத்து நான்கு மட்டும்) தோராய மதிப்பீட்டில் மின்னணு ஒப்பம் கோரி தகுதியான உபகரண தயாரிப்பாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்/ நிறுவனம் மூலம் அல்லது தகுதி வாய்ந்த தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,

| பணியின் விவரம் | செலவுத் தொகை நாளொன்றிற்கு ஒரு உபகரணத்திற்கு ரூ. | 17 உபகரணங்களுக்கான மொத்த தொகை ரூ. ஓராண்டு காலத்திற்கு (365 நாட்கள்) |
|---|---|---|
| 17 எண்ணிக்கையில் சக்கரத்தடை *(Skid Steer Loader - Gamzen make)* உபகரணங்களை இயக்குதல் பணிக்காக நாளொன்றிற்கு, (8 மணி நேரம்) ஒரு உபகரணத்திற்கு | 1,292.88 (Including GST) | 80,22,320/- |
| 17 எண்ணிக்கையில் *(Skid Steer Loader - Gamzen make)* சக்கரத்தடை உபகரணங்களை பராமரிப்பு கட்டணம் நாளொன்றிற்கு, ஒரு உபகரணத்திற்கு | 2.998.46 (Including GST) | 1,86,05,444/- |
| **மொத்தம் ரூ.** | **4,291.34** (Including GST) | **2,66,27,764/-** |

2. ஒரு வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவினத்தை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40 – 41 – 10 மற்றும் கணக்கு குறியீட்டு எண் 230 – 80 – 03 – 00 என்ற தலைப்பின் 2023 - 2024 ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் அனுமதி வேண்டியும், மன்றத்தின் பதிவிற்காவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.102/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

******

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/2948/2017**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:611/2023** **பொருள் எண்.36**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின்கீழ் கடற்கரை மணலை சுத்தம் செய்யும் பணிக்காக 8 எண்ணிக்கையில் டிராக்டர் மூலம் இயங்கக் கூடிய கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் (Tractor Driven Beach Cleaning Machine) இயந்திரங்கள் - 5 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்ய ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். Clean Tech Infra Pvt Ltd, நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டது - 6 உபகபரணங்கள் 10.12.2018 முதல் மற்றும் 2 உபகரணங்கள் 01.01.2019 முதல் பெறப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தி வரப்படுகிறது – 5 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலம் 09.12.2023 மற்றும் 31.12.2023 அன்றுடன் முடிவடைய உள்ளது - இவ்வுபகரணங்களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகளின்படி (Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-2000) – 31.03.2024 வரையிலான காலத்திற்கு (91 நாட்கள் முதல் 113 நாட்கள் வரை) காலநீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள தற்பொழுது வழங்கப்படும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு ஒப்ப தொகை அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.16,19,496/-க்கு நிர்வாக அனுமதி மற்றும் காலநீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள அனுமதி.**

இந்திய அரசு சுற்றுலாத்துறையின் வளர்ச்சியினை மேம்படுத்தும் விதமாக, ஸ்வதேஷ்தர்ஷன் திட்டத்தை அறிமுகப்படுத்தி கடற்கரை பகுதிகளை அழகுபடுத்த திட்டமிடப்பட்டது. இதன் ஒரு பகுதியாக, தமிழ்நாடு சுற்றுலா துறை மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட கடற்கரைப் பகுதிகளான மெரினா கடற்கரை மற்றும் பெசன்ட் நகர் கடற்கரையை அழகுபடுத்த ஸ்வதேஷ்தர்ஷன் திட்டத்தின் கீழ் ரூ.6.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்திற்கான அரசாணை எண்.*G.O.(Ms).No.190*, நாள்.31.08.2017 வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆணையில் மெரினா கடற்கரை மற்றும் பெசன்ட் நகர் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யத் தேவையான உபகரணங்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் கொள்முதல் செய்ய அறிவுறுத்தப்பட்டது.

இதன்படி, மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு மின்னனு ஒப்பம் கோரப்பட்டது. இவ்வொப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி அளித்திருந்த திருவாளர்கள். *Clean Tech Infra Pvt Ltd*, நிறுவனத்தாருக்கு மன்றத் தீர்மான எண்.424/2018, நாள்.06.06.2018-ன்படி, 8 எண்ணிக்கையில் டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரங்கள் *(Tractor Driven Beach Cleaning Machine) 5* வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்வதற்கு ஆணை பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது. திருவாளர். *Clean Tech Infra Pvt. Ltd*, நிறுவனத்தார், 8 எண்ணிக்கையில் டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரங்களை *(Tractor Driven Beach Cleaning Machine)* வழங்கி 5 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொண்டு வருகிறார்கள். இவ்வுபகரணங்களின் 5 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலம் 09.12.2023 (6 வாகனங்களுக்கு) மற்றும் 31.12.2023 (2 வாகனங்களுக்கு) அன்றுடன் முடிவடைகிறது.

| வ. எண் | இயந்திர எண் | 5 வருட ஒப்பந்த காலம் | இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி நிறைவுறும் நாள் | கால நீட்டிப்பு செய்ய வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| *1* | *TN04 A V 5690* | *10.12.2018 to 09.12.2023* | *09.12.2023* | 10.12.2023 முதல் 31.03.2024 வரை 113 நாட்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | TN04 A V 5626 | 10.12.2018 to 09.12.2023 | 09.12.2023 | 10.12.2023 முதல் 31.03.2024 வரை 113 நாட்கள் |
| 3 | TN04 A V 5683 | 10.12.2018 to 09.12.2023 | 09.12.2023 | 10.12.2023 முதல் 31.03.2024 வரை 113 நாட்கள் |
| 4 | TN04 A V 5681 | 10.12.2018 to 09.12.2023 | 09.12.2023 | 10.12.2023 முதல் 31.03.2024 வரை 113 நாட்கள் |
| 5 | TN04 A V 5616 | 10.12.2018 to 09.12.2023 | 09.12.2023 | 10.12.2023 முதல் 31.03.2024 வரை 113 நாட்கள் |
| 6 | TN04 A V 5623 | திடக்கழிவு மேலாண்மை துறை ஒப்ப விதிகளின்படி, மண்டலம் 14 மற்றும் 15ல் தூய்மை பணி மேற்கொண்டு வரும் திருவாளர்கள். Sumeet Urban Services (Chennai) Pvt. Ltd., நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்டுள்ளது. | | |
| 7 | TN04 A V 5632 | 01.01.2019 to 31.12.2023 | 31.12.2023 | 01.01.2024 முதல் 31.03.2024 வரை 91 நாட்கள் |
| 8 | TN04 A V 5676 | 01.01.2019 to 31.12.2023 | 31.12.2023 | 01.01.2024 முதல் 31.03.2024 வரை 91 நாட்கள் |

இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட கடற்கரைப் பகுதிகளான மெரினா மற்றும் பெசன்ட் நகர் கடற்கரை பகுதிகளில் பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளால் போடப்படும் குப்பை, காகிதம், குடிநீர் பாட்டில் உள்ளிட்ட கழிவுப் பொருட்களை டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரங்களைக் (Tractor Driven Beach Cleaning Machine) கொண்டு தினந்தோறும் அப்புறப்படுத்தி கடற்கரைப் பகுதியை அழகுபடுத்த வேண்டியது பெருநகர சென்னை மாநகராட்சியின் இன்றியமையாத பணியாகும். மேலும், அரசு விடுமுறை மற்றும் பண்டிகை காலங்களில் மேற்கண்ட கடற்கரைப் பகுதிகளுக்கு பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் கூடுவதால் ஏற்படும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றி கடற்கரையின் தூய்மையினை பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், தற்பொழுது பெருநகர சென்னை மாநகராட்சி வசம் உள்ள 8 எண்ணிக்கையிலான டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரங்களின் (Tractor Driven Beach Cleaning Machine) அவசியத்தை கருத்தில் கொண்டும் மீண்டும் 3 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள தோராய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்வதற்கு ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டு தற்போது இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர்கள். Clean Tech Infra Pvt Ltd, நிறுவனத்தாருக்கு தற்போது நடப்பாண்டில் வழங்கப்பட்டு வரும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பத் தொகையில் 31.03.2024 வரை கீழ்கண்ட அட்டவணை-Iல் குறிப்பிடப்பட்டுள்ளபடி காலநீட்டிப்பு செய்து வழங்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திருவாளர்கள். Clean Tech Infra Pvt Ltd, நிறுவனத்தாரின் 15.11.2023 நாளிட்ட கடிதத்தில், 8 எண்ணிக்கையில் டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரங்களின் (Tractor Driven Beach Cleaning Machine) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கு தற்போது பெற்றுவரும் விலை விவரத்தின் அடிப்படையில் ஒப்ப விதிகளுக்குட்பட்டு 31.03.2024 வரை பணி மேற்கொள்ள சம்மதித்துள்ளார்கள் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், மண்டலம் -14 மற்றும் -15க்குட்பட்ட கடற்கரை பகுதிகளை சுத்தம் செய்வதற்கு இவ்விரு மண்டலங்களில் தூய்மை பணி மேற்கொள்ள திருவாளர்கள். Sumeet Urban Services (Chennai) Pvt. Ltd., நிறுவனத்திற்கு திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் ஒப்பந்த பணி வழங்கியுள்ள நிலையில், ஒப்பந்த விதிகளின்படி மேற்கண்ட கடற்கரை மணற்பரப்பை சுத்தம் செய்யும் பணிக்காக திருவாளர்கள். Sumeet Urban Services (Chennai) Pvt. Ltd., நிறுவனத்திற்கு

1 டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரம் (*Tractor Driven Beach Cleaning Machine*) (*TN04 A V 5623*) ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், திடக்கழிவு மேலாண்மை துறை ஒப்ப விதிகளின்படி திருவாளர்கள். *Sumeet Urban Services (Chennai) Pvt. Ltd.*, நிறுவனத்தார் *TN04 A V 5623 (Tractor Driven Beach Cleaning Machine)* வாகனத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு (டீசல் உட்பட) பணி மேற்கொண்டு வருகிறார்கள்.

எனவே, மீதமுள்ள 7 எண்ணிக்கையில் டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரங்களின் (*Tractor Driven Beach Cleaning Machine*) ஒப்பந்தம் முடிவுறும் நாள் மற்றும் கால நீட்டிப்பு செய்ய வேண்டிய நாள் உள்ளிட்ட விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணை -*I*ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை *I***

| வ. எண் | இயந்திர எண் | 5 வருட ஒப்பந்த காலம் | இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி நிறைவுறும் நாள் | கால நீட்டிப்பு செய்ய வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| *1* | *TN04 A V 5690* | *10.12.2018 to 09.12.2023* | *09.12.2023* | 10.12.2023 முதல் 31.03.2024 வரை 113 நாட்கள் |
| *2* | *TN04 A V 5626* | *10.12.2018 to 09.12.2023* | *09.12.2023* | 10.12.2023 முதல் 31.03.2024 வரை 113 நாட்கள் |
| *3* | *TN04 A V 5683* | *10.12.2018 to 09.12.2023* | *09.12.2023* | 10.12.2023 முதல் 31.03.2024 வரை 113 நாட்கள் |
| *4* | *TN04 A V 5681* | *10.12.2018 to 09.12.2023* | *09.12.2023* | 10.12.2023 முதல் 31.03.2024 வரை 113 நாட்கள் |
| *5* | *TN04 A V 5616* | *10.12.2018 to 09.12.2023* | *09.12.2023* | 10.12.2023 முதல் 31.03.2024 வரை 113 நாட்கள் |
| *6* | *TN04 A V 5632* | *01.01.2019 to 31.12.2023* | *31.12.2023* | 01.01.2024 முதல் 31.03.2024 வரை 91 நாட்கள் |
| *7* | *TN04 A V 5676* | *01.01.2019 to 31.12.2023* | *31.12.2023* | 01.01.2024 முதல் 31.03.2024 வரை 91 நாட்கள் |

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், 7 எண்ணிக்கையிலான டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரங்களுக்கு (*Tractor Driven Beach Cleaning Machine*) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான நீட்டிக்கப்படும் ஒப்பந்த காலத்தில், தற்போது இப்பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். *Clean Tech Infra Pvt. Ltd*, நிறுவனத்தார் நடப்பில் உள்ள ஒப்ப விதிகளின்படி இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை மேற்கொள்ள வேண்டும்.

அதன் அடிப்படையில், தற்போது நடப்பாண்டில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு வழங்கப்பட்டு வரும் இறுதி ஒப்பத்தொகையின் அடிப்படையில், 7 எண்ணிக்கையிலான டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரத்திற்கு (*Tractor Driven Beach Cleaning Machine*) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 31.03.2024 வரையிலான கால நீட்டிப்பு நாட்களுக்கு (91 நாட்கள் முதல் 113 நாட்கள் வரை) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.16,19,496/- என்ற தோராய மதிப்பீட்டில் நடப்பு ஒப்பந்த காலத்தினை கால நீட்டிப்பு செய்து வழங்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதன் விவரம் பின்வரும் அட்டவணை -*II*ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>அட்டவணை -*II*</u>**

| பணியின் விவரம் | நடப்பு ஒப்ப தொகை (5 ஆம் ஆண்டிற்கான) நாளொன்றிற்கு ஒரு உபகரணத்திற்கு ரூ. *(Including.GST)* | 5 உபகரணங்களுக்கு 113 நாட்களுக்கு மொத்த தொகை ரூ. *(Including.GST)* | 2 உபகரணத்திற்கு 91 நாட்களுக்கு மொத்த தொகை ரூ. *(Including.GST)* | 7 உபகரணங்களுக்கான மொத்த தொகை *(Including.GST)* |
|---|---|---|---|---|
| 7 எண்ணிக்கையிலான மணல் ஜலிக்கும் இயந்திரங்களுக்கு *(Tractor Driven Beach Cleaning Machine)* இயக்குதல் பணிக்காக நாளொன்றிற்கு, (8 மணி நேரம்) ஒரு உபகரணத்திற்கு | *968/-* (ஒரு மணி நேரத்திற்கு ரூ.121/- வீதம் 8 மணி நேரத்திற்கு - *121 x 8)* | 5,46,920/- (968 x 5 x 113) | 1,76,176/- (968 x 2 x 91) | 7,23,096/- |
| 7 எண்ணிக்கையிலான மணல் ஜலிக்கும் இயந்திரங்களுக்கு *(Tractor Driven Beach Cleaning Machine)* பராமரிப்பு பணிக்காக நாளொன்றிற்கு, (8 மணி நேரம்) ஒரு உபகரணத்திற்கு. | *1200/-* | 6,78,000/- (1200 x 5 x 113) | 2,18,400/- (1200 x 2 x 91) | 8,96,400/- |
| **மொத்தம் ரூ.** | **2,168/-** | **12,24,920/-** | **3,94,576/-** | **16,19,496/-** |

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், 7 எண்ணிக்கையிலான மணல் ஜலிக்கும் இயந்திரங்களுக்கு *(Tractor Driven Beach Cleaning Machine)* காலநீட்டிப்பு செய்யப்படும் காலத்திற்கு இயக்குதல் பணிக்கான செலவுத் தொகை ரூ.7,23,096/- மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவுத் தொகை ரூ.8,96,400/- ஆக மொத்தம் ரூ.16,19,496/- *(GST 18%* உட்பட) (ரூபாய் பதினாறு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நானூற்று தொண்ணூற்று ஆறு மட்டும்) (மொத்த ஒப்ப தொகையில் 6.77% மட்டுமே) ஆனது இப்பணிக்கான 5 வருட ஒப்பந்த காலத்திற்கு 8 வாகனங்களுக்கான மொத்த ஒப்பத் தொகையான ரூ.2,73,25,360/-ல் கால நீட்டிப்பு செய்யப்படும் 7 வாகனங்களுக்கான ஒப்ப தொகையான ரூ.2,39,09,690/-ல் 25%க்கும் குறைவாக உள்ளதால் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகளின்படி *(Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-20*00) கால நீட்டிப்பு செய்து வழங்கலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஆகையால், தற்போது இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு ஒப்பந்தத்தில் உள்ள 7 எண்ணிக்கையிலான டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரங்களுக்கு *(Tractor Driven Beach Cleaning Machine)* இப்பணிக்கான ஒப்பந்த காலம் 09.12.2023 மற்றும் 31.12.2023 அன்றுடன் முடிவடைய உள்ள நிலையில், வருகின்ற பண்டிகை மற்றும் அரசு விடுமுறைக்காலங்களில் இவ்வியந்திரங்களின் பயன்பாடு அவசியமென்பதாலும், பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும், ஒப்ப விதிகளின் படியும் ஒப்பத் தொகையில் 25%க்கு மிகாமல் 10.12.2023 முதல் 31.03.2024 வரை மற்றும் 01.01.2024 முதல் 31.03.2024 வரை (91 நாட்கள் முதல் 113 நாட்கள் வரை) அல்லது இப்பணியினை மூன்றாண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான தோராய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று ஒப்பம் கோரி பணி ஆணை வழங்கும் நாள் வரை பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வுபகரணங்களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பிரிவு குறியீட்டு எண். 40 - *41 - 10* மற்றும் கணக்கு குறியீட்டு எண். *230 - 80 - 03 - 00* என்ற தலைப்பின் கீழ் *2023-2024*ஆம் நிதி ஆண்டிற்கு கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 8 எண்ணிக்கையிலான டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரங்களில் *(Tractor Driven Beach Cleaning Machine)* திடக்கழிவு மேலாண்மை துறை ஒப்பந்தம் மூலம் மண்டலம்-14 மற்றும் 15ல் தூய்மை பணி மேற்கொண்டு வரும் தனியார் நிறுவனமான திருவாளர்கள். Sumeet Urban Services (Chennai) Pvt. Ltd., நிறுவனத்திற்கு ஒப்ப விதிகளின்படி மண்டலம் 14 மற்றும் 15க்குட்பட்ட கடற்கரையை சுத்தம் செய்ய ஒப்படைக்கப்பட்ட ஒரு மணல் ஜலிக்கும் இயந்திரம் போக மீதமுள்ள 7 எண்ணிக்கையிலான டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரங்களுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலம் 09.12.2023 மற்றும் 31.12.2023 உடன் முடிவடைய உள்ளதால், பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட கடற்கரைப் பகுதிகளான மெரினா மற்றும் பெசன்ட் நகர் கடற்கரை பகுதிகளில் பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளால் போடப்படும் குப்பை, காகிதம், குடிநீர் பாட்டில் உள்ளிட்ட கழிவுப் பொருட்களை டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரங்களைக் *(Tractor Driven Beach Cleaning Machine)* கொண்டு தினந்தோறும் அப்புறப்படுத்தி கடற்கரைப் பகுதியை சுத்தம் செய்வது அவசியமென்பதாலும், பணியின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டும் புதியதாக மூன்றாண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள தோராய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்வதற்கு ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டும் இப்பணிக்கான மொத்த ஒப்பத் தொகையான ரூ.2,39,09,690/-ல் 25% க்கும் குறைவாக உள்ளதாலும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகளின்படி *(Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-2000)* தற்போது இப்பணி மேற்கொண்டு வரும் திருவாளர்கள். *Clean Tech Infra Pvt. Ltd.,* நிறுவனத்தாருக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்ப தொகையில் 10.12.2023 முதல் 31.03.2024 வரை மற்றும் 01.01.2024 முதல் 31.03.2024 வரை (91 நாட்கள் முதல் 113 நாட்கள் வரை) அல்லது இப்பணியினை மூன்றாண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான தோராய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று ஒப்பம் கோரி பணி ஆணை வழங்கும் நாள் வரை பணி மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி பெற்று காலநீட்டிப்பு செய்து பணி மேற்கொள்வதற்கு ஆணை வேண்டியும்,

2. இனம் – 1 ஏற்பின், 7 எண்ணிக்கையிலான டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரங்களுக்கு *(Tractor Driven Beach Cleaning Machine)* தற்பொழுது இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். *Clean Tech Infra Pvt. Ltd.,* நிறுவனத்தாருக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் உள்ள இறுதி ஆண்டு ஒப்ப தொகை விவரங்களை கால நீட்டிப்பு செய்யப்படும் காலங்களுக்கு நடைமுறைப்படுத்தி பட்டி தீர்வு செய்யவும்,

| பணியின் விவரம் | நடப்பு ஒப்ப தொகை (5ஆம் ஆண்டிற்கான) நாளொன்றிற்கு ஒரு உபகரணத்திற்கு ரூ. *(Including GST)* | 5 உபகரணங்களுக்கு 113 நாட்களுக்கு மொத்த தொகை ரூ. *(Including GST)* | 2 உபகரணத்திற்கு 91 நாட்களுக்கு மொத்த தொகை ரூ. *(Including GST)* | 7 உபகரணங்களுக்கான மொத்த தொகை *(Including GST)* |
|---|---|---|---|---|
| 7 எண்ணிக்கையிலான மணல் ஜலிக்கும் இயந்திரங்களுக்கு (*Tractor Driven Beach Cleaning Machine*) இயக்குதல் பணிக்காக நாளொன்றிற்கு, (8 மணி நேரம்) ஒரு உபகரணத்திற்கு | *968/-* (ஒரு மணி நேரத்திற்கு ரூ.121/- வீதம் 8 மணி நேரத்திற்கு - *121 x 8*) | *5,46,920/- (968 x 5 x 113)* | *1,76,176/- (968 x 2 x 91)* | *7,23,096/-* |
| 7 எண்ணிக்கையிலான மணல் ஜலிக்கும் இயந்திரங்களுக்கு (*Tractor Driven Beach Cleaning Machine*) பராமரிப்பு பணிக்காக நாளொன்றிற்கு, (8 மணி நேரம்) ஒரு உபகரணத்திற்கு | *1200/-* | *6,78,000/- (1200 x 5 x 113)* | *2,18,400/- (1200 x 2 x 91)* | *8,96,400/-* |
| மொத்தம் ரூ. | *2,168/-* | *12,24,920/-* | *3,94,576/-* | *16,19,496/-* |

3. 7 எண்ணிக்கையிலான டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரங்களுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக ஒப்பந்ததாரர் திருவாளர்கள். *Clean Tech Infra Pvt. Ltd.,* நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்ட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக அனுமதிக்கப்பட்டுள்ள விலை விவரங்களின் அடிப்படையில் 10.12.2023 முதல் *31*.03.2024 வரை மற்றும் 01.01.2024 முதல் 31.03.2024 வரை (91 நாட்கள் முதல் 113 நாட்கள் வரை) கால நீட்டிப்பு செய்து இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கணக்கிடப்பட்டுள்ள தொகை ரூ.16,19,496/- (*GST 18%* உட்பட) (ரூபாய் பதினாறு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நானூற்று தொண்ணூற்று ஆறு மட்டும்) செலவினத்தில் மேற்கொள்ளவும்,
4. இப்பணிக்கான ஒப்பத் தொகை ரூ.16,19,496/-யில் 2% தொகையான ரூ.32,500/-யினை பாதுகாப்புத் தொகையாக பெற்றுக் கொண்டு உடன்படிக்கை மேற்கொள்ளவும்,
5. கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளும் காலத்திற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவினத்தை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண்.*40 - 41* - 10 மற்றும் கணக்கு குறியீட்டு எண் *230 - 80 - 03 - 00* என்ற தலைப்பின் 2023 - *2024* ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.103/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.257/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**பே.சா.து.ந.க.எண்.பி4/5743/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:612/2023** **பொருள் எண்.37**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை - 2023-24 Sports Development Authority of Tamil Nadu (Government of Tamil Nadu(தமிழ்நாடு அரசு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்)- சென்னை பார்முலா பந்தயச் சுற்றின் திருவிழாவை சென்னையில் நடத்துவதை முன்னிட்டு மேற்கொள்ளப்படவுள்ள போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகளுடன் சாலையை அகழ்ந்தெடுத்து பேவர் ஃபினிஷர் மூலம் டிபிஎம்(DBM) மற்றும் பிசி(BC) உடன் சாலையை மறு சீரமைக்கும் பணிக்கு 4 சிப்பங்களாக ஒப்பம் கோரப்பட்டது - பணியின் அவசரம் கருதி குறைந்த விலைபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை வழங்க ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி.**

*Youth Welfare and Sports Development (S2) Department: G.O.No:70,* நாள்: *06.10.2023*ன் படி *(Government of Tamil Nadu)* (தமிழ்நாடு அரசு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்) திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சென்னை பார்முலா ரேசிங் சர்க்யூட்டின் இந்திய பந்தய விழாவை சென்னையில் 2023 டிசம்பரில் நடத்துவதற்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள *G.O* குறிப்பின்படி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் *(SDAT)* இந்தியாவிலேயே முதன்முதலாக ஸ்ட்ரீட் நைட் ஃபார்முலா 4 பந்தயப் போட்டியை நடத்துகிறது. அதாவது “சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்” தீவுத்திடலில் இருந்து கொடிமரச் சாலை, அண்ணா சாலை கொடிமரச்சாலையிலிருந்து சுவாமி சிவானந்தா சாலை வரை) சுவாமி சிவானந்தா சாலை, நேப்பியர் பாலம் வழியாக மீண்டும் தீவுத்திடலை அடையும் வகையில் இப்போட்டி நடத்தப்படுகிறது.

இந்திய பந்தய விழா மற்றும் சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட் நடத்துவது பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் ஆட்டோமொபைல் துறையை மேம்படுத்தவும் சாலை பாதுகாப்பு கலாச்சாரத்தை ஊக்குவிக்கவும், சமூக ஈடுபாடு மற்றும் தேசிய பெருமையை வளர்க்கவும் இளைஞர்களின் திறமைகளை வளர்க்கவும், உள்கட்டமைப்பு மேம்பாடுகளை மேம்படுத்துவதற்கும் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் சர்வதேச அரங்கில் தமிழ்நாட்டின் அடையாளத்தை ஊக்குவிக்கவும் உதவுகிறது.

தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தின் உறுப்பினர் முதன்மை செயலாளரின் முன்மொழிவை ஏற்று டிசம்பரில் நடைபெறவுள்ள சென்னை ஃபார்முலா பந்தய சுற்று இந்திய பந்தய விழாவை நடத்துவதற்கு ரூ.40.00 கோடிக்கு அனுமதி வழங்க அரசு கவனமாக ஆய்வு செய்த பின்னர் ஒப்புதல் அளித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த பணிக்கு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ரூ.6.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுவாமி சிவானந்தா சாலை, காமாராஜ் சாலை (நேப்பியர் பாலம் முதல் தீவுத்திடல் வரை) கொடிமரச்சாலை, அண்ணாசாலை ஆகியவற்றில் சாலைகள் மற்றும் நடைபாதை மாற்றியமைத்தல், சாலை தடுப்பான் அகற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள கள ஆய்வு செய்து தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையான ரூ.7.40 கோடிக்கு கூடுதல் தலைமை செயலாளர்/ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி கீழ்கண்டவாறு பெறப்பட்டது. மேலும் இப்பணிக்கான கூடுதல் தொகை குறித்து முதன்மை செயலாளர் (தமிழ்நாடு விளையாட்டு ஆணையம்) அவர்களுக்கு 08.11.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

| வ. எண் | சாலையின் பெயர்/இடம் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 1 | நேப்பியர் பாலம் (வார் மெமோரியல் சாலை சந்திப்பு முதல் சுவாமி சிவானந்தா சாலை சந்திப்பு வரை) (Ch 650-1375M) மண்டலம்-9 | சென்னை பார்முலா பந்தயச் சுற்றின் திருவிழாவை சென்னையில் நடத்துவதை முன்னிட்டு மேற்கொள்ளப்படவுள்ள போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகளுடன் சாலையை அகழ்ந்தெடுத்து பேவர் ஃபினிஷர் மூலம் டிபிஎம் மற்றும் பிசியுடன் சாலையை மறு சீரமைக்கும் பணி | 14400000.00 |
| 2 | சுவாமி சிவானந்தா சாலை (நேப்பியர் பாலம் சாலை சந்திப்பு முதல் அண்ணா சாலை சந்திப்பு வரை) (Ch 1375 - 2550) மண்டலம்-5 & 9 | | 16500000.00 |
| 3 | அண்ணா சாலை (சுவாமி சிவானந்தா சாலை சந்திப்பு முதல் கொடிமரச்சாலை வரை) (Ch 2550-3705) மண்டலம்- 9 | | 19200000.00 |
| 4 | கொடிமரச்சாலை மற்றும் தீவுத்திடல், மண்டலம்- 5 | | 23900000.00 |
| | | | **7,40,00,000.00** |

அரசாணை எண்-70ன் படி (Government of Tamil Nadu) (தமிழ்நாடு அரசு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்) மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு ஒப்பம், "இரண்டு உறைகள்" என்ற முறையில் ஒப்பம் இறுதி நாள் 17.11.2023 என ஒப்ப அறிவிப்பு தமிழ் நாளிதழ் "இந்து" மற்றும் ஆங்கில நாளிதழ் "Times of India" நாளிட்ட நாளிதழில், 11/11/2023 அன்று செய்தி மலரில் பிரசுரிக்கப்பட்டது. '

ஒப்ப நாளான 17.11.2023 அன்று ஒப்பம் திறக்கப்பட்டு, தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு 18.11.2023 அன்று தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணங்கள் திறக்கப்பட்டு, தேர்வு செய்யப்பட்டார்கள். குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:'

**(அட்டவணை-I)**

| S. No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | Zone (4) | No.of Bidder Participated (5) | Name of the Bidder (L1) (6) | Work Value Including GST 18% (Rs.) (7) | Quoted % (8) | Quoted Amount (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B4/5743/2023 | 1 | 5 | 3 | T.M.Subramaniam And Co | 13896023.33 | (+)10.00% | 15285625.67 |
| 2 | B4/5743/2023 | 2 | 5 & 9 | 3 | Ksm Construction Private Limited | 15906675.90 | (+)9.90% | 17481436.82 |
| 3 | B4/5743/2023 | 3 | 5 & 9 | 3 | Rvs Constructions | 18522108.88 | (+)9.95% | 20365058.72 |
| 4 | B4/5743/2023 | 4 | 5 | 3 | Menakaa And Co | 23051318.31 | (+)10.00% | 25356450.14 |

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பப் புள்ளியானது 2023-2024ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு, குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த ஒப்பந்ததாரர்களிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். விலைக்குறைப்புக்கான ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

**(அட்டவணை-II)**

| S. No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | Zone (4) | No.of participants (5) | Name of the Bidder (L1) (6) | Work Value Including GST 18% (7) | Quoted % (8) | Offered After 1st Negotiation (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B4/5743/2023 | 1 | 5 | 3 | T.M.Subramaniam And Co | 13896023.33 | (+)10.00% | (+)6.73% |
| 2 | B4/5743/2023 | 2 | 5 & 9 | 3 | Ksm Construction Private Limited | 15906675.90 | (+)9.90% | (+)6.72% |
| 3 | B4/5743/2023 | 3 | 5 & 9 | 3 | Rvs Constructions | 18522108.88 | (+)9.95% | (+)6.75% |
| 4 | B4/5743/2023 | 4 | 5 | 3 | Menakaa And Co | 23051318.31 | (+)10.00% | (+)6.74% |

இப்பணிகள் யாவும் 07.12.2023க்குள் முடிக்க அவசியமாகிறது. இப்பணிகள் பகல் மற்றும் இரவு என இருவேளைகளிலும் ஒப்பந்ததாரர்களால் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படுதல் வேண்டும். இத்திட்டம் *Iconic Project* என்பதாலும் இதற்கான விவரகுறிப்புகள் *(Specifications)* சிறப்பு தன்மை வாய்ந்ததாலும் ஒப்பந்ததாரர்கள் பேச்சுவார்த்தைக்குபின் அளித்துள்ள ஒப்ப சதவீதமானது ஏற்புடையதாக கருதலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, இந்த ஒப்பங்கள் சம்மந்தமாக கீழ்க்காணும் விவரங்கள் ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னனு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையில் உள்ளது.

2) மேலும் ஒப்பந்ததாரர்கள் தங்கள் விலைக்குறைப்பு கடிதத்தில், மூலப்பொருள்கள் விலை ஏற்றம், தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, மற்றும் போக்குவரத்து வாகன செலவு மற்றும் சுங்க சாலை கட்டணம் உயர்வினை கருத்தில் கொண்டு பணிகள் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த விலை விகிதம் அளித்த மேற்கண்ட ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை வழங்க *20.11.2023*, அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கி உள்ளது. அதன் விவரம் அட்டவணை -3ல் பின்வருமாறு.

**அட்டவணை - III**

| S. No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | Zone (4) | No.of Bidder Participated (5) | Name of the Bidder (L1) (6) | Quoted % (7) | Offered 1st Negotiation (8) | After Negotiation amt (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B4/5743/2023 | 1 | 5 | 3 | T.M.Subramaniam And Co | (+)10.00% | (+)6.73% | 14831225.70 |
| 2 | B4/5743/2023 | 2 | 5 & 9 | 3 | Ksm Construction Private Limited | (+)9.90% | (+)6.72% | 16975604.52 |
| 3 | B4/5743/2023 | 3 | 5 & 9 | 3 | Rvs Constructions | (+)9.95% | (+)6.75% | 19772351.23 |
| 4 | B4/5743/2023 | 4 | 5 | 3 | Menakaa And Co | (+)10.00% | (+)6.74% | 24604977.16 |
| | | | | | | | | **7,61,84,158.61** |

எனவே,

1) குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு மேற்கண்ட அட்டவணை-3 மற்றும் கலம் எண்-8ல் உள்ள ஒப்பப்புள்ளி சதவிகிதம் மற்றும் கலம் எண்-9ல் உள்ள ஒப்பத் தொகைக்கு (18% GST வரி சேர்த்து) பணியினை வழங்கியமைக்கும்,

2) மேற்காணும் பணிகளுக்கான நிதியினை தமிழ்நாடு அரசாணை எண்: 70, நாள்: 06-10-2023ல் குறிப்பிட்டுள்ளவாறு பெருநகர சென்னை மாநகராட்சி நிதியின் கீழ் ஒப்பந்ததாரர்களுக்கு பட்டி தீர்வு செய்யவும் ,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.202/2023, நாள்.23.11.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.244/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.மு.உ.து.ந.க.எண்.எல்இ 6/2569/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:613/2023** **பொருள் எண்.38**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் – 8, பகுதி – 23, (பழைய கோட்டம் – 107) புதிய கோட்டம் - 108ல் மேயர் இராமநாதன் சாலையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கட்டிடத்தின் ஒரு பகுதியினை திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்க நிறுவனத்தின்கீழ் செயல்பட்டு வரும் சேத்துப்பட்டு – 1 (MC011) நியாய விலைக் கடைக்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி.**

மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் - 8 அவர்களின் 30.10.2023 நாளிட்ட கடிதத்தில், மண்டலம் - 8, பகுதி - 23, (பழைய கோட்டம் - 107) புதிய கோட்டம் - 108ல் வெங்கடாசலபதி தெரு, செனாய் நகர், சென்னை - 30 சென்னை மாநகராட்சி கட்டிடத்தில் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்க நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் சேத்துப்பட்டு - 1 (MC011) நியாயவிலை கடையினை சேத்துப்பட்டு மேயர் இராமநாதன் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிடத்தில் இடம் மாற்றம் செய்ய இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் அவர்களால் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு 22.08.2023 அன்று கடிதம் பெறப்பட்டது.

சேத்துப்பட்டு தொகுதி மாமன்ற உறுப்பினர் திரு.எல்.சுந்தர்ராஜன், 108வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதிக்குட்பட்ட மண்டலம் - 8, பகுதி - 23, கோட்டம் - 108க்குட்பட்ட லோகம்மாள் தெரு, ஜகன்நாதபுரம், லோகையா தெரு, முருகேசன் தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள தெருக்களில் வசித்து வரும் பொதுமக்கள் (குடும்ப அட்டைதாரர்கள்) தங்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதற்கு சேத்துப்பட்டு செனாய்நகர் வெங்கடாசலபதி தெருவில் இயங்கிவரும் நியாய விலைக் கடைக்குச் சென்று வர ஏறக்குறைய 5 கி.மீ. தூரம் மற்றும் போதிய போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் பொதுமக்களின் சிரமத்தைக் குறைப்பதற்கு மேயர் இராமநாதன் சாலையில் கோட்டம் - 108க்குட்பட்ட சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கட்டிடத்தின் ஒரு பகுதியை (புதியதாக கட்டப்பட்டுள்ள இடத்தினை) நியாயவிலை கடை இயங்குவதற்கு ஒதுக்கீடு செய்யுமாறு 108வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் கடிதம் வாயிலாக கேட்டுக்கொண்டார்.

மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் - 8 அவர்களின்25.09.2023 நாளிட்ட குறிப்பின்படி, இக்கட்டிடமானது 2022 - 23 ஆம் ஆண்டு மாநகராட்சி நிதியிலிருந்து 261 சதுர அடியில் G-1 Sheet தரைதளம் மட்டும் கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தின் ஒரு பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தினை திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் சேத்துப்பட்டு - 1 (MC011) நியாயவிலைக் கடைக்கு பெருநகர சென்னை மாநகராட்சி விதிகளின்படி, ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் இக்கட்டிடத்திற்கு வாடகை 1 சதுர அடிக்கு ரூ.5/- வீதம் 261 சதுர அடிக்கு ரூ.1305/- நிர்ணயம் செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மன்றத் தீர்மான எண்.689/2013 நாள்.31.10.2013-ன்படி மக்கள் நலன் கருதி வியாபார நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலை கடைக்கு மாத வாடகை சதுர அடிக்கு ரூ.5/- என்று நிர்ணயம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளபடி, இப்பொருளில் கண்டுள்ள கடைக்கு நிர்ணயம் செய்யவும், இனிவரும் காலங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலைகடைகளுக்கும் மற்றும் கூட்டுறவு நியாய விலை கடைகளுக்கும் மாத வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி கோரும் கோப்புகளில் சதுர அடிக்கு ரூ.5/- என்றே நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற

நிபந்தனையுடனும் பெரும்பான்மை மன்ற உறுப்பினர்களின் கருத்தின் அடிப்படையிலும் அதற்கு மன்றம் அனுமதி அளித்துள்ளது.

எனவே, மண்டலம் - 8, பகுதி - 23, (பழைய கோட்டம் - 107) புதிய கோட்டம் - 108ல் மேயர் இராமநாதன் சாலையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கட்டிடத்தின் ஒரு பகுதியினை திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்க நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் சேத்துப்பட்டு - 1 (MC011) நியாயவிலைக் கடைக்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பரிந்துரைக்கப்படுகிறது.

1. மண்டலம் - 8, பகுதி - 23, (பழைய கோட்டம் - 107) புதிய கோட்டம் - 108ல் மேயர் இராமநாதன் சாலையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கட்டிடத்தின் ஒரு பகுதி 261 சதுர அடி பரப்பளவுள்ள கட்டிடத்திற்கு ஒரு சதுர அடி ரூ. 5/- வீதம், மாத வாடகை ரூ.1305/- மற்றும் 12 மாத வாடகை முன்பணம் ரூ.15,660/- ஆக செலுத்த வேண்டும் என்றும்,
2. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் 15% உயர்த்தப்படும் என்றும்,
3. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில்,

மேற்படி கட்டிடத்தை திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்க நிறுவனத்தின்கீழ் இயங்கும் நியாயவிலைக் கடைக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள, மாத வாடகையின் அடிப்படையில் அவசர அவசியம் கருதி ஒதுக்கீடு செய்ய, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.260/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண். CMBFS/6994/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:614/2023** **பொருள் எண்.39**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – பெருநகர சென்னை மாநகராட்சியில் வடக்கு வட்டாரத்தில் உள்ள 125 பள்ளிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகள், அரசு பள்ளிகள் மற்றும் ஆதிதிராவிடர் தொடக்க பள்ளிகள்) பயிலும் 21,209 மாணவ, மாணவியருக்கு காலை உணவு திட்டத்தினை வெளிநிறுவனம் மூலம் ஓராண்டு காலத்திற்கு ஒப்பம் கோரி பணி மேற்கொள்ள அனுமதி.**

அரசாணை (நிலை) எண்.43, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள்.27.07.2022ன்படி, முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தில் பயன்பெறும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் 1, 3, 4 மற்றும் 5 ஆகிய நான்கு மண்டலங்களில் சத்துணவு துறையின் கீழ் இயங்கும் மொத்த பள்ளிகளில் முதற்கட்டமாக 37 தொடக்க பள்ளிகள் 5941 மாணவ/ மாணவியர்களுக்கு 6 மைய சமையல் கூடங்களிலிருந்து காலை உணவானது 16.09.2022 முதல் சமைக்கப்பட்டு வழங்கப்பட்டது. பின்னர் 37 பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களிடம் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை பெறப்பட்டு, மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப காலை உணவு சமைக்கப்பட்டு வழங்கப்பட்டும் வந்தது.

அரசாணை (நிலை) எண்1, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்(சந4-1) துறை, நாள்.13.01.2023ன்படி, மண்டலம்-1ல் உள்ள ஆல் இந்தியா ரேடியோ நகர் (மேற்கு) எர்ணாவூர் என்ற தொடக்கப் பள்ளியில் பயிலும் 62 மாணவ / மாணவியர்கள் காலை உணவு திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 01.02.2023 முதல் உணவு வழங்கப்பட்டதால், தற்போது 38 பள்ளிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண்.33, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்(சந4-1) துறை, நாள்.07.06.2023ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட 38 பள்ளிகள் உட்பட 358 பள்ளிகளில் நீட்டித்து முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை செயல்படுத்த அனுமதி ஆணை அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இப்பணிக்கென அரசாணை (நிலை) எண் 33, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள்.07.06.2023ன்படி, ஒரு மாணவருக்கு காலை உணவிற்கென ரூ.12.71 தொகை ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்33, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்(சந4-1) துறை, நாள்.07.06.2023 தொடர்ந்து சமூக நல ஆணையர் (மு.கூ.பொ) சென்னை-15 அவர்களின் செயல்முறை ஆணை எண். செ.மு.ந.க.எண்.3652/சஉதி.2(1)/2021 நாள்.15.06.2023ன்படி, இத்திட்டத்திற்காக 57 நாட்களுக்கு ரூ.4,00,45,804 விடுவிக்க ஆணை பிறப்பித்துள்ளது.

**அரசாணையின் படி வழங்கப்பட வேண்டிய காலை உணவு வகைகள்**

காலை உணவாக கீழ்க்கண்ட உணவுப் பட்டியலில் உள்ள ஏதேனும் ஒரு உணவானது குறிப்பிட்ட நாளில் வழங்கப்படும்.

**அட்டவணை எண்.1**

| நாள் – உணவு வகை | உணவு |
|---|---|
| திங்கட்கிழமை – உப்புமா வகை | 1. ரவா உப்புமா+ காய்கறி சாம்பார்<br>2. சேமியா உப்புமா + காய்கறி சாம்பார்<br>3. அரிசி உப்புமா + காய்கறி சாம்பார்<br>4. கோதுமை ரவா உப்புமா + காய்கறி சாம்பார் |
| செவ்வாய்க்கிழமை – கிச்சடிவகை | 1. ரவா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>2. சேமியா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>3. சோள காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>4. கோதுமை ரவா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார் |

| | |
|---|---|
| புதன்கிழமை - பொங்கல் வகை | 1. ரவா பொங்கல் + காய்கறி சாம்பார்<br>2. வெண் பொங்கல் + காய்கறி சாம்பார் |
| வியாழக்கிழமை – உப்புமா வகை | 1. சேமியா உப்புமா + காய்கறி சாம்பார்<br>2. அரிசி உப்புமா + காய்கறி சாம்பார்<br>3. ரவா உப்புமா + காய்கறி சாம்பார்<br>4. கோதுமை ரவா உப்புமா + காய்கறி சாம்பார் |
| வெள்ளிக்கிழமை – கிச்சடிவகை | 1. ரவா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>2. சேமியா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>3. சோள காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>4. கோதுமை ரவா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார் |
| | உப்புமா/கிச்சடி/பொங்கல் = 150 - 200 கிராம் |
| | காய்கறியுடன்சாம்பார் = 100 மிகி |

பெருநகர சென்னை மாநகராட்சியில், வடக்கு வட்டாரத்தில் உள்ள 125 பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரையில் 21,209 மாணவ/ மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இதில் மண்டலம் 2 தவிர மண்டலம் 1,3,4,5 ஆகிய மண்டலங்களில் உள்ள 38 தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது செயல்படும் அட்டவணை 2ல் கண்டவாறு 6 மைய சமையற்கூடங்களில் காலை உணவு அம்மா உணவகத்தில் உள்ள மகளிர் சுய உதவி குழுக்களை கொண்டு உணவு சமைக்கப்பட்டு அனைத்து பள்ளிகளுக்கும் ஒப்பந்த வாகனங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றது. இந்த மைய சமையற்கூடத்திற்கு தேவையான சமையல் பாத்திரங்கள் அனைத்தும் பெருநகர சென்னை மாநகராட்சியால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை-2**

| வ.எண். | மண்டலம் | தற்போது செயல்பட்டு வரும் மைய சமையல்கூடங்களின் விவரம் |
|---|---|---|
| 1 | 1 | Puyal Kappagam, Thazhan Kuppam, Ennore, Chennai – 57 |
| 2 | 1 | Amma Unavagam, Annai Sivagami Nagar, Ennore, Chennai – 57 |
| 3 | 3 | CMDA Truck Terminal Building,GNT Road, Madhavaram,<br>Chennai – 60 |
| 4 | 4 | CPS , Dr.Rajarathinam Nagar, 3rd Main road, Kodungaiyur, Chennai – 118 |
| 5 | 4 | GCC Building, Near Amma Unavagam, Sikarantha Palayam, 5th street, Korukkupet, Chennai – 21 |
| 6 | 5 | GCC Old School Building , S.N. Chetty Street, Royapuram, Chennai – 13 |

16.05.2023 அன்று பெறப்பட்ட *Education Management Information Systems (EMIS)* விவரப்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் 1 முதல் 5 வரையிலான மண்டலங்களில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்த உள்ள ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட 38 பள்ளிகள் உட்பட 125 தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், ஆதி திராவிடர் நல பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் 21,209 மாணவர்களின் எண்ணிக்கையானது மண்டல வாரியாக கீழ்கண்டவாறு பட்டியலிடப்படுகிறது.

**அட்டவணை-3**

| Zone | Schools | | | GCC and Other than GCC | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Primary | | Middle | | HS | | HSS | | Total | |
| | GCC | Other than GCC | Total | School | Student | School | Student | School | Student | School | Student | School | Student |
| 1 | 24 | 0 | 24 | 17 | 2021 | 7 | 1513 | 0 | 0 | 0 | 0 | 24 | 3534 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 17 | 1 | 18 | 14 | 2805 | 4 | 280 | 0 | 0 | 0 | 0 | 18 | 3085 |
| 3 | 12 | 1 | 13 | 8 | 1435 | 5 | 1189 | 0 | 0 | 0 | 0 | 13 | 2624 |
| 4 | 35 | 0 | 35 | 24 | 5357 | 11 | 2124 | 0 | 0 | 0 | 0 | 35 | 7481 |
| 5 | 33 | 2 | 35 | 12 | 1511 | 20 | 1938 | 1 | 26 | 2 | 1010 | 35 | 4485 |
| Tot | 121 | 4 | 125 | 75 | 13129 | 47 | 7044 | 1 | 26 | 2 | 1010 | 125 | 21209 |

அட்டவணை 3ல் குறிப்பிட்ட 21,209 மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை விரிவுபடுத்தி காலை உணவு சமைத்து வழங்க அட்டவணை 4ல் குறிப்பிடப்பட்டுள்ள 13 மைய சமையற்கூடங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

**அட்டவணை -4**

| வ. எண் | மண்டலம் | வடக்கு வட்டாரத்தில் உள்ள மொத்த மையசமையல் கூடங்களின் விவரம் |
|---|---|---|
| 1 | 1 | Puyal Kappagam, Thazhan Kuppam,Ennore, Chennai – 57 |
| 2 | 1 | Amma Unavagam, Annai Sivagami Nagar, Ennore, Chennai – 57 |
| 3 | 2 | Chennai Primary School, Vichur Link Road, Kanniammanpet, Manali New Town, Chennai – 103 |
| 4 | 2 | Kosapur High Road, UCHC Building, Manjambakkam, Chennai – 68 |
| 5 | 3 | CMDA Truck Terminal Building,GNT Road, Madhavaram, Chennai – 60 |
| 6 | 3 | Office of the Block Education officer, 1, Gandhi Main Road, Puzhal, Chennai – 66 |
| 7 | 4 | CPS , Dr.Rajarathinam Nagar, 3rd Main road, Kodungaiyur, Chennai – 118 |
| 8 | 4 | GCC Building, Near Amma Unavagam, Sikarantha Palayam, 5th street, Korukkupet, Chennai – 21 |
| 9 | 4 | 10, Thiagappa street, Korukkupet, Chennai – 21 |
| 10 | 4 | Chennai Hr. Sec. School, Kalyanapuram,Vyasarpadi, Chennai - 39. |
| 11 | 5 | GCC Old School Building, S.N. Chetty Street, Royapuram, Chennai – 13 |
| 12 | 5 | Relief centre at 44, Padavattamman koil st, Moolakoththalam, Old washermenpet, Chennai – 21 |
| 13 | 5 | Relief centre at Ayya mudali st, Chinthathiripet, Chennai- 2 |

26.06.2023 அன்று நடைபெற்ற கூடுதல் தலைமை செயலர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) அவர்களின் முதலமைச்சர் காலை உணவு திட்ட கலந்தாய்வு கூட்டத்தில் துணை ஆணையர் (கல்வி) அவர்களிடம் இப்பணியினை வெளிநிறுவனம் மூலம் ஒப்பம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பணியினை வெளிநிறுவனம் மூலம் ஒப்பம் கோரி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**இப்பணிக்கென தேவைப்படும் நிதி விவரம்**

**அட்டவணை எண்.5**

| | |
|---|---|
| ஒரு வருடத்திற்கு தோரயமாக ஒரு பள்ளி செயல்படும் நாள்கள் | 230 |
| மொத்தம் வடக்கு வட்டாரத்தில் செயல்பட்டு வரும் பள்ளிகளில் பயிலும் மாணவ /மாணவிகளின் எண்ணிக்கை | 21,209 |
| ஒரு நாளைக்கு ஒரு மாணவனுக்கு காலை உணவு திட்டத்திற்கு அரசினால் நிர்ணயிக்கப்பட்ட தொகை (உணவு மற்றும் போக்குவரத்து ) | ரூ 12.71 |
| மொத்தம் இப்பணிக்கென தேவைப்படும் தொகை 21,209x ரூ.12.71x230 = | ரூ.6,20,00,269.70 |
| முழு மதிப்பில் | ரூ 6,20,00,270 |

இப்பணியினை சிறப்பாக வெளிநிறுவனம் மூலம் செயல்படுத்தவும், ஒப்ப நிபந்தனைகளை நிர்ணயிக்கவும், துணை ஆணையர் (கல்வி) தலைமையில் கீழ்கண்ட அலுவலர்களை கொண்ட குழு அமைக்க தீர்மானிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. கல்வி அலுவலர்
2. கூடுதல் கல்வி அலுவலர்
3. நிதி ஆலோசகர்
4. தலைமை பொறியாளர்(பொது)
5. மேற்பார்வை பொறியாளர்( இயந்திர பொறியியல் துறை)

**பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து ஒப்பந்ததாரருக்கு மாநகராட்சி அளிக்கும் வசதிகள்**

1. மத்திய வட்டாரத்தில 13 மைய சமையல் கூடங்கள் வழங்கப்படும்.
2. கட்டிடத்தின் பராமரிப்பு மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும்.
3. குடிநீர் வசதி செய்து தரப்படும்.
4. சமையலுக்கு தேவையான பாத்திரங்கள் வழங்கப்படும்.
5. மின்சார வசதி செய்து தரப்படும்.
6. சமையல் எரிவாயு இணைப்பு மாநகராட்சி மூலம் பெற்று தரப்படும்.

**ஒப்பந்ததாரர் மேற்கொள்ள நிர்ணயிக்கப்பட்ட பணிகள்**

1. அட்டவணை 1 ல் தெரிவிக்கப்பட்டவாறு காலை உணவு வழங்கப்பட வேண்டும்.
2. முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அனைத்து பள்ளிகளுக்கும் ஒரே மாதிரியான காலை உணவு வழங்கப்பட வேண்டும். இது குறித்து ஒரு மாதத்திற்கான உணவு வகை பட்டியல் கல்வித்துறையின் மூலம் வழங்கப்படும். இதனை எந்த காரணம் கொண்டும் பெருநகர சென்னை மாநகராட்சியின் முன் அனுமதியின்றி மாற்றக்கூடாது.
3. தினந்தோறும் சமைக்க வேண்டிய உணவின் எண்ணிக்கையை உணவு சமைப்பதற்கு முதல் நாள் சம்பந்தப்பட்ட உதவி கல்வி அலுவலர் அவர்களிடம் பெற்றுக்கொள்ள வேண்டும்.
4. காலை 8.00 மணிக்கு பள்ளியில் காலை உணவு வழங்கப்பட வேண்டும். கால தாமதம் ஏற்படக்கூடாது.
5. காலை 8.00 மணிக்கு மேல் வழங்கப்படும் உணவிற்கு தொகை வழங்கப்பட மாட்டாது. மேலும், குழுவால் நிர்ணயிக்கப்படும் அபராதத்தொகையும் விதிக்கப்படும்.
6. பெருநகர சென்னை மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள 13 மைய சமையற்கூடங்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.
7. நிர்வாக வசதிகேற்ப மண்டலங்கள் விரிவுப்படுத்தபடுமாயின் அந்நேர்வில் பள்ளிகளை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும்.
8. ஒரு மாணவ/மாணவிக்கு நாளொன்றிற்கு வழங்கப்படும் காலை உணவுக்கான மூலப்பொருள்களின் அளவு 50 கிராம் அரிசி/ரவை/கோதுமை ரவை/சேமியா உள்ளூரில் /அந்தந்த இடங்களில் விளையும் சிறுதானியங்கள்/சாம்பாருக்கான பருப்பு 15 கிராம் மற்றும் உள்ளூரில் கிடைக்கக்கூடிய காய்கறிகள்(சமைத்தப்பின் 150-200 கிராம் உணவு மற்றும் 100 மிகி காய்கறியுடன் கூடிய சாம்பார்), ஒரு வாரத்தில் குறைந்தது 2 நாட்களாவது உள்ளூரில் கிடைக்கக்கூடிய சிறு தானியங்களால் தயாரிக்கப்பட்ட காலை உணவு வழங்கப்பட வேண்டும்.
9. இஸ்லாமிய பள்ளிகளுக்கு வெள்ளிக்கிழமை விடுமுறை விடப்படுவதாலும், சனிக்கிழமை பள்ளி வேலை நாளாக இருப்பதாலும் வெள்ளிக்கிழமை வழங்கப்பட வேண்டிய உணவினை சனிக்கிழமை அன்று அந்த பள்ளிகளுக்கு வழங்க வேண்டும்.
10. சனிக்கிழமை விடுமுறை நாளில் பள்ளி வேலை நாளாக அரசு அறிவிக்கும் பட்சத்தில் புதன்கிழமை வழங்க வேண்டிய காய்கறி சாம்பருடன் கூடிய பொங்கல் வழங்கப்பட வேண்டும். இது குறித்து கல்வித்துறை மூலம் தெரிவிக்கப்படும்.
11. காலை உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களின் தரம் FSSAI நெறிமுறைகளுக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.
12. காலை உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் இயல்பான நிறம், மணம் உடையதாகவும், வேறு வெளிப்பொருள்கள் (Extraneous substance) கலக்காமலும் சுத்தமாக இருக்க வேண்டும். மேலும், பதப்படுத்தப்பட்ட உணவுகளை கொண்டு சமைக்கக்கூடாது.

13. உள்ளூரில் சமைக்கப் பயன்படுத்தும் சமையல் எண்ணெய் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். ஒருமுறை பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய்யை கண்டிப்பாக மீண்டும் பயன்படுத்தக்கூடாது.
14. உணவு சமைக்கப் பயன்படுத்தப்படும் மசாலா பொருள்கள் தரமானதாகவும், சுத்தமானதாகவும் இருக்க வேண்டும்.
15. காய்கறிகளின் தரத்தினை உறுதி செய்வதுடன் அவற்றை சமைப்பதற்கு முன் தண்ணீரில் நன்கு கழுவி பயன்படுத்தப்படவேண்டும்.
16. காலாவதியான மளிகை பொருள்கள் மற்றும் கெட்டுபோன அழுகிய காய்கறிகளை பயன்படுத்தக்கூடாது.
17. அரிசி, சிறுதானியங்கள், மளிகை பொருள்கள் மற்றும் காய்கறிகள் ஒப்பந்ததாரரே உணவு பாதுகாப்பு தர நிர்ணயத்திற்குட்பட்டு கொள்முதல் செய்யவேண்டும்.
18. சமைக்கப்பட்ட உணவின் மாதிரியை ஒவ்வொரு நாளும் பாதுகாப்பாக வைக்க வேண்டும். தேவைப்படும் நேரங்களில் இதனை பரிசோதனைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
19. தயார் செய்யப்பட்ட உணவினை குழந்தைகளுக்கு வழங்கும் முன்பு பள்ளி மேலாண்மை குழு ஒவ்வொரு நாளும் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு உணவினை ருசி பார்க்கும்.
20. சமைக்கப்பட்ட உணவின் தரத்தில் குறைபாடு ஏதேனும் இருப்பின் அந்த உணவினை குழந்தைகளுக்கு வழங்கக்கூடாது.
21. பெருநகர சென்னை மாநகராட்சியில் வழங்கப்படும் பாத்திரங்கள் தவிர கூடுதலாக ஒப்பந்ததாரருக்கு தேவைப்படும் பாத்திரங்கள் அவர்களே கொள்முதல் செய்து கொள்ள வேண்டும்.
22. பொருட்கள் (மளிகை பொருள்கள்/காய்கறிகள்) இருப்பு அறையில் எலி *(Rat proof)* புகாவண்ணம் பாதுகாப்பு வசதி ஏற்படுத்த வேண்டும்.
23. சமையலறை கூடம் மற்றும் உணவு வழங்கும் இடங்கள் சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டும். மேலும் சமையறையில் ஈ தடுப்பு *(Anti fly measures)* நடவடிக்கைகள் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
24. தேவையான தீயணைப்பு பொருத்தி தீயணைப்பு துறையினரிடம் உரிய சான்று பெறவேண்டும்.
25. ஒவ்வொரு பள்ளிக்கும் அனுப்பப்படும் உணவு விவரங்களை தனியே பதிவேட்டில் தினந்தோறும் பதிவு செய்ய வேண்டும். இந்த பதிவேடு மைய சமையல் அறையில் பராமரிக்க வேண்டும்.
26. ஒவ்வொரு பள்ளிக்கும் அளிக்கும் உணவின் விவரம், உணவின் எண்ணிக்கை மற்றும் வழங்கிய நேரம் ஆகிய விவரங்களை தனியே பதிவேட்டில் தினந்தோறும் பதிவு செய்ய வேண்டும். மாதந்தோறும் இவற்றினை சான்றிட்டு பட்டி அளிக்கும் போது இணைத்து வழங்க வேண்டும்.
27. உணவின் தரம் குறித்த பதிவேடு, புகார் பதிவேடு மற்றும் ஆய்வு பதிவேடு மைய சமையலறையில் பராமரிக்கப்படவேண்டும்.
28. உணவு சமைத்த பின்னர் உணவு பாத்திரங்கள் யாவும் முறையாக மூடிபாதுகாக்க வேண்டும். ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்படின், ஒப்பந்ததாரரே அதற்கு ஏற்படும் சட்ட மற்றும் நிதி சம்பந்தமான நடைமுறைக்கு முழுப்பொறுப்பாவார்.
29. சமையலர்கள், வாகனங்கள், ஓட்டுனர்கள் மற்றும் உதவியாளர்கள் ஆகியோரை ஒப்பந்ததாரரே தன் சொந்த பொறுப்பில் பணியமர்த்திக் கொள்ள வேண்டும்.
30. பணியமர்த்தும்போது பணியாளர்களுக்கு செலுத்தவேண்டிய பணியாளர் சேமநலநிதி, பணியாளர் இன்சூரன்ஸ் *(EPF/ESI)* இது தவிர அரசுக்கு செலுத்த வேண்டிய வரி இனங்கள் அனைத்தும் ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும். மேலும் பணியின் போது

பணியாளர்களுக்கு ஏற்படும் விபத்துகள் மற்றும் பிரச்சனைகளுக்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாவார். பெருநகர சென்னை மாநகராட்சி பொறுப்பேற்காது.

31. நிரந்தர மூடு அமைப்புடைய வாகனங்கள் மூலமே, உணவினை பாதுகாப்புடன் பள்ளிகளுக்கு எடுத்துச்செல்ல வேண்டும்.
32. வாகனத்திற்கான, டீசல், இன்சூரன்ஸ், சாலை வரி மற்றும் வாகன அனுமதி (permit) ஆகிய அனைத்து செலவினங்களும் ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும்.
33. சமையற்கூடத்திற்கான மின்கட்டணம் மற்றும் வைப்பு தொகை ஆகியவற்றினை ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும்.
34. சமையலுக்கு தேவைப்படும் சமையல் எரிவாயு உருளைகளுக்கான கட்டணத்தினை ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும்
35. மைய சமையலறையில் உற்பத்தியாகும் குப்பைகளை மக்கும் மக்கா குப்பைகளாக தரம் பிரித்து மாநகராட்சி வாகனத்தில் அளிக்க வேண்டும். மூடியுடன் கூடிய தொட்டிகளில் குப்பைகள் சேகரித்து வைக்கப்பட வேண்டும்.
36. ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களை சமையறையிலோ அல்லது உணவு எடுத்து செல்லும்போதோ பயன்படுத்தக்கூடாது.
37. உணவு சமைப்பவர்கள் அனைவரும் சுத்தமாகவும், உரிய கால இடைவெளியில் மருத்துவ பரிசோதனை செய்து, தொற்று நோய் ஏதுமில்லை என்று உணவு பாதுகாப்பு துறையிடம் சான்று பெற வேண்டும்.
38. சமையல் பணியில் இருப்பவர்கள் உணவு பாதுகாப்பு தர விதிகளின்படி மேலங்கி மற்றும் தலைகவசம் அணிய வேண்டும்.
39. மாதம் ஒருமுறை பட்டி வழங்கப்பட வேண்டும். முன்பணம் ஏதும் மாநகராட்சியில் இருந்து வழங்கப்பட மாட்டாது.
40. ஒப்பந்ததாரர் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய அபராத தொகை, மின்கட்டணம், சமையல் எரிவாயு கட்டணம் மற்றும் பிற இனங்கள் ஏதேனும் இருப்பின், பட்டியில் பிடித்தம் செய்து வழங்கப்படும்.
41. மேற்கண்ட விதிமுறைகள் மட்டுமின்றி, அவ்வப்போது வெளியிடப்படும், அரசின் ஆணைகள், தலைமை செயலரின் வழிகாட்டு நெறிமுறைகள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் அறிவுறுத்தல்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் ஆகியவற்றினை தவறாது பின்பற்ற வேண்டும்.

**பணி பொறுப்புகள்**

**கல்வி அலுவலர்**

- முதலமைச்சர் காலை உணவு திட்டத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியில் 6 முதல் 10 வரையிலான மண்டலங்களில் திறம்பட செயல்படுத்துதல்.
- மேற்படி 1 முதல் 15 மண்டலங்கள், நிர்வாக வசதிகேற்ப அதிகரிக்கப்படுமாயின் இவ்விவரங்கள் ஒப்பந்ததாரருக்கு தெரிவித்தல்.
- பள்ளிகளின் பெயர்கள், அவற்றின் முகவரி மற்றும் பயிலும் மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கையினை ஒப்பந்ததாரருக்கு அளிக்க வேண்டும்.
- நிர்வாக வசதிகேற்ப மண்டலங்கள் விரிவுபடுத்தபடுமாயின் அந்நேர்வில் பள்ளிகளை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும்.
- இப்பணியினை வெளிநிறுவனம் மூலம் ஒப்பம் கோரி நடவடிக்கை எடுத்து செயல்படுத்துதல்
- மாதந்தோறும் ஒப்பந்ததாரர் அளிக்கும் பட்டியினை தீர்வு செய்தல்
- ஒப்பந்ததாரர், தரமான உணவினை சரியான நேரத்தில் அளித்தலை உறுதி செய்தல்
- ஒவ்வொரு மைய சமையல் கூடத்திற்கும் ஒரு உதவி கல்வி அலுவலரை பொறுப்பு அலுவலராக நியமனம் செய்தல்

- உரிய கால இடைவெளியில் ஆய்வு செய்து அறிக்கை அளித்தல்
- அரசு மற்றும் உயர் அலுவலர்கள் கோரும் அறிக்கைகளை அளித்தல்
- ஒப்பந்தாரர் ஒப்ப விதிகளை மீறும்போது அபராதம் விதித்தலை உறுதி செய்தல்.

**<u>கூடுதல் கல்வி அலுவலர்</u>**

- மேற்கண்ட பணி பொறுப்புகளை செயலாற்றிட கல்வி அலுவலருடன் இணைந்து பணியாற்றுதல்
- பட்டி தீர்வு செய்ய தேவையான அறிக்கைகளை உதவி கல்வி அலுவலர்களிடம் இருந்தும் மற்றும் பள்ளி தலைமையாசிரியர்களிடம் இருந்தும் மைய சமையற்கூடவாரியாக பெறுதல்
- பெறப்பட்ட அறிக்கைகளை ஒப்பந்ததாரர் அளிக்கும் பட்டியுடன் சரி பார்த்தல்
- ஒப்பந்தாரர் ஒப்ப விதிகளை மீறும்போது அபராதம் விதித்தல்
- ஒப்பந்ததாரருக்கு அபராதம் விதிக்கப்படின் அதனை பட்டி தீர்வு செய்யும் போது தவறாது பிடித்தம் செய்தல்.

**<u>உதவி கல்வி அலுவலர்</u>**

- மைய சமையற் கூடத்திற்கு முழு பொறுப்பு அலுவலர் ஆவார்
- தற்போது சமையலுக்கும் பள்ளிகளுக்கு உணவு வழங்குதற்கும் உபயோகப்படுத்தப்பட்டு வரும் சமையல் பாத்திரங்களை உரிய இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து கையொப்பம் பெற்று ஒப்பந்ததாரரிடம் வழங்குதல்
- ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை உறுதி செய்தல் மற்றும் தரமான உணவு வழங்கப்படுவதை உறுதி செய்தல்
- உரிய நேரத்தில் காலை உணவு மாணவர்களுக்கு வழங்குவதை உறுதி செய்தல்
- பள்ளி தலைமையாசிரியரிடம் இருந்து மாதந்தோறும் பெறப்படும் அறிக்கையினை ஒப்பந்ததாரர் அளிக்கும் அறிக்கையுடன் ஒப்பிட்டு சரிபார்த்து தலைமையகத்திற்கு அறிக்கை அளித்தல்
- ஒப்பந்தாரர் ஒப்ப விதிகளை மீறும்போது அபராதம் விதித்தல்
- ஒப்பந்ததாரருக்கு தினந்தோறும் மறுநாளுக்குரிய உணவின் எண்ணிக்கையினை அளிக்க வேண்டும்.

**<u>தலைமையாசிரியர்</u>**

- சம்பந்தப்பட்ட பள்ளிகளில் காலை உணவு வழங்குவதில் முழு பொறுப்பு அலுவலர்
- உரிய நேரத்தில் காலை உணவு வழங்குவதை உறுதி செய்தல்
- சுத்தமான மற்றும் தரமான உணவு வழங்குவதை உறுதி செய்தல்
- தயார் செய்யப்பட்ட உணவினை குழந்தைகளுக்கு வழங்கும் முன்பு பள்ளி மேலாண்மை குழு மூலம் ஒவ்வொரு நாளும் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு உணவினை ருசி பார்க்க வேண்டும்.
- தினந்தோறும் பெறப்பட்ட உணவின் விவரம், எண்ணிக்கை மற்றும் பெறப்பட்ட நேரம் ஆகியவற்றினை தனி பதிவேட்டில் பதிவு செய்து பராமரிக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட சான்றிட்ட விவரங்களுடன் மாணவ/மாணவிகளின் தேதி வாரியான மாத வருகை பதிவேட்டின் சான்றினை தலைமையகத்திற்கு அளித்தல்.
- காலையில் வழங்கப்படும் உணவானது, மாணவ மாணவிகளின் வருகைப்பதிவேட்டில் உள்ள எண்ணிக்கைக்கு மிகாமல் இருக்க வேண்டும். கூடுதலாக உணவு வழங்கப்படின் அதற்கான தொகை வழங்கப்படமாட்டாது.
- சமைக்கப்பட்ட உணவின் தரத்தில் குறைபாடு ஏதேனும் இருப்பின் அந்த உணவினை குழந்தைகளுக்கு வழங்கக்கூடாது.
- சம்பந்தப்பட்ட உதவி கல்வி அலுவலருக்கு தினந்தோறும் மறுநாள் வழங்கப்பட வேண்டிய உணவின் எண்ணிக்கையினை அளிக்க வேண்டும்.

- ஒப்பந்ததாரர் ஒப்பந்த விதிகளை மீறும்போது அபராதம் விதிப்பதற்கு ஏதுவாக உடனடியாக கல்வி அலுவலருக்கும், கூடுதல் கல்வி அலுவலருக்கும் அறிக்கை அனுப்புதல்.

**<u>மண்டல அலுவலர்</u>**

- முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின்படி, தரமான மற்றும் சுத்தமான உணவு உரிய நேரத்தில் வழங்குவதை உறுதி செய்தல்
- சீரான கால இடைவெளியில் இத்திட்டத்தினை மண்டல அளவில் ஆய்வு செய்தல்
- பொறியியல் துறை, மின் துறை, பொதுசுகாதாரத்துறை ஆகிய துறைகள் மூலம் இத்திட்டத்தினை சிறப்புடன் செயல்படுத்த நடவடிக்கை எடுத்தல்
- மைய சமையற்கூடத்திற்கென தனி மின் இணைப்பு பெற நடவடிக்கை எடுத்தல்

**<u>செயற்பொறியாளர்</u>**

- சம்பந்தப்பட்ட மண்டலத்தின் செயற்பொறியாளர் மைய சமையற்கூடத்திற்கான கட்டிட வசதி, குடிநீர் வசதி, மின் வசதி ஏற்படுத்தி தருதல்

**<u>மண்டல நல அலுவலர்</u>**

- மைய சமையற்கூடத்தினை ஆய்வு செய்து சுகாதாரமுறையில் சமையற்கூடம் பராமரிப்பதை உறுதி செய்தல்
- சுகாதார ஆய்வாளர் (SI) மற்றும் துப்புரவு அலுவலர்களை (SO) கொண்டு ஆய்வு செய்து பாதுகாப்பான உணவு வழங்குவதை உறுதி செய்தல்

**<u>ஒப்பந்ததாரருக்கான அபராதம்</u>**

- **<u>கால தாமதமாக உணவு வழங்கப்படும்போது</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.1000 (ஒரு பள்ளிக்கு) | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர் / மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.2000 (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்றாம் முறை | ரூ.3000 (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்று முறைக்கு மேல் | ரூ.5000 (ஒரு பள்ளிக்கு) | |

- **<u>தரம் குறைந்த உணவு வழங்கப்படும்போது</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.1000 (ஒரு பள்ளிக்கு) | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர் /மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.2000 (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்றாம் முறை | ரூ.3000 (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்று முறைக்கு மேல் | ஒப்பம் ரத்து செய்யப்படும் | |

- **<u>உணவில் அளவு குறைவாக வழங்கப்படும்போது</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.1000 (ஒரு பள்ளிக்கு) | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர் / மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.2000 (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்றாம் முறை | ரூ.3000 (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்று முறைக்கு மேல் | ஒப்பம் ரத்து செய்யப்படும் | |

- **<u>தரம் குறைந்த மூலப்பொருள்கள் மற்றும் காய்கறிகளை பயன்படுத்தும்போது</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.1000 | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர்/மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.2000 | |
| மூன்றாம் முறை | ரூ.3000 | |
| மூன்று முறைக்கு மேல் | ஒப்பம் ரத்து செய்யப்படும் | |

- **<u>உணவினை பள்ளிகளுக்கு எடுத்துசெல்லும்போது மூடப்படாத வாகனத்தினை பயன்படுத்தும்போது</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.1000 | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர்/ மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.2000 | |
| மூன்றாம் முறை | ரூ.3000 | |
| மூன்று முறைக்கு மேல் | ஒப்பம் ரத்து செய்யப்படும் | |

- **<u>சமையற்கூடத்தினை சுத்தமாக பராமரிக்காத பட்சத்தில்</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.1000 | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர்/ மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.2000 | |
| மூன்றாம் முறை | ரூ.3000 | |
| மூன்று முறைக்கு மேல் | ஒப்பம் ரத்து செய்யப்படும் | |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டாரம், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின்படி வடக்கு வட்டாரத்தில் உள்ள 125 தொடக்க பள்ளிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகள், அரசு பள்ளிகள் மற்றும் ஆதிதிராவிடர் தொடக்க பள்ளிகள்) பயிலும் 21,209 மாணவ, மாணவியருக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தினை ஓராண்டு காலத்திற்கு வெளிநிறுவனம் மூலம் ஒப்பம் கோரி மேற்கொள்ள அனுமதிக்கும்,
2. பெருநகர சென்னை மாநகராட்சியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 13 (அட்டவணை 4ல் தெரிவிக்கப்பட்ட) மைய சமையல் கூடங்களை ஒப்பந்ததாரர் வசம் அளிக்கவும், இந்த சமையல் கூடங்களின், கட்டட பராமரிப்பு, மின் வசதி மற்றும் குடிநீர் வசதி மாநகராட்சி மூலம் ஏற்படுத்தி தரவும் மற்றும் சமையல் கூடத்தினை மாநகராட்சி மூலம் பராமரிக்க அனுமதிக்கும் ,
3. தற்போது சமையலுக்கும் பள்ளிகளுக்கு உணவு வழங்குவதற்கும் உபயோகப்படுத்தப்பட்டு வரும் சமையல் பாத்திரங்களை நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்ததாரரிடம் அளிக்கவும், (உதவி கல்வி அலுவலர் உரிய இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து கையொப்பம் பெற்று ஒப்பந்ததாரரிடம் வழங்கப்பட வேண்டும்)
4. சமையல் எரிவாயு இணைப்பு, பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பெற்று தர அனுமதிக்கும், மேலும் ஒப்பந்ததாரரால் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயுக்கான தொகையினை ஒப்பந்ததாரரே செலுத்த அனுமதிக்கும்,
5. சமையற்கூடத்தின் ஒப்பந்ததாரரால் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான கட்டணம் மற்றும் வைப்புத்தொகையினை ஒப்பந்ததாரரே செலுத்த அனுமதிக்கும்,
6. துணை ஆணையர்(கல்வி) தலைமையில் மேலே தெரிவிக்கப்பட்டவாறு ஐந்து அலுவலர்களை கொண்ட குழு அமைத்து ஒப்ப நிபந்தனைகளை நிர்ணயம் செய்ய அனுமதிக்கும்,
7. இப்பணிக்கென அரசு நிர்ணயித்த விலையின்படி (அதாவது ஒரு மாணவ/மாணவியர்க்கு ஒரு நாளைக்கு ரூ.12.71வீதம்) (அட்டவணை எண்.5) ரூ.6,20,00,270/ (ரூபாய் ஆறுகோடியே இருபது இலட்சத்து இருநூற்றி எழுபது மட்டும்) நிர்வாக செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கும், (பள்ளி செயல்படும் நாள் தோரயமாக 230 X மாணவ மாணவியர் எண்ணிக்கை 21,209 X ஒரு உணவிற்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.12.71)

8. இந்த ஒப்பந்த அனுமதியில் உணவு/போக்குவரத்து உட்பட ஒப்பந்த விதிகளின் படி ஒப்பந்ததாரர் கோரும் GST/TNMWF/ESI/EPF மற்ற இனங்கள் ஏதும் இருப்பின் இவைகளுக்கான அனைத்து தொகைகளுடன் அரசு நிர்ணயித்தப்படி ஒரு நாளைக்கு ஒரு உணவிற்கு ரூ.12.71க்கு மிகாமல் ஒப்பந்தம் இருக்க அனுமதிக்கும்,
9. இப்பணியினை மேற்கொள்ள கல்வித்துறையின் மூலம் மின்னணு ஒப்பம் கோரவும்,
10. இப்பணியினை சிறப்புடன் மேற்கொள்ள உரிய அலுவலர்களுக்கு மேற்கண்டவாறு பணி நிர்ணயம் செய்ய அனுமதிக்கும்,
11. ஒப்பம் இறுதி செய்யப்பட்டு ஒப்பந்ததாரர் மூலம் இப்பணி மேற்கொள்ளும் நிலையில், அம்மா உணவகங்களில் இருந்து, மைய சமையற்கூடங்களில் பணிபுரிய தேர்வு செய்யப்பட்ட மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களை அவர்களின் வாழ்வாதாரம் கருதி மீண்டும் அந்தந்த அம்மா உணவகங்களிலேயே பணியமர்த்த அனுமதிக்கும்,
12. ஒப்பந்ததாரர் ஒப்பந்த விதிகளின்படி செயல்படாத போது அவருக்கு அபராதம் விதிக்கவும் மற்றும் ஒப்பத்தினை ரத்து செய்ய அனுமதிக்கும்,
13. மேற்கண்ட விதிமுறைகள் மட்டுமின்றி, அவ்வப்போது வெளியிடப்படும், அரசின் ஆணைகள், தலைமை செயலரின் வழிகாட்டு நெறிமுறைகள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் அறிவுறுத்தல்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை ஒப்பந்ததாரர் மூலம் செயல்படுத்த அனுமதிக்கும்,
14. இப்பணிக்கென தனியே கணக்கு குறியீடு மற்றும் பிரிவு குறியீடு நிதி நிர்வாக பிரிவின் மூலம் ரூ.6,20,00,270ஐ ஒதுக்கீடு செய்து வழங்க அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 14 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> “ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 20.11.2023 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.11.2023 அன்று தீர்மான எண்.65/2023ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

> “27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.261/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**க.து.ந.க.எண்.CMBFS/6995/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:615/2023** **பொருள் எண்.40**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – பெருநகர சென்னை மாநகராட்சியில் மத்திய வட்டாரத்தில் உள்ள 164 பள்ளிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகள், அரசு பள்ளிகள் மற்றும் ஆதிதிராவிடர் தொடக்க பள்ளிகள்) பயிலும் 25,468 மாணவ, மாணவியருக்கு காலை உணவு திட்டத்தினை வெளிநிறுவனம் மூலம் ஓராண்டு காலத்திற்கு ஒப்பம் கோரி பணி மேற்கொள்ள அனுமதி.**

அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள்.27.07.2022ன்படி, முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தில் பயன் பெறும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் 1, 3, 4 மற்றும் 5 ஆகிய நான்கு மண்டலங்களில் சத்துணவு துறையின் கீழ் இயங்கும் மொத்த பள்ளிகளில் முதற்கட்டமாக 37 தொடக்க பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 5941 மாணவ / மாணவியர்களுக்கு 6 மைய சமையல் கூடங்களிலிருந்து காலை உணவானது 16.09.2022 முதல் சமைக்கப்பட்டு வழங்கப்பட்டது. பின்னர் 37 பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களிடம் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை பெறப்பட்டு, மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப காலை உணவு சமைக்கப்பட்டு தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தது.

அரசாணை (நிலை) எண்.1, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்(சந4-1) துறை, நாள்.13.01.2023ன்படி, மண்டலம்-1ல் உள்ள ஆல் இந்தியா ரேடியோ நகர் (மேற்கு) எர்ணாவூர் என்ற தொடக்கப் பள்ளியில் பயிலும் 62 மாணவ / மாணவியர்கள் காலை உணவு திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 01.02.2023 முதல் உணவு வழங்கப்பட்டதால், தற்போது 38 பள்ளிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண்.33, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்(சந4-1) துறை, நாள்.07.06.2023ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட 38 பள்ளிகள் உட்பட 358 பள்ளிகளில் நீட்டித்து முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை செயல்படுத்த அனுமதி ஆணை அளிக்கப்பட்டுள்ளது

மேலும், இப்பணிக்கென அரசாணை (நிலை) எண்.33, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள்.07.06.2023ன்படி, ஒரு மாணவருக்கு காலை உணவிற்கென ரூ.12.71 தொகை ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது.

மத்திய வட்டாரத்தில் உள்ள பள்ளிகளில் 164 பள்ளிகளில் பயிலும் 25,468 மாணவ மாணவியருக்கும் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் உணவு வழங்கும் இப்பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அரசாணை (நிலை) எண்.33, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்(சந4-1) துறை, நாள்.07.06.2023 தொடர்ந்து சமூக நல ஆணையர் (மு.கூ.பொ) சென்னை-15 அவர்களின் செயல்முறை ஆணை எண். செ.மு.ந.க.எண்.3652/சஉதி.2(1)/2021 நாள்.15.06.2023ன்படி, இத்திட்டத்திற்காக 57 நாட்களுக்கு ரூ.4,00,45,804 விடுவிக்க ஆணை பிறப்பித்துள்ளது.

26.06.2023 அன்று நடைபெற்ற கூடுதல் தலைமை செயலர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) அவர்களின் முதலமைச்சர் காலை உணவு திட்ட கலந்தாய்வு கூட்டத்தில் துணை ஆணையர்(கல்வி) அவர்களிடம், இப்பணியினை வெளிநிறுவனம் மூலம் ஒப்பம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பணியினை வெளிநிறுவனம் மூலம் ஒப்பம் கோரி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அரசாணையின் படி வழங்கப்பட வேண்டிய காலை உணவு வகைகள்**

காலை உணவாக கீழ்கண்ட உணவுப் பட்டியலில் உள்ள ஏதேனும் ஒரு உணவானது குறிப்பிட்ட நாளில் வழங்கப்படும்.

**அட்டவணை எண்.1**

| நாள் – உணவு வகை | உணவு |
|---|---|
| திங்கட்கிழமை – உப்புமா வகை | 1. ரவா உப்புமா + காய்கறி சாம்பார்<br>2. சேமியா உப்புமா + காய்கறி சாம்பார்<br>3. அரிசி உப்புமா + காய்கறி சாம்பார்<br>4. கோதுமை ரவா உப்புமா + காய்கறி சாம்பார் |
| செவ்வாய்க்கிழமை – கிச்சடிவகை | 1. ரவா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>2. சேமியா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>3. சோள காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>4. கோதுமை ரவா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார் |
| புதன்கிழமை - பொங்கல் வகை | 1. ரவா பொங்கல் + காய்கறி சாம்பார்<br>2. வெண் பொங்கல் + காய்கறி சாம்பார் |
| வியாழக்கிழமை – உப்புமா வகை | 1. சேமியா உப்புமா + காய்கறி சாம்பார்<br>2. அரிசி உப்புமா + காய்கறி சாம்பார்<br>3. ரவா உப்புமா + காய்கறி சாம்பார்<br>4. கோதுமை ரவா உப்புமா + காய்கறி சாம்பார் |
| வெள்ளிக்கிழமை – கிச்சடிவகை | 1. ரவா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>2. சேமியா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>3. சோள காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>4. கோதுமை ரவா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார் |
| | உப்புமா/கிச்சடி/பொங்கல் = 150 - 200 கிராம் |
| | காய்கறியுடன்சாம்பார் = 100 மிகி |

தற்போது மத்திய வட்டாரத்திற்கென கீழ்கண்ட 13 மைய சமையற்கூடங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. இந்த மைய சமையற்கூடத்திற்கு தேவையான சமையல் பாத்திரங்கள் அனைத்தும் பெருநகர சென்னை மாநகராட்சியால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை எண்.2**

| வ.எண். | மண்டலம் | மத்திய வட்டாரத்தில் உள்ள மொத்த மைய சமையல் கூடங்களின் விவரம் |
|---|---|---|
| 1 | 6 | Chennai Middle School, Rangasai Street, Agaram, Chennai – 82 |
| 2 | 6 | Chennai Middle School (Gokulam), Seyyur Parthasarathy Street, Perambur, Chennai -11 |
| 3 | 6 | Chennai Middle School, Venkattammal mud, Purasaivalkkam, Chennai -12 |
| 4 | 7 | Community Hall, 13, Gopal Samy street, Ram Nagar, Ambattur, Chennai – 53 |
| 5 | 7 | Amma Unavagam building at Pillaiyar Kovil Street, Padikuppam, Chennai - 600037. |
| 6 | 8 | CPS, Vallalar Street, Tagore nagar, Ayanavaram, Chennai – 23 |
| 7 | 8 | Amma Unavagam building, Kamaraj street, Bharathipuram, Shenoy nagar, Chennai - 30. |
| 8 | 9 | Relief centre, Srinivasa perumal sannathi 2nd st, Gopalapuram, Chennai -14 |
| 9 | 9 | Chennai Middle School building, Bells road, Chepauk, Triplicane, Chennai - 05 |
| 10 | 9 | Amma Unavaga building, Royapettah High road, Mylapore, Ch 04 |
| 11 | 10 | Chennai Middle School, Arumbakkam, Chennai -106 |
| 12 | 10 | Chennai Primary School, Govindasamy Street, MGR Nagar, Chennai - 83 |
| 13 | 10 | Chennai Middle School, School Street,Mettupalayam,West mambalam, Chennai -33 |

16.05.2023 அன்று பெறப்பட்ட Education Management Information Systems (EMIS) விவரப்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் 6 முதல் 10 வரையிலான மண்டலங்களில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்த உள்ள 164 தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், ஆதி திராவிடர் நல பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் 25,468 மாணவர்களின் எண்ணிக்கையானது மண்டல வாரியாக கீழ்கண்டவாறு பட்டியலிடப்படுகிறது.

**அட்டவணை-3**

| Zone | Schools | | | GCC and Other than GCC | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Primary | | Middle | | HS | | HSS | | Total | |
| | GCC | Other than GCC | Total | School | Student | School | Student | School | Student | School | Student | School | Student |
| 6 | 39 | 3 | 42 | 24 | 4093 | 17 | 2083 | 0 | 0 | 1 | 109 | 42 | 6285 |
| 7 | 28 | 1 | 29 | 22 | 2927 | 7 | 1018 | 0 | 0 | 0 | 0 | 29 | 3945 |
| 8 | 22 | 3 | 25 | 15 | 2700 | 9 | 1304 | 0 | 0 | 1 | 289 | 25 | 4293 |
| 9 | 41 | 3 | 44 | 17 | 1741 | 24 | 1652 | 0 | 0 | 3 | 275 | 44 | 3668 |
| 10 | 23 | 1 | 24 | 16 | 5517 | 8 | 1760 | 0 | 0 | 0 | 0 | 24 | 7277 |
| Tot | 153 | 11 | 164 | 94 | 16978 | 65 | 7817 | 0 | 0 | 5 | 673 | 164 | 25468 |

**இப்பணிக்கென தேவைப்படும் நிதி விவரம்**

**அட்டவணை எண்.4**

| | |
|---|---|
| ஒரு வருடத்திற்கு தோரயமாக ஒரு பள்ளி செயல்படும் நாட்கள் | 230 |
| மொத்தம் மத்திய வட்டாரத்தில் செயல்பட்டு வரும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை | 25,468 |
| ஒரு நாளைக்கு ஒரு மாணவனுக்கு காலை உணவு திட்டத்திற்கு அரசினால் நிர்ணயிக்கப்பட்ட தொகை (உணவு வழங்க மட்டும்) | ரூ 12.71 |
| மொத்தம் இப்பணிக்கென தேவைப்படும் தொகை 25,468x ரூ.12.71x230 = | ரூ.7,44,50,604.40 |
| முழு மதிப்பில் | ரூ. 7,44,50,604 |

இப்பணியினை சிறப்பாக வெளிநிறுவனம் மூலம் செயல்படுத்தவும், ஒப்ப நிபந்தனைகளை நிர்ணயிக்கவும், துணை ஆணையர் (கல்வி) தலைமையில் கீழ்கண்ட அலுவலர்களை கொண்ட குழு அமைக்க தீர்மானிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. கல்வி அலுவலர்
2. கூடுதல் கல்வி அலுவலர்
3. நிதி ஆலோசகர்
4. தலைமை பொறியாளர்(பொது)
5. மேற்பார்வை பொறியாளர்( இயந்திர பொறியியல் துறை)

**பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து ஒப்பந்ததாரருக்கு மாநகராட்சி அளிக்கும் வசதிகள்**

1. மத்திய வட்டாரத்தில் 13 மைய சமையல் கூடங்கள் வழங்கப்படும்.
2. கட்டிடத்தின் பராமரிப்பு மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும்.
3. குடிநீர் வசதி செய்து தரப்படும்.
4. சமையலுக்கு தேவையான பாத்திரங்கள் வழங்கப்படும்.
5. மின்சார வசதி செய்து தரப்படும்.
6. சமையல் எரிவாயு இணைப்பு மாநகராட்சி மூலம் பெற்று தரப்படும்.

**<u>ஒப்பந்ததாரர் மேற்கொள்ள நிர்ணயிக்கப்பட்ட பணிகள்</u>**

1. அட்டவணை 1 ல் தெரிவிக்கப்பட்டவாறு காலை உணவு வழங்கப்பட வேண்டும்.
2. முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அனைத்து பள்ளிகளுக்கும் ஒரே மாதிரியான காலை உணவு வழங்கப்பட வேண்டும். இது குறித்து ஒரு மாதத்திற்கான உணவு வகை பட்டியல் கல்வித்துறையின் மூலம் வழங்கப்படும். இதனை எந்த காரணம் கொண்டும் பெருநகர சென்னை மாநகராட்சியின் முன் அனுமதியின்றி மாற்றக்கூடாது.
3. தினந்தோறும் சமைக்க வேண்டிய உணவின் எண்ணிக்கையை உணவு சமைப்பதற்கு முதல் நாள் சம்பந்தப்பட்ட உதவி கல்வி அலுவலர் அவர்களிடம் பெற்றுக்கொள்ள வேண்டும்.
4. காலை 8.00 மணிக்கு பள்ளியில் காலை உணவு வழங்கப்பட வேண்டும். கால தாமதம் ஏற்படக்கூடாது.
5. காலை 8.00 மணிக்கு மேல் வழங்கப்படும் உணவிற்கு தொகை வழங்கப்பட மாட்டாது. மேலும், குழுவால் நிர்ணயிக்கப்படும் அபராதத்தொகையும் விதிக்கப்படும்.
6. பெருநகர சென்னை மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள 13 மைய சமையற்கூடங்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.
7. நிர்வாக வசதிகேற்ப மண்டலங்கள் விரிவுப்படுத்தபடுமாயின் அந்நேர்வில் பள்ளிகளை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும்.
8. ஒரு மாணவ/மாணவிக்கு நாளொன்றிற்கு வழங்கப்படும் காலை உணவுக்கான மூலப்பொருள்களின் அளவு 50 கிராம் அரிசி/ரவை/கோதுமை ரவை/சேமியா உள்ளூரில் /அந்தந்த இடங்களில் விளையும் சிறுதானியங்கள்/சாம்பாருக்கான பருப்பு 15 கிராம் மற்றும் உள்ளூரில் கிடைக்கக்கூடிய காய்கறிகள்(சமைத்தப்பின் 150-200 கிராம் உணவு மற்றும் 100 மிகி காய்கறியுடன் கூடிய சாம்பார்), ஒரு வாரத்தில் குறைந்தது 2 நாட்களாவது உள்ளூரில் கிடைக்கக்கூடிய சிறு தானியங்களால் தயாரிக்கப்பட்ட காலை உணவு வழங்கப்பட வேண்டும்.
9. இஸ்லாமிய பள்ளிகளுக்கு வெள்ளிக்கிழமை விடுமுறை விடப்படுவதாலும், சனிக்கிழமை பள்ளி வேலை நாளாக இருப்பதாலும் வெள்ளிக்கிழமை வழங்கப்பட வேண்டிய உணவினை சனிக்கிழமை அன்று அந்த பள்ளிகளுக்கு வழங்க வேண்டும்.
10. சனிக்கிழமை விடுமுறை நாளில் பள்ளி வேலை நாளாக அரசு அறிவிக்கும் பட்சத்தில் புதன்கிழமை வழங்க வேண்டிய காய்கறி சாம்பருடன் கூடிய பொங்கல் வழங்கப்பட வேண்டும். இது குறித்து கல்வித்துறை மூலம் தெரிவிக்கப்படும்.
11. காலை உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களின் தரம் FSSAI நெறிமுறைகளுக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.
12. காலை உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் இயல்பான நிறம், மணம் உடையதாகவும், வேறு வெளிப்பொருள்கள் (Extraneous substance) கலக்காமலும் சுத்தமாக இருக்க வேண்டும். மேலும், பதப்படுத்தப்பட்ட உணவுகளை கொண்டு சமைக்கக்கூடாது.
13. உள்ளூரில் சமைக்கப் பயன்படுத்தும் சமையல் எண்ணெய் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். ஒருமுறை பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய்யை கண்டிப்பாக மீண்டும் பயன்படுத்தக்கூடாது.
14. உணவு சமைக்கப் பயன்படுத்தப்படும் மசாலா பொருள்கள் தரமானதாகவும், சுத்தமானதாகவும் இருக்க வேண்டும்.
15. காய்கறிகளின் தரத்தினை உறுதி செய்வதுடன் அவற்றை சமைப்பதற்கு முன் தண்ணீரில் நன்கு கழுவி பயன்படுத்தப்படவேண்டும்.

16. காலாவதியான மளிகை பொருள்கள் மற்றும் கெட்டுபோன அழுகிய காய்கறிகளை பயன்படுத்தக்கூடாது.
17. அரிசி, சிறுதானியங்கள், மளிகை பொருள்கள் மற்றும் காய்கறிகள் ஒப்பந்ததாரரே உணவு பாதுகாப்பு தர நிர்ணயத்திற்குட்பட்டு கொள்முதல் செய்யவேண்டும்.
18. சமைக்கப்பட்ட உணவின் மாதிரியை ஒவ்வொரு நாளும் பாதுகாப்பாக வைக்க வேண்டும். தேவைப்படும் நேரங்களில் இதனை பரிசோதனைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
19. தயார் செய்யப்பட்ட உணவினை குழந்தைகளுக்கு வழங்கும் முன்பு பள்ளி மேலாண்மை குழு ஒவ்வொரு நாளும் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு உணவினை ருசி பார்க்கும்.
20. சமைக்கப்பட்ட உணவின் தரத்தில் குறைபாடு ஏதேனும் இருப்பின் அந்த உணவினை குழந்தைகளுக்கு வழங்கக்கூடாது.
21. பெருநகர சென்னை மாநகராட்சியில் வழங்கப்படும் பாத்திரங்கள் தவிர கூடுதலாக ஒப்பந்ததாரருக்கு தேவைப்படும் பாத்திரங்கள் அவர்களே கொள்முதல் செய்து கொள்ள வேண்டும்.
22. பொருட்கள் (மளிகை பொருள்கள்/காய்கறிகள்) இருப்பு அறையில் எலி (Rat proof) புகாவண்ணம் பாதுகாப்பு வசதி ஏற்படுத்த வேண்டும்.
23. சமையலறை கூடம் மற்றும் உணவு வழங்கும் இடங்கள் சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டும். மேலும் சமையறையில் ஈ தடுப்பு (Anti fly measures) நடவடிக்கைகள் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
24. தேவையான தீயணைப்பு பொருத்தி தீயணைப்பு துறையினரிடம் உரிய சான்று பெறவேண்டும்.
25. ஒவ்வொரு பள்ளிக்கும் அனுப்பப்படும் உணவு விவரங்களை தனியே பதிவேட்டில் தினந்தோறும் பதிவு செய்ய வேண்டும். இந்த பதிவேடு மைய சமையல் அறையில் பராமரிக்க வேண்டும்.
26. ஒவ்வொரு பள்ளிக்கும் அளிக்கும் உணவின் விவரம், உணவின் எண்ணிக்கை மற்றும் வழங்கிய நேரம் ஆகிய விவரங்களை தனியே பதிவேட்டில் தினந்தோறும் பதிவு செய்ய வேண்டும். மாதந்தோறும் இவற்றினை சான்றிட்டு பட்டி அளிக்கும் போது இணைத்து வழங்க வேண்டும்.
27. உணவின் தரம் குறித்த பதிவேடு, புகார் பதிவேடு மற்றும் ஆய்வு பதிவேடு மைய சமையலறையில் பராமரிக்கப்படவேண்டும்.
28. உணவு சமைத்த பின்னர் உணவு பாத்திரங்கள் யாவும் முறையாக மூடிபாதுகாக்க வேண்டும். ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்படின், ஒப்பந்ததாரரே அதற்கு ஏற்படும் சட்ட மற்றும் நிதி சம்பந்தமான நடைமுறைக்கு முழுப்பொறுப்பாவார்.
29. சமையலர்கள், வாகனங்கள், ஓட்டுனர்கள் மற்றும் உதவியாளர்கள் ஆகியோரை ஒப்பந்ததாரரே தன் சொந்த பொறுப்பில் பணியமர்த்திக்கொள்ள வேண்டும்.
30. பணியமர்த்தும்போது பணியாளர்களுக்கு செலுத்தவேண்டிய பணியாளர் சேமநலநிதி, பணியாளர் இன்சூரன்ஸ் (EPF/ESI) இது தவிர அரசுக்கு செலுத்த வேண்டிய வரி இனங்கள் அனைத்தும் ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும். மேலும் பணியின் போது பணியாளர்களுக்கு ஏற்படும் விபத்துகள் மற்றும் பிரச்சனைகளுக்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாவார். பெருநகர சென்னை மாநகராட்சி பொறுப்பேற்காது.
31. நிரந்தர மூடு அமைப்புடைய வாகனங்கள் மூலமே, உணவினை பாதுகாப்புடன் பள்ளிகளுக்கு எடுத்துச்செல்ல வேண்டும்.
32. வாகனத்திற்கான, டீசல், இன்சூரன்ஸ், சாலை வரி மற்றும் வாகன அனுமதி (permit) ஆகிய அனைத்து செலவினங்களும் ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும்.

33. சமையற்கூடத்திற்கான மின்கட்டணம் மற்றும் வைப்பு தொகை ஆகியவற்றினை ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும்.
34. சமையலுக்கு தேவைப்படும் சமையல் எரிவாயு உருளைகளுக்கான கட்டணத்தினை ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும்.
35. மைய சமையலறையில் உற்பத்தியாகும் குப்பைகளை மக்கும் மக்கா குப்பைகளாக தரம் பிரித்து மாநகராட்சி வாகனத்தில் அளிக்க வேண்டும். மூடியுடன் கூடிய தொட்டிகளில் குப்பைகள் சேகரித்து வைக்கப்பட வேண்டும்.
36. ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களை சமையறையிலோ அல்லது உணவு எடுத்து செல்லும்போதோ பயன்படுத்தக்கூடாது.
37. உணவு சமைப்பவர்கள் அனைவரும் சுத்தமாகவும், உரிய கால இடைவெளியில் மருத்துவ பரிசோதனை செய்து, தொற்று நோய் ஏதுமில்லை என்று உணவு பாதுகாப்பு துறையிடம் சான்று பெற வேண்டும்.
38. சமையல் பணியில் இருப்பவர்கள் உணவு பாதுகாப்பு தர விதிகளின்படி மேலங்கி மற்றும் தலைகவசம் அணிய வேண்டும்.
39. மாதம் ஒருமுறை பட்டி வழங்கப்பட வேண்டும். முன்பணம் ஏதும் மாநகராட்சியில் இருந்து வழங்கப்பட மாட்டாது.
40. ஒப்பந்ததாரர் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய அபராத தொகை, மின்கட்டணம், சமையல் எரிவாயு கட்டணம் மற்றும் பிற இனங்கள் ஏதேனும் இருப்பின், பட்டியில் பிடித்தம் செய்து வழங்கப்படும்.
41. மேற்கண்ட விதிமுறைகள் மட்டுமின்றி, அவ்வப்போது வெளியிடப்படும், அரசின் ஆணைகள், தலைமை செயலரின் வழிகாட்டு நெறிமுறைகள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் அறிவுறுத்தல்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் ஆகியவற்றினை தவறாது பின்பற்ற வேண்டும்.

**பணி பொறுப்புகள்**

**கல்வி அலுவலர்**

- முதலமைச்சர் காலை உணவு திட்டத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியில் 6 முதல் 10 வரையிலான மண்டலங்களில் திறம்பட செயல்படுத்துதல்.
- மேற்படி 1 முதல் 15 மண்டலங்கள், நிர்வாக வசதிகேற்ப அதிகரிக்கப்படுமாயின் இவ்விவரங்கள் ஒப்பந்ததாரருக்கு தெரிவித்தல்.
- பள்ளிகளின் பெயர்கள், அவற்றின் முகவரி மற்றும் பயிலும் மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கையினை ஒப்பந்ததாரருக்கு அளிக்க வேண்டும்.
- நிர்வாக வசதிகேற்ப மண்டலங்கள் விரிவுபடுத்தபடுமாயின் அந்நேர்வில் பள்ளிகளை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும்.
- இப்பணியினை வெளிநிறுவனம் மூலம் ஒப்பம் கோரி நடவடிக்கை எடுத்து செயல்படுத்துதல்
- மாதந்தோறும் ஒப்பந்ததாரர் அளிக்கும் பட்டியினை தீர்வு செய்தல்
- ஒப்பந்ததாரர் தரமான உணவினை சரியான நேரத்தில் அளித்தலை உறுதி செய்தல்
- ஒவ்வொரு மைய சமையல் கூடத்திற்கும் ஒரு உதவி கல்வி அலுவலரை பொறுப்பு அலுவலராக நியமனம் செய்தல்
- உரிய கால இடைவெளியில் ஆய்வு செய்து அறிக்கை அளித்தல்
- அரசு மற்றும் உயர் அலுவலர்கள் கோரும் அறிக்கைகளை அளித்தல்
- ஒப்பந்தாரர் ஒப்ப விதிகளை மீறும்போது அபராதம் விதித்தலை உறுதி செய்தல்.

**கூடுதல் கல்வி அலுவலர்**

- மேற்கண்ட பணி பொறுப்புகளை செயலாற்றிட கல்வி அலுவருடன் இணைந்து பணியாற்றுதல்

- பட்டி தீர்வு செய்ய தேவையான அறிக்கைகளை உதவி கல்வி அலுவலர்களிடம் இருந்தும் மற்றும் பள்ளி தலைமையாசிரியர்களிடம் இருந்தும் மைய சமையற்கூடவாரியாக பெறுதல்
- பெறப்பட்ட அறிக்கைகளை ஒப்பந்ததாரர் அளிக்கும் பட்டியுடன் சரி பார்த்தல்
- ஒப்பந்தாரர் ஒப்ப விதிகளை மீறும்போது அபராதம் விதித்தல்
- ஒப்பந்ததாருக்கு அபராதம் விதிக்கப்படின் அதனை பட்டி தீர்வு செய்யும் போது தவறாது பிடித்தம் செய்தல்.

**உதவி கல்வி அலுவலர்**

- மைய சமையற் கூடத்திற்கு முழு பொறுப்பு அலுவலர் ஆவார்
- தற்போது சமையலுக்கும் பள்ளிகளுக்கு உணவு வழங்குவதற்கும் உபயோகப்படுத்தப்பட்டு வரும் சமையல் பாத்திரங்களை உரிய இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து கையொப்பம் பெற்று ஒப்பந்ததாரரிடம் வழங்குதல்
- ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை உறுதி செய்தல் மற்றும் தரமான உணவு வழங்கப்படுவதை உறுதி செய்தல்
- உரிய நேரத்தில் காலை உணவு மாணவர்களுக்கு வழங்குவதை உறுதி செய்தல்
- பள்ளி தலைமையாசிரியரிடம் இருந்து மாதந்தோறும் பெறப்படும் அறிக்கையினை ஒப்பந்ததாரர் அளிக்கும் அறிக்கையுடன் ஒப்பிட்டு சரிபார்த்து தலைமையகத்திற்கு அறிக்கை அளித்தல்
- ஒப்பந்தாரர் ஒப்ப விதிகளை மீறும்போது அபராதம் விதித்தல்
- ஒப்பந்ததாரருக்கு தினந்தோறும் மறுநாளுக்குரிய உணவின் எண்ணிக்கையினை அளிக்க வேண்டும்.

**தலைமையாசிரியர்**

- சம்பந்தப்பட்ட பள்ளிகளில் காலை உணவு வழங்குவதில் முழு பொறுப்பு அலுவலர்
- உரிய நேரத்தில் காலை உணவு வழங்குவதை உறுதி செய்தல்
- சுத்தமான மற்றும் தரமான உணவு வழங்குவதை உறுதி செய்தல்
- தயார் செய்யப்பட்ட உணவினை குழந்தைகளுக்கு வழங்கும் முன்பு பள்ளி மேலாண்மை குழு மூலம் ஒவ்வொரு நாளும் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு உணவினை ருசி பார்க்க வேண்டும்.
- தினந்தோறும் பெறப்பட்ட உணவின் விவரம், எண்ணிக்கை மற்றும் பெறப்பட்ட நேரம் ஆகியவற்றினை தனி பதிவேட்டில் பதிவு செய்து பராமரிக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட சான்றிட்ட விவரங்களுடன் மாணவ/மாணவிகளின் தேதி வாரியான மாத வருகை பதிவேட்டின் சான்றினை தலைமையகத்திற்கு அளித்தல்.
- காலையில் வழங்கப்படும் உணவானது, மாணவ மாணவிகளின் வருகைப் பதிவேட்டில் உள்ள எண்ணிக்கைக்கு மிகாமல் இருக்க வேண்டும். கூடுதலாக உணவு வழங்கப்படின் அதற்கான தொகை வழங்கப்படமாட்டாது.
- சமைக்கப்பட்ட உணவின் தரத்தில் குறைபாடு ஏதேனும் இருப்பின் அந்த உணவினை குழந்தைகளுக்கு வழங்கக்கூடாது.
- சம்பந்தப்பட்ட உதவி கல்வி அலுவலருக்கு தினந்தோறும் மறுநாள் வழங்கப்பட வேண்டிய உணவின் எண்ணிக்கையினை அளிக்க வேண்டும்.
- ஒப்பந்ததாரர் ஒப்பந்த விதிகளை மீறும்போது அபராதம் விதிப்பதற்கு ஏதுவாக உடனடியாக கல்வி அலுவலருக்கும், கூடுதல் கல்வி அலுவலருக்கும் அறிக்கை அனுப்புதல்.

**மண்டல அலுவலர்**

- முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின்படி, தரமான மற்றும் சுத்தமான உணவு உரிய நேரத்தில் வழங்குவதை உறுதி செய்தல்
- சீரான கால இடைவெளியில் இத்திட்டத்தினை மண்டல அளவில் ஆய்வு செய்தல்

- பொறியியல் துறை, மின் துறை, பொதுசுகாதாரத்துறை ஆகிய துறைகள் மூலம் இத்திட்டத்தினை சிறப்புடன் செயல்படுத்த நடவடிக்கை எடுத்தல்
- மைய சமையற்கூடத்திற்கென தனி மின் இணைப்பு பெற நடவடிக்கை எடுத்தல்

**<u>செயற்பொறியாளர்</u>**

- சம்பந்தப்பட்ட மண்டலத்தின் செயற்பொறியாளர் மைய சமையற்கூடத்திற்கான கட்டிட வசதி, குடிநீர் வசதி, மின் வசதி ஏற்படுத்தி தருதல்

**<u>மண்டல நல அலுவலர்</u>**

- மைய சமையற்கூடத்தினை ஆய்வு செய்து சுகாதாரமுறையில் சமையற்கூடம் பராமரிப்பதை உறுதி செய்தல்
- சுகாதார ஆய்வாளர் *(SI)* மற்றும் துப்புரவு அலுவலர்களை *(SO)* கொண்டு ஆய்வு செய்து பாதுகாப்பான உணவு வழங்குவதை உறுதி செய்தல்

**<u>ஒப்பந்ததாரருக்கான அபராதம்</u>**

- **<u>கால தாமதாமாக உணவு வழங்கப்படும்போது</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.*1000* (ஒரு பள்ளிக்கு) | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர் / மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.*2000* (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்றாம் முறை | ரூ.*3000* (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்று முறைக்கு மேல் | ரூ.*5000* (ஒரு பள்ளிக்கு) | |

- **<u>தரம் குறைந்த உணவு வழங்கப்படும்போது</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.*1000* (ஒரு பள்ளிக்கு) | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர் /மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.*2000* (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்றாம் முறை | ரூ.*3000* (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்று முறைக்கு மேல் | ஒப்பம் ரத்து செய்யப்படும் | |

- **<u>உணவில் அளவு குறைவாக வழங்கப்படும்போது</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.*1000* (ஒரு பள்ளிக்கு) | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர் / மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.*2000* (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்றாம் முறை | ரூ.*3000* (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்று முறைக்கு மேல் | ஒப்பம் ரத்து செய்யப்படும் | |

- **<u>தரம் குறைந்த மூலப்பொருள்கள் மற்றும் காய்கறிகளை பயன்படுத்தும்போது</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.*1000* | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர்/ மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.*2000* | |
| மூன்றாம் முறை | ரூ.*3000* | |
| மூன்று முறைக்கு மேல் | ஒப்பம் ரத்து செய்யப்படும் | |

- **<u>உணவினை பள்ளிகளுக்கு எடுத்துசெல்லும்போது மூடப்படாத வாகனத்தினை பயன்படுத்தும்போது</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.*1000* | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர்/ மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.*2000* | |
| மூன்றாம் முறை | ரூ.*3000* | |
| மூன்று முறைக்கு மேல் | ஒப்பம் ரத்து செய்யப்படும் | |

- **<u>சமையற்கூடத்தினை சுத்தமாக பராமரிக்காத பட்சத்தில்</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.1000 | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர்/மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.2000 | |
| மூன்றாம் முறை | ரூ.3000 | |
| மூன்று முறைக்கு மேல் | ஒப்பம் ரத்து செய்யப்படும் | |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய வட்டாரம், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின்படி மத்திய வட்டாரத்தில் உள்ள 164 தொடக்க பள்ளிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகள், அரசு பள்ளிகள் மற்றும் ஆதிதிராவிடர் தொடக்க பள்ளிகள்) பயிலும் 25,468 மாணவ, மாணவியருக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தினை ஓராண்டு காலத்திற்கு வெளிநிறுவனம் மூலம் ஒப்பம் கோரி மேற்கொள்ள அனுமதிக்கும்,
2. பெருநகர சென்னை மாநகராட்சியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 13 (அட்டவணை 2ல் தெரிவிக்கப்பட்ட) மைய சமையல் கூடங்களை ஒப்பந்ததாரர் வசம் அளிக்கவும், இந்த சமையல் கூடங்களின், கட்டட பராமரிப்பு, மின் வசதி மற்றும் குடிநீர் வசதி மாநகராட்சி மூலம் ஏற்படுத்தி தரவும் மற்றும் சமையல் கூடத்தினை மாநகராட்சி மூலம் பராமரிக்க அனுமதிக்கும்,,
3. தற்போது சமையலுக்கும் பள்ளிகளுக்கு உணவு வழங்குவதற்கும் உபயோகப்படுத்தப்பட்டு வரும் சமையல் பாத்திரங்களை நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்ததாரரிடம் அளிக்கவும், (உதவி கல்வி அலுவலர் உரிய இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து கையொப்பம் பெற்று ஒப்பந்ததாரரிடம் வழங்கப்பட வேண்டும்)
4. சமையல் எரிவாயு இணைப்பு, பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பெற்று தர அனுமதிக்கும், மேலும் ஒப்பந்ததாரரால் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயுக்கான தொகையினை ஒப்பந்ததாரரே செலுத்த அனுமதிக்கும்,
5. சமையற்கூடத்தின் ஒப்பந்ததாரரால் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான கட்டணம் மற்றும் வைப்புத்தொகையினை ஒப்பந்ததாரரே செலுத்த அனுமதிக்கும்,
6. துணை ஆணையர்(கல்வி) தலைமையில் மேலே தெரிவிக்கப்பட்டவாறு ஐந்து அலுவலர்களை கொண்ட குழு அமைத்து ஒப்ப நிபந்தனைகளை நிர்ணயம் செய்ய அனுமதிக்கும்,
7. இப்பணிக்கென அரசு நிர்ணயித்த விலையின்படி (அதாவது ஒரு மாணவ/ மாணவியர்க்கு ஒரு நாளைக்கு ரூ.12.71 வீதம்) (அட்டவணை எண்.4 ) ரூ.7,44,50,604 (ரூபாய் ஏழு கோடியே நாற்பத்தி நான்கு இலட்சத்து ஐம்பதாயிரத்து அறுநூற்றி நான்கு மட்டும்) நிர்வாக செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கும், (பள்ளி செயல்படும் நாள் தோரயமாக 230 X மாணவ மாணவியர் எண்ணிக்கை 25,468X ஒரு உணவிற்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.12.71)
8. இந்த ஒப்பந்த அனுமதியில் உணவு/போக்குவரத்து உட்பட ஒப்பந்த விதிகளின் படி ஒப்பந்ததாரர் கோரும் GST/TNMWF/ESI/EPF மற்ற இனங்கள் ஏதும் இருப்பின் இவைகளுக்கான அனைத்து தொகைகளுடன் அரசு நிர்ணயித்தப்படி ஒரு நாளைக்கு ஒரு உணவிற்கு ரூ.12.71க்கு மிகாமல் ஒப்பந்தம் இருக்க அனுமதிக்கும்,
9. இப்பணியினை மேற்கொள்ள கல்வித்துறையின் மூலம் மின்னணு ஒப்பம் கோரவும்,
10. இப்பணியினை சிறப்புடன் மேற்கொள்ள உரிய அலுவலர்களுக்கு மேற்கண்டவாறு பணி நிர்ணயம் செய்ய அனுமதிக்கும்,

11. ஒப்பம் இறுதி செய்யப்பட்டு ஒப்பந்ததாரர் மூலம் இப்பணி மேற்கொள்ளும் நிலையில், அம்மா உணவகங்களில் இருந்து, மைய சமையற்கூடங்களில் பணிபுரிய தேர்வு செய்யப்பட்ட மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களை அவர்களின் வாழ்வாதாரம் கருதி மீண்டும் அந்தந்த அம்மா உணவகங்களிலேயே பணியமர்த்த அனுமதிக்கும்,
12. ஒப்பந்ததாரர் ஒப்பந்த விதிகளின்படி செயல்படாத போது அவருக்கு அபராதம் விதிக்கவும் மற்றும் ஒப்பத்தினை ரத்து செய்ய அனுமதிக்கும்,
13. மேற்கண்ட விதிமுறைகள் மட்டுமின்றி, அவ்வப்போது வெளியிடப்படும், அரசின் ஆணைகள், தலைமை செயலரின் வழிகாட்டு நெறிமுறைகள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் அறிவுறுத்தல்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை ஒப்பந்ததாரர் மூலம் செயல்படுத்த அனுமதிக்கும்,
14. இப்பணிக்கென தனியே கணக்கு குறியீடு மற்றும் பிரிவு குறியீடு நிதி நிர்வாக பிரிவின் மூலம் ரூ.7,44,50,604யை ஒதுக்கீடு செய்து வழங்க அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 14 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 20.11.2023 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.11.2023 அன்று தீர்மான எண்.66/2023ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.262/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.CMBFS/6996/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:616/2023** **பொருள் எண்.41**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – பெருநகர சென்னை மாநகராட்சியில் தெற்கு வட்டாரத்தில் உள்ள 69 பள்ளிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகள், அரசு பள்ளிகள் மற்றும் ஆதிதிராவிடர் தொடக்க பள்ளிகள்) பயிலும் 18,353 மாணவ, மாணவியருக்கு காலை உணவு திட்டத்தினை –வெளிநிறுவனம் மூலம் ஓராண்டு காலத்திற்கு ஒப்பம் கோரி பணி மேற்கொள்ள அனுமதி.**

அரசாணை (நிலை) எண்.43, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள்.27.07.2022ன்படி, முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தில் பயன் பெறும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் 1, 3, 4 மற்றும் 5 ஆகிய நான்கு மண்டலங்களில் சத்துணவு துறையின் கீழ் இயங்கும் மொத்த பள்ளிகளில் முதற்கட்டமாக 37 தொடக்க பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 5941 மாணவ / மாணவியர்களுக்கு 6 மைய சமையல் கூடங்களிலிருந்து காலை உணவானது 16.09.2022 முதல் சமைக்கப்பட்டு வழங்கப்பட்டது. பின்னர் 37 பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களிடம் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை பெறப்பட்டு, மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப காலை உணவு சமைக்கப்பட்டு தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தது.

அரசாணை (நிலை) எண்.1, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்(சந4-1) துறை, நாள்.13.01.2023ன்படி, மண்டலம்-1ல் உள்ள ஆல் இந்தியா ரேடியோ நகர் (மேற்கு) எர்ணாவூர் என்ற தொடக்கப் பள்ளியில் பயிலும் 62 மாணவ / மாணவியர்கள் காலை உணவு திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 01.02.2023 முதல் உணவு வழங்கப்பட்டதால், தற்போது 38 பள்ளிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண்.33, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்(சந4-1) துறை, நாள்.07.06.2023ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட 38 பள்ளிகள் உட்பட 358 பள்ளிகளில் நீட்டித்து முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை செயல்படுத்த அனுமதி ஆணை அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இப்பணிக்கென அரசாணை (நிலை) எண்.33, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள்.07.06.2023ன்படி, ஒரு மாணவருக்கு காலை உணவிற்கென ரூ.12.71 தொகை ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது.

தெற்கு வட்டாரத்தில் உள்ள 69 பள்ளிகளில் பயிலும் 18353 மாணவ மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் உணவு வழங்கும் இப்பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அரசாணை (நிலை) எண்.33, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்(சந4-1) துறை, நாள்.07.06.2023 தொடர்ந்து சமூக நல ஆணையர் (மு.கூ.பொ) சென்னை-15 அவர்களின் செயல்முறை ஆணை எண்.செ.மு.ந.க.எண்.3652/சஉ.தி.2(1)/2021 நாள்.15.06.2023ன்படி, இத்திட்டத்திற்காக 57 நாட்களுக்கு ரூ.4,00,45,804 விடுவிக்க ஆணை பிறப்பித்துள்ளது.

26.06.2023 அன்று நடைபெற்ற கூடுதல் தலைமை செயலர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) அவர்களின் முதலமைச்சர் காலை உணவு திட்ட கலந்தாய்வு கூட்டத்தில் துணை ஆணையர்(கல்வி) அவர்களிடம், இப்பணியினை வெளிநிறுவனம் மூலம் ஒப்பம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பணியினை வெளிநிறுவனம் மூலம் ஒப்பம் கோரி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அரசாணையின் படி வழங்கப்பட வேண்டிய காலை உணவு வகைகள்**

காலை உணவாக கீழ்கண்ட உணவுப் பட்டியலில் உள்ள ஏதேனும் ஒரு உணவானது குறிப்பிட்ட நாளில் வழங்கப்படும்.

**அட்டவணை எண்.1**

| நாள் – உணவு வகை | உணவு |
|---|---|
| திங்கட்கிழமை – உப்புமா வகை | 1. ரவா உப்புமா+காய்கறி சாம்பார்<br>2. சேமியா உப்புமா +காய்கறி சாம்பார்<br>3. அரிசி உப்புமா +காய்கறி சாம்பார்<br>4. கோதுமை ரவா உப்புமா +காய்கறி சாம்பார் |
| செவ்வாய்க்கிழமை – கிச்சடிவகை | 1. ரவா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>2. சேமியா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>3. சோள காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>4. கோதுமை ரவா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார் |
| புதன்கிழமை - பொங்கல் வகை | 1. ரவா பொங்கல் +காய்கறி சாம்பார்<br>2. வெண் பொங்கல் +காய்கறி சாம்பார் |
| வியாழக்கிழமை – உப்புமா வகை | 1. சேமியா உப்புமா +காய்கறி சாம்பார்<br>2. அரிசி உப்புமா +காய்கறி சாம்பார்<br>3. ரவா உப்புமா +காய்கறி சாம்பார்<br>4. கோதுமை ரவா உப்புமா +காய்கறி சாம்பார் |
| வெள்ளிக்கிழமை – கிச்சடிவகை | 1. ரவா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>2. சேமியா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>3. சோள காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார்<br>4. கோதுமை ரவா காய்கறி கிச்சடி + காய்கறி சாம்பார் |
| | உப்புமா/கிச்சடி/பொங்கல் = 150 - 200 கிராம் |
| | காய்கறியுடன்சாம்பார் = 100 மிகி |

தற்போது தெற்கு வட்டாரத்திற்கென கீழ்கண்ட 9 மைய சமையற்கூடங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. இந்த மைய சமையற்கூடத்திற்கு தேவையான சமையல் பாத்திரங்கள் அனைத்தும் பெருநகர சென்னை மாநகராட்சியால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை எண்.2**

| வ.எண் | மண்டலம் | தெற்கு வட்டாரத்தில் உள்ள மொத்த மைய சமையல் கூடங்களின் விவரம் |
|---|---|---|
| 1 | 11 | PUPS, Sannathi Street, Maduravoyal, Chennai- 95 |
| 2 | 11 | PUPS, 1st street, Ramasamy Nagar,Porur, Chennai -116 |
| 3 | 12 | Old CI Building, Nobel 1st Street, Alandur, Chennai |
| 4 | 13 | Amma Unavagam Building, Near Kanniyamman Koil, Kannigapuram, Velacherry main road, Guindy, Chennai -32 |
| 5 | 13 | Amma Unavagam Building, Erikkarai Road, Gandhi Nagar, Adambakkam, Chennai – 88 |
| 6 | 13 | Chennai Primary School building, Bharathidasan Street, Thiruvanmaiyur, Chennai -41 |
| 7 | 14 | Amma Unavagam, Dr Ambedkar Salai, Mahalakshmi Nagar, Madippakkam, Chennai-91 |
| 8 | 15 | Amma Unavagam Building, 2nd main road, Kanagi nagar, Chennai |
| 9 | 15 | Amma Unavagam Building, 66th cross street, Sunami Nagar, Semmancherry, Chennai. |

16.05.2023 அன்று பெறப்பட்ட Education Management Information Systems (EMIS) விவரப்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் 11 முதல் 15 வரையிலான மண்டலங்களில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்த உள்ள 69 தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், ஆதி திராவிடர் நல பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் 18,353 மாணவர்களின் எண்ணிக்கையானது மண்டல வாரியாக கீழ்கண்டவாறு பட்டியலிடப்படுகிறது.

**அட்டவணை-3**

| Zone | Schools | | | GCC and Other than GCC | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Primary | | Middle | | HS | | HSS | | Total | |
| | GCC | Other than GCC | Total | School | Student | School | Student | School | Student | School | Student | School | Student |
| 11 | 12 | 2 | 14 | 10 | 2,495 | 4 | 1,183 | 0 | 0 | 0 | 0 | 14 | 3,678 |
| 12 | 11 | 1 | 12 | 9 | 1,182 | 3 | 463 | 0 | 0 | 0 | 0 | 12 | 1,645 |
| 13 | 18 | 1 | 19 | 15 | 5,337 | 3 | 490 | 0 | 0 | 1 | 153 | 19 | 5,980 |
| 14 | 8 | 1 | 9 | 6 | 1,257 | 3 | 559 | 0 | 0 | 0 | 0 | 9 | 1,816 |
| 15 | 15 | 0 | 15 | 10 | 2,941 | 5 | 2,293 | 0 | 0 | 0 | 0 | 15 | 5,234 |
| Tot | 64 | 5 | 69 | 50 | 13,212 | 18 | 4,988 | 0 | 0 | 1 | 153 | 69 | 18,353 |

**இப்பணிக்கென தேவைப்படும் நிதி விவரம்**

**அட்டவணை எண்.4**

| | |
|---|---|
| ஒரு வருடத்திற்கு தோரயமாக ஒரு பள்ளி செயல்படும் நாட்கள் | 230 |
| மொத்தம் தெற்கு வட்டாரத்தில் செயல்பட்டு வரும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை | 18,353 |
| ஒரு நாளைக்கு ஒரு மாணவனுக்கு காலை உணவு திட்டத்திற்கு அரசினால் நிர்ணயிக்கப்பட்ட தொகை (உணவு வழங்க மட்டும் ) | ரூ 12.71 |
| மொத்தம் இப்பணிக்கென தேவைப்படும் தொகை 18,353X ரூ.12.71x230 = | ரூ.5,36,51,324.90 |
| முழு மதிப்பில் | ரூ. 5,36,51,325 |

இப்பணியினை சிறப்பாக வெளிநிறுவனம் மூலம் செயல்படுத்தவும், ஒப்ப நிபந்தனைகளை நிர்ணயிக்கவும், துணை ஆணையர் (கல்வி) தலைமையில் கீழ்கண்ட அலுவலர்களை கொண்ட குழு அமைக்க தீர்மானிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. கல்வி அலுவலர்
2. கூடுதல் கல்வி அலுவலர்
3. நிதி ஆலோசகர்
4. தலைமை பொறியாளர்(பொது)
5. மேற்பார்வை பொறியாளர்( இயந்திர பொறியியல் துறை)

**பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து ஒப்பந்ததாரருக்கு மாநகராட்சி அளிக்கும் வசதிகள்**

1. தெற்கு வட்டாரத்தில 9 மைய சமையல் கூடங்கள் வழங்கப்படும்.
2. கட்டிடத்தின் பராமரிப்பு மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும்.
3. குடிநீர் வசதி செய்து தரப்படும்.
4. சமையலுக்கு தேவையான பாத்திரங்கள் வழங்கப்படும்.
5. மின்சார வசதி செய்து தரப்படும்.
6. சமையல் எரிவாயு இணைப்பு மாநகராட்சி மூலம் பெற்று தரப்படும்.

**<u>ஒப்பந்ததாரர் மேற்கொள்ள நிர்ணயிக்கப்பட்ட பணிகள்</u>**

1. அட்டவணை 1 ல் தெரிவிக்கப்பட்டவாறு காலை உணவு வழங்கப்பட வேண்டும்.
2. முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அனைத்து பள்ளிகளுக்கும் ஒரே மாதிரியான காலை உணவு வழங்கப்பட வேண்டும். இது குறித்து ஒரு மாதத்திற்கான உணவு வகை பட்டியல் கல்வித்துறையின் மூலம் வழங்கப்படும். இதனை எந்த காரணம் கொண்டும் பெருநகர சென்னை மாநகராட்சியின் முன் அனுமதியின்றி மாற்றக்கூடாது.
3. தினந்தோறும் சமைக்க வேண்டிய உணவின் எண்ணிக்கையை உணவு சமைப்பதற்கு முதல் நாள் சம்பந்தப்பட்ட உதவி கல்வி அலுவலர் அவர்களிடம் பெற்றுக்கொள்ள வேண்டும்.
4. காலை 8.00 மணிக்கு பள்ளியில் காலை உணவு வழங்கப்பட வேண்டும். கால தாமதம் ஏற்படக்கூடாது.
5. காலை 8.00 மணிக்கு மேல் வழங்கப்படும் உணவிற்கு தொகை வழங்கப்பட மாட்டாது. மேலும், குழுவால் நிர்ணயிக்கப்படும் அபராதத்தொகையும் விதிக்கப்படும்.
6. பெருநகர சென்னை மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள 9 மைய சமையற்கூடங்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.
7. நிர்வாக வசதிகேற்ப மண்டலங்கள் விரிவுப்படுத்தபடுமாயின் அந்நேர்வில் பள்ளிகளை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும்.
8. ஒரு மாணவ/மாணவிக்கு நாளொன்றிற்கு வழங்கப்படும் காலை உணவுக்கான மூலப்பொருள்களின் அளவு 50 கிராம் அரிசி/ரவை/கோதுமை ரவை/சேமியா உள்ளூரில் /அந்தந்த இடங்களில் விளையும் சிறுதானியங்கள்/சாம்பாருக்கான பருப்பு 15 கிராம் மற்றும் உள்ளூரில் கிடைக்கக்கூடிய காய்கறிகள்(சமைத்தப்பின் 150-200 கிராம் உணவு மற்றும் 100 மிகி காய்கறியுடன் கூடிய சாம்பார்), ஒரு வாரத்தில் குறைந்தது 2 நாட்களாவது உள்ளூரில் கிடைக்கக்கூடிய சிறு தானியங்களால் தயாரிக்கப்பட்ட காலை உணவு வழங்கப்பட வேண்டும்.
9. இஸ்லாமிய பள்ளிகளுக்கு வெள்ளிக்கிழமை விடுமுறை விடப்படுவதாலும், சனிக்கிழமை பள்ளி வேலை நாளாக இருப்பதாலும் வெள்ளிக்கிழமை வழங்கப்பட வேண்டிய உணவினை சனிக்கிழமை அன்று அந்த பள்ளிகளுக்கு வழங்க வேண்டும்.
10. சனிக்கிழமை விடுமுறை நாளில் பள்ளி வேலை நாளாக அரசு அறிவிக்கும்பட்சத்தில் புதன்கிழமை வழங்க வேண்டிய காய்கறி சாம்பருடன் கூடிய பொங்கல் வழங்கப்பட வேண்டும். இது குறித்து கல்வித்துறை மூலம் தெரிவிக்கப்படும்.
11. காலை உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களின் தரம் FSSAI நெறிமுறைகளுக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.
12. காலை உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் இயல்பான நிறம், மணம் உடையதாகவும், வேறு வெளிப்பொருள்கள் (Extraneous substance) கலக்காமலும் சுத்தமாக இருக்க வேண்டும். மேலும், பதப்படுத்தப்பட்ட உணவுகளை கொண்டு சமைக்கக்கூடாது.
13. உள்ளூரில் சமைக்கப் பயன்படுத்தும் சமையல் எண்ணெய் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். ஒருமுறை பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய்யை கண்டிப்பாக மீண்டும் பயன்படுத்தக்கூடாது.
14. உணவு சமைக்கப் பயன்படுத்தப்படும் மசாலா பொருள்கள் தரமானதாகவும், சுத்தமானதாகவும் இருக்க வேண்டும்.
15. காய்கறிகளின் தரத்தினை உறுதி செய்வதுடன் அவற்றை சமைப்பதற்கு முன் தண்ணீரில் நன்கு கழுவி பயன்படுத்தப்படவேண்டும்.

16. காலாவதியான மளிகை பொருள்கள் மற்றும் கெட்டுபோன அழுகிய காய்கறிகளை பயன்படுத்தக்கூடாது.
17. அரிசி, சிறுதானியங்கள், மளிகை பொருள்கள் மற்றும் காய்கறிகள் ஒப்பந்ததாரரே உணவு பாதுகாப்பு தர நிர்ணயத்திற்குட்பட்டு கொள்முதல் செய்யவேண்டும்.
18. சமைக்கப்பட்ட உணவின் மாதிரியை ஒவ்வொரு நாளும் பாதுகாப்பாக வைக்க வேண்டும். தேவைப்படும் நேரங்களில் இதனை பரிசோதனைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
19. தயார் செய்யப்பட்ட உணவினை குழந்தைகளுக்கு வழங்கும் முன்பு பள்ளி மேலாண்மை குழு ஒவ்வொரு நாளும் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு உணவினை ருசி பார்க்கும்.
20. சமைக்கப்பட்ட உணவின் தரத்தில் குறைபாடு ஏதேனும் இருப்பின் அந்த உணவினை குழந்தைகளுக்கு வழங்கக்கூடாது.
21. பெருநகர சென்னை மாநகராட்சியில் வழங்கப்படும் பாத்திரங்கள் தவிர கூடுதலாக ஒப்பந்ததாரருக்கு தேவைப்படும் பாத்திரங்கள் அவர்களே கொள்முதல் செய்து கொள்ள வேண்டும்.
22. பொருட்கள் (மளிகை பொருள்கள்/காய்கறிகள்) இருப்பு அறையில் எலி (Rat proof) புகாவண்ணம் பாதுகாப்பு வசதி ஏற்படுத்த வேண்டும்.
23. சமையலறை கூடம் மற்றும் உணவு வழங்கும் இடங்கள் சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டும். மேலும் சமையலறையில் ஈ தடுப்பு (Anti fly measures) நடவடிக்கைகள் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
24. தேவையான தீயணைப்பு பொருத்தி தீயணைப்பு துறையினரிடம் உரிய சான்று பெறவேண்டும்.
25. ஒவ்வொரு பள்ளிக்கும் அனுப்பப்படும் உணவு விவரங்களை தனியே பதிவேட்டில் தினந்தோறும் பதிவு செய்ய வேண்டும். இந்த பதிவேடு மைய சமையல் அறையில் பராமரிக்க வேண்டும்.
26. ஒவ்வொரு பள்ளிக்கும் அளிக்கும் உணவின் விவரம், உணவின் எண்ணிக்கை மற்றும் வழங்கிய நேரம் ஆகிய விவரங்களை தனியே பதிவேட்டில் தினந்தோறும் பதிவு செய்ய வேண்டும். மாதந்தோறும் இவற்றினை சான்றிட்டு பட்டி அளிக்கும் போது இணைத்து வழங்க வேண்டும்.
27. உணவின் தரம் குறித்த பதிவேடு, புகார் பதிவேடு மற்றும் ஆய்வு பதிவேடு மைய சமையலறையில் பராமரிக்கப்படவேண்டும்.
28. உணவு சமைத்த பின்னர் உணவு பாத்திரங்கள் யாவும் முறையாக மூடிபாதுகாக்க வேண்டும். ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்படின், ஒப்பந்ததாரரே அதற்கு ஏற்படும் சட்ட மற்றும் நிதி சம்பந்தமான நடைமுறைக்கு முழுப்பொறுப்பாவார்.
29. சமையலர்கள், வாகனங்கள், ஓட்டுனர்கள் மற்றும் உதவியாளர்கள் ஆகியோரை ஒப்பந்ததாரரே தன் சொந்த பொறுப்பில் பணியமர்த்திக்கொள்ள வேண்டும்.
30. பணிமர்த்தும்போது பணியாளர்களுக்கு செலுத்தவேண்டிய பணியாளர் சேமநலநிதி, பணியாளர் இன்சூரன்ஸ் (EPF/ESI) இது தவிர அரசுக்கு செலுத்த வேண்டிய வரி இனங்கள் அனைத்தும் ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும். மேலும் பணியின் போது பணியாளர்களுக்கு ஏற்படும் விபத்துகள் மற்றும் பிரச்சனைகளுக்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாவார். பெருநகர சென்னை மாநகராட்சி பொறுப்பேற்காது.
31. நிரந்தர மூடு அமைப்புடைய வாகனங்கள் மூலமே, உணவினை பாதுகாப்புடன் பள்ளிகளுக்கு எடுத்துச்செல்ல வேண்டும்.
32. வாகனத்திற்கான, டீசல், இன்சூரன்ஸ், சாலை வரி மற்றும் வாகன அனுமதி (permit) ஆகிய அனைத்து செலவினங்களும் ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும்.

33. சமையற்கூடத்திற்கான மின்கட்டணம் மற்றும் வைப்பு தொகை ஆகியவற்றினை ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும்.
34. சமையலுக்கு தேவைப்படும் சமையல் எரிவாயு உருளைகளுக்கான கட்டணத்தினை ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும்
35. மைய சமையலறையில் உற்பத்தியாகும் குப்பைகளை மக்கும் மக்கா குப்பைகளாக தரம் பிரித்து மாநகராட்சி வாகனத்தில் அளிக்க வேண்டும். மூடியுடன் கூடிய தொட்டிகளில் குப்பைகள் சேகரித்து வைக்கப்பட வேண்டும்.
36. ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களை சமையறையிலோ அல்லது உணவு எடுத்து செல்லும்போதோ பயன்படுத்தக்கூடாது.
37. உணவு சமைப்பவர்கள் அனைவரும் சுத்தமாகவும், உரிய கால இடைவெளியில் மருத்துவ பரிசோதனை செய்து, தொற்று நோய் ஏதுமில்லை என்று உணவு பாதுகாப்பு துறையிடம் சான்று பெற வேண்டும்.
38. சமையல் பணியில் இருப்பவர்கள் உணவு பாதுகாப்பு தர விதிகளின்படி மேலங்கி மற்றும் தலைகவசம் அணிய வேண்டும்.
39. மாதம் ஒருமுறை பட்டி வழங்கப்பட வேண்டும். முன்பணம் ஏதும் மாநகராட்சியில் இருந்து வழங்கப்பட மாட்டாது.
40. ஒப்பந்ததாரர் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய அபராத தொகை, மின்கட்டணம், சமையல் எரிவாயு கட்டணம் மற்றும் பிற இனங்கள் ஏதேனும் இருப்பின், பட்டியில் பிடித்தம் செய்து வழங்கப்படும்.
41. மேற்கண்ட விதிமுறைகள் மட்டுமின்றி, அவ்வப்போது வெளியிடப்படும், அரசின் ஆணைகள், தலைமை செயலரின் வழிகாட்டு நெறிமுறைகள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் அறிவுறுத்தல்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் ஆகியவற்றினை தவறாது பின்பற்ற வேண்டும்.

**பணி பொறுப்புகள்**

**கல்வி அலுவலர்**

- முதலமைச்சர் காலை உணவு திட்டத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியில் 6 முதல் 10 வரையிலான மண்டலங்களில் திறம்பட செயல்படுத்துதல்.
- மேற்படி 1 முதல் 15 மண்டலங்கள், நிர்வாக வசதிகேற்ப அதிகரிக்கப்படுமாயின் இவ்விவரங்கள் ஒப்பந்ததாரருக்கு தெரிவித்தல்.
- பள்ளிகளின் பெயர்கள், அவற்றின் முகவரி மற்றும் பயிலும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கையினை ஒப்பந்ததாரருக்கு அளிக்க வேண்டும்.
- நிர்வாக வசதிகேற்ப மண்டலங்கள் விரிவுபடுத்தபடுமாயின் அந்நேர்வில் பள்ளிகளை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும்.
- இப்பணியினை வெளிநிறுவனம் மூலம் ஒப்பம் கோரி நடவடிக்கை எடுத்து செயல்படுத்துதல்
- மாதந்தோறும் ஒப்பந்ததாரர் அளிக்கும் பட்டியினை தீர்வு செய்தல்
- ஒப்பந்ததாரர் தரமான உணவினை சரியான நேரத்தில் அளித்தலை உறுதி செய்தல்
- ஒவ்வொரு மைய சமையல் கூடத்திற்கும் ஒரு உதவி கல்வி அலுவலரை பொறுப்பு அலுவலராக நியமனம் செய்தல்
- உரிய கால இடைவெளியில் ஆய்வு செய்து அறிக்கை அளித்தல்
- அரசு மற்றும் உயர் அலுவலர்கள் கோரும் அறிக்கைகளை அளித்தல்
- ஒப்பந்தாரர் ஒப்ப விதிகளை மீறும்போது அபராதம் விதித்தலை உறுதி செய்தல்.

**கூடுதல் கல்வி அலுவலர்**

- மேற்கண்ட பணி பொறுப்புகளை செயலாற்றிட கல்வி அலுவலருடன் இணைந்து பணியாற்றுதல்
- பட்டி தீர்வு செய்ய தேவையான அறிக்கைகளை உதவி கல்வி அலுவலர்களிடம் இருந்தும் மற்றும் பள்ளி தலைமையாசிரியர்களிடம் இருந்தும் மைய சமையற்கூடவாரியாக பெறுதல்
- பெறப்பட்ட அறிக்கைகளை ஒப்பந்ததாரர் அளிக்கும் பட்டியுடன் சரி பார்த்தல்
- ஒப்பந்ததாரர் ஒப்ப விதிகளை மீறும்போது அபராதம் விதித்தல்
- ஒப்பந்ததாருக்கு அபராதம் விதிக்கப்படின் அதனை பட்டி தீர்வு செய்யும் போது தவறாது பிடித்தம் செய்தல்.

**உதவி கல்வி அலுவலர்**

- மைய சமையற் கூடத்திற்கு முழு பொறுப்பு அலுவலர் ஆவார்
- தற்போது சமையலுக்கும் பள்ளிகளுக்கு உணவு வழங்குவதற்கும் உபயோகப்படுத்தப்பட்டு வரும் சமையல் பாத்திரங்களை உரிய இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து கையொப்பம் பெற்று ஒப்பந்ததாரரிடம் வழங்குதல்
- ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை உறுதி செய்தல் மற்றும் தரமான உணவு வழங்கப்படுவதை உறுதி செய்தல்
- உரிய நேரத்தில் காலை உணவு மாணவர்களுக்கு வழங்குவதை உறுதி செய்தல்
- பள்ளி தலைமையாசிரியரிடம் இருந்து மாதந்தோறும் பெறப்படும் அறிக்கையினை ஒப்பந்ததாரர் அளிக்கும் அறிக்கையுடன் ஒப்பிட்டு சரிபார்த்து தலைமையகத்திற்கு அறிக்கை அளித்தல்
- ஒப்பந்ததாரர் ஒப்ப விதிகளை மீறும்போது அபராதம் விதித்தல்
- ஒப்பந்ததாரருக்கு தினந்தோறும் மறுநாளுக்குரிய உணவின் எண்ணிக்கையினை அளிக்க வேண்டும்.

**தலைமையாசிரியர்**

- சம்பந்தப்பட்ட பள்ளிகளில் காலை உணவு வழங்குவதில் முழு பொறுப்பு அலுவலர்
- உரிய நேரத்தில் காலை உணவு வழங்குவதை உறுதி செய்தல்
- சுத்தமான மற்றும் தரமான உணவு வழங்குவதை உறுதி செய்தல்
- தயார் செய்யப்பட்ட உணவினை குழந்தைகளுக்கு வழங்கும் முன்பு பள்ளி மேலாண்மை குழு மூலம் ஒவ்வொரு நாளும் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு உணவினை ருசி பார்க்க வேண்டும்.
- தினந்தோறும் பெறப்பட்ட உணவின் விவரம், எண்ணிக்கை மற்றும் பெறப்பட்ட நேரம் ஆகியவற்றினை தனி பதிவேட்டில் பதிவு செய்து பராமரிக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட சான்றிட்ட விவரங்களுடன் மாணவ/மாணவிகளின் தேதி வாரியான மாத வருகை பதிவேட்டின் சான்றினை தலைமையகத்திற்கு அளித்தல்.
- காலையில் வழங்கப்படும் உணவானது, மாணவ மாணவிகளின் வருகைப்பதிவேட்டில் உள்ள எண்ணிக்கைக்கு மிகாமல் இருக்க வேண்டும். கூடுதலாக உணவு வழங்கப்படின் அதற்கான தொகை வழங்கப்படமாட்டாது.
- சமைக்கப்பட்ட உணவின் தரத்தில் குறைபாடு ஏதேனும் இருப்பின் அந்த உணவினை குழந்தைகளுக்கு வழங்கக்கூடாது.
- சம்பந்தப்பட்ட உதவி கல்வி அலுவலருக்கு தினந்தோறும் மறுநாள் வழங்கப்பட வேண்டிய உணவின் எண்ணிக்கையினை அளிக்க வேண்டும்.
- ஒப்பந்ததாரர் ஒப்பந்த விதிகளை மீறும்போது அபராதம் விதிப்பதற்கு ஏதுவாக உடனடியாக கல்வி அலுவலருக்கும், கூடுதல் கல்வி அலுவலருக்கும் அறிக்கை அனுப்புதல்.

**<u>மண்டல அலுவலர்</u>**

- முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின்படி, தரமான மற்றும் சுத்தமான உணவு உரிய நேரத்தில் வழங்குவதை உறுதி செய்தல்
- சீரான கால இடைவெளியில் இத்திட்டத்தினை மண்டல அளவில் ஆய்வு செய்தல்
- பொறியியல் துறை, மின் துறை, பொதுசுகாதாரத்துறை ஆகிய துறைகள் மூலம் இத்திட்டத்தினை சிறப்புடன் செயல்படுத்த நடவடிக்கை எடுத்தல்
- மைய சமையற்கூடத்திற்கென தனி மின் இணைப்பு பெற நடவடிக்கை எடுத்தல்

**<u>செயற்பொறியாளர்</u>**

- சம்பந்தப்பட்ட மண்டலத்தின் செயற்பொறியாளர் மைய சமையற்கூடத்திற்கான கட்டிட வசதி, குடிநீர் வசதி, மின் வசதி ஏற்படுத்தி தருதல்

**<u>மண்டல நல அலுவலர்</u>**

- மைய சமையற்கூடத்தினை ஆய்வு செய்து சுகாதாரமுறையில் சமையற்கூடம் பராமரிப்பதை உறுதி செய்தல்
- சுகாதார ஆய்வாளர் (SI) மற்றும் துப்புரவு அலுவலர்களை (SO) கொண்டு ஆய்வு செய்து பாதுகாப்பான உணவு வழங்குவதை உறுதி செய்தல்

**<u>ஒப்பந்ததாரருக்கான அபராதம்</u>**

- **<u>கால தாமதாமாக உணவு வழங்கப்படும்போது</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.1000 (ஒரு பள்ளிக்கு) | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர் /மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.2000 (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்றாம் முறை | ரூ.3000 (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்று முறைக்கு மேல் | ரூ.5000 (ஒரு பள்ளிக்கு) | |

- **<u>தரம் குறைந்த உணவு வழங்கப்படும்போது</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.1000 (ஒரு பள்ளிக்கு) | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர் /மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.2000 (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்றாம் முறை | ரூ.3000 (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்று முறைக்கு மேல் | ஒப்பம் ரத்து செய்யப்படும் | |

- **<u>உணவில் அளவு குறைவாக வழங்கப்படும்போது</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.1000 (ஒரு பள்ளிக்கு) | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர் /மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.2000 (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்றாம் முறை | ரூ.3000 (ஒரு பள்ளிக்கு) | |
| மூன்று முறைக்கு மேல் | ஒப்பம் ரத்து செய்யப்படும் | |

- **<u>தரம் குறைந்த மூலப்பொருள்கள் மற்றும் காய்கறிகளை பயன்படுத்தும்போது</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.1000 | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர்/ மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.2000 | |
| மூன்றாம் முறை | ரூ.3000 | |
| மூன்று முறைக்கு மேல் | ஒப்பம் ரத்து செய்யப்படும் | |

- **<u>உணவினை பள்ளிகளுக்கு எடுத்து செல்லும்போது மூடப்படாத வாகனத்தினை பயன்படுத்தும்போது</u>**

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.1000 | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர்/ மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.2000 | |
| மூன்றாம் முறை | ரூ.3000 | |
| மூன்று முறைக்கு மேல் | ஒப்பம் ரத்து செய்யப்படும் | |

- <u>**சமையற்கூடத்தினை சுத்தமாக பராமரிக்காத பட்சத்தில்**</u>

| | | |
|---|---|---|
| முதல் முறை | ரூ.1000 | தலைமையாசிரியர்/உதவி கல்வி அலுவலர்/கூடுதல் கல்வி அலுவலர்/ கல்வி அலுவலர்/ மண்டல அலுவலர் |
| இரண்டாம் முறை | ரூ.2000 | |
| மூன்றாம் முறை | ரூ.3000 | |
| மூன்று முறைக்கு மேல் | ஒப்பம் ரத்து செய்யப்படும் | |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, தெற்கு வட்டாரம், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின்படி தெற்கு வட்டாரத்தில் உள்ள 69 தொடக்க பள்ளிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகள், அரசு பள்ளிகள் மற்றும் ஆதிதிராவிடர் தொடக்க பள்ளிகள்) பயிலும் 18,353 மாணவ, மாணவியருக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தினை ஓராண்டு காலத்திற்கு வெளிநிறுவனம் மூலம் ஒப்பம் கோரி மேற்கொள்ள அனுமதிக்கும்,
2. பெருநகர சென்னை மாநகராட்சியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 9 (ஒன்பது) (அட்டவணை 2ல் தெரிவிக்கப்பட்ட) மைய சமையல் கூடங்களை ஒப்பந்ததாரர் வசம் அளிக்கவும், இந்த சமையல் கூடங்களின், கட்டட பராமரிப்பு, மின் வசதி மற்றும் குடிநீர் வசதி மாநகராட்சி மூலம் ஏற்படுத்தி தரவும் மற்றும் சமையல் கூடத்தினை மாநகராட்சி மூலம் பராமரிக்க அனுமதிக்கும் ,
3. தற்போது சமையலுக்கும் பள்ளிகளுக்கு உணவு வழங்குவதற்கும் உபயோகப்படுத்தப்பட்டு வரும் சமையல் பாத்திரங்களை நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்ததாரரிடம் அளிக்கவும், (உதவி கல்வி அலுவலர் உரிய இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து கையொப்பம் பெற்று ஒப்பந்ததாரரிடம் வழங்கப்பட வேண்டும்)
4. சமையல் எரிவாயு இணைப்பு, பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பெற்று தர அனுமதிக்கும், மேலும் ஒப்பந்ததாரரால் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயுக்கான தொகையினை ஒப்பந்ததாரரே செலுத்த அனுமதிக்கும்,
5. சமையற்கூடத்தின் ஒப்பந்ததாரரால் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான கட்டணம் மற்றும் வைப்புத்தொகையினை ஒப்பந்ததாரரே செலுத்த அனுமதிக்கும்,
6. துணை ஆணையர்(கல்வி) தலைமையில் மேலே தெரிவிக்கப்பட்டவாறு ஐந்து அலுவலர்களை கொண்ட குழு அமைத்து ஒப்ப நிபந்தனைகளை நிர்ணயம் செய்ய அனுமதிக்கும்,
7. இப்பணிக்கென அரசு நிர்ணயித்த விலையின்படி (அதாவது ஒரு மாணவ/மாணவியர்க்கு ஒரு நாளைக்கு ரூ. 12.71 வீதம்) (அட்டவணை எண்.4 ) ரூ.5,36,51,325 (ரூபாய் ஐந்து கோடியே முப்பத்தி ஆறு லட்சத்து ஐம்பத்தோராயிரத்து முன்னூற்றி இருபத்தி ஐந்து மட்டும்) நிர்வாக செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கும், (பள்ளி செயல்படும் நாள் தோரயமாக 230 x மாணவ மாணவியர் எண்ணிக்கை 18,353 x ஒரு உணவிற்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.12.71)
8. இந்த ஒப்பந்த அனுமதியில் உணவு/போக்குவரத்து உட்பட ஒப்பந்த விதிகளின் படி ஒப்பந்ததாரர் கோரும் GST/TNMWF/ESI/EPF மற்ற இனங்கள் ஏதும் இருப்பின் இவைகளுக்கான அனைத்து தொகைகளுடன் அரசு நிர்ணயித்தப்படி ஒரு நாளைக்கு ஒரு உணவிற்கு ரூ.12.71க்கு மிகாமல் ஒப்பந்தம் இருக்க அனுமதியும்,
9. இப்பணியினை மேற்கொள்ள கல்வித்துறையின் மூலம் மின்னணு ஒப்பம் கோரவும்,
10. இப்பணியினை சிறப்புடன் மேற்கொள்ள உரிய அலுவலர்களுக்கு மேற்கண்டவாறு பணி நிர்ணயம் செய்ய அனுமதிக்கும்,

11. ஒப்பம் இறுதி செய்யப்பட்டு ஒப்பந்ததாரர் மூலம் இப்பணி மேற்கொள்ளும் நிலையில், அம்மா உணவகங்களில் இருந்து, மைய சமையற்கூடங்களில் பணிபுரிய தேர்வு செய்யப்பட்ட மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களை அவர்களின் வாழ்வாதாரம் கருதி மீண்டும் அந்தந்த அம்மா உணவகங்களிலேயே பணியமர்த்த அனுமதிக்கும்,
12. ஒப்பந்ததாரர் ஒப்பந்த விதிகளின்படி செயல்படாத போது அவருக்கு அபராதம் விதிக்கவும் மற்றும் ஒப்பத்தினை ரத்து செய்ய அனுமதிக்கும்,
13. மேற்கண்ட விதிமுறைகள் மட்டுமின்றி, அவ்வப்போது வெளியிடப்படும், அரசின் ஆணைகள், தலைமை செயலரின் வழிகாட்டு நெறிமுறைகள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் அறிவுறுத்தல்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை ஒப்பந்ததாரர் மூலம் செயல்படுத்த அனுமதிக்கும்,
14. இப்பணிக்கென தனியே கணக்கு குறியீடு மற்றும் பிரிவு குறியீடு நிதி நிர்வாக பிரிவின் மூலம் ரூ.5,36,51,325யை ஒதுக்கீடு செய்து வழங்க அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 14 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 20.11.2023 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.11.2023 அன்று தீர்மான எண்.67/2023ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.263/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.அ1/5325/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.09.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:617/2023** **பொருள் எண்.42**

**பெருநகர சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – மாண்புமிகு மேயர் அவர்களின் 2023-2024ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பு எண். 13 – சென்னைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி ஏற்படுத்தும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் விதமாக ஐஐடி-மெட்ராஸ், ஐஐஎம்-பெங்களுர், டெல்லி பல்கலைக்கழகம் என்பதற்கு மாற்றாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்களுக்கும் மற்றும் அமெரிக்கன் சர்வதேச பள்ளி, சென்னை போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு பணியின் அவசரம் கருதி செயல்படுத்தப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

மாண்புமிகு மேயர் அவர்களின் 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பு எண். 13ன்படி சென்னைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி ஏற்படுத்திய ஆசிரியர்களை விடுமுறை நாட்களில், கல்விச் சுற்றுலாவாக நாட்டின் முதன்மையான கல்வி நிறுவனங்களுக்கு (எ.கா. ஐஐடி-மெட்ராஸ், ஐஐஎம்-பெங்களுர், டெல்லி பல்கலைக்கழகம்) அழைத்துச் செல்லப்படுவர். இதற்காக ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக மார்ச் மற்றும் ஏப்ரல் 2022ல் பொதுத் தேர்வில் சென்னைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி ஏற்படுத்திய ஆசிரியர்களை விடுமுறை நாட்களில், கல்விச்சுற்றுலா (எ.கா. ஐஐடி-மெட்ராஸ், ஐஐஎம்-பெங்களுர், டெல்லி பல்கலைக்கழகம்) அழைத்துச் செல்வதற்கு கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின் 07.06.2023 நாளிட்ட அனுமதியும் மற்றும் மன்றத் தீர்மான எண். 350/2023, நாள்: 30.06.2023ன்படி மன்றத்தின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அறிவிப்பில் அறிவிக்கப்பட்டுள்ள சென்னைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி ஏற்படுத்திய ஆசிரியர்களை விடுமுறை நாட்களில், கல்விச் சுற்றுலாவாக நாட்டின் முதன்மையான கல்வி நிறுவனங்களுக்கு (எ.கா. ஐஐடி-மெட்ராஸ், ஐஐஎம்-பெங்களுர், டெல்லி பல்கலைக்கழகம்) அழைத்துச் செல்லப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளதில், தற்போது, ஆசிரியர்களை ஐஐஎம்-பெங்களுர், டெல்லி பல்கலைக்கழகம் போன்ற இடங்களுக்கு அழைத்து செல்வதால் ஏற்படும் கால விரயம் தவிர்க்கும் பொருட்டு தமிழ்நாட்டிற்குள் உள்ள சுற்றுலா தலங்களான ஏற்காடு, ஒக்கேனக்கல், கொடைக்கானல் மற்றும் அமெரிக்கன் சர்வதேச பள்ளி, சென்னை போன்ற இடங்களுக்கு மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் பாதிக்காதவண்ணம் சனி மற்றும் ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களை உட்படுத்தி 3 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் அழைத்துச் செல்வதற்கு அவசரம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு ரூ.20,00,000/- முன்பணம் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

எனவே,

1. சென்னைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி ஏற்படுத்திய 408 ஆசிரியர்களை ஐஐடி-மெட்ராஸ், ஐஐஎம்-பெங்களுர், டெல்லி பல்கலைக்கழகம் போன்ற இடங்களுக்கு அழைத்து செல்வதால் ஏற்படும் கால விரயம் தவிர்க்கும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள ஏற்காடு, ஒக்கேனக்கல், கொடைக்கானல் போன்ற சுற்றுலா தலங்களுக்கு 3 நாட்கள் மற்றும் அமெரிக்கன் சர்வதேசப்பள்ளி, சென்னை அழைத்துச் செல்லப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,

2. மேற்குறிப்பிட்ட சுற்றுலா அழைத்துச் செல்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட செலவினத் தொகையான ரூ.20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) முன்பணமாக கல்வி அலுவலர் அவர்களின் பெயரில் கணக்கு குறியீட்டு எண். 80-82-01. 460-50-01-19 என்ற முன்பணக் குறியீட்டில் பெறப்பட்ட முன்பணத் தொகையினை கணக்கு குறியீட்டு எண். 80-82-01. 230-11-02-02 கல்வி செலவினங்கள் என்ற நிதி ஒதுக்கீட்டில் நேர் செய்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 2 ஆகிய இனங்களுக்கு பணியின் அவசரம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் ஒப்புதலுடன் செயல்படுத்தப்பட்டதற்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 20.11.2023 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.11.2023 அன்று தீர்மான எண்.68/2023ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"27.11.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.264/2023, நாள்.27.11.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.8.ந.க.எண். இ1/ 8736/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:618/2023** **பொருள் எண்.43**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 8 அண்ணாநகர் - கோட்டம் - 106, என்.ஜி.ஓ காலனி 2வது குறுக்கு தெருவில் உள்ள மிகவும் பழுதடைந்த அங்கன்வாடி கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 8, அண்ணாநகர், கோட்டம் - 106ல் என்.ஜி.ஓ காலனி 2வது குறுக்கு தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் 1993-1994 ஆம் ஆண்டு ரூ.2,07,876.00/- செலவில் கட்டப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டிட சுவர்கள் இடிந்து விரிசல் ஏற்பட்டு மற்றும் மேற்கூரையும் சேதமடைந்து மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது.

எனவே, இந்த அங்கன்வாடி கட்டிடம் பயன்படுத்தும் வகையில் இல்லாததால் இந்த கட்டிடத்தை இடித்து விட்டு அதே இடத்தில் புதிதாக பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அங்கன்வாடி கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு ஒப்புதல் கடிதம் பெறப்பட்டு மதிப்பீடு ரூ.60,00,000/-க்கு தயார் செய்யப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் செயல்படுத்திட நிர்வாக அனுமதிக்காக கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே சிதிலமடைந்துள்ள கட்டிடத்தை இடித்து அகற்றுவது அவசியமாகிறது. அவ்வாறு பழைய கட்டிடத்தை அகற்றிய பின்னர் புதியகட்டிடம் கட்டிட ஏதுவாக இருக்கும். மேலும் மேற்கண்ட கட்டிடத்தின் புத்தக மதிப்பு மற்றும் பிற விபரங்கள் கீழ்கண்டுள்ளவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பு | ரூ. 99,755.33/- |
| 2 | இடிக்கப்படவுள்ள கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 1993-1994ஆம் ஆண்டு |
| 3 | இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் பரப்பளவு | 81.11 சதுர மீட்டர் |
| 4 | கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | பயன்பாட்டில் இல்லை |
| 5 | கட்டிடம் இடித்த பின்பு எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டப்படும் |
| 6 | இடிப்பதற்கு அவசியம் என்ன? | மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. |
| 7 | வார்டு குழு தீர்மான எண். | தீர்மான எண்.867, நாள்.09.10.2023 |

எனவே, மண்டலம் - 8, அண்ணாநகர், கோட்டம் - 106, என்.ஜி.ஓ காலனி 2வது குறுக்கு தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ஏற்கனவே நிலைக்குழு(பணிகள்)வின் கூட்டம் 23.11.2023 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 28.11.2023 அன்று தீர்மான எண்.204/2023ன்படி நிலைக்குழு(பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**பொ.சு.து/ம.ந.அ(பு.வி)/நக.எண்.4903/2022**

**கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.11.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:619/2023** **பொருள் எண்.44**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதார துறை- மானியக்கோரிக்கை அறிவிப்புகள் 2022-23 - சென்னையில் உள்ள கிறித்துவர்களுக்கான அடக்கஸ்தலங்கள் அமைக்க பின்பற்றப்படும் நிபந்தனைகள் தளர்வு செய்ய கருத்துரு அரசினால் கோரப்பட்டது - அரசின் அனுமதி கோரியது -- தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 172 (3) Burial and burning grounds and crematoria-ன் கீழ் துணை விதிகள் மேற்கொள்ளவும் மற்றும் விதிகளில் சேர்க்கவும் அரசின் அனுமதியினை எதிர்நோக்கி மன்றத்தின் அனுமதி.**

மன்ற தீர்மான எண்.570/2022, நாள் 29.11.2022ல், கிறிஸ்தவ மத வழக்கத்தின்படி ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிரந்தரமாக கல்லறைகள் கட்டப்படுகின்றன எனவும், மேலும் ஏற்கனவே குடும்பத்தில் இறந்து போனவர்களின் கல்லறையினை மீண்டும் திறந்து அடக்கம் செய்யும் வழக்கம் இருந்து வருகிறது என்றும், சென்னை மாநகராட்சி சட்டம் 1919 பிரிவு 349 (22) - ன் துணை விதி 12-ல் உள்ளபடி, தற்போது சென்னை மாநகராட்சியிலுள்ள கிறிஸ்தவ கல்லறைகளை 14 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் திறந்து எற்கனவே அடக்கம் செய்யப்பட்டுள்ள சடலத்தை சேதப்படுத்தாமல், தற்போது இறந்தவரின் உடலை அடக்கம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டு வருகிறது என்றும், சென்னை கிறிஸ்தவ கல்லறை வாரியத்தினர் கிறிஸ்துவ கல்லறைகளை மீண்டும் திறந்து தற்போது இறந்தவர்களின் உடலை புதைப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச கால இடைவெளியான 14 வருடங்கள் என்பதை 5 வருடங்களாக குறைக்கும்படி கோரப்பட்டது. இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச கால இடைவெளியான 14 வருடங்கள் என்பதை சென்னை மாநகராட்சி சட்டம் 1919 பிரிவு 349 (22) - ன் துணை விதி 12-ன்படி கீழ்கண்டவாறு திருத்தம் மேற்கொள்ள மாமன்ற அனுமதி பெறப்பட்டது.

a. சவப்பெட்டி இல்லாமல் பெறும் இறந்தவர்களின் உடலை மட்டும் அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைகள் 12 மாதங்கள் முடிவடைந்த நிலையிலும்,

b. முற்றிலும் மரத்தினால் செய்யப்பட்ட சவப் பெட்டியில் இறந்த நபர்களின் உடலை வைத்து அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைகள் 18 மாதங்கள் முடிவடைந்த நிலையிலும்

c. உலோகத்தினால் நன்கு மூடப்பட்ட சவப் பெட்டியில் சடலத்தை வைத்து அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைகள் 7 வருடங்கள் முடிவடைந்த நிலையிலும், கிறிஸ்தவ கல்லறைகளை மீண்டும் திறந்து, ஏற்கனவே அடக்கம் செய்யப்பட்டுள்ள சடலத்தை சேதப்படுத்தாமல் தற்போது இறந்த நபரின் உடலை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கும்,

d. சென்னை மாநகராட்சி சட்டம் 1919 பிரிவு 349 (22) - ன் துணை விதி 12- ல் செய்யப்பட்ட திருத்தங்களை தமிழக அரசின் அனுமதிக்காக அனுப்புவதற்கும் மன்றத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. முதன்மைசெயலர்/ஆணையர் அவர்களின் 07.12.2022 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மன்ற தீர்மானத்திற்கு அரசிடம் அனுமதி கோரப்பட்டது.

பல்வேறு நாளிட்ட அரசு கடிதங்களில், மன்ற தீர்மான எண்.570/2022, நாள் 29.11.2022ல் குறிப்பிட்டுள்ள சென்னை மாநகராட்சி சட்டம் 1919 காலாவதியாகி 12.04.2023 முதல் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 நடைமுறைக்கு வந்ததால், அதன் அடிப்படையில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதி கோரி அரசிற்கு செயற்குறிப்பு அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, கீழ்கண்ட இனங்களுக்கு அரசின் அனுமதியினை எதிர்நோக்கி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 172 (3) *Burial and burning grounds and crematoria*-ன் கீழ் துணை விதிகள் மேற்கொள்ளவும் மற்றும் விதிகளில் சேர்க்கவும், நிலைக்குழு(பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**குடும்ப கல்லறைகளில் இறந்த குடும்ப அங்கத்தினர்களை அதே கல்லறைகளில் புதைப்பதற்கான (Reburial) வழிமுறைகள்:**

a. குடும்ப கல்லறைகளில் இறந்த குடும்ப உறுப்பினர்களை அதே கல்லறைகளில் அடக்கம் செய்ய கீழ்கண்ட குறைந்தபட்ச கால இடைவெளி இருக்க வேண்டும்.

1. சவப்பெட்டி இல்லாமல் பெறும் இறந்த நபரின் உடலை மண்ணில் அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைகள் புதைத்த நாளிலிருந்து 12 மாதங்கள் முடிவடைந்து இருக்க வேண்டும்.

2. முற்றிலும் உட்புறத்திலும் மற்றும் வெளிப்புறத்திலும் மரத்தினால் செய்யப்பட்ட சவப்பெட்டியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைகள் புதைத்த நாளிலிருந்து 18 மாதங்கள் முடிவடைந்து இருக்க வேண்டும்.

3. உலோகம் உள்ளிட்ட பிற பொருட்களினால் நன்கு மூடப்பட்ட அல்லது உட்புறத்தில் உலோகத்துடன் கூடிய மரத்தினால் செய்யப்பட்ட சவப் பெட்டியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைகள் புதைத்த நாளிலிருந்து 7 வருடங்கள் முடிவடைந்து இருக்க வேண்டும்

4. கிறிஸ்தவ கல்லறைகளை மீண்டும் திறந்து, மற்ற குடும்ப உறுப்பினரை அடக்கம் செய்யும் போது ஏற்கனவே அடக்கம் செய்யப்பட்டுள்ள உடலினை சேதப்படுத்தாமல் அடக்கம் செய்ய வேண்டும். ஏற்கனவே அடக்கம் செய்த உடலினை சேதப்படுத்தாமல் 1 அடி மண் நிரப்பிய பின் தற்போது இறந்த குடும்ப உறுப்பினரின் உடலினை அடக்கம் செய்ய வேண்டும். மேலும் கல்லறையினை திறக்கும் பொழுது ஏற்கனவே அடக்கம் செய்த உடல் மோசமான நிலையில் இருந்தால் எவ்வித பணிகளும் மேற்கொள்ளக்கூடாது. கூடுதலாக, குழியின் தரைக்கும் மற்றும் மேல் அடுக்கிற்கும் இடையே 2.5 மீட்டர் இடைவெளி இருத்தல் வேண்டும்.

b. மனுதாரர், மறு அடக்கம் செய்யக்கோரும் விண்ணப்பத்தில் தற்போது இறந்தவரின் விவரங்களையும் ஏற்கனவே அடக்கம் செய்யப்பட்ட உறவினரின் விவரங்களையும் (நேரடியாக மண்ணில்/ முற்றிலும் மரத்திலான பெட்டியில்/ உலோகம் உள்ளிட்ட பிற பொருட்களினால் செய்யப்பட்ட அல்லது உட்புறத்தில் உலோகத்துடன் கூடிய மரத்தினால் செய்யப்பட்ட பிரேதப் பெட்டியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டது உட்பட) அளிக்க வேண்டும்.

c. சம்மந்தப்பட்ட கல்லறை / மயானபூமி நிர்வாகம், ஏற்கனவே அடக்கம் செய்த குடும்ப உறுப்பினரின் பெயர், பாலினம், இறந்த தேதி, அடக்கம் செய்த தேதி, மனுதாரரின் உறவுமுறை மற்றும் அடக்கம் செய்த விதம் (நேரடியாக மண்ணில்/ முற்றிலும் மரத்திலான பெட்டியில்/ உலோகம் உள்ளிட்ட பிற பொருட்களினால் செய்யப்பட்ட அல்லது உட்புறத்தில் உலோகத்துடன் கூடிய மரத்தினால் செய்யப்பட்ட பிரேதப் பெட்டியில்) ஆகிய தகவல்களுடன் சான்று அளிக்க வேண்டும்

d. முதன்முறையாக கல்லறை தோட்டத்தில் / மயானபூமியில் அடக்கம் செய்யும் போது, மயான இறப்பு அறிக்கையில் அடக்கம் செய்யப்பட்ட விவரம் அதாவது இறந்த நபரின் சடலத்தினை நேரடியாக மண்ணில் / முற்றிலும் மரத்திலான பெட்டியில் / உலோகம் உள்ளிட்ட பிற பொருட்களினால் அல்லது உட்புறத்தில் உலோகத்துடன் கூடிய மரத்தினால் செய்யப்பட்ட பிரேதப் பெட்டியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டது என குறிப்பிட்டு கல்லறை / மயானபூமி நிர்வாகம் அறிக்கை அளிக்க வேண்டும்.

e. மேற்படி விவரத்தினை கல்லறை / மயானபூமி நிர்வாகத்தின் பதிவேட்டில் முறையாக பராமரிக்க வேண்டும். இவை மாநகராட்சி அலுவலர்களின் ஆய்வில் கோரும் போது அளிக்க வேண்டும்.

## Procedures for Reburial of Family Members in Family Grave

**a)** The following minimum time interval should be followed for reburial of family members in family grave.

- **a.** A period **of 12 months** has elapsed from the date of the last burial in a grave, if the body has been buried with out a coffin.
- **b.** A period **of 18 months** has elapsed from the date of the last burial in a grave, if the body has been buried in an unlined wooden coffin.
- **c.** A period **of 7 years** has elapsed from the date of the last burial in a grave, if the body has been buried in a coffin composed of or lined with tin, lead or other metal to bury another member of the same family.

**b)** The Applicant should apply to the concern zonal health officers during working days. A layer of earth not less than one foot thick be left undisturbed over the previously buried coffin. If on opening any grave any soil is found to be offensive such soil shall be left undisturbed. There shall never be less than 2.5 m of earth between the topmost coffin and the grave.

**c)** In the application for reburial, the petitioner should provide the details of the deceased and the details of the relative who were already buried (buried without coffin / unlined wooden coffin / coffin composed of or lined with tin, lead or other metal).

**d)** The concerned burial ground management should certify the details such as the buried person’s name, sex, Date of Death, Date of burial, way of burial (**without coffin / unlined wooden coffin / coffin composed of or lined with tin, lead or other metal**).

**e)** The burial details in the burial report i.e. without coffin / unlined wooden coffin / coffin composed of or lined with tin, lead or other metal should be mentioned by the burial ground management and should issue a burial report.

**f)** The above details should be maintained in the register of the burial ground management. These should be submitted or furnished when requested for inspection by the Officers of Greater Chennai Corporation.

“ஏற்கனவே நிலைக்குழு(பொது சுகாதாரம்)வின் கூட்டம் 23.11.2023 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 28.11.2023 அன்று தீர்மான எண்.106/2023ன்படி நிலைக்குழு(பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********